வெளியீடு 13-10-2003 Issued 13-10-200

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 1, 2003—தொகுதி 38—எண் 3

**Tuesday the 1st April, 2003—Volume 38—No. 3**

...ாப் பேரவைச் செயலகம், சென்னை - *600 009*

...ssembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

1-4-2003

உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | **அரசினர் தீர்மானம்—** | |
| | விதி 32-ஐத் தளர்த்தல் | 383-384 |
| 2. | **வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்**—தொடர்ச்சி | 384-549 |
| | திரு. ஜி.கே. மணி | 384-402, 406-409, 411-416 |
| | *திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 417-442, 444-462, 524-526,529 |
| | *திரு. துரைமுருகன் | 463-483,504, 528-530 |
| | *மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 484-549 |
| 3. | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 550 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 18, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 1, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை*
*அதிர வருவதோர் நோய்"*

*பின்னர் நிகழ இருப்பவற்றை முன்னரே அறிந்துகொள்ளும் அறிவுடையவர்களுக்கு, அவர்கள் அதிர்ச்சி அடைந்து நடுங்கும்படியான ஒரு துன்பமும் வராது.*

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

### 1. அரசினர் தீர்மானம்

#### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம், வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ இன்று (1-4-2003) தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*
*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 1

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்கள் ஊரில் ஜலகண்டேஸ்வரர் கோயிலில் இன்றைக்கு..

## 2. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும், பதிலுரையும். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சில கருத்துகளை நான் கூற விழைகிறேன்.

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

என்று சொல்கிறார் வள்ளுவர்.

'குறை கூறுபவரின் சொற்கள் தன் காதுகளுக்கு கசப்பாய் இருப்பினும் அவற்றின் பயன் கருதி அவற்றைப் பொறுத்துக்கொள்ளும் பண்புடைய அரசனின் குடையின்கீழ் உலகம் முழுவதும் தங்கும்' என்று வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். அதை இந்த நேரத்திலே நான் [illegible] சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு ... 184537



[2003 ஏப்ரல் 1 [திரு. ஜி.கே. மணி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிதிநிலை அறிக்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தினுடைய நிதித் துறைச் செயலாளர் அன்புக்குரிய நாராயணன் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து செயல் திட்டங்களை வழி வகுக்கக்கூடிய கண்ணாடி என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே நிதிநிலை அறிக்கை என்பது நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியை, மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, சமூக நீதியோடுகூடிய நிதியொதுக்கம் வேண்டும் என்பதைத்தான் பாட்டாளி மக்கள் கட்சியின் கருத்தாக நான் இங்கே சொல்ல விழைகிறேன். ஆகவே, இந்த நிதியொதுக்கம் என்பது, அனைத்துத் தரப்பு மக்களின் வளர்ச்சியை உள்ளடக்கி நாட்டின் மேம்பாட்டிற்காக இருக்கும் என்று நான் சொல்ல விழைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக மத்திய அரசாங்கம் ஒரு பொருளாதார ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. அந்த வகையிலே தமிழ்நாட்டினுடைய பொருளாதார நிலை என்ன என்பதை ஓர் ஆய்வறிக்கையின் வாயிலாக வெளியிடுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இரண்டாவதாக, நிதிநிலை அறிக்கைக்கு முன்பு கடந்த ஆண்டு கவர்னர் உரையிலே, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய செயல் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா, எந்த வகையிலே இருக்கின்றன என்பதை மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலே Action taken report என்று சொல்கிறார்களே—நடவடிக்கை எடுத்த அறிக்கை—அதையும் சமர்ப்பிப்பது பொருத்தமாக இருக்கும்.

மூன்றாவதாக, கடந்த ஆண்டு அரசு அளித்த மானியங்கள் எந்த அளவிற்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றன, முழுமையாகப் பயன்பெற்றிருக்கிறதா என்பதை எடுத்துச் சொல்லக்கூடியதையும், நான்காவதாக இந்த நாட்டிலே மக்கள் எல்லாம், அரசு அதிகாரிகள், நாட்டு மக்கள் எல்லாம் தெரிந்துகொள்ளக்கூடிய வகையிலே, ஒரு வரைவு நிதிநிலை அறிக்கையை அரசு முன்பே சமர்ப்பிக்கும் என்று சொன்னால் அதை எல்லோரும் தெரிந்து கருத்து சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த வகையிலே பொருளாதார ஆய்வறிக்கை, நடவடிக்கை எடுத்த அறிக்கை - Action taken report - அரசு மானியங்கள்

அளித்த விதம், வரைவு நிதிநிலை அறிக்கை ஆக இந்த நான்கையும் சமர்ப்பித்துவிட்டு, நிதிநிலை அறிக்கை வரும் என்று சொன்னால் அது பொருத்தமுடையதாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விழைகிறேன். அந்த வகையிலே பாட்டாளி மக்கள் கட்சிகூட ஒரு வரைவு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தது. அது அரசைக் குறை சொல்வதற்காகவோ அல்லது குறைத்து மதிப்பிடுவதற்காகவோ அல்ல.

*முற்பகல் 10-05*

ஒரு நிதிநிலை அறிக்கை நாட்டுக்குத் தேவை என்பதைப்பற்றியெல்லாம் மக்கள் மத்தியிலே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக, இன்னும் தொழிலதிபர்கள், அதிகாரிகள், அரசியல் கட்சிகள், வர்த்தக அமைப்புகள் இவர்கள் எல்லாம் அந்த நிதிநிலை அறிக்கையின்மீது ஆலோசனை சொல்வதற்காகத்தான், அதை எடுத்துக்காட்டத்தான் வரைவு நிதிநிலை அறிக்கையாக நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆகவே, அதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றத்திலே ஆளுநர் ஆற்றக்கூடிய உரையிலே சொல்லக்கூடிய அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கையிலே சொல்லக்கூடிய அறிவிப்புகளையெல்லாம் நிச்சயமாக நிறைவேற்றியாக வேண்டும். எந்த வகையிலே என்று சொன்னால், இப்போது தேர்தல் அறிக்கையிலே அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளைச் சொல்கின்றன; பொதுக்கூட்டங்களிலே, மாநாடுகளிலேயெல்லாம் வாக்குறுதிகளைச் சொல்கிறோம். அவையெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அரசியல் கட்சிகள் சொல்லியிருக்கின்றன, அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, இப்படி தேர்தல் அறிக்கையில், பொதுக் கூட்டங்களில், மாநாடுகளில் சொல்கின்ற வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று சொல்கின்ற அதே நேரத்திலே, மக்கள் மன்றத்திலே, சட்டமன்றத்திலே சமர்ப்பித்த இந்த ஆளுநர் உரையிலே உள்ள அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கையினுடைய அறிவிப்புகள் எல்லாம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று அந்த வகையிலே கேட்டுக்கொள்கிறேன். உள்ளதைச் சொல்லி, நல்லதைச் செய்யக்கூடிய அறிவிப்பு அமலாக்குவதாகவும், அமலாக்குவது அறிவிப்பாகவும் இருக்கக்கூடிய வகையிலே நிதிநிலை அறிக்கை அமைய வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



ஆளுநர்களுடைய மாநாட்டினை ஜனவரி மாதம் 11 ஆம் தேதி நம்முடைய மரியாதைக்குரிய குடியரசுத் தலைவர் அவர்கள் கூட்டினார்கள். அந்த ஆளுநர்கள் மாநாட்டிலே குடியரசுத் தலைவர் அவர்கள் சொன்னதை இங்கே நினைவுக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்:

"Without becoming a rival centre of power or authority, the Governors could still be more than ornamental figures confined to the Raj Bhavans."

He said, he was convinced of the imperative need for the Governors of the States concerned to reach the grass-roots to understand the problems and focus them to the State Government"

அதாவது, 'ஆளுநர்கள் அலங்காரப் பதுமைகளாகவோ, போட்டி அதிகார அமைப்புகளாகவோ இருக்க விரும்பாமல் அடித்தட்டு மக்களின் சிரமங்களைக் கண்டறிந்து, அதை மாநில அரசுகளின் கவனத்திற்குக் கொண்டுசென்று தேவையான நடவடிக்கைகளை எடுத்து, மக்களின் துயரைக் களைவது கவர்னரின் தலையாய பணியாகும்' என்று குடியரசுத் தலைவர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இது தேவையான அறிவுரை என்பதை நான் வலியுறுத்தி, மாநில அரசுகளை ஊக்குவித்து, வாக்குறுதிகளை நிறைவேற்ற உறுதுணையாக இருந்து, மாநிலத்தின் வளர்ச்சிக்கும், மக்கள் மேம்பாட்டிற்கும் பக்க பலமாக இருப்பதுதான் கவர்னருடைய கடமையாக இருக்குமென்று நான் சொல்ல விழைகிறேன்.

இந்த நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையிலே, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 22,665.90 கோடி, செலவு ரூ. 26,599.37 கோடி. இதனால் பற்றாக்குறை ரூ. (-)3,933.47 கோடி. மூலதனக் கணக்கில் வரவு ரூ. 4,552.15 கோடி. செலவு ரூ. 3,010.99 கோடி. உபரி ரூ. 1,541.16 கோடி. ஆக, பொதுக் கணக்கில் வரவு ரூ. 1,351.75 கோடி. மூலதனக் கணக்கு உபரி பிளஸ் பொதுக் கணக்கு ரூ. 2,892.91 கோடி. ஆக, மொத்தக் கணக்கில் பற்றாக்குறை ரூ. (-)3,933.47 கோடி, பிளஸ் ரூ. 2,892.91 கோடி. ஆக நிகரப் பற்றாக்குறை ரூ. (-)1,040,56 கோடி. இப்படி இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆளுநர் உரையிலே ஆளுநர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 10-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியாக 8 சதவீதம் என்ற மாபெரும் கனவுத் திட்டத்தை

நிறைவேற்ற இருப்பதாக ஆளுநர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த வகையிலே இந்த ஐந்து ஆண்டுக் காலத்திலே இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இன்னும் மூன்று ஆண்டுகள் இருக்கின்றன. ஆகவே, அப்படிப் பார்க்கின்ற நேரத்திலே வளர்ச்சி விகிதம், விவசாயம், அதைச் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி *1999-2000-ல் (-) 4.26* சதவீதம், *2000-2001-ல் 2.54* சதவீதம், *2001-2002-ல் (-) 3.86* சதவீதம். *2002-2003-ல் (-) 8.93* சதவிகிதம். இது விவசாயம், அதைச்சார்ந்த தொழில்களின் வளர்ச்சி.

முற்பகல் 10-10

இரண்டாவது துறை என்று சொல்லக்கூடிய உற்பத்தித் துறை, அதாவது தொழில் துறையினுடைய வளர்ச்சி, *1999-2000-ல் 13.27* சதவிகிதம், *2000-2001-ல் 3.26* சதவிகிதம், *2001-2002-ல் 3.94* சதவிகிதம், *2002-2003-ல் 0.86* சதவிகிதம். மொத்தத்தில் மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சி என்பது-அதாவது Gross Domestic Product-GDP - என்று சொல்கிறார்கள். அது *1999-2000-ல் 5.78* சதவிகிதம், *2000-2001-ல் 4.36* சதவிகிதம், *2001-2002-ல் 3.06*, விவசாயமும், அதைச் சார்ந்த தொழில்களும் கடந்த காலங்களிலே. ஆகவே இங்கே வளர்ச்சி என்பது, எதிர்மறையாக இருந்துகொண்டிருக்கிறது. மைனசிலே இருந்துகொண்டிருக்கிறது. நெகட்டிவ்-வாகப் போய்க்கொண்டிருக்கிறது.

அதுமாதிரி தொழில் வளம் என்பது *3* ஆண்டுகளில், *13.2* சதவிகிதமாக இருந்தது, கடந்த ஆண்டு *0.86* சதவிகிதமாகக் குறைந்து இருக்கிறது. ஆகவே, வளர்ச்சி விகிதம் இப்படி குறைந்துகொண்டே போகும்போது நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சி எப்படி முதல் நிலைக்கு வரும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

ஆளுநர் உரையிலே ஒரு தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் திருக்கோயில்களில் நிருவாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதுவரையில் எந்தத் திருக்கோயிலிலும் பெண்கள் நிருவாக அலுவலர்களாக நியமிக்கப்படவில்லை.



**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அருகிலே இருக்கின்ற கபாலீசுவரர் ஆலயத்தில்கூட ஒரு பெண்தான் துணை ஆணையராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். பார்த்தசாரதி கோயிலில் துணை ஆணையராக ஒரு பெண்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். கோவையிலே இருக்கின்ற மருதமலை ஆலயத்தில் கூட துணை ஆணையராக ஒரு பெண்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். மதுரையில் இருக்கின்ற அழகர்கோயிலிலேகூட துணை ஆணையராக ஒரு பெண்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எல்லாம், பதவி உயர்விலே சென்றவர்கள். ஆனால்...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் *72* கோயில்களுக்கு அதிகாரிகள் இப்போது தேர்வாணையக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள். பெண்கள் அதில் தேர்வு செய்யப்பட்டால் அவர்களும் அங்கே அமர்த்தப்படுவார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்ல வந்தேன். தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலமாக இந்த மாதம் 13, 14ஆம் தேதிகளில் தேர்வு நடைபெற இருக்கின்றது. இன்னும் நியமனம் செய்யப்படவில்லை. ஆகவே, நியமனம் செய்யப்பட்டிருக்கிறது, என்று சொல்லக்கூடியதில் பதவி உயர்விலே சென்றவர்களை நான் சொல்லவில்லை. இப்போது நியமிக்க இருக்கிறீர்கள். அதை நியமித்துவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத்தான் இங்கே நான் சொல்ல வந்தேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே மிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக, நாம் எல்லோரும் ஆவலுடன் எதிர்ப்பார்த்த திட்டமாக, முதலமைச்சர் அவர்களின் *15* அம்சத் திட்டம் முக்கியத்துவம் கொடுத்துச் சொல்லப்பட்டிருந்தது. அது எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது இந்த ஆண்டு தொடர்கிறதா அல்லது திட்டம் கைவிடப்பட்டுவிட்டதா என்பதையெல்லாம் விளக்க

வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாசனத்திற்காக கடந்த நிதிநிலை அறிக்கையிலே, ஏரி, குளங்கள், அணைகள், நதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம்-2 என்று சொல்லி, அதற்காக, 2,900 கோடி ரூபாய் நிதியுதவிகூட கேட்டிருப்பதாக சொல்லப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டும் அதுவே சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு நிதியுதவி பெறப்படவில்லையா? அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லையா? இந்த ஆண்டும் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே. அப்படியானால் பாசனத்தின் முன்னேற்றம் என்ன?

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், வரத்து வாய்க்கால்களைத் தூர் வாருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டுக் காலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-1 என்ற திட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். அதன் அடிப்படையில் கடந்த ஆறு ஆண்டுக் காலமாக தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு நீர்நிலைகள் தூர் வாரப்பட்டு மராமத்து செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-2 என்ற திட்டத்தின்கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. தொகுப்புத் திட்டம்-1-ல் மீதமுள்ள பணிகளை முடிப்பதற்காக இன்னும் ஒரு வருடம் காலம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. இத்திட்டம் 2004 மார்ச்சில் முடிவடையும். அதற்குப் பின்னர் உறுதியாக நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் கட்டம்-2 என்ற திட்டம் எடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்புத் திட்டம்-1-ல் இன்னும் 100 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் கேட்க விரும்புவது, கடந்த ஆண்டு தொகுப்புத் திட்டம்-2 என்று சொல்லி, 2,900 கோடி ரூபாய் கேட்டிருந்தீர்கள். அது இன்னமும் பெறப்படவில்லையா? இந்த ஆண்டும் அதையே சொல்லியிருக்கிறீர்களே, அதைப் பெறுவதற்கு என்ன முயற்சிகளை மேற்கொள்ளப்போகிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.



முற்பகல் 10-15

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து உலக வங்கியிடமிருந்து அந்த நிதியைப் பெறுவதற்குப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பணிகள் துரிதமான முன்னேற்றத்தில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று, உலகத் தரம் வாய்ந்த இந்திய மருத்துவம் சார்ந்த பிரசித்திபெற்ற மருத்துவமனை ஒன்று சென்னையிலே அமைக்கப்படும் என்று கடந்த ஆண்டு சொல்லப்பட்டது. அந்த மருத்துவமனை தொடங்கப்பட்டதா? அது முயற்சியிலே இருக்கிறதா என்பதுபற்றியும் இந்த நேரத்திலே நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்ட அந்த உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனையை உருவாக்குவதற்கு அரசு ஆணை ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அதிலே தனியாரை ஊக்குவிப்பதற்காக திட்டமிடப்பட்டு வருகிறது. ஒரு Steering Committee போடப்பட்டு, அந்தக் Committee-யின் மூலமாகத் தனியார்களை அதிலே ஊக்குவிப்பதற்காக இப்போது நடைமுறைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போலவே இயற்கை வளங்கள் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 779 கோடி மதிப்பில் 6.17 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பசுமை பூமி உருவாக்க உலக நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி கேட்கப்பட்டிருக்கிறது என்று கடந்த ஆண்டு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிதி பெற்றாகி விட்டதா? அந்தப் பசுமை பூமியை உருவாக்குவதற்கு அரசு தொடர்ந்து எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன என்பதை விளக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே நான்கு ஒன்றியங்கள் (குறுக்கீடு) அது தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். இது வனத் துறையிலே வருகிறது. (குறுக்கீடு) 6.17 இலட்சம். பசுமை பூமியாக மாற்ற வேண்டும் என்று சொன்னது, அந்தத் திட்டம் என்பது வரவேற்கக்கூடியது. உள்ளபடியே பசுமை பூமி என்று சொல்வது அழிந்த காடுகளைப் பராமரிப்பதற்கு, மேம்படுத்துவதற்கு உள்ள நல்ல திட்டம்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமைத் திட்டம் இப்போது இரண்டாவது திட்டத்திற்கு 779 கோடி ரூபாய்—காடு வளர்ப்புத் திட்டம், எப்படி ஒரு நாட்டில் மூன்றில் ஒரு பங்கு காடு இருக்கவேண்டுமோ அந்த நிலையை அடைவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இரண்டாவது திட்டத்தைத் தயாரித்து, அது மத்திய அரசின் ஒப்புதலுக்குச் சென்றிருக்கிறது. கூடிய விரைவில் அந்த ஆணை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவித்தது. அந்தப் பணி நடந்துகொண்டிருக்கிறதா அல்லது விட்டுப்போய் இந்த ஆண்டு தொடங்க இருக்கிறீர்களா? அதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே நான்கு ஒன்றியங்களிலே வேலைத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், 33 ஒன்றியங்களுக்கு அரசாணை வழங்கப்பட்டுவிட்டதாகவும், மீதி 200-க்கு மேற்பட்ட ஒன்றியங்களிலே ஆய்வுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புவது, மக்கள் எல்லாம் எதிர்பார்ப்பது, ஓர் ஒன்றியத்திற்கு 1 கோடி ரூபாயிலே திட்டம் என்று சொன்னால், அது வரவேற்கக்கூடிய திட்டம். மிகப் பெரிய திட்டம். கிராமப்புறங்கள் மேம்பாட்டிற்குப் பயன்படும் என்று எதிர்பார்த்தார்கள். கடந்த ஆண்டு அறிவிப்பு இன்னும் நிலுவையிலே இருக்கிறது. இதைக் குறிப்பிட்டுச் சொல்வதால் ஏதோ தவறாகச் சொல்வதாக தயவு செய்து நினைத்துக்கொள்ளக்கூடாது. கடந்த ஆட்சிக் காலத்திலே, அவர்களைப் பாராட்டுவதற்காக, குறை சொல்வதற்காக நான் சொல்லவில்லை.



அப்போது ஒரு தொகுதிக்கு ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் வரையிலே வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அது இல்லாமல் போய்விட்டது. இப்போது புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக வளர்ச்சிப் பணிகள் ஓர் ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்பது வரவேற்கக்கூடியது, நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. கடந்த ஆண்டு முழுமையாக இல்லை. எத்தனை ஆண்டிற்குள் முடிக்கப்போகிறீர்கள்? இந்தத் திட்டம் அண்ணாவின் பெயரால் உள்ள திட்டம். இதை முடுக்கிவிட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கருத்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்தது...

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, இந்த மாநிலத்தில் 385 வட்டாரங்களில் இன்று வரையில் செயலாக்கப்பட்டது 43. சொந்தமாகச் செய்யப்பட்டது 9. இந்த 28 மாவட்டங்களில் இதுவரையில் 2,820 மனுக்கள் பெறப்பட்டு, இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-20

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் சேகரிப்புக்காக பயன்படுத்தப்படாத 1,59,000 கிணறுகள் தேர்வு செய்யப்பட இருப்பதாகவும், அவை எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் சொல்லி இருக்கிறார்கள். இந்த மழைநீர் சேகரிப்பு வரவேற்கக்கூடியது. ஆனால் இந்தத் திட்டம் என்பது—கிராமத்திலே 'தும்பை விட்டு வாலைப் பிடிப்பது' என்று சொல்வார்கள். இந்த நாட்டிலே அரசர்கள் காலத்திலேயிருந்து இருந்த ஏரிகள், குளங்கள் எல்லாம் இப்பொழுது காணாமல் போய்விட்டன. தமிழகத்தினுடைய பொற்குவியலாக, பொற்களஞ்சியமாக, இன்னும் இங்கு அமுதசுரபியாக இருந்த ஏரிகள் எல்லாம் இன்று காணாமல் போய்விட்டன. அந்த ஏரிகளை எல்லாம் பாதுகாத்திருந்தோம் என்ற இந்த நிலை வந்திருக்காது. சென்னையைச் சுற்றி நூற்றுக்கணக்கான ஏரிகள் இருக்கின்றன. என்னிடத்திலே பட்டியல் இருக்கிறது. சென்னையைச் சுற்றி பூந்தமல்லி, வில்லிவாக்கம் போன்ற பல்வேறு

பகுதிகளில் இருந்த ஏரிகள் எல்லாம் காணாமல் போய்விட்டன. இவற்றை யார் ஆக்கிரமிப்பு செய்தார்கள்? இந்த ஏரிகளுடைய பரப்பளவு, ஏரிகளுடைய கொள்ளளவு, இவற்றினுடைய பயன்பாடு எவ்வளவு? இந்தப் பயன்பாட்டிற்குத் தடையாக, முட்டுக்கட்டையாக இருந்து, சுயநலத்திற்காக சிலர் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இப்படி ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்துக் கொண்டு இருக்கிறவர்களை, அவர்களுக்குத் துணையாக இருந்தவர்களை எல்லாம் கண்டறிந்து, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் இப்பொழுது கடுமையான வறட்சி. குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. அப்போதிருந்த நீர் ஆதாரங்களை எல்லாம் விட்டுவிட்டோம். அதையெல்லாம் விட்டுவிட்டு, இப்போது நீர் இல்லாத, பாழ் அடைந்த கிணறுகளை இன்று மழைநீர் சேகரிப்பிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அவல நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். ஆகவே, அதையெல்லாம் கண்டறிந்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, கடுமையான வறட்சி. இந்த வறட்சியைப்பற்றிச் சொல்லுகின்றபோது, இதுவரையிலும் எப்பொழுதும் இல்லாத வறட்சி. அது ஆட்சியினுடைய குற்றம் அல்ல. மழையினுடைய குற்றம். அந்தவகையிலே, எங்களுடைய தர்மபுரி மாவட்டம் மற்றும் டெல்டா பகுதிகள் 28 மாவட்டங்களிலே வறட்சி நிலவுகிறது. இது முடிந்துபோன விவாதம்தான். நான் அதற்குள் ஆழமாகப் போகவில்லை. ஏன் என்றால் வறட்சி, அதே நேரத்தில் இறப்பு இதையெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் ஒன்று எந்த நிலையிலே அவர்கள் இறந்தாலும் ஓர் ஆட்சி, அவர்கள் வறட்சியினால் இறந்தார்கள் என்று ஒத்துக்கொள்ள முடியாது. காரணம், சமீபத்தில் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்கள் வறட்சியின் காரணமாக அல்லது பசி பட்டினியின் காரணமாக யார் இறந்தாலும்கூட அந்த மாநிலத்தினுடைய தலைமைச் செயலாளர், அந்த ஆட்சிதான் பொறுப்பு என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்தவகையிலே அதற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. அப்படி இருந்தாலும்கூட அதற்காக போர்க்கால அடிப்படையிலே திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் (குறுக்கீடு) Supreme Court Chief Justice சொல்லியிருக்கிறார்.



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பசியால், பட்டினியால் யாராவது இறந்தால் அதற்கு அரசு பொறுப்பேற்கலாம். ஆனால், இயற்கையான சாவுக்கு அரசு பொறுப்பேற்க முடியாது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் ஆயிரம் ஜனத்தொகை உள்ள ஒரு கிராமத்தில் ஓர் ஆண்டுக்கு ஏழு பேர் இறப்பது இயற்கை. அந்தவகையிலும் இறப்புக்கு அரசு பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியாலே நிறைய குடிநீர்ப் பஞ்சம். என்னுடைய தொகுதியிலே பெண்ணாகரம், தர்மபுரி மாவட்டம், பல மாவட்டங்கள், ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இப்பொழுது அவர்கள் குடிநீருக்கு ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். அதே நேரத்தில் உணவுக்குப் பஞ்சம் ஏற்பட்டு எங்கள் மாவட்டத்தைப் பற்றி தினமணி உள்ளிட்ட எல்லா பத்திரிகைகளிலேயும் தொடர்ந்து செய்தி வருகிறது. ஒரு பத்திரிகையில் குறைத்து, ஒரு பத்திரிகையில் தவறாகச் செய்தி வரலாம். நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட தெரியும். தினந்தோறும் கிராமங்களை காலி செய்து விட்டு அருகிலே இருக்கக்கூடிய பெங்களூருக்கும், கர்நாடகா மாநிலத்திற்கும், ஆந்திரா மாநிலத்திற்கும் கூலி வேலை தேடி தொடர்ந்து செல்கிறார்கள். அப்படிப்பட்ட அவலநிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பணியை நிறைவேற்றுவதாக இப்பொழுது நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இன்னும் இந்தப் பணி வேகமாக முடுக்கிவிடப்பட வேண்டும், போர்க்கால அடிப்படையிலே. போர்க்காலம் என்று சொல்கிறார்கள் அதேபோன்ற நடவடிக்கையாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட போர்க்கால நடவடிக்கை இல்லாத காரணத்தாலேதான், தமிழக மக்கள் வறட்சியினால் வெளியூர்களுக்கு, அண்டை மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியை மீண்டும் முடுக்கிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயம். இந்த விவசாயத் தொழிலைப் பார்க்கிற நேரத்திலே அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரங்கள்படி இப்பொழுது, விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடிய மக்களுடைய அளவு 62 சதவீதம். ஆனால், வேளாண்மைத் துறையினுடைய உற்பத்தி என்பது 17 சதவீதம். 1967-களிலே வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டு இருந்த மக்கள் 69 சதவீதமாக இருந்தவர்கள் 7 சதவீதம் குறைந்து

62 சதவீதமாக வந்திருக்கிறார்கள். ஆனால் 7 சதவீதம் மக்கள் இந்தத் தொழிலை விட்டு வேறு தொழிலுக்குப் போய் இருக்கிறார்கள். ஆனால், உற்பத்தி என்பது 17 சதவீதத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 30 சதவீதம் உற்பத்தி குறைந்து இருக்கிறது. ஆகவே, அதை ஈடுகட்டுவதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? அதைப் பார்க்கின்றபோது, அப்போது 1966, 1967-களிலே பசுமைப் புரட்சி வந்தது. அந்த பசுமைப் புரட்சி வந்த நேரத்திலே தமிழகம் ஆறாவது இடத்திலே இருந்தது. இப்போது 9-வது இடத்திற்கும், 12-வது இடத்திற்கும், மாறி, மாறி போய்க்கொண்டு வருகிறது. 191267-லே நம்முடைய உற்பத்தி அளவிலே பஞ்சாப் மாநிலத்தினுடைய உற்பத்தி என்பது 4-ல் மூன்று பங்கு. அதாவது முக்கால் பங்குதான் இருந்தது. அப்படி இருந்தவர்கள், இன்று அவர்களுடைய உற்பத்தி என்பது நம்மமைவிட 3 மடங்கு அதிகரித்திருக்கிறது, பஞ்சாப் மாநிலத்தினுடைய உற்பத்தி. அந்த வகையிலே தமிழ்நாட்டினுடைய வேளாண் உற்பத்தி என்பது இன்றைக்கு 9-வது இடத்திலே இருக்கிறது. இது Economic Survey Report-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் ஆதாரத்தோடு சொல்லுகிறேன். ஆகவே, இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

பஞ்சாபை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்திலே, கடந்த ஆண்டு, 2001-2002-லே உணவு தானியங்களின் உற்பத்தி என்பது, 250 இலட்சம் டன்கள். ஆனால், தமிழகத்திலே கடந்த ஆண்டு உற்பத்தி என்பது 90 இலட்சம் டன்கள். எவ்வளவு மாறுபாடு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மராட்டிய மாநிலத்தினுடைய மொத்த நிலப்பரப்பில் பாசனம் பெறும் நிலப்பரப்பு என்பது 14 சதவீதம். தமிழ்நாட்டினுடைய மொத்த விவசாய நிலப்பரப்பிலே பாசனப் பகுதி என்பது 49 சதவீதம். ஆனால், மராட்டிய மாநிலத்தினுடைய உணவுப் பொருள் உற்பத்தி என்பது 130 இலட்சம் டன்கள். நம்முடையது நான் முதலிலே சொன்னது மாதிரி 90 இலட்ச்ம் டன்கள். ஆகவே, இதைவிட அந்த மாநிலத்திலே பழம், காய்கறிகள் பயிராகின்றன. நாம் எல்லாம் அதற்குப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, பணப் பயிர்களை ' ரம் பயிரிட வேண்டும். அதுதான் வருமானத்தை ஈட்டும் என்று சொல்லக்கூடிய வகையிலே இப்போது நாம் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்தியாவிலேயே மராட்டிய மாநிலம் முதலிடத்திலே இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கையிலே ஆண்டு ஒதுக்கீடு என்பது 2001-2002-லிருந்து 2002-2003 வரை ரூ.430 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதை வரவேற்கிறோம். நீங்கள் உயர்த்தியிருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் வேளாண்மைக்கு 2001-2002-லே ரூ.415 கோடி. 2002-2003-ல் ரூ.368 கோடியாக குறைந்திருக்கிறது. ஊரக வளர்ச்சிக்கு ரூ.608 கோடி. அடுத்த ஆண்டு 570 கோடி, அதேபோல சாலைகள் போக்குவரத்துக்கு ரூ.685 கோடியிலிருந்து ரூ.529 கோடியாகக் குறைந்திருக்கிறது. கல்விக்கு ரூ.195 கோடியிலிருந்து ரூ.157 கோடியாகக் குறைந்திருக்கிறது. பிறகு, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் நலன், இது மிக முக்கியமான துறை. இதற்கு ரூ.152 கோடியிலிருந்து ரூ.114 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, மாநில ஆண்டுத் திட்டப் பணிச் செலவு மொத்தம் ரூ.7 ஆயிரம் கோடி. இதிலே வேளாண்மைக்கு ரூ.526 கோடி. ஊரக வளர்ச்சிக்கு ரூ.688 கோடி. தொழில் துறைக்கு ரூ.126 கோடி. இப்படி திட்டப் பணிச் செலவு மிக மிகக் குறைந்து கொண்டே போனால், நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியை நாம் எப்படி எட்டமுடியும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த வேளாண் உற்பத்தியை, வணிகத்தைப் பெருக்குவதற்காக தமிழ்நாட்டிலே வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் 3 இடங்களிலே தொடங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டம், தேனி மாவட்டம், ஓசூர் இந்தப் பகுதிகளிலே, இந்த மூன்றையும் அறிவித்துவிட்டு நீலகிரி மாவட்டத்திற்கும், தேனி மாவட்டத்திற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. கூடுதலான நிதி, 15 கோடி சில்லறை, 24 கோடியே சில்லறை. ஆனால் ஓசூர் என்பது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கமே இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரில் அமைக்கப்படுகிற ரோஜா மலர் ஏற்றுமதி மண்டலத்திற்கு 24.85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2003 ஏப்ரல் 1

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்ததைத்தான் சொல்லுகிறேன். நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலே பக்கம் எல்லாம் காட்டுகிறேன்.

அதைப்போலவே, நுகர்பொருள் வழங்கல் துறை. 2001-2002 கணக்கிலே ரூ.1582 கோடி. திருத்திய மதிப்பீடு 2002-2003-க்கு ரூ.1271 கோடி. ஆக 281 கோடி ரூபாய் குறைவு. 2003-2004 திட்ட மதிப்பீடு ரூ.631 கோடி இதிலே 640 கோடி குறைவு. இப்படி திட்டச் செலவு குறைந்துகொண்டே போனால், இதில் எவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிறகு, ஊரக வளர்ச்சி மூலதனக் கணக்கிலே 2001-2002 கணக்கு ரூ.34 கோடி. 2002-2003 திருத்திய மதிப்பீடு ரூ.55 இலட்சம். எவ்வளவு பாருங்கள். 2003-2004 திட்ட ஒதுக்கீடு ரூ.1.59 கோடி. ஆக இப்படி மூலதனச் செலவும் குறைந்துகொண்டே போவது எப்படி வளர்ச்சியை உண்டாக்கும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

முற்பகல் 10-30

அடுத்தது, இங்கே வருவாய் குறித்த செலவிலே இந்த முத்திரைத்தாள் விற்பனை மூலம் நீதிமன்றக் கட்டணம், 2002-2003-ல் ரூ.212 கோடி என திட்டமிடப்பட்டு, ரூ.52 கோடியாக திருத்திய மதிப்பீடும் குறைந்திருக்கிறது பாருங்கள். ரூ.212 கோடி, அது 52 கோடியாக குறைந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம்? அப்போது முத்திரைத்தாள் விற்பனையே நடக்கவில்லையா? இதிலே எவ்வளவு குளறுபடி நடந்திருக்கிறது என்பதையும் அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, வேளாண்மை தொடர்பான நடவடிக்கைக்கு மொத்தச் செலவினம் 2001-2002-ல் ரூ.1,239 கோடியாக இருந்தது. 2002-2003-ல் திருத்த மதிப்பீட்டில் ரூ.1,107 கோடியாக குறைந்து இருக்கிறது. இதற்கும் காரணம் என்னவென்று தெரியவில்லை.

அதைப்போல, 2003-2004-ஆம் ஆண்டில் ரூ.1,150 கோடி ஒதுக்கீடுசெய்து 2001-2002-ஆம் ஆண்டு மதிப்பீட்டைக் காட்டிலும் இதிலேயும் ரூ.82 கோடி குறைந்திருக்கிறது. இந்தக் குறைவை நாம் எப்படி ஈடுசெய்யப் போகிறோம்? அதற்குப்பிறகு, வருவாய்க் கணக்கில் தொழிலுக்கு 2002-2003-ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடு ரூ.304 கோடி.



2003-2004-ஆம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு ரூ.288 கோடி. ஒதுக்கீடு இதிலேயும் குறைக்கப்பட்டிருக்கிறது. இதிலேயும் குறைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

அதைப்போல இன்னும் இருக்கிறது. போக்குவரத்துத் துறையிலே இப்படி நிறைய குறைகள் இருக்கின்றன என்பதை.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரை மணி நேரம் ஆகியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் நான் சப்ஜக்ட்டுக்கே வரவில்லை. இருக்கிறதைத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் வெவ்வேறு நேரத்திலே வைத்துக்கொள்ளுங்கள். தொடர்ந்து எவ்வளவோ இருக்கின்றன. இன்னும் ஐந்து மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இனிமேல்தான் சப்ஜக்ட்டுக்கே வருகிறேன் நான். அடுத்தது, இன்று அரசு ஊழியர்களுடைய பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. அரசு ஊழியர்கள், அரசாங்கத்தினுடைய இயந்திரங்கள். அவர்கள் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்துவிட முடியாது. அதுவும் இதுவரையிலே உங்களுடைய ஆட்சியை நான் குறை சொல்லவில்லை. கடந்தகால ஆட்சியிலே அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள் செய்து இருக்கிறீர்கள். இப்படி எல்லாமே சலுகைகளைச் செய்துவிட்டு, இப்பொழுது திடீர் என்று அவர்கள் வயிற்றிலே கை வைக்கின்ற மாதிரி சலுகைகளைக் குறைத்து இருக்கின்றது என்பது நிச்சயமாக ஏற்புடையதாக இருக்காது. இப்பொழுது அவர்களுடைய முழு ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு பணிக்காலம் 30 ஆண்டுகளாக இருந்தது. 3 ஆண்டுகள் கூட்டிவிட்டீர்கள். அதிலேயும் நிறைய பேர் பாதிக்கப்படுகிறார்கள். அது ஒரு கடுமையான பாதிப்பு.

அதேபோல, Earned leave ஈட்டிய விடுப்பு. அதை அவர்கள் Surrender செய்து அந்தத் தொகையை பெற்றுக்கொள்வார்கள். அதிலேயும் கடுமையான பாதிப்பு.

அடுத்து, ஆறாவது சம்பளக் குழு பாக்கித் தொகைக்கு, 1-4-2003 முதல் வட்டி இல்லையென்று சொல்லியிருக்கிறீர்கள் அதைப்போல, பல சலுகைகள் எல்லாம் குறைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அவர்கள் போராட்டக் களத்திற்கு வந்திருக்கிறார்கள். போராடுவது

என்பது சரியாக இருக்காது. ஆகவே அவர்களை அழைத்துப்பேசி, ஒரு நல்ல தீர்வினை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நிதி நெருக்கடி. இப்பொழுது நாம் நிதி நெருக்கடியைப் பற்றிச் சொல்கிறோம். ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டு, மூன்றாவது நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து விட்டோம். ஆகவே, இன்னும் நாம் நிதி நெருக்கடியைக் காரணம் காட்டுவது ஏற்புடையதாக இருக்காது. காரணம், நம்முடைய அரசு பொறுப்பேற்று ஏறக்குறைய சில நாட்களிலே கேரள மாநிலத்திலே அந்தப் புதிய அரசும் பொறுப்பேற்றது. அவர்களும் நிதிநெருக்கடி என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது பத்திரிகையிலே வந்த செய்தி, தினமணியிலே, இந்தியன் எக்ஸ்பிரசிலே வந்திருக்கிறது. நாங்கள் நிதி நெருக்கடியிலிருந்து மீண்டுவிட்டோம். நிதிச் சீர்திருத்தத்தை, சிக்கன நடவடிக்கையை எல்லாம் எடுத்து, நிதிச் சீர்திருத்தத்திலேயிலிருந்து, சிக்கன நடவடிக்கையிலிருந்து விலகிவிட்டோம் என்று சொல்கிறார்கள். அதிலேகூட, உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன், 1996-லே ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அன்றைய முதலமைச்சர்கூட கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி என்று சொன்னார்கள். கர்நாடக மாநிலத்திலே பொறுப்பேற்ற முதலமைச்சரும் அந்த ஆட்சியை அப்படித்தான் சொன்னார்கள். நிதிநெருக்கடி இருப்பது என்பது வழக்கமான ஒன்று. இரண்டு ஆண்டுக் காலம் ஓடியும்கூட அதையே சொல்லிக்கொண்டு இருக்காமல், இன்னும் வேகமாக பணிகளை நாம் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு கேரள அரசாங்கம் ஒரு புள்ளிவிவரத்தை வெளியிட்டிருக்கிறது. இது 27-3-2003 இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி. 'Employment opportunities in Kerala' என்று ஒரு செய்தியை சொல்லி, அதிலே, வேலைவாய்ப்பினையும் நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். என்று கூறியிருக்கிறார்கள். 2001ஆம் ஆண்டில் வேலை இல்லாமல் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 44,31,339 பேர். 2002-ல் இந்த எண்ணிக்கை என்பது 36,85,209 பேர். ஆகவே, சுமார் 8 இலட்சம் பேர்களுக்கு ஓர் ஆண்டிலே வேலைவாய்ப்பு அளித்திருக்கிறார்கள். அது அரசுத் துறையிலே, பொதுத் துறையிலே, தனியார் நிறுவனங்களிலே ஆக இப்படி அங்கெல்லாம் வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற நேரத்திலே, இப்போது நம்முடைய ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்திலே அரசாங்க கணக்கு 47 இலட்சம் பேர் படித்துவிட்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே



பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய அமைச்சர் 2, 3, நாட்களுக்கு முன்பு சட்டமன்றத்திலே அறிவித்தது. 51 இலட்சம் பேர் இப்பொழுது நான்கு இலட்சம் கூடி இருக்கிறார்கள். அந்த மாநிலத்திலே, 8 இலட்சம் குறைந்து இருக்கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் மனதிலே கொண்டு--நம்முடைய அரசாங்கம், தமிழகம் எந்த வகையிலேயும் சளைத்தது அல்ல--அதை விஞ்சக்கூடிய வகையிலே நம்முடைய அரசினுடைய பணிகள் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். ஆகவே, அதிலேயும் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்கிறேன்.

முற்பகல் 10-35

தமிழகத்திலே உற்பத்தி பெருகவில்லை என்று சொல்கிறார்கள் நம்முடைய உற்பத்தி பெருகினால்தான் வேலைவாய்ப்பு கிடைக்கும். வேலைவாய்ப்புப் பெருகி உற்பத்தி பெருகினால் அங்கே வாங்கும் சக்தி உண்டாகிறது. வாங்கும் சக்தி உண்டானால் வறுமை நீங்கி, அப்போது தமிழகம் முதன்மை மாநிலமாக வரும். ஆனால், உற்பத்தியும் பெருகவில்லை, வேலை வாய்ப்பும் இல்லை, வாங்கும் சக்தியும் வரவில்லை என்னும்போது அப்புறம் எப்படித் தமிழகம் முன்னேற முடியும்? ஆகவே இதை எல்லாம் கவனத்திலே கொண்டு, இதிலே அக்கறை செலுத்த வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இலவச மின்சாரப் பிரச்சினை. நான் அதிலே விவாதத்திற்குப் போகவில்லை, எல்லோரும் பேசினார்கள். ஆனால் ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் சொல்கிறேன். இது ஏற்புடையதாக இருக்கும் என்ற காரணத்தினாலே. தமிழகத்தினுடைய மொத்த விவசாயிகளுடைய எண்ணிக்கை 16,45,329 பேர். அதிலே விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்குப் பயன்படுத்தும் மின்சாரத்தினுடைய அளவு 9,362 மில்லியன் யூனிட்டுகள். அடுத்து, குடிசைவாழ் மக்கள். அவர்களுடைய மொத்த எண்ணிக்கை 13,81,362 பேர். அந்தக் குடிசை வீடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்தின் அளவு 160 மில்லியன் யூனிட்டுகள். தற்போது விவ்சாயிகளால் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு நீங்கள் 20 பைசா வீதம் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். அதாவது, மீட்டர் பொருத்தப்பட்டதற்குப் பிறகு குறைந்த கட்டணத்திலே இலவசமாக விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம் என்கிறீர்கள். அந்தக் கணக்கைப் போட்டுப் பார்த்தால், விவசாயிகளுக்கு ஆகக்கூடிய செலவு, பம்ப் செட்டுகளுக்கு 187.24

கோடி ரூபாய், இவ்வளவுதான். அதிலே, குடிசை வீடுகள், அவர்கள் பயன்படுத்தக்கூடிய மின் கட்டணத்தின் அளவுக்கு அந்தச் செலவுத் தொகை எவ்வளவு என்று சொன்னால் ரூ.8 கோடி ஆகிறது. ஆக, விவசாயிகள் மற்றும் குடிசைவாசிகள் ஆகியோர்களுடைய மொத்த மின் கட்டண அளவு எவ்வளவு என்று சொன்னால் 195.24 கோடி ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கருத்தோடு நிறைவு பண்ணிவிடுங்கள். இன்னும் இரண்டு தலைவர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி. கே. மணி:** உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல தமிழகத்தில் மொத்தம் 16 1/2 இலட்சம் விவசாயிகள் இருக்கின்றார்கள். குடிசைவாழ் பகுதிகளிலேகூட 14 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். என்று அவர்கள் சொன்ன அந்தக் கணக்கும் சரிதான். கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தால் கொண்டு வரப்பட்டது மின்சார ஒழுங்குமுறை ஆணையம்; "யாருக்குமே மின்சாரம் இலவசமாக வழங்கக் கூடாது; உற்பத்திச் செலவு, அடக்க விலைச் செலவு, இந்தச் செலவுகளை நிச்சயமாக மின்சார வாரியம்தான் கணக்கிட்டு, உடனடியாக அந்தக் கட்டணங்களை ஏற்றாமல், நாளடைவில் consumer-களுக்கு, அந்த subsidy இல்லாமல் அதைக் கொடுக்கவேண்டும்" என்பது மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினுடைய ஒரு தீர்ப்பாக இருக்கிறது.

அதுமட்டும் இல்லை, நேற்றையதினம்கூட மீட்டர்கள் பொருத்தப்படுவதைப் பற்றியெல்லாம் இங்கே தெளிவாகச் சொன்னார்கள். இந்தச் சட்டம் 1998-ஆம் வருடம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது. இன்றைக்கும் மத்திய அரசிலே அங்கம் வகிக்கிற பாட்டாளி மக்கள் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், இவர்கள் அன்றே அதைத் தடுத்திருக்கக் கூடும்; தடுத்திருக்க வேண்டும். ஆனால், அதை அவர்கள் செய்யவில்லை. மாறாக, 17-3-1999 அன்று இங்கே மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தையும் தோற்றுவித்தார்கள்; அதற்குத் தலைவரை நியமித்தார்கள்; உறுப்பினர்களையும்



நியமித்தார்கள். ஆனால், அவர்கள் செயல்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் கடந்த கால அரசில் சரியாக எதையுமே செய்யாத காரணத்தினால் இன்றைக்கு மின்சார வாரியம் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் ஒரு பின்தங்கிய நிலைமை, ஒரு மிக மோசமான சூழ்நிலை இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இப்போதும் மத்திய அரசாங்கத்தால் 2001-ஆம் ஆண்டு மின்சாரச் சட்டமுன்வடிவு 30-8-2001 அன்று பாராளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டு அந்தச் சட்டமுன்வடிவில் 55-வது பிரிவில் சொல்லப்பட்டு இருக்கின்ற வாசகம் என்னவென்றால், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட குறிப்பிட்ட சில தினங்களுக்குள், அடுத்த 2 வருடங்களுக்குள், யாராவது மீட்டர் பொருத்தவில்லை என்றால், மின்சாரமே கொடுக்கக்கூடாது என்பது பாட்டாளி மக்கள் கட்சித் தோழர்களாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களாக இருந்தாலும் சரி, இதுவரையிலும் அதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கிறார்களா? இல்லை, மத்திய அரசிலே அங்கம் வகிக்கிற நீங்கள், அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்திருக்கிறீர்களா? இதுவரைக்கும் அதற்கெல்லாம் ஒரு சரியான முகாந்திரம் தேடாமல் இருக்கிறீர்கள். இப்போது தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள்—3 H.P. ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயும் 5 H.P. ஒன்றுக்கு 1,250 ரூபாயும், இன்றைக்கு அகில இந்திய அளவில், எந்தவொரு மாநில முதலமைச்சரும் செய்ய முடியாத மிகப் பெரிய காரியத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அம்மா அவர்கள் செய்திருக்கின்றார்கள்.

முற்பகல் 10-40

அதுமட்டுமல்ல, இப்போது மேற்கு வங்காளத்தில் சீசன் வாரியாக அங்கு ஒரு tariff கொடுத்திருக்கின்றார்கள். அது கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மாநிலம். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி பல மாநிலங்களை ஆளுகிறது. ஆனால், இங்கே இருக்கிற நம்முடைய காங்கிரஸ் கட்சி நண்பர்கள், அவர்களுடைய தலைவி திருமதி சோனியா காந்தி அவர்களைச் சந்தித்து அங்கேயும் இலவச மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று அதற்கும் குரல் கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஆனால், தமிழகத்தில் இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமையைப் பொறுத்தமட்டிலும் மிக மோசமாக இருக்கிற இந்தச்

சூழ்நிலையிலும்கூட, அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு 100 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதைப் பாராட்டாமல் விட்டு விட்டு, எதையெதையோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

அம்மா அவர்களுடைய எல்லாத் தீர்ப்புகளும், எடுத்த நடவடிக்கைகள் அத்தனையும் சரி என்பதை நடந்து முடிந்த அனைத்து இடைத் தேர்தல்களும் இன்றைக்கு நமக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, ஆண்டு ஒன்றுக்கு இன்றைக்கு 40,000 பம்ப் செட்டுகளுக்கு நாம் ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் அதிலே 5,000 பேருக்குத்தான் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. மீதி 35,000 பேருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதத்திலும், 26,000 ரூபாய் வீதத்திலும் இணைப்புகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால், இவ்வளவு அக்கறை காட்டுகிற கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசு, அவர்கள் ஆண்ட 5 வருட காலத்திலும் அந்த 35,000 பேருக்கு ஏன் இலவசமாக மின்சாரம் வழங்கவில்லை? அது வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இப்போது மட்டும் அதையெல்லாம் கொடுக்காமல் விட்டுவிட்டு, வசூல் பண்ண வேண்டியதை மட்டும் வசூல் பண்ணிவிட்டு, சரியாக எதையும் செயல்படுத்தாமல், மின்சார வாரியத்தில் இவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்வது, அது வழித் தேங்காயை எடுத்து, (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும்; கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல அவர்களுடைய செயல்பாடும், நிலைமைகளும் இருந்து கொண்டிருக்கின்றன.

40,000 பம்ப் செட்டுகளுக்கும் ஆண்டொன்றுக்கு ஆகின்ற செலவு 200 கோடி ரூபாய். அதாவது மின்சார வாரியத்திற்கு ஆகக்கூடிய செலவு 200 கோடி ரூபாய். இது ஆண்டுதோறும் ஏறிக்கொண்டே போகிறது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமிகூட நேற்றையதினம் பேசினார்கள். 1,400 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறீர்கள். இன்னும் என்ன செய்யப் போகிறீர்கள் என்று சொன்னார்கள். மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின்சார வாரியம் வைத்த மனு 2,100 கோடி ரூபாய்க்கு. ஆனால், மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மக்களிடம் குறைகளைக் கேட்டு, மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் அதற்கு விளம்பரம் செய்து, அவர்கள் அந்த இடங்களுக்குச் சென்று, மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்த பின்னர்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இவ்வளவு நிலைமைக்குப் பின்னரும் இன்னும் வரும் நிதி ஆண்டில் 1,500 கோடி ரூபாய்க்கு மேலாக இழப்பு ஏற்படும் என்று மின்சார வாரியம் எதிர்பார்க்கிறது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நீங்கள் மத்திய மின்சாரச் சட்டம் 2001-ன் 55-வது பிரிவு அந்த ஷரத்தைப் படித்துப் பார்த்த பிறகு மற்றவற்றைப் பேச வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)



**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம்....

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 Electricity Act-ஐ ஏற்று இந்த அரசு ஆதரித்து ஓட்டுப் போடப் போகிறார்களா? எதிர்த்து ஓட்டுப் போடப் போகிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் பேசுங்கள். 5 மணித் துளிகளுக்குள் உரையை முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அங்கே மத்திய அரசிலே அங்கம் வகிக்கிற பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? 30-8-2001 அன்று சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டு, அங்கே Select Committee போடப்பட்டு, மீண்டும் சட்டமுன்வடிவு வெகு விரைவிலே வரவிருக்கிறது. இதுவரைக்கும் அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன?

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, உட்காருங்கள். மணி, நீங்கள் பேசுங்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** உங்களுடைய நிலை என்ன என்று விளக்குங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, துரைமுருகன் பேசும்போது பேசுவார். நீங்கள் ஒன்றும் தலைவர் கிடையாது. உட்காருங்கள். மணி, பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, பொன்முடி உட்காருங்கள். மணி, பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மத்திய அரசிலே அங்கம் வகிப்பதைப்பற்றிச் சொன்னார்கள். நாங்கள் மத்திய அரசிலே அங்கம் வகித்தாலும்கூட மாநில அரசின் உரிமைகள் என்று வருகின்ற நேரத்திலே பிரதம அமைச்சரிடத்திலே, சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே, நாடாளுமன்றத்திலே எடுத்துச் சொல்வதற்கு, வற்புறுத்துவதற்கு எந்த நேரத்திலும் தயங்கியது இல்லை. இப்போதுகூட, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அற்புதமான ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். எந்தவகையில் என்று சொன்னால், மத்திய அரசாங்கத்தினுடைய மொத்த வரி வருவாயில் 29.34 சதவீதம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதைக் கூடுதலாக ஆக்கவேண்டும். உயர்த்தி வழங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறீர்கள். அதை நாங்கள் வரவேற்று மத்திய அரசிடத்திலே வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தக் கோரிக்கையை நாங்கள் வழிமொழிகிறோம். இப்படி நல்ல திட்டங்களுக்கு நாங்கள் எப்போதும் எதிர்ப்பாகவோ, மத்திய அரசை வற்புறுத்தாமலும், இருந்தது இல்லை. நிறைய இருக்கிறது. நிறைய இருந்தாலும் சொல்வதற்கு நேரம் இல்லை. நான் இப்பொழுது சப்ஜெக்ட்டுக்கு வருகிறேன். நீங்கள் 100 கோடியை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, ஒரு 5 மணித்துளிகளுக்குள் முடித்துவிடுங்கள். இரண்டு தலைவர்கள் பேச வேண்டும். நிதியமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுக்கு ஒரு சிறிய புள்ளிவிவரத்தை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன். அவர் குடிசைவாசிகளுக்கு வழங்கப்படுகின்ற இலவச மின்சாரத்தைப் பற்றிப் பேசுகின்றார். யூனிட்டிற்கு 50 பைசா என்ற கணக்கில் வழங்கப்படுகிறது என்று சொல்லி எத்தனை இலட்சம் பேர் இதனால் பயனடைகிறார்கள் என்று சொல்லி, உங்களுக்கு இவ்வளவுதான் செலவாகிறது என்றார். ஒன்றை மறந்துவிட்டார்.



ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவு 3 ரூபாய் 7 காசு. ஆகவே, ஒரு குடிசைக்கு, ஒரு பல்புக்கு, ஒரு யூனிட்டிற்கு 50 பைசா கட்டணம் வசூலிக்கப்படுகின்றது என்றால், அதில் 2 ரூபாய் 57 பைசா மானியம் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

அதைப்போலவே, விவசாய பம்ப் செட்டிற்கு ஒரு யூனிட்டிற்கு 20 பைசா என்று கட்டணம் விதித்திருக்கிறார்கள். அதே செலவுதான் ஆகிறது உற்பத்திக்கு, ஒரு யூனிட்டிற்கு 3 ரூபாய் 7 பைசா. ஆகவே, இதில் ஒரு யூனிட்டிற்கு 2 ரூபாய் 87 பைசா மானியம் இருக்கிறது. ஆகவே, இந்தக் குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கும் குடிசைகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு அந்தக் கட்டணத்தை அரசு ஏற்றுக்கொள்கின்றபோதிலும் தமிழ்நாடு மின்சார வாரியம் 2,626 கோடி ரூபாய் மானியச் சுமையை ஏற்றுக் கொண்டுதான் இந்தக் குறைந்த கட்டணத்தை வழங்குகிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் சொல்ல வந்தது அதேதான். 2 ரூபாய் 87 பைசா மானியம் கொடுத்து விவசாயிகளுக்கு ஒரு யூனிட்டிற்கு 20 பைசாதான் கட்டணம் விதிக்கப்படுகிறது. அதேமாதிரி, 2 ரூபாய் 57 பைசா மானியமாக வழங்கி, குடிசை வீடுகளுக்கு யூனிட்டிற்கு 50 பைசாதான் கட்டணம் விதிக்கப்படுகிறது என்று சொன்னீர்கள். விவசாயிகளுக்கு 100 கோடி ரூபாய், குடிசை வீடுகளுக்கு 14 கோடி ரூபாய், ஆக மொத்தம் 114 கோடி ரூபாயை அரசு ஏற்றுக்கொள்கிறது. மீதியெல்லாம் மானியம். அதனால் மேற்கொண்டு இன்னும் ரூ.81 கோடிதான், உங்கள் கணக்குப்படியே, விவசாயிகளுக்கும், குடிசைவாசிகளுக்கும் சேர்த்து நீங்கள் சலுகைக் கட்டணமாக வழங்குவது ரூ.195 கோடி, அரசாங்கம் செலுத்தக்கூடிய உதவி ரூ.100 கோடி பிளஸ் ரூ.14 கோடி ஆக மொத்தம் ரூ.114 கோடி. ஆக, மேற்கொண்டு அவர்களுக்குச் செலவு என்பது ரூ.81 கோடி. இந்த 81 கோடி ரூபாயை அரசு வழங்கிவிட்டது என்று சொன்னால், உங்கள் மேலே குறையே இருக்காது. எந்தக் குற்றச்சாட்டும் இருக்காது. மீண்டும் இலவச மின்சாரம்தான். ரூ.81 கோடிதான். நீங்கள் மனது வையுங்கள். அதற்காகத்தான் இந்தப் புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் இந்த 81 கோடி ரூபாயை வழங்கிவிட்டீர்கள் என்று சொன்னால், இலவச மின்சாரப் பாதிப்பு என்ற பிரச்சினையையே யாரும் சொல்ல மாட்டார்கள்.

ஏனென்றால் 13 வருடங்களாக வழங்கப்பட்டு வந்த சலுகை. இப்போது திடீரென்று பறிபோகிறது. இப்போது விவசாயிகளுக்கு ஒன்றுமே இல்லை. தற்போது உழுபவர்கள் கணக்குப் பார்த்தால், உழக்குக்கூட மீதியில்லை. விவசாயிகள் அந்த நிலைமையிலே இருக்கின்ற காரணத்தினாலே, இதனை தயவுசெய்து நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தமிழக விவசாயிகளின் சார்பிலே இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி, Line loss, theft என்று சொல்கிறார்கள். 16, 25 சதவீதம்தான் என்று சொல்கிறார்கள். அது உண்மையில்லை. அவர்கள் தவறாகக் கணக்குக் கொடுக்கிறார்கள். Power Grid Corporation-லே (குறுக்கீடு) இல்லை, இல்லை, சிரிப்புக்காகச் சொல்லவில்லை. Power Grid Corporation-லே மத்திய அரசாங்கத்தினுடைய ஒரு உயர் அதிகாரி, விசுவநாதன். ஒரு நிகழ்ச்சியிலே சொல்லியிருக்கிறார். பயனீட்டாளர்களைச் சேர்வது 41 சதவீதம்தான். மீதி 59 சதவீதம் misuse. யார் என்று சொன்னால், பெரிய தொழில் அதிபர்கள், மற்றவர்கள், இவர்கள் எல்லாம் சுரண்டி விடுகிறார்கள். Line loss-இதை எல்லாம் தடுப்பதற்கு நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதில் கொஞ்சம் நீங்கள் கவனம் செலுத்தினீர்கள் என்றாலே, இந்த 81 கோடி ரூபாயை ஈடுகட்டுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைச் சொல்லி, இந்த 81 கோடி ரூபாயை நீங்கள் ஈடுகட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு line loss-ஐப் பொறுத்தவரையிலும் அகில இந்திய சராசரி 26 சதவீதம் இருக்கிறது. நமது தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் இன்றைக்கு 16 சதவீதம்தான் line loss இருக்கிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகக் குறைந்த அளவுதான் நமக்கு ஏற்படுகிறது. Theft—ஐப் பொறுத்தவரையிலும், இப்போது மிகத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் connection களை நாங்கள் ஆய்வு செய்து பார்த்ததிலே, மிகக் குறைந்த அளவுதான் நமக்கு theft இருக்கிறது. ஆகவே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழகம் மின் துறையில் இன்றைக்கு முதல் மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆணையோடு இன்னும் பல சிறப்புகளைப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினை தமிழ்நாட்டில் நிலவுவது, தனியார் சுயநிதி பொறியியல் கல்லூரிப் பிரச்சினை.·தனியார் சுயநிதி பொறியியல் கல்லூரிகளிலே--உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நீங்கள் பின்பற்றுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். கடந்த விவாதத்தின் போதுகூட இங்கே சொல்லப்பட்டது. இதற்கு, மேல்முறையீடு செய்வதற்கு அல்லது revision செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. இதற்குக்கூட, கேரள மாநிலம் தொடர்புடைய ஒரு வழக்கிலே அப்படி ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

A.I.R. 1973 Supreme Court 1461, W.P.No.135/1970- இதிலே Kesavanandha Bharathi Vs. Kerala Government அந்த வழக்கிலே நல்ல தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே அப்போது உச்ச நீதிமன்றத்திலே 16 நீதிபதிகள்தான் இருந்தார்கள். அப்போதுகூட, 13 நீதிபதிகளைப் போட்டு, விசாரித்து தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது 26 நீதிபதிகள் இருக்கிறார்கள். வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மேல்முறையீடு செய்யலாம். அல்லது. revision கூட—

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் சொல்லுகிறேன். இதிலே அரசு appeal செய்வதற்கு வாய்ப்பே இல்லை. நீங்கள் சொல்வது (குறுக்கீடு) அவர் சொல்வது 1967 ஆம் ஆண்டு கோலக்நாத் கேஸிலே ஒரு தீர்ப்பு சொல்லப்பட்டது. அது அரசியல் சட்டத் திருத்தம் சம்பந்தப்பட்டது. அதற்குப் பிறகு நீங்கள் சொல்வது 1973 ஆம் ஆண்டிலே கேசவாநந்த பாரதி கேசிலே தீர்ப்பு சொல்லப்பட்டது. அதைத்தான் நீங்கள் சொல்கிறீர்கள். அது appeal செய்யப்படவில்லை. ஏற்கெனவே 1967-லே கோலக்நாத் கேசிலே சொல்லப்பட்ட தீர்ப்பு அரசியல் சட்டத் திருத்தம் குறித்ததாக இருந்ததாலே 1973 ஆம் ஆண்டு கேசவாநந்த பாரதி, அந்த கேசிலே **Supreme Court suo motu-**ஆக அந்த வழக்கிலே ஒரு தீர்ப்பு சொன்னது. கோலக்நாத் கேசிற்கு அது appeal அல்ல. இதைப் பொறுத்தவரையில் மீண்டும் Supreme Court suo motu-ஆக எடுத்து ஏதாவது ஒரு நிலையிலே பின்னாலே மாற்றம் செய்தாலொழிய அரசாங்கம் இதிலே appeal செய்வதற்கு வழியே இல்லை. அதுதான் நாங்கள் சொல்கிற கருத்து.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அதாவது ஒரே வழக்கிலே மீண்டும் மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்திலே செய்வதற்கு வாய்ப்பு இல்லை. அவர் சொல்வது சரிதான். ஆனால் Supreme Court suo motu- என்று எடுத்துக்கொள்வது தவறு. ஏதாவது ஒரு வழக்கு வருமேயானால், இதே பிரச்சினையில் அந்த வழக்கை மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு நீங்கள் கொண்டு வருவீர்களேயானால், இதைவிட அதிகமான நீதிபதிகளை வைத்து விசாரிக்கலாம். ஆனால், இந்த வழக்கிலேயே நீங்கள் மேல்முறையீட்டுக்குப் பதிலாக review நிச்சயமாகக் கேட்கலாம் தவறு இல்லை.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, review என்பது ஏதாவது ஒரு வழக்கிலே சொல்லப்பட்ட தீர்ப்பிலே குறைபாடுகள் இருந்தால் அல்லது சொல்லாமல் விட்டால் அதற்கு review உண்டு. இதில் அப்படி ஒரு நிலைமையே இல்லை. தெளிவாகத் தீர்ப்பு சொல்லிவிட்டார்கள். review செய்வதற்கு இதிலே வழி இல்லை. அவர் சொல்வதைப்போல, அந்த வழக்கிலே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. அது அல்ல. அதாவது நாங்கள் சொல்வது (குறுக்கீடு) உங்களுக்குப் பாதகமாகச் சொல்வதற்காகச் சொல்லவில்லை. அரசின் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சொல்வதாலே நாங்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அரசாங்கம் தன்னிச்சையாக இதிலே எதுவும் செய்ய முடியாது. ஒருவேளை அப்படி review செய்வது அல்லது appeal செய்வது என்று சொன்னால் எது எதற்கோ தனியார்கள் அல்லது நீங்கள் public litigation போடுகிறீர்கள். அப்படி நீங்களும் செல்லலாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அப்படி வழி இருந்தால் review-க்கோ அல்லது appeal- க்கோ வழி இருந்தால் செல்லலாம், எது எதற்கோ அரசாங்கம் போடுகிற நல்ல திட்டங்களுக்கெல்லாம் நீங்கள் public litigation என்று மனு போடுகிறீர்கள். எனவே, தாராளமாக நீங்களும் அப்படி செல்லலாம். உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு நல்ல தீர்ப்பு வந்தால் அந்தத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. நீங்கள் ஏன் செய்யவில்லை? ஏன் செய்யவில்லை என்று எங்களைப் பார்த்துக் கேட்கிறபொழுது, எங்களுக்குச் செய்வதற்கு வழி இல்லை. அதைத்தான் நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உரையை முடித்து விடுங்கள். ஒரு மணி நேரம் ஆகிறது.



**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்பிலே revision போவதற்கு, appeal பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் சொல்வது போல, நாங்கள்கூட நீதிமன்றத்திற்குச் செல்லத் தயாராக இருக்கிறோம். இந்தத் தீர்ப்பிலே இலாப நோக்கத்தோடு அல்லாமல், தர்ம சிந்தனையோடு செயல்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய தனியார் கல்லூரிகள், இன்ஜினியரிங் கல்லூரிகள் ஒரு கல்லூரியாவது இலாப நோக்கம் இல்லாமல் செயல்படுகிறதா? தர்ம சிந்தனையோடு இருக்கிறதா? இந்த ஒரே point போதும் Supreme Court-லே. ஆகவே, இப்படிப்பட்ட நிலையிலே....

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்குப் பிறகு, இன்றைக்கு அரசாங்கம் தீர்க்கமாக முடிவெடுத்து, ஒரு Guide line-ஐ நாங்கள் சொல்லியிருக்கிறோம். இது மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இப்பொழுது நான் கேட்கிற கேள்வி, நீங்கள் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எங்களைப் பின்பற்றச் சொல்கிறீர்களா? அல்லது அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தினுடைய வழிகாட்டுதலைப் பின்பற்றச் சொல்கிறீர்களா? அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். நான் அடுத்து பதில் சொல்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலேயும் நமக்கு சாதகமான point இருக்கிறது. அது இல்லாமல், A.I.C.T.E. சொல்லியிருக்கிறது. அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் சொல்லியிருக்கிறது. Guide lines அவர்களும் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அமைச்சர்கூட சமீபத்திலே ஒரு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது; ஒரு பேட்டியிலே மருத்துவ மாணவர்களை எப்போது எல்லாம் சேர்க்க இருக்கிறீர்கள் என்று கேட்டபோது, மத்திய அரசினுடைய சுகாதார அமைச்சகத்தினுடைய உத்தரவை எதிர்பார்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதை எதிர்பார்க்கிற நம்முடைய அரசு A.I.C.T.E. சொல்லியிருக்கிற அந்த Guide lines-ஐ ஏன் பின்பற்றக்கூடாது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, A.I.C.T.E-யிலே சொல்லப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அதிலே இட ஒதுக்கீடு பற்றியே அவர்கள் எதுவும் சொல்லவில்லை. இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? ஆனால், உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு, தமிழ்நாடு அரசு சொல்லியிருக்கிற வழிகாட்டுதலின்படி இதிலே இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டிருக்கிறது. Common Entrance Examination செய்ய உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10-55*

அதேபோல, fees structure, முன்பெல்லாம் private candidate-க்கு 51,000/- ரூபாய் கட்ட வேண்டும். ஆனால், இப்போது, 30,000/- ரூபாய் என்ற குறைந்த அளவிலே கட்டணம் நிர்ணயித்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், single window system மூலமாகப் போகிறவர்களுக்கு 5,000 ரூபாய் சலுகை காட்ட வேண்டும் என்றுகூடச் சொல்லியிருக்கிறோம். பெற்றோர்களுக்கு, ஆசிரியர்களுக்கு இது பாதிப்பு ஏற்படுத்தக்கூடாது என்ற வகையில்தான் நாங்கள் வழிமுறை செய்திருக்கிறோம். இன்னும் சொல்கிறேன்; கேரள மாநிலத்திலே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது விஷயமாக உச்ச நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்புக் கூறப்பட்டது. அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இங்கே ஒரு வழிமுறை, ஒரு formula வகுத்து, அரசாங்கம் சம்பந்தப்பட்ட எல்லா கல்லூரி நிறுவனங்களையும் அழைத்துப் பேசி,ஒரு formula-வை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். அதன்பிறகு A.I.C.T.E. சில guide lines-ஐ வெளியிட்டது. அந்த A.I.C.T.E. guide lines-ஐப் பார்க்கும்போது, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு முரணாகவும், எதிராகவும் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, எதைப் பின்பற்றலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில், சில தனியார் கல்லூரி நிறுவனங்கள் A.I.C.T.E. வெளியிட்ட guide lines-ஐ எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, அந்த வழக்கின் முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் ரொம்ப முடிந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில், மிக முக்கியமான பிரச்சினை. தெலுங்கு-கங்கைத் திட்டம்; கிருஷ்ணா நதிநீர்; 1980-லே...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். தலைவர் அவர்களே....,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சினுடைய நிறைவுக்கட்டத்திற்கு வாருங்கள். 11-00 மணி ஆகப் போகிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, 1980-லே ஒப்பந்தம் அன்னை இந்திரா காந்தி அவர்கள், அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள், என்.டி.ஆர். அவர்களாலே போடப்பட்டது. 1996-லேதான் தண்ணீர் வந்தது. 16 ஆண்டுகள் கழித்து வந்தது. இந்த 16 ஆண்டுகள் கழித்து வந்ததிலே, நம்முடைய ஒப்பந்தப்படி 15 டி.எம்.சி. ஆனால் நமக்கு 12 டி.எம்.சி. இருந்தாலே போதுமானது. ஆனால், இதுவரையிலே வந்தது; 1996-97-லே 0.78 டி.எம்.சி. 1997-1998-லே 2.2 டி.எம்.சி. 1998-99-லே 2.8 டி.எம்.சி. 1999-2000-லே 1.8 டி.எம்.சி. 2000-2001-லேதான் 6.6 டி.எம்.சி. 2001-2002-லே 1.2 டி.எம்.சி. அப்போது, அன்றைய மதிப்பீடு 512 கோடி ரூபாய்; அது 600 கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, அங்கே ஒரே வருடம்தான் 6.6 டி.எம்.சி. வந்திருக்கிறது. 12 டி.எம்.சி. நமக்குப் போதுமானது. 12 டி.எம்.சி. வந்தாலே சென்னைக்கு, அம்பத்தூர், ஆவடி, தாம்பரம் இங்கேயெல்லாம் கொடுக்கலாம். ஆகவே, இப்போது நம்முடைய அரசு இதிலே இன்னும் அக்கறை செலுத்தி, இன்னும் சற்றுக் குறைவான தொகையை ஒதுக்கினாலும்கூட போதுமானதாக இருக்கும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்காக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றபோது, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இதே கருத்தைத் தெரிவித்தார்கள். அப்போது அந்தக் கூட்டத் தொடரின்போது, இதற்கு விரிவாக, புள்ளிவிவரங்களோடு பதில் தெரிவித்தேன். இப்போது மீண்டும் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, இதே கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். இப்போது மீண்டும் விரிவான பதிலைச் சொல்ல நேரம் இல்லை. ஆகவே, அந்த மானியக் கோரிக்கை வரும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் மீண்டும் அதே பதிலை அளிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உரையை முடித்துவிடுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்களைப் பேசச் சொல்வோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேமாதிரி, எங்களுடைய தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டிலே மிகப் பின்தங்கிய மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்னும் 2 மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இதோ முடித்துவிடுகிறேன். ஐரோப்பாவினுடைய நோயாளி துருக்கி என்று சொல்வார்கள். அதேபோல, தமிழகத்தினுடைய நோயாளியாக இருப்பது தருமபுரி மாவட்டம். வறண்டு, தொடர்ந்து பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட வந்த நேரத்திலே, ரொம்பப் பெருமையாகச் சொன்னார்கள். தர்ம சிந்தனை உள்ள மக்கள் வாழக்கூடிய மாவட்டம் தருமபுரி மாவட்டம். ரொம்பவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே தளி இருக்கிறது. புளி விளையக்கூடிய மாவட்டம்; களி சாப்பிடக்கூடிய மாவட்டம்; கம்பளி உற்பத்தி என்று இதையெல்லாம் சொன்னார்கள். ரொம்பவும் பெருமையாகத்தான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் தர்ம சிந்தனையோடு முடித்துவிடுங்கள். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** அந்தவகையிலே அந்த மாவட்டத்து மக்கள் எல்லாம் எதிர்பார்த்தார்கள். ஒரு தனித் திட்டம். தருமபுரியினுடைய ஒட்டுமொத்த மாவட்ட வளர்ச்சிக்கு ஒரு சிறப்புத் திட்டம் அறிவிப்பதாகச் சொன்னீர்கள்; எல்லாம் எதிர்பார்த்தார்கள். அப்படிப்பட்ட சிறப்புத் திட்டமே இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையிலே சிறப்புத் திட்டமே அறிவிக்கப்படவில்லை. ஒரு பெருத்த ஏமாற்றம். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலேயே இல்லாத அளவிற்கு தண்ணீரில் ப்ளோரைடு என்ற நச்சுத்தன்மை தென்னிந்தியாவிலேயே தருமபுரி மாவட்டத்திலேதான் இருக்கிறது; 30.84 சதவீதம் இருக்கிறது. வேறு எங்குமே இல்லை. அந்த அளவு பாதிப்பானது அங்கே இருக்கிறது. ஒரு பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டம்கூட இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே.மணி:** ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று சொல்லி நீண்ட காலமாக வலியுறுத்தியும்கூட, இப்போதும் அறிவிக்கவில்லை; முதலமைச்சர் வந்தும் அறிவிக்கவில்லை



என்பது இந்த மாவட்டத்து மக்களுக்குப் பெருத்த ஏமாற்றம்; மிகப் பெரிய துரோகம். இந்த மாவட்டத்து மக்கள் என்ன பாவம் செய்தார்கள் என்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நீதித் துறையிலே, பார்த்தால்...

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய கருத்துகள் சொல்வதற்கு நேரம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். நீதித் துறையிலே நிறைய பணியிடங்கள் காலியிருக்கின்றன. நீதிபதிகள் மற்ற பணியாளர்கள் இடங்கள் காலியாக இருக்கின்ற காரணத்தாலே அதையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மிக பின்தங்கிய MBC இட ஒதுக்கீட்டில் BC, MBC, SC, ST எல்லோருக்கும் பிரச்சினை இருக்கிறது. அந்த இட ஒதுக்கீட்டில் சில திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. BC-யாக இருந்தாலும், BC-யிலே 99 ஜாதிகள் இருக்கின்றன. 30 சதவீதம் இட ஒதுக்கீடு, அதிலே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசுகிறேன். இந்த மாநிலத்தினுடைய மக்கள் தொகை அடிப்படையில் வன்னியர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இதை நான் குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்காகப் பேசவில்லை. இன்றைக்குப் பார்த்தால் ஒரு தலைமைச் செயலாளர் கிடையாது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நிறைவுக் கட்டத்திற்கு வாருங்கள். (குறுக்கீடு) 11—00 மணியாகிவிட்டது.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். உள் துறைச் செயலாளர் கிடையாது. TNPSC Chairman, TNPSC Member கூட கிடையாது. இன்னும் குறிப்பாக இவ்வளவு S.P. இருக்கிறார்கள். 30 S.P. இருக்கிறார்கள். ஒரு S.P. கூட வன்னியரில் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேசுங்கள். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். இப்போது சென்னைப் பல்கலைக்கழகத்திலே ரொம்பவும் கடுமையாக கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் தொழிலாளர்கள் பிரச்சினை மிக முக்கியமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, புதிய கருத்துகளுக்கு நேரம் இல்லை. மானியக் கோரிக்கைகளில் பேசலாம். இத்துடன் பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன், தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து தனியார் மயமாக்கும் திட்டத்தை கட்டாயம் கைவிட வேண்டும். போக்குவரத்துத் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒட்டுமொத்தமாக மீண்டும் இலவச வேட்டி திட்டத்தை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். புதிய கருத்துகள் சொல்ல நேரமில்லை. திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் (குறுக்கீடு) இன்னும் இரண்டு தலைவர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். ஒட்டுமொத்தமாக சொல்லவேண்டுமென்று சொன்னால், சாலைப் பணியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள், ஊட்டச் சத்துப் பணியாளர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சொல்கிற நேரத்திலே இப்போது தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள், மாணவர்கள், படித்துவிட்டு வேலை இல்லாதோர் ஆகிய எல்லாத் தரப்பு மக்களுக்கும் மிகுந்த பாதிப்பும், ஏமாற்றமும் அளித்து இருக்கிறது. நிதிநிலை அறிக்கை என்பது திரு. நாராயணன் அவர்கள் மக்களுக்காக அரசு நிறைவேற்றக்கூடிய அந்தத் திட்டங்களைப் பிரதிபலிக்கின்ற ஒரு கண்ணாடி என்று சொன்னார்கள். ஆகவே, அந்தக் கண்ணாடியைப் பார்க்கின்ற நேரத்திலே, அது சாயம் போன கண்ணாடியாக, முலாம் இல்லாத கண்ணாடியாக இருக்கிறது. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கை என்பது கானல் நீராக, காகிதப் பூவாக, முலாம் போன கண்ணாடியாக இருக்கிறது என்பதைச் சொல்லி அமைகிறேன். நன்றி.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது இன்று ஏழாவது நாளாக தொடர்ந்து இங்கே விவாதம் நடைபெறுகிறது. நாங்கள் பேசியதைத் தொடர்ந்து நிதி அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளிக்க இருக்கிறார்கள். இங்கே நிதிநிலை அறிக்கையைப்பற்றி பலவிதமான விமர்சனங்கள் வைக்கப்பட்டன. இந்த ஆண்டு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கை புதுமையான ஒன்றாக காட்சியளிக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்து தாக்கல் செய்த நிதி அமைச்சரும், அதற்குப் பின்னணியில் இருந்து ஒத்துழைத்த நிதித் துறைச் செயலாளரும் எந்தவகையிலும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. முதலமைச்சரைப் புகழ்ந்து உரைத்ததையோ, பெருமைப்படுத்துவதையோ நான் தவறு என்று கூறமாட்டேன். ஆனால், முதலமைச்சர்தான் அதற்கு முழுக்க முழுக்க காரணமானவர் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பாராளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் தாக்கல் செய்கிறார். ஒவ்வொரு ஆண்டும் தாக்கல் செய்கிறார். இந்த ஆண்டும் தாக்கல் செய்தார். தாக்கல் செய்து முடிந்தவுடன் நீங்கள் பார்த்தால், பிரதம மந்திரி அவர்கள் நிதி அமைச்சரைப் பாராட்டுவார்; கைகுலுக்கிப் பாராட்டுவார். ஏனென்று சொன்னால் அந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதில் பிரதமர் எந்தவிதமான பாத்திரமும் வகிப்பதில்லை.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம அமைச்சர் - He is the Head of the Cabinet, there is collective responsibility. அதைப்போலத்தான் இங்கே - It is the collective responsibility of the Cabinet. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரைக்கும், நீங்கள் பொறாமைப்படக்கூடாது, நான் சொல்வதற்காக. நான் சொல்கிற உண்மை, அவர்களுக்கு இருக்கின்ற அறிவுக் கூர்மை, ஒரு நாளைக்கு 18 மணி நேரத்திற்கு மேலே படிக்கின்ற பாங்கு, எல்லாத் துறைகளைப்பற்றியும் Jack of all Trades என்று அல்ல Master of everything என்ற முறையிலே--(மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் துறையை எடுத்தாலும், நான் உணர்ந்து நெஞ்சாரச் சொல்கிறேன்; அதிகாரிகளே வியந்து பாராட்டக்கூடிய அளவிற்கு, she has got the subject matters in her finger tips. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு இருக்கின்ற காரணத்தால், அவருடைய ஆலோசனை, அவருடைய சிந்தனை ஆகியவை மூலம் வறுமையில் இருக்கின்ற, வறுமை நிலை மிக அதிகமாக இருக்கின்ற தமிழகத்தில் வளத்தை

உருவாக்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், அனைத்துத் துறைகளுக்கும் சிந்தித்து திட்டங்களைத் தீட்டுவதே எங்களது முதலமைச்சர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருக்கின்ற நேரத்தில், அவர்களை நீங்கள் குறை கூறுவது, அவரைக் கலக்காமல் நாங்கள் எதையும் செய்ய வேண்டும் என்று நீங்கள் எண்ணுவதே தவறு. எல்லாமே மாண்புமிகு முதலமைச்சர்தான்; எல்லாமே மாண்புமிகு புரட்சித் தலைவிதான். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் அவருடைய சிந்தனையில் பிறந்த நிகழ்வுகள்தான். (மேசையைத்தட்டும் ஒலி) அந்த அளவிற்கு அறிவுகூர்ந்த ஒரு பொருளாதார நிபுணராக எங்களது முதலமைச்சர் இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரை நீங்கள் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11—05*

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவரைப் புகழ்ந்து பாராட்டுவதைத் தவறு என்று சொல்லவில்லை. போற்றுவதையும் குறை சொல்லவில்லை. பாராளுமன்றத்திலே சில மரபுகள் இருக்கின்றன. நாம் பின்பற்றுவது பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபு. பிரிட்டிஷ் பாராளுமன்ற மரபுப்படி பிரதம மந்திரியே நிதியமைச்சராக இருப்பதில்லை. இந்தியாவிலும் அதேமுறைதான் பின்பற்றப்பட்டு வருகின்றது. நிதி நிர்வாகத்தில் நிபுணர்களாக விளங்குபவர்களையே நிதியமைச்சராக நியமிப்பது இங்கும் வழக்கமாக இருந்து வருகிறது. வங்கிகளை நாட்டுடைமையாக்கும் பிரச்சினையில் பிரதமராக இருந்த இந்திரா காந்தியிடம் அன்று நிதியமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் கருத்து மாறுபாடு கொண்டார்கள். எனவே, தேசாய் அவர்கள், அவர்களுடைய பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். பிரதமரே நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சிறிதுகாலம் பணியாற்றி வந்தார்கள். பின்னர் அந்தப் பொறுப்பை சவானிடம் ஒப்படைத்தார். இப்படி விதிவிலக்காக நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தவிர மற்ற நேரங்களிலேயெல்லாம் நிதியமைச்சர் பொறுப்புகளை தனியாக ஒருவரே நிர்வகித்து இருக்கிறார்.

அதேபோல, நம்முடைய மாநிலத்திலே, ஒருசில விதிவிலக்குகளைத் தவிர, பெரும்பாலும் நிர்வாக அனுபவமும், நிதி நிர்வாகத் தேர்ச்சியும் பெற்றவர்களையே நிர்வாகிகளாக நிர்வகிப்பதற்கு நாம் இதுவரை தேர்ந்தெடுத்து இருக்கிறோம். ஆனால், தற்போது தாக்கல்



செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் ஒரு மாறுபட்ட போக்கு காணப்படுகிறது. மாநிலத்தின் நிதிநிலைமை சமாளிக்க முடியாத அளவிற்குச் மோசமாக இருப்பதையும், ஒரு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய முடியுமா என்ற அளவிற்குச் சந்தேகத்திற்கு உரியதாகவும் இருப்பதை நிதியமைச்சரே பல இடங்களில் ஒப்புக் கொண்டிருக்கிறார். முதலமைச்சரின் வழிகாட்டுதல் இல்லாவிட்டால் இந்த அறிக்கையையே தாக்கல் செய்திருக்க முடியாது என்றும் கூறி இருக்கிறார். எனவே, இந்த அறிக்கைக்கு முதலமைச்சரை முழுக்க முழுக்கப் பொறுப்பாக்கிவிட்டு, (குறுக்கீடு) இருங்கள். நான் முடித்து விடுகிறேன். நிதியமைச்சர் ஒதுங்கிக் கொள்ளவும், பதுங்கிக் கொள்ளவும் காரணம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீரழிக்கப்பட்டுவிட்ட தமிழகத்தின் நிதி நிலையைத் தலை நிமிர்த்தி, செம்மையாக்கி, ஏற்பட்ட தொய்வுகளுக்கான சந்து பொந்துக்களையெல்லாம் கண்டறிந்து, அவற்றைக் களைந்து, அடைத்து, செம்மையான முறையிலே நிதி நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு சீர்திருத்த நடவடிக்கைகள் வேண்டும்; அளப்பரிய துணிவு வேண்டும். வரி போட்டால், ஏன் வரி போடுகிறீர்கள் என்று சொல்கிறீர்கள். ஓர் ஊருக்கு சாலை இல்லையென்றால், சாலை இல்லையே, பணம் எங்கே என்று கேட்கின்றீர்கள். மையத்திலே இருக்கின்றவர்களோ, இங்கு இருக்கின்றவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு, கொடுக்கின்ற நிதியும் இல்லை என்று சொல்கின்றார்கள். இதையெல்லாம் மீறி, தமிழகத்தை வழிநடத்த வேண்டுமென்றால் அதற்குத் தேவையானது, சிங்கத்திற்குள்ள துணிச்சல். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த சிங்கத்திற்குள்ள துணிச்சல் எங்கள் தலைவியிடம் இருக்கின்ற காரணத்தால், அவர் எடுத்த துணிவான முடிவுகள் காரணத்தால், நாங்கள் அனைத்திலும் வெற்றி பெறுகிறோம் நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தீர்கள். கூடாத இடத்தில் கூடினீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிக் கூடி, ஒன்று சேர்ந்தும்கூட, அம்மா அவர்களின் துணிவு காரணமாக, அவர்கள் எடுத்த துணிச்சலான பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக நாங்கள் வெற்றிப் பாதையில் செல்கிறோம். நிதிநிலையைச் சீராக்கியிருக்கிறோம். சாத்தான்குளம் தீர்ப்பளித்துவிட்டது. உங்களது தீர்ப்பை நாங்கள் இப்போது எதிர்பார்க்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஏன் ஒதுங்குகிறார்,

ஏன் பதுங்குகிறார் என்று மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் கேட்டார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கு ஒதுங்கவோ, பதுங்கவோ தேவையில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் முதலமைச்சரே நிதியமைச்சராகவும் இருந்தார் என்பதை மறந்துவிட்டு மாண்புமிகு எஸ்.ஆர்.பி. பேசுகிறார். கடந்த ஆட்சியின்போது முதலமைச்சர் கருணாநிதிதான் நிதியமைச்சராகவும் இருந்தார். அவர்தான் இந்த மாநிலத்தின் பொருளாதாரத்தைச் சீர்கேடு அடையச் செய்து, அவர் இன்றைக்கு ஒதுங்கியிருக்கிறார்; பதுங்கியிருக்கிறார். அவரால் ஏற்பட்ட சீர்கேட்டை நாங்கள் சரிசெய்து வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமைக்குரியவர்களாக இருக்கிறோம். ஆகவே, எங்களுடைய நிதியமைச்சருக்குப் பதுங்கவோ, ஒதுங்கவோ தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *11.10*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதையும் மறைக்கவில்லை. சில விதிவிலக்குகளைத் தவிர என்று ஏற்கெனவே சொல்லித்தான் நான் குறிப்பிட்டேன். அதுமட்டுமல்ல, அவரே சொன்னார். It is a collective responsibility, it is a team game. எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நிதி அமைச்சருக்கு என்று ஒரு பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை அவர்தான் செய்ய வேண்டுமே தவிர, யார் மீதோ பழியையோ, பளுவையோ தூக்கி வைக்க முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், ஒருவேளை மாண்புமிகு எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய கட்சி, டெல்லியிலே ஆளுங்கட்சியாக வந்தால், அரசியல் சட்டத்தைத் திருத்தி, Collective responsibility, Cabinet-க்குத் தேவை என்ற சட்டத்தை மாற்றுங்கள், இல்லையென்றால் இதுபோன்ற விதண்டாவாதங்கள் அரசியல் சட்டத்திற்கு மாறான ஒன்று என்பதை நாடு உணரும். நீங்கள் உணர வேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் Collective responsibility வேண்டும் என்கிறேன். வேண்டாம் என்று என்னைத் திருத்தச் சொல்கிறீர்களே. ஏதாவது பொருள் இருக்கிறதா? ஒரு பொருளும் இல்லை. It is a team game. That is what I say. நீங்கள் T.V.-யிலே Cricket



Game-ஐப் பார்த்து இருப்பீர்கள். Captain, he is the Captain, of course, he takes the decisions. உள்ளேபோய் நின்று ஆடும்பொழுது அந்தந்த ஆட்டக்காரர், அந்த ஆட்டத்தை ஆடித்தான் ஆகவேண்டும். Short pitch பந்து வருகிறது என்றால், duck பண்ணுகிறேன். கேப்டன் பார்த்துக்கொள்வார் என்றால், you will get hurt; Don't duck. Don't take evasive actions. You will definitely get hurt in the process.

அதாவது, ஒரு மாநிலத்திலே நிதிநெருக்கடி நிலை, எந்தச் சூழ்நிலையிலே அறிவிக்கப்படலாம் என்று அரசமைப்புச் சட்டம் 360-வது பிரிவு கூறுகிறது. அதன்படி நிர்வாக அதிகாரத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, மாநில அரசுக்குத் தேவையான ஆணைகளைப் பிறப்பிக்கலாம். ஒரு மாநிலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையும், நாணயமும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும்போது, நிதிநெருக்கடி நிலை அறிவிக்கப்படலாம் என்று கூறப்பட்டு இருக்கிறது. மத்திய அரசு பிறப்பிக்கும் ஆணைகளின் மூலம் மாநில அரசுப் பணியாளர் ஊதியங்களையோ, படிகளையோ குறைக்கலாம் என்று கூறப்பட்டிருக்கின்றது. எனினும், மாநில அரசுக்கு இதன்மூலம் எந்த ஆபத்தும் ஏற்படாது. மாநில அரசுதான் ஆட்சிப் பொறுப்பில் தொடரும். இருப்பினும், விருப்பு வெறுப்பின்றி, மாநில அரசின் நிதிநிலையைச் சீராக்கும் ஒரே நோக்கத்தோடு, மத்திய அரசும், குடியரசுத் தலைவரும் தேவையான அறிவுரைகளை வழங்குவார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நிதிநிலை நெருக்கடி உருவாகியிருப்பது உண்மை. அதை மாநில அரசு எந்தச் சூழ்நிலையிலும் மறுத்துரைக்கவில்லை. நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு மத்திய அரசிடமிருந்து கோரப்பட்ட நிதி உதவியும் கிடைக்கவில்லை. மத்திய வரி பங்கீட்டின் அளவும் மாநிலங்களுக்கு உயர்த்தப்படவில்லை கடைசியாக, வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, வற்புறுத்திக் கேட்கப்பட்ட ரூ.3,527.92 கோடியும் கிடைக்கவில்லை. அதில் ரூ.258 கோடி மட்டுமே வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது. கூடுதலாகக் கேட்கப்பட்ட அரிசியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலையில், நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கான, தேவையான நிதிநிலை ஆதாரங்களைக் கண்டறியாமலே ஒரு நிதிநிலை அறிக்கை இங்கே தாக்கல் செய்யப்படுகிறது. இதில் அரசு ஊழியர்கள் எண்ணிக்கையில் வெட்டு. புதிய நியமனங்களுக்குத் தடை. பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் போன்றவை தனியாரிடம் ஒப்படைப்பு. பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் பணியிழப்பு. ஊழியர்களின் உரிமைகளும், சலுகைகளும் பறிப்பு

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 ஏப்ரல் 1

போன்ற அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

உண்மையில், ஒரு மாநிலத்தில் நிதிநிலை நெருக்கடி ஏற்பட்டு, நிதி நிருவாகத்தை மத்திய அரசு தன் கையில் எடுத்துக்கொண்டு ஆணைகள் பிறப்பிக்கும் நிலையில்தான் இத்தகைய அறிவிப்புகள் மேற்கொள்ளப்படும். ஆனால், இத்தகைய நிதிநிலை நெருக்கடி நிலையை மத்திய அரசு அறிவிப்பதைத் தடுத்து நிறுத்தி, மாநில அரசே அந்த அதிகாரங்களை தன் கையில் எடுத்துக் கொண்டது. அது அரசமைப்புச் சட்டத்தின் விதிமுறைகளுக்கும், நெறிமுறைகளுக்கும் முரணானது என்பதால்தான், நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய முற்படும்போதே, நான் இங்கே ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினேன். அதை விளக்கிப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

தற்போது, தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில், எந்தெந்தத் துறைகளில் பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும், தொடர்ந்து அந்தப் பணிகளை முடிப்பதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெளிவாகக் குறிப்பிடவில்லை. மாறாக, 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்ததையும், அவற்றில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு நிவாரண உதவிகள் கோரிய நிலையையும் விரிவாக விளக்கி இருக்கிறார்கள்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு மாநிலத்தின் நிதிநிலைமை குறித்து ஒரு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்தது. அதில், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வு, ஓய்வூதிய உயர்வு போன்றவற்றால் மாநில அரசுக்கு ஏற்பட்ட நிதிச் சுமையைப்பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

அதேபோன்று, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டுவரும் இழப்புகள், பொது விநியோக முறையில் அரசுக்கு ஏற்பட்டுள்ள மானியச்சுமை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் மற்றும் குறைந்தகட்டணத்தில் மின்சாரம் வழங்கப்பட்டதால் ஏற்படும் இழப்புகள் போன்றவற்றால், மாநில அரசு நிதிநிலைமை மோசமடைந்து கடன்சுமை அதிகரிக்கும் நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதையொட்டி பல சீர்திருத்த நடவடிக்கைகளை அரசு அறிவித்தது. ஆனால், அவற்றிற்குக் கடுமையான எதிர்ப்பு கிளம்பியதால், அரசால் நினைத்ததைச் செய்ய முடியவில்லை. இடையில் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலின்போது, எந்தக் காரணத்தை முன்னிட்டும்,



2003 ஏப்ரல் 1] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் கைவிடப்படமாட்டாது என்று மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால், தேர்தல் முடிந்தவுடன் அந்த உறுதிமொழி காற்றில் பறக்கவிடப்பட்டது. இது மக்களை ஏமாற்றும் செயலாகாதா என்பதை இந்த அரசுதான் விளக்க வேண்டும்.

தற்போது, பொருளாதாரப் பணிகள் குறித்து...

*முற்பகல் 11—15*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் காற்றில் பறக்கவிடப்பட்டது என்று சொல்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். ஆனால், திட்டம் காற்றில் விடப்படவில்லை. அதாவது, நேரடியாக மின்சார வாரியத்திற்குக் கொடுப்பதற்குப் பதிலாக, இப்போது நேரடியாகவே விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு, அது கட்டப்படுகிறது. விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுத்தபின்தான், அவர்களை மின்சார வாரியத்திற்குப் பணத்தைக் கட்டச் சொல்கிறோம். வாழைப்பழத்தை உரித்துத்தான் கொடுக்க முடியும்; அவர்களுக்காக வாழைப்பழத்தை நாமே திண்ணமுடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் கைவிடப்படவில்லை என்று சொல்கிறார். ஆனால், அவரே அறிவிப்பிலே சொல்கிறார்; 3 H.P.-க்குத்தான் முதலிலே சொன்னார். இரண்டாவது, 5 H.P.-க்கு என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் 3 H.P., 5 H.P-க்கு மட்டும்தான் இலவச மின்சாரம்; மற்றவர்களுக்கு இலவச மின்சாரம் கிடையாது என்று எந்த இடத்திலேயும் சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர்கள் 1999 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ‘மத்திய அரசில் நாங்கள் உள்ளே இருந்தபோதே எதிர்ப்புத் தெரிவித்தேன்; நிச்சயமாக இலவச மின்சாரம் தொடர்வதற்கு எங்களுடைய கட்சி பாடுபடும்’ என்று தெளிவாக உரைத்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல; இங்கே, ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலின்போது மிகத் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் இலவச மின்சாரத்தைக் கைவிடமாட்டோம்; ரேஷன் அரிசி விலை உயராது; இலவச மின்சாரத் திட்டம் நீடிக்கும் என்று சொல்லி இருக்கிறார்கள். “எதிரிகள் இங்கே

உங்களிடம் வந்து பொய்ப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே நான் அந்தப் பொய்ப் பிரச்சாரத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆண்டிப்பட்டித் தேர்தலுக்குப் பிறகும், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்; நியாயவிலைக் கடைகள் மூலம் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும் அரிசி விலையை உயர்த்த மாட்டோம்" என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; இந்த அவையிலே, நான் வெளியிலேகூட போய்ச் சொல்ல விரும்பவில்லை... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் ஒன்றை மறந்துவிட்டுப் பேசுகிறார். உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டு, உயர் நீதிமன்றம், இந்த மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அரசு தலையிடக் கூடாது; அரசு நிர்ணயம் செய்ய முடியாது என்று தெளிவாகக் கூறிவிட்டது. இந்த நிலையில், உயர் நீதி மன்றத்தினுடைய ஆணையை மீறி அரசு என்ன செய்தாலும் that would amount to contempt என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார ஆணையம் என்ன சொன்னது; மற்றவர்கள் என்ன சொன்னார்கள்; சட்டம் என்ன வருகிறது என்று தெரிந்ததற்குப் பின்னால், சென்ற ஆண்டு, இதே அவையிலே, முதலமைச்சர் அவர்கள் ஏப்ரல் 2ஆம் தேதி, "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடரும் என்பதை ஏற்கெனவே தெளிவாக அறிவித்துவிட்டோம்; இப்போது..... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் தொடங்கப்பட்ட நாள் முதலாக, கடந்த 7 நாட்களாக இதே பிரச்சினைக்கு தினந்தோறும் நான் பதில் சொல்லி கொண்டே இருக்கிறேன். பெரும்பாலான நாட்கள், மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும் இந்த அவையில் அமர்ந்து அந்த விளக்கங்களைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். இருப்பினும், இப்போது குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக அவர் இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். திரும்பவும் சொல்கிறேன்.



மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு. இந்த அரசு கொடுத்த வாக்குறுதிகள் மீறப்படவில்லை. இன்றைக்கும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குகின்ற திட்டம் தொடர்கிறது. நேரடியாக மின்சார வாரியத்திற்குப் பணத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக, விவசாயிகளுக்கு இந்த அரசு பணம் கொடுக்கிறது. விவசாயிகள் அந்தக் கட்டணத்தைச் செலுத்தப் போகிறார்கள். ஆகவே, இன்றைக்கும், இந்தியாவிலேயே, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குகின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 'விவசாயிகளுக்கு வழங்குகிறது; விவசாயிகளுக்கு வழங்குகிறது' என்று சொல்கிறீர்கள். 7.5 குதிரைத் திறன் மோட்டார் வைத்திருந்தால், அவர்கள் விவசாயிகள் அல்லவா? 10 குதிரைத் திறன் மோட்டார் வைத்திருந்தால், அவர்கள் விவசாயிகள் அல்லவா? நான் விவசாயி அல்லவா? எனக்கு அந்தச் சலுகைகள் கிடையாது.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, அதாவது 5 ஏக்கர் புன்செய் நிலமும், 2½ ஏக்கர் நன்செய் நிலமும், 3 H.P., 5 H.P மோட்டார் வைத்துள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சிறு, குறு என்று சொல்லி, விவசாயிகளைப் பிரிக்க முயற்சிக்காதீர்கள். *(குறுக்கீடுகள்)* விவசாயிகளை அருள்கூர்ந்து பிரிக்க முயற்சிக்காதீர்கள். நீங்கள் சொன்னது, சிறு விவசாயிகளுக்கு மட்டும்தான் தருவேன்; குறு விவசாயிகளுக்கு மட்டும்தான் தருவேன்; 3 H.P., 5 H.P. வைத்திருந்தால் தருவேன்; 10 H.P. வைத்திருந்தால் கிடையாது என்று சொல்லவேயில்லை; ஒருபோதும் சொல்லவில்லை. நான் இரண்டையும் படித்துக்காட்டினேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டிலும் அல்ல; இந்தியாவிலேயே எடுத்துக்கொண்டால், விவசாயம் என்பது ஜீவாதாரமான தொழில். விவசாயம் என்றால், பிரதானமான தொழில். 70 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் விவசாயிகளாக, விவசாயத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். இங்கே உற்பத்தி பெருகியிருக்கிறது;

நாமே பெருமைப்பட்டுக் கொள்கிறோம். தன்னிறைவு அடைந்திருக்கிறோம். இது எல்லாம் யாரால் சாத்தியமாயிற்று? விவசாயிகளால் சாத்தியமாயிற்று.

முற்பகல் 11-20

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் ஜீவ நதி இருக்கிறதா? கிடையாது. விவசாயத்திற்கு என்ன இருக்கிறது? காவிரி ஒன்று இருக்கிறது. காவிரி நீர் இல்லை என்றால், அதுவும் இல்லை. மற்ற இடங்களில் எல்லாம் என்ன இருக்கிறது? ஏரிப் பாசனம் கொஞ்சம் இருக்கிறது. ஏரிப் பாசனத்தை முழுக்க நம்பமுடியாது. எல்லோரும் எதை நம்புகிறார்கள்? நிலத்தடி நீரை. நிலத்தடி நீரை கோவை மாவட்டம் மட்டும் பயன்படுத்தவில்லை; ஈரோடு மாவட்டம் மட்டும் பயன்படுத்தவில்லை. மற்ற மாவட்டங்களில், காவிரி டெல்டா பகுதியிலும் கூட இன்று நிலத்தடி நீரைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் கேட்டீர்கள் என்றால், 3 H.P. உங்களிடம் இருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்றார்கள். 3 H.P. 5 H.P என்று சொன்னால், அவர்கள் கதி எல்லாம் என்ன ஆவது? விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்குகள் எதுவுமே சரியான கணக்குகளாக எனக்குத் தெரியவில்லை. காரணம், விவசாயிகள் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பது துல்லியமாகக் கணக்கிடப்படவில்லை.

Line loss 16 சதவீதம் என்று அமைச்சர் சொன்னார். ஒரு புள்ளிவிவரம் 16.5 என்று சொல்கிறது. ஒரு புள்ளிவிவரம் 16.8 என்று சொல்கிறது. நான் சில உயர் அதிகாரிகளிடத்திலே கேட்டேன். Line loss எவ்வளவு இருக்கிறது என்று கேட்டேன். 25 சதவீதம் இருக்கும் என்று சொன்னார்கள். மிச்சம் எல்லாம் என்ன ஆகிறது என்று கேட்டேன். மிச்சமெல்லாம் விவசாயிகள் தலையிலே கட்டிவிடுகிறோம்; விவசாயத்திற்குப் போகிறது என்று கணக்குக் காட்டுவோம்; அதுதான் உண்மை என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல, வேறு எதிலே எடுத்துக்கொண்டாலும் சரி. உதாரணமாக, நஷ்டம் நிறைய வருகிறது என்று சொல்கிறார்கள்; Street light-க்கு பணமே கட்டுவதில்லை; அதேபோல அரசு நிறுவனங்கள், மாநில அரசு, மத்திய அரசு - அவை பணமே கட்டுவதில்லை. அந்த நஷ்டக் கணக்கெல்லாம் விவசாயிகள் தலையிலே உயர்த்தி வைத்துக் கொண்டிருக்கிறோம். விவசாயத்திற்காக



எடுக்கப்பட்ட கணக்குகள் என்ன என்று கேட்டீர்கள் என்றால், random sample எடுத்து இருக்கிறார்கள். மூன்றே மூன்று சதவீதம் பேரிடத்திலே random sample எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Street light-க்கு உள்ள பணமும், ஏனைய இழப்பில் உள்ள பணமும் நிச்சயமாக விவசாயிகள் தலையிலே கட்டப்படவில்லை. இதுவரையிலும் விவசாயிகள் மீது எந்தக் கட்டணமும், வரியும் கட்ட வேண்டுமென்ற உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. இனிமேல்தான் அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொதுவாக விவசாயிகள் தலையில் கட்டுகிறார்கள் என்று சொல்லக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் random sample என்று சொன்னேன். 3 சதவீதம்தான் random sample. அதுவும் 8 மாவட்டங்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 28 மாவட்டங்களில் 8 மாவட்டங்களில் random sample. அது என்ன சரியான கணக்கா? ஆண்டுக்கு ஒரு கணக்கைக் கொடுக்கிறார்கள். இரண்டுமே, Tamil Nadu Electricity Board 'Statistics at a Glance' என்கிற புத்தகத்தில் பார்த்தீர்கள் என்றால், எது உண்மை, எது பொய் என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. Latest copy என்ன சொல்கிறது என்றால், 2001-2002-க்கான கணக்கில் அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், Agricultural pumpsets upto 3 H.P. 5,34,489; 3 to 5 H.P. 8,33,648; 5 to 10 H.P. 2,41,463; above 10 H.P. 35,729 இதை நான் முதலில் பார்த்திருந்தால் உண்மை என்று நம்பி அதோடு விட்டிருப்பேன். எனக்கு முதலில் உள்ள புள்ளிவிவரங்களைக் கொடுத்தவர் வேறு மாதிரிச் சொல்லிவிட்டார். அதனால், இந்தப் புத்தகத்தை நான் முதலிலே வாங்கியபோது தயக்கத்தோடுதான் எனக்குக் கொடுத்தார்கள். சுலபமாகக் கொடுக்கவில்லை; ரொம்பத் தயக்கத்தோடுதான் கொடுத்தார்கள்; அந்தப் பழைய புத்தகத்தை அந்த நண்பரிடம் கேட்டேன்; முடிந்தால் அந்தப் புத்தகத்தை இன்னொருமுறை என்னிடம் கொடுங்கள்; நான் மீண்டும் உங்களிடம் கொடுத்து விடுகிறேன் என்ற உறுதிமொழியின்பேரில் வாங்கி வந்தேன். அந்தப் புத்தகத்திலே பார்த்தீர்கள் என்றால், புள்ளிவிவரங்கள், இதற்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. உதாரணமாக, 3 H.P.

Agricultural pump sets, எவ்வளவு இருக்கிறது? 58,724. எத்தனை வருடத்திற்கு முன்பு போடப்பட்டது? ஒரே வருடம்தான், 2000-2001 இது; 2001-2002 அது. (குறுக்கீடுகள்) அவர்கள் போட்டது இல்லை; நீங்கள் போட்டதுதான். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** Financial year-ஐப் பாருங்கள்; அவர்கள் போட்டதுதான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் போட்டதுதான். (குறுக்கீடுகள்) மே மாதம் வராது. 2001-2002...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் கையில் வைத்திருக்கிற அந்த ஏட்டிலே அச்சடிக்கப்பட்டிருப்பது 2000-2001 என்று கொட்டை எழுத்திலே அச்சடிக்கப்பட்டு இருக்கிறது. 2000-2001 என்ற கணக்கெடுப்பை இப்போது நாங்கள் செய்தோம் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? 2000-2001 ல் தவறான கணக்கெடுப்பை மேற்கொண்டு விட்டார்கள் என்று அருகில் உட்கார்ந்திருக்கிற உங்களுடைய நண்பர் துரைமுருகன் அவர்களிடம் கேளுங்கள்; எங்களிடம் ஏன் கேட்கிறீர்கள்?

*முற்பகல் 11-25*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** துரைமுருகன் அவர்கள் என்னைவிட உங்களுக்குத்தான் நெருங்கிய நண்பர் என்பதை நான் அறிவேன். அவர்களிடம் நான் போகவில்லை. 58,724 எங்கே; 5 இலட்சத்துச் சில்லரை எங்கே? இரண்டும் ஒருவேளை, ஒரு இலக்கம் மாறி இருந்தால்கூட நாம் ஒப்புக்கொள்ளலாம். ஒரே ஒரு இலக்கம் மாறி இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; அது ஒருவேளை விடுபட்டுப் போய் இருக்கிறது என்று சொல்லலாம். அது 5.34,489; இது 58,724. அதே மாதிரி 5 H.P. எடுத்தீர்கள் என்றால், இந்த வருடம் நீங்கள் கொடுத்திருப்பது 8,33,648; அதிலே சொல்லி இருப்பது 8,64,725. சம்பந்தமே இல்லை. குறைய முடியாது. குறைவதற்கு நியாயமே கிடையாது. உடனே 5-லிருந்து 10-க்கு ஓடி விடுகிறார்கள். (குறுக்கீடு) கிடையாது. இங்கே தனியாகக் கொடுத்திருக்கிறார்கள். 7.5; 1,74,421, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே மொத்தமாக 5-லிருந்து 10 வரைக்கும், 2001-2002-லே என்ன சொல்லியிருக்கிறார்கள்



என்றால், 2,41,463. அதற்கு மேலே, above ten, 10-க்கு மேலே என்று சொல்லி, 35,729 என்று முடித்து விடுகிறீர்கள். இங்கே 7.5, 1,74,421. 10-H.P.-10 குதிரை சக்தி 50,802. அங்கே முழுக்க முழுக்க Statistics இருக்கிறது. 12.5, 8,487. 15-லிருந்து 20 வரைக்கும் 5,079. 20-லிருந்து 50 வரைக்கும் 1,693. 50-லிருந்து 100 வரைக்கும் 508. 100 H.P.-க்கு மேலே இருப்பது எனக்கேதெரியாது. எவ்வளவு பம்ப்செட் இருக்கிறது என்று பார்த்தால், 101 பம்ப்செட் இருக்கிறது. ஆக, ஒன்று முழுமையாக இருக்கிற மாதிரித் தெரிகிறது. இன்னொன்று முழுமையாக இல்லாதது மாதிரி இருக்கிறது. என்றாலும்கூட, இந்தக் கணக்குகள் சரியான கணக்குகள் அல்ல என்பதை நிச்சயமாக நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அது சரியாக இருக்காது. எனவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், விவசாயிகளை அருள்கூர்ந்து பிரிக்காதீர்கள். புள்ளிவிவரங்கள் தவறானவை. விவசாயிகளுக்கு தமிழக அரசு தரும் ஒரே சலுகை இலவச மின்சாரம்தான். அதையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அருள்கூர்ந்து நினைக்காதீர்கள்.

28 மாவட்டங்களில் வறட்சி என்று அறிவித்துவிட்டு இந்த நேரத்தில் ஏன் இலவச மின்சாரத்தை இரத்து செய்ய வேண்டுமென்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அதுமட்டுமல்ல. இந்தப் புள்ளிவிவரங்களை மட்டும் வைத்து நான் சொல்லவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள், எல்லோருக்கும் சேர்த்து 200 கோடி ரூபாய் என்று சொல்கிறீர்கள். முதலில் சலுகை என்று அறிவித்தது 100 கோடி. பிறகு 5 H.P. விட்டுப்போய் விட்டது என்று சொல்லி, இப்போது 5.H.P.-க்கு 1,250 ரூபாய் என்று கணக்குச் சொல்லி, அதையும் சேர்த்து 150 கோடி ரூபாய் என்று சொன்னீர்கள். இன்னும் இருப்பது என்ன? ஒரு 50 கோடி. (குறுக்கீடு) சரி. இன்னும் 100 கோடி கொடுங்கள். இவ்வளவு கொடுக்கிறீர்கள், இன்னும் 100 கோடி கொடுத்தால் என்ன ஆகிவிடும்? நீங்கள் reimburse பண்ணக்கூடாது என்று சொல்லவில்லை. அதை மின்சார வாரியத்தின் தலையிலே கட்டாதீர்கள் என்றுதான் அவர்கள் சொல்கிறார்களே தவிர, அரசாங்கம் அதைத் திருப்பிச் செலுத்தினால் அவர்கள் குறுக்கே நிற்கப் போவதில்லை. (குறுக்கீடு) அதற்குக் குறுக்கே நின்றால் அதற்கும்தான் குறுக்கே நிற்பார்கள். இதற்குக் குறுக்கே நின்றால், இதற்கும் குறுக்கே நிற்பார்கள். இதற்கு எப்போது குறுக்கே நிற்கவில்லையோ, நிச்சயமாக இந்த 100 கோடியோ, 94 கோடியோ அல்லது 97 கோடியோ எவ்வளவு கொடுத்தாலும் குறுக்கே நிற்கப் போவது இல்லை. அருள்கூர்ந்து இந்தத் திட்டத்தை

ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதாமல், இந்த இலவச மின்சாரம் என்பது தொடர வேண்டும். விவசாயிகளுடைய தலையிலே சுமையை ஏற்றாதீர்கள்; அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது. அவர்கள்தான் இந்த நாட்டில் உற்பத்தியைப் பெருக்கினார்கள். ஆக, எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த இலவச மின்சாரத் திட்டத்தைத் தொடர்ந்து அமல்படுத்த வேண்டுமென்று நான் அன்போடு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரே நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்பி. அவர்கள் வற்புறுத்தினாலும், வற்புறுத்தவில்லை என்றாலும் இந்த அரசு இலவச மின்சாரம் வழங்குகிற திட்டத்தைத் தொடரத்தான் போகிறது. இலவச மின்சாரம் பெற்றுவரும் மொத்தமுள்ள 15.04 இலட்சம் விவசாயிகளில் 9.41 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள், இவ்வாறு அரசின் பண உதவியைப் பெறுவார்கள். 1984 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய கொள்கையைத்தான் நாம் இந்த முறையில் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டண விகித ஆணையினால், சிறு மற்றும் குறு விவசாயிகள் பாதிக்கப்படாமல் காக்கப்படுவதை இந்தத் திட்டம் உறுதி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதைத்தான் நான் கேட்கிறேன். இலவச மின்சாரம் இரத்து இல்லையென்றால் இலவச மின்சாரத்தை எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன். நான் வேறு ஒன்றும் புதிதாகக் கேட்கவில்லை. ஏனென்றால், நான் அன்றைக்கே கேட்டமாதிரி திரும்பவும் கேட்கிறேன். ஒரு இடத்தில் 10 H.P. இருக்கிறது. இரண்டு சிறு விவசாயிகள் அதைப் பங்கிட்டுக் கொள்கிறார்கள். 5.5 ஏக்கர். அவர்களுக்கு அது உண்டா? இல்லை. அதுமட்டுமல்ல, எங்களுடைய சட்டப்பேரவை உறுப்பினர் நேற்றைய முன்தினம் இங்கே பேசினார். அதாவது D.P.A.P என்று சொல்கிறார்கள். D.P.A.P என்றால், வறட்சிக்கு ஆளாகக்கூடிய இடங்களைத் தேர்வு செய்து, அரசாங்கமே ஒரு திட்டம் வைத்திருக்கிறது. அதன்படி ஒரு Society அமைத்துக்கொண்டால், அவர்களுக்குக் கிணறு வெட்டி அல்லது கிணறு ஏற்படுத்தி, அதிலே அவர்களே மோட்டார் வைத்து, அந்த மோட்டாரிலே தண்ணீரை இறைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கிறார்கள்.



அப்படிப்பட்ட ஓர் இடம் கண்ணங்குடி. அந்தக் கண்ணங்குடியிலே ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். என்னவென்று? இந்த வருடம்-25 H.P. அது. 25 H.P. மோட்டாருக்கு இந்த வருடத்திற்கு 6,250 ரூபாய். இதேபோல 3 வருடங்களுக்கு மின் கட்டணம் ரூ.18,750 நீங்கள் செலுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே நான் அவையில் சொல்லியிருக்கிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களும் என்னிடம் தந்திருக்கிறார்கள். அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அறிவித்ததற்கு நன்றி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Society -யில்சிலர் உறுப்பினர்களாகச் சேர்ந்துவிட்டார்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு free electricity என்ற கணக்கோடு வரவேண்டாம். Society cannot be exempted from electricity charges. Electricity charges are levied from societies.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Society என்று சொன்னால் இலவசத் திட்டம். அரசாங்கத்தின் திட்டம். அவர்களாக வாங்கவில்லை. அரசாங்கத்தின் திட்டத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு D.P.A.P என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தின் திட்டத்தை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு, அவர்கள் அமைத்துக் கொடுத்த கிணற்றில் அரசாங்கம் வைத்துக் கொடுத்த மோட்டாரில் அவர்கள் இறைவை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அங்கு உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 பேர். சில நேரங்களில் 20, 25 பேர் இருக்கிறார்கள். இந்த 10 பேருக்குத் தாராளமாக கொடுங்கள். அது மட்டும் அல்ல. எல்லாவற்றையும் சேர்த்துக் கொடுங்கள். எல்லோருக்கும் இலவச மின்சாரம்.

[2003 ஏப்ரல் 1

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு விசாரிக்கும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தற்போது பொருளாதாரப் பணிகள் Economic services என்ற தலைப்பில் மின் சக்திக்குச் செய்யப்படும் ஒதுக்கீடு ரூ.150 கோடி என்பது ரூ.60 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு இதே பணிக்கு 2,063 கோடியே 16 இலட்சம் ஒதுக்கப்பட்டு இருந்தது. மெமோராண்டத்தில் தெளிவாக இருக்கிறது. அதேபோன்று நுகர்பொருள் வாணிபக் கழகம் துறைக்கு இந்த ஆண்டு ரூ.630 கோடி என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டுவிட்டது. கடந்த ஆண்டு இதே பணிக்கு ரூ.1,270 கோடியே 80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதேபோன்று மின் கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டது. பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டது. நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்டு வந்த மானியங்கள் குறைக்கப்பட்டன. இவை போன்றவற்றால் மாநில அரசுக்கு ஏராளமான வருவாய் கிட்டி இருக்க வேண்டும். இருந்தும் ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் உரிமைகள் சலுகைகள் பறிப்பதும், வேலைவாய்ப்புகளை மறுப்பதும், போக்குவரத்துத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றைத் தனியாரிடம் ஒப்படைப்பதும் ஏன் என்பது புரியாத புதிராக இருக்கிறது. மொத்தத்தில் இந்த ஆட்சி யாருக்காக நடக்கிறது என்று புரியாமலே இருக்கிறது. *(குறுக்கீடுகள்)* அதுதான், மற்றவை எல்லாம் தெரியவில்லை. அதனால்தான் மக்கள் பூராவும் களத்தில் நிற்கிறார்கள். அதனால்தான் எல்லோரும் களத்தில் நிற்கிறார்கள். ஏனென்றால் மக்களுக்காக நடத்துவதால். மத்திய அரசின் பங்கு ஒதுக்கீட்டுக் கொள்கையை அப்படியே ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் அங்குள்ள கூட்டுறவு நிறுவனங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் அரசுக்குள்ள பங்குகளை தனியாருக்கு விட்டு விடுவது என்று முடிவு செய்திருப்பதாக இந்த அரசு நிதிநிலை அறிக்கையின் இணைப்பில் கூறப்பட்டுள்ளது.

ஊழியர்கள் தானாகவே முன்வந்து பணியிலிருந்து ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் வீட்டுக்கு அனுப்பி விடுவது என்று முடிவு செய்து இருக்கிறார்கள். பொதுவாக, அரசாங்கம் என்பது எந்தத் தொழிலையும் ஏற்று நடத்தக் கூடாது என்றும், வர்த்தகத்தில் ஈடுபடக் கூடாது என்றும் ஓர் எண்ணம் இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை.



2003 ஏப்ரல் 1] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் அமைந்த காங்கிரஸ் அரசு சோஷலிசப் பாதையைத் தேர்ந்தெடுத்தது. திட்டமிட்ட பொருளாதாரத்தை அமல்படுத்தி, இயந்திரமான தொழில்களை எல்லாம் பொதுத் துறை நிறுவனங்களிடம் ஒப்படைத்து, பிரம்மாண்டமான பொருளாதார வளர்ச்சிக்கு அவர் வித்திட்டார். அவர் அமைத்து விட்டுப்போன சோஷலிச அடித்தளத்தில்தான் நவ பாரதம் என்று கம்பீரமாக எழுந்து நிற்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டித ஜவஹர்லால் நேரு கொண்டு வந்த அந்த சோஷலிசப் பொருளாதாரக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அமெரிக்க தத்துவத்தை ஏற்றுக் கொண்டதும் உங்களது காங்கிரஸ் கட்சிதான், நரசிம்மராவ் தலைமையில் மன்மோகன் சிங்தான் Disinvestment policy-மூலம் அரசுத் துறையையெல்லாம் தனியாருக்கு தாரை வார்க்கலாம் என்ற கொள்கையை இந்தியத் திருநாட்டில் முதலில் தவழவிட்ட பெருமையே உங்களது காங்கிரஸ் கட்சிக்கும், நரசிம்ம ராவுக்கும், மன்மோகன் சிங்குக்கும்தானே சேரும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, disinvestment அன்று இருந்தது. ஆனால் disinvestment எதிலே பண்ணினார்கள்? நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த-- இயங்ககூடவில்லை; நஷ்டத்தோடு இருந்த பல தொழிற்சாலைகளை கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அது கொஞ்சமாகத்தான் போயிற்று. யாரும் வாங்கவில்லை. இலாபகரமாக...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழகத்திலே இருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எல்லாம் நட்டத்தில் ஓடுகின்றன. நூற்றுக்கணக்கான கோடிக்கு மேல் நட்டம். தமிழகத்தில் இருக்கிற கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் நட்டத்தில் இயங்குகின்றன. இப்படி நட்டத்தில் இயங்குகிற அமைப்புகளை எல்லாம் தனியார் துறைக்கு கொண்டு வரலாம் என நீங்கள் கொள்கை முடிவு எடுத்தபோது இந்த முடிவை நாங்கள் சொன்னால் குற்றம் என்று ஏன் சொல்கிறீர்கள்? *(குறுக்கீடு)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** I am not yielding, Sir, *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, உட்காருங்கள்,

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தாராளமயமாக்கும் கொள்கையை..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள், இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் கொண்டு வந்த சோஷலிசத்தைப் பற்றி, அவர் உருவாக்கிய Public Sector-ஐப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். 1991-லே இந்திய பிரதமராகிய காங்கிரஸ் பிரதமர் திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள் தாராளமயக் கொள்கையை கொண்டு வந்தார். சோஷலிசத்தைக் கைவிட்டு, அவர் liberalisations-ஐக் கொண்டு வந்தார். அப்போது திரு. நரசிம்ம ராவ் அவர்கள் ஆற்றிய உரையை மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11-35*

"Jawaharlal Nehru protected the Indian economy. He protected the India as a mother protects a child. The mother does not carry a child all his life. She carries the child for sometime then leaves the child to play in the court-yard. Eventually, he goes to school, he goes to the play ground and sometimes gets black eyes. The mother no longer bothers. Today we do not have to bother any longer how many black eyes our exporters are going to get."

அதாவது, அன்றையதினம் மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் நரசிம்ம ராவ் சொன்னது, "நேரு அவர்கள் இந்தியப் பொருளாதாரத்தைப் பாதுகாத்தார். ஒரு தாய் எப்படி ஒரு குழந்தையைப் பாதுகாப்பாளோ அதுபோல் பாதுகாத்தார். ஆனால் ஒரு தாய் ஆயுள் முழுவதும் ஒரு குழந்தையைச் சுமந்துகொண்டு செல்வதில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு அந்தக் குழந்தையை விளையாட விட்டுவிடுகிறாள். அந்தக் குழந்தை வெளியே செல்கிறது; பின்னர் பள்ளிக்கூடத்திற்கும் செல்கிறது" என்று குறிப்பிட்டார். அதற்கு மேல் திரு. நரசிம்ம ராவ் அவர்கள் அன்றையதினம் கூறியிருக்கிறார்.

"Friends, we have taken the plunge. Once you take the plunge you don't go back. That is not our way" என்று சொல்லி "now you will find that in the programme of reforms that the new Government has introduced, all these factors have been taken care of. There is no half-heartedness, there is no indecision, there is no hesitation and we are prepared to defend these changes to the hilt. If you have to be competitive, if you have to live in the new world, in the changed



world with the new agenda, the new agenda of integrating Indian economy into the World Economy, then there is hardly any choice for you" என்று உங்களுடைய காங்கிரஸ் கட்சியின் அன்றைய பிரதமர் நரசிம்ம ராவ் அவர்களே கூறியிருக்கிறார் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராளமயமாக்கல் கொள்கையே கூடாது என்று நான் சொல்லவில்லை. தாராளமயமாக்கல் கொள்கையை நம்முடைய நாட்டிலே இருக்கிற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, சோஷலிசத்திலே தாராளமயமாக்கல் கொள்கையும் இடம் பெறுகிறதா?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தாராளமயமாக்கல் கொள்கை கூடாது என்று சோஷலிசத்திலே சொல்லவில்லை. நம்முடைய சோஷலிசம் என்பது it is a model Socialism. It is democratic Socialism that they have accepted...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.பழனிசாமிதான் பதில் சொல்லவேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் சொல்லட்டும். திரு. பழனிசாமிக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். திட்டமிட்ட பொருளாதாரம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்ட காரணத்தாலேதான் இன்றையதினம் கேந்திரமான தொழில்கள் எல்லாம் அரசினிடத்திலே இருக்கின்றன. கேந்திரமான தொழில்களை எல்லாம் தாரை வார்க்கிறது என்று ஆரம்பித்தால் நிச்சயமாக அதை எங்களாலே ஏற்றுக்கொள்ள முடியாது. காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. கம்யூனிஸ்ட் கட்சிகளும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நாங்களும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நஷ்டமாக இயங்கிக்கொண்டிருக்கிற தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அந்தத் தொழிற்சாலையை நீங்கள் விற்பதற்கு நான் நிச்சயமாக குறுக்கே நிற்கமாட்டேன். இப்போது நிறைய விவரங்கள் என்னிடம் வந்திருக்கின்றன.

உதாரணமாக மத்திய சர்க்காரை எடுத்துக்கொள்வோம். கூட்டுறவுத் துறை, பொதுத் துறை இரண்டையும் தாரை வார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறது. மத்திய சர்க்காரை எடுத்துக்கொண்டால்

நம்முடைய சென்னையிலே, இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. இது ஜவஹர்லால் நேரு காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. அன்றைக்கு அது ஒரு prestige issue-வாக இருந்தது. அன்றைக்கு இதெல்லாம் கிடைக்காத ஒன்று. அன்றைக்கு இதெல்லாம் பொதுத் துறை இல்லை என்றால் கிடைத்தே இருக்காது. அந்த இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தை இன்றைக்கு தனியாருக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் மட்டுமல்ல அந்த இயந்திரங்களை நிறுவ வேண்டுமென்றாலே பல கோடி ரூபாய் செலவாகும். அதை சும்மா throw away price-க்கு தூக்கி எறிகிற மாதிரி எறிந்திருக்கிறார்கள். இது நியாயம்தானா? தர்மம்தானா? அதைத்தான் நான் கேட்கிறேன். அது தப்பல்லவா? அது சரியில்லை. (குறுக்கீடு) நீங்கள் பண்ணவில்லை. மத்திய சர்க்கார். Please சம்பந்தமில்லாமல் வாராதீர்கள். நான் மத்திய சர்க்கார் என்று சொல்லிவிட்டுச் சொல்கிறேன், அப்புறம் ஏன் நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள்? மத்திய அரசாங்கத்தைச் சொல்கிறேன்.

அ்தேபோல Modern Bread என்ற நிறுவனம் ஒன்று இருக்கிறது. அந்த Modern Bread நிறுவனம் இலாபகரமாகத்தான் இயங்கிக் கொண்டிருந்தது. அதையும் இதேமாதிரி செய்துவிட்டார்கள்.

அதேமாதிரி இங்கே சொன்னோம் என்றால், வடலூரில் ஒரு பொது நிறுவனம் இருந்தது, சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ். அது பல ஆண்டு காலமாக ஓடவில்லை. முன்னர் இதே அவையிலே அன்றைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் 1992 ஆம் ஆண்டு அது நிச்சயமாகத் திறக்கப்படும் என்று உறுதியளித்தார்கள். அதனுடைய மதிப்பு என்று எடுத்துக்கொண்டால் இன்றைக்கு 100 கோடி ரூபாய்க்கு மேலே. அதிலே தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய P.F., E.S.I. எதுவுமே கட்டவில்லை. Balance Sheet-ன்படி 100 கோடி ரூபாய்க்கான அந்தத் தொழிற்சாலையின் மதிப்பு - Balance Sheet-ஐச் சொல்கிறேன். நிர்வாகம் கட்டவில்லை. இன்றைக்கு அதை விற்றாகிவிட்டது. என்ன விலை என்று கேட்டால் 15 கோடி ரூபாய். அவர்கள் தொழிலாளர்களுக்குப் பணம் தரப்போவதில்லை. எதற்கும் தரப்போவதில்லை. அவர்கள் அப்படியே தூக்கிக் கொண்டு போய்விடப் போகிறார்கள்.



அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்கிறேன். காட்பாடி அரசு வெடிமருந்துத் தொழிற்சாலை. அது இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற தொழிற்சாலை. எனக்குத் தெரிந்தவரைக்கும் போன வருடம் 6 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது. ஆண்டுக்கு 6 கோடி ரூபாய் இலாபம். அதை ஏன் தனியாருக்குத் தூக்கிக் கொடுக்கவேண்டும்? நாமே நடத்தலாமே? (குறுக்கீடு) அதை போன வருடம் ஒரு தடவை ஏலம் விட்டு, ஒருவர் எடுக்கக்கூடச் செய்து, அவர் பொதுமக்கள் எதிர்ப்பைக்கண்டு பயந்து போய்விட்டார். அதனாலே, இதைத்தான் நான் வேண்டாம் என்று சொல்கிறேனே தவிர, நான் தாராளமயமாக்கல் கொள்கையே கூடாது என்று சொல்லமாட்டேன். தாராளமயமாக்கல் கொள்கை எங்கே தேவையோ அங்கு பண்ணலாம். ஆனால் நம்முடைய... (குறுக்கீடு)

முற்பகல் *11-40*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலையை நாங்கள் விற்கவில்லையென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் இல்லை என்று சொன்னதை மைக்கில் சொல்லிவிட்டீர்கள் என்றால் I am very happy.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையினுடைய இதயப் பகுதியாகத் திகழ்வது 10-வது பத்தி. கடந்தகாலங்களில் நமது வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி கேட்டு, உலக வங்கியிடமும், ஆசிய வளர்ச்சி வங்கியிடமும் இதுபோன்ற வெளிநாடுகளிலுள்ள முகவரமைப்பு களுக்குச் செல்வதில் ஒரு தயக்கம் இருந்தது. இதுபோன்ற அமைப்புகள் நமக்குக் கடன் வழங்குவதில் பல தடைகள் இருந்தன. அதற்குக் காரணம், கடனுதவி வழங்குவதற்கு அந்த அமைப்புகளுக்குப் பல நிபந்தனைகள், நம்மைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரச் சுதந்திரத்தை பறிக்கக்கூடியதாக அமைந்திருந்தது. எனவே இந்தியாவிலுள்ள மாநில அரசுகள் ஓடோடிச் சென்று உலக வங்கியிடம் நிதியுதவி பெறும் நிலையில் இல்லை. அவற்றில் தமிழகமும் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் தற்போது நிலைமை மாறியிருக்கிறது. மற்ற மாநிலங்களெல்லாம் உலக வங்கியின் உதவியைப் பெற்று முன்னேறியிருக்கும்போது, தமிழகம் மட்டும் ஏன் அதிலிருந்து தன்னை தனிமைப்படுத்திச் செல்வது என்ற முடிவுக்கு

முதலமைச்சரவர்கள் வந்திருக்கிறார்கள். எனவே, ஒரு தீர்க்கமான முடிவுடன் உலக வங்கியிடம் செல்வோம் என்று அறிவித்திருக்கிறார். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை என்றும் தெளிவுபட தெரிவித்திருக்கிறார்.

இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஆதரவாக ஆயிரம் கோடி ரூபாயை விடுவிப்பதாக நிதியமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். நீண்டநாட்களாக நிலுவையில் இருந்து வரும் பல வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க இப்போது உலக வங்கி முன்வந்து இருக்கிறது. ரூபாய் 2,118 கோடியிலான தமிழ்நாடு சாலைத் துறை திட்டம், ரூபாய் 2,900 கோடியிலான நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-II ரூபாய் 1,156 கோடியிலான வறுமை ஒழிப்புத் திட்டம், ரூபாய் 650 கோடியிலான மருந்துவ அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டம், ரூபாய் 2,300 கோடியிலான தமிழ்நாடு ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம்-III, ரூபாய் 750 கோடியிலான தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III போன்றவற்றுக்கு உலக வங்கி ஒப்புதல் வழங்க முன்வந்திருக்கிறது. இவற்றைத்தவிர, சென்னைப் பெருநகர் போக்குவரத்துத் திட்டம், தமிழ்நாடு முதன்மைத் துறை மேம்பாட்டுத் திட்டம் போன்றவற்றுக்கும் உலக வங்கி நிதியுதவி கிட்டும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் பன்னாட்டு கூட்டுறவுக்கான ஜப்பான் நாட்டு வங்கி போன்ற பல அமைப்புகளிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கான திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் உறுதியான நடவடிக்கையும், தெளிவான தொலைநோக்குமே-decisive action and firm vision-என்று தமிழகத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இங்கே பெரிய திட்டங்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கின்றன. 'தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்'. அது நமது மாநிலத்தில் மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இந்தியா முழுவதும் இருக்கிறது. அது மத்திய சர்க்கார் திட்டம் என்றுகூட சொல்லலாம். இதற்கு யார் finance கொடுக்கிறார்கள்? உலக வங்கியின் நிதியுதவியுடன் உலக நாடுகள் பலவற்றிலும் செயல்படுத்தப்படுகின்றது. இதற்கு நம் ஊரில் மட்டும் எதிர்ப்பு என்று நினைக்காதீர்கள். உலகம் முழுவதிலுமுள்ள நாடுகள் இந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை கடுமையாக



எதிர்த்துள்ளன. குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளின் விவசாயிகள் இதற்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். தமிழகத்தில் மட்டும் 50 இலட்சம் ஏக்கர் இந்தத் திட்டத்தின்கீழ் சாகுபடிக்குக் கொண்டுவரப்படும் என்று கூறப்பட்டு வருகிறது. அதற்கான நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உலக வங்கி தாராளமாக உதவுவதற்கு முன்வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஐந்து மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்களே பார்த்தீர்கள், எவ்வளவு குறுக்கீடுகள் வந்தன என்று. நான் இதை முடித்துவிட்டு, வேறு இடத்துக்கு போகப்போகிறேன். வேறு விஷயம் இருக்கிறது, தொகுதி பற்றி சொல்லப்போகிறேன். அவர் ஒரு மணி நேரம் பேசிவிட்டார். நானும் ஒரு மணி நேரத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசி முடித்துவிட்டு வேறு எங்கும் போகக் கூடாது. திரு. துரைமுருகன் பேசுவதையெல்லாம் கேட்கவேண்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் எங்கும் போகவில்லை. கேட்கிறேன். நான் பேசுவதை அவர் முழுதும் கேட்பார் என்று நம்புகிறேன்.

ஆகவே, இந்தத் திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு பெரிய பெரிய நிறுவனங்களிடம்தான் Corporate Sector ஒப்படைக்க வேண்டும் என்று உலக வங்கி கூறுகிறது. நிலமற்ற ஏழை விவசாயிடமோ, கூலித் தொழிலாளியிடமோ இவற்றை ஒப்படைக்க முடியாது என்றும், வேண்டுமானால் அவர்களே அந்தப் பணியில் கூலித் தொழிலாளர்களை ஈடுபடுத்தலாம் என்றும் கூறப்படுகிறது. கிராமப்புறங்களில் தனியாருக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் இனிமேல் அத்தகைய நிறுவனங்களிடமே ஒப்படைக்கப்படும் என்று கூறப்படுகிறது. அதன்மூலம் விவசாயிகள் தங்களுடைய உரிமைகளை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, பெரிய நிறுவனங்கள் இத்திட்டங்களை ஏற்று நடத்தினால்தான் பன்னாட்டு நிறுவனங்கள் வழங்கும் விதைகளையும், உரங்களையும், பூச்சிமருந்துகளையும் வாங்கிப் பயன்படுத்த முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். நீர்ப் பாசனத் திட்டங்களுக்கான செலவுகளை உலக வங்கி ஏற்றுக்கொள்ள முடியும். இதைத்தான் இப்போது தமிழக அரசு முனைப்புடன் செயல்படுத்தப்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 ஏப்ரல் 1

போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால் உலக வங்கி வழங்கும் அத்தனை உதவிகளும் பல நிபந்தனைகளுடன் கூடிய கடன்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ பன்னாட்டு நிறுவனங்கள் மட்டும்தான் விஞ்ஞானத்தில் முன்னேறி, வீரிய விதைகளை தருவதுபோல சொல்கிறார். தமிழகத்தில் நமது விவசாயப் பல்கலைக்கழகம்—அந்தப் பகுதியில் இருந்துதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே தற்போது ஆராய்ச்சியின் மூலமாக, நமது தமிழர்களுடைய மூளையினுடைய ஆராய்ச்சியின் விளைவாக, வெளிநாடுகளே பாராட்டக்கூடிய அளவிற்கு, வீரிய விதைகளை கண்டுபிடித்துவிட்டார்கள். பன்னாட்டு நிறுவனங்களுடைய விதைகளை வாங்க வேண்டுமென்ற ஒரு முடிவோடு உலக வங்கியிடம் நாங்கள் சொல்கிறோம் என்பது தவறு. உலக வங்கியிடம் உதவியை வாங்கவேண்டுமென்ற இந்தக் கொள்கையை கொண்டுவந்ததே திரு. மன்மோகன் சிங் அவர்கள்தான். மன்மோகன் சிங் அவர்கள் உலக வங்கியோடு ஒப்பந்தம் போட்டு கொண்டுவந்த திட்டத்தை தற்போது மைய அரசு நடைமுறைப்படுத்துகிறது. எந்த ஒரு மாநில அரசும் நேரடியாக உலக வங்கியிடம் சென்று எந்த ஒரு நிதி உதவியும் பெற்றுவர முடியாது. எந்த ஒரு கோரிக்கையானாலும் மைய அரசிடம் நாங்கள் தருகிறோம். உலக வங்கி தரட்டும்; Asian Development Bank தரட்டும்; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் திறமை இருந்தால், வாய்ப்பு இருந்தால், contact இருந்தால், சீன நாட்டில் இருந்துகூட உதவியை வாங்கித் தாருங்கள். மைய அரசு மூலமாக நாம் பெற்று நடைமுறைப்படுத்துவோம்.

முற்பகல் *11-45*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்கு என்ன, அவர்களுடைய கட்டுப்பாட்டில் யாரை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு வியாபாரம் ஆகவேண்டும்; சந்தை வேண்டும். அவர்களுக்கு அங்கே இருக்கிற பூமி மட்டும் அல்ல—ஐரோப்பாவிலே ஏன் எதிர்ப்பு வருகிறது? ஐரோப்பாவிலே கடுமையான எதிர்ப்பு இதற்கு வருகின்ற காரணத்தினாலேதான், திசை திருப்புவதற்கு



2003 ஏப்ரல் 1] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

இரண்டு காரணங்கள்தான். ஒன்று இந்த எதிர்ப்பு. அதுதான் ஈராக் யுத்தம் மறந்துவிடாதீர்கள். அமெரிக்காவுக்கு இருக்கிற எதிர்ப்பை மறக்கடிக்க வேண்டும். ஒன்று. இரண்டு, அங்கே இருக்கிற எண்ணெய் வயல்களை எல்லாம் பிடித்துக்கொள்ள வேண்டும். ஒரு puppet regime—ஒரு பொம்மை அரசு அங்கு வரவேண்டும். அதற்காக அவன் யுத்தம் நடத்தினான். அதனாலே நான் என்ன சொல்கிறேன் என்றால் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாவிட்டால் கடைசியில் இந்தத் திட்டம் அனைத்தும் நம் கட்டுப்பாட்டிலிருந்து சென்றுவிடும் என்பதை தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

அதேபோல, சென்னை நகருக்கு வீராணத்திலிருந்து *3* டி.எம்.சி. தண்ணீர் கொடுக்கப்படும் திட்டத்திற்கான ரூ. *720* கோடி கடனும் இந்த வகையைச் சேர்ந்ததுதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கண்களை விற்று சித்திரம் வாங்குவது போன்ற செயல்களை மக்கள் நலன்களை விரும்பும் எந்த அரசும் செய்ய முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் புதிய வீராணம் திட்டத்திற்கு உலக வங்கி நிதி வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உலக வங்கியிடமிருந்து நிதி வாங்கவில்லை என்றால் மகிழ்ச்சி. ஆனாலும்கூட இந்தத் திட்டம் தேவைதானா என்பதை அருள்கூர்ந்து மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். என்ன காரணம் என்று கேட்டீர்கள் என்றால், அந்த வீராணம் ஏரி என்பது புதிதாக வெட்டப்பட்ட ஏரி அல்ல. பராந்தக சோழனாலே வெட்டப்பட்ட வீரநாராயணன் ஏரிதான் இப்போது வீராணம் ஏரியாகிவிட்டது. அங்கே, அவர்களைக் கேட்டால் என்ன சொல்கிறார்கள் என்றால், முன்பு முப்போகம் விளைந்தது என்று சொல்கிறார்கள். சமீப காலம் வரைக்கும் இருபோகம் விளைந்தது என்று சொல்கிறார்கள். தற்போது ஒரு போகம் விளைகிறது என்று சொல்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு அங்கே இருக்கிற விவசாயிகள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்காக நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின்போதே இந்தப் புதிய வீராணம் திட்டம் பற்றி விரிவான விளக்கத்தை எடுத்துக் கூறினேன். அதையே மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு இப்போதும் நினைவூட்ட விரும்புகிறேன். இப்போது நேரம் இல்லாததால் விரிவான விளக்கத்தைத் தர விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்கிறேன். ஏற்கெனவே தெளிவுபடுத்தியபடி வீராணம் ஏரியிலிருந்து பாசனம் பெறுகின்ற விவசாயிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாத வகையில் வீராணம் ஏரியின் கொள்ளளவை அதிகப்படுத்தி, அந்த உபரி நீர்தான் சென்னைக்குக் குடிநீராகக் கொண்டுவரப்படும் என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்த வீராணம் ஏரி—முன்பிருந்த ஏரி இப்போது சுருங்கிவிட்டது. அதனுடைய கோளாறுதான். அந்த அளவுக்குத்தான் நீர் கொண்டு போகமுடியும். அதிகம் கொண்டுபோக முடியாது.......

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீராமல்—அந்தக் காவிரியிலிருந்து வருகிற உபரிநீர்தான் வடவாற்றிலே வந்து கொள்ளிடத்திற்கு வருகிறது. அந்தப் பிரச்சினையிலே நமக்கு தாவா இருக்கிறதனாலே ஒரு டி.எம்.சி.-க்கு 720 கோடி ரூபாயை நாம் செலவு செய்து இப்போது அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமா (மணியடிக்கப்பெற்றது) என்பதை நீங்கள்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு, குடிநீருக்கு வேறு வழியில்லை. இப்போதே ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கின்ற குடிநீரின் அளவு வெகுவிரைவிலே தீர்ந்துவிடும். ஆகவே சென்னைக்கு வேறு என்ன வழி? நாங்கள் எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லை என்றால் ஏன் செய்யவில்லை என்கிறீர்கள். பிரச்சினையைச் சமாளிக்க ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால் இதை ஏன் செய்கிறீர்கள் என்கிறீர்கள். ஆகவே இத்தகைய அர்த்தமற்ற விமர்சனங்களுக்கு இந்த அரசு அஞ்சப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகர மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டியது இந்த அரசின் கடமை. அந்தக் கடமையை இந்த அரசு நிறைவேற்றியே தீரும்.





**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் திட்டத்தைக் குறையே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, ஏற்கெனவே இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தை, அறிக்கையேகூடக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தைக் குறித்து, தொழில் நுட்ப நிபுணர்கள் ஆராய்ந்து எப்படி அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் விளக்கங்களை ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் அந்த விவாதத்திற்குள்ளே போக வேண்டாம். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. அவர்கள். (மணியடிக்கப்பெற்றது) எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு பார்ப்பார்கள். புழல் ஏரியைப் பொறுத்தவரையிலே ஒரு நூறு ஆண்டு காலத்திற்கு முன்பாக வெள்ளைக்காரன் ஆட்சியிலே உருவாக்கப்பட்டது. அப்போது மக்கள்தொகை 10 இலட்சம். இப்போது சென்னை நகர மக்கள்தொகை ஏறக்குறைய 40-லிருந்து 42 இலட்சம் இருக்கின்ற சூழ்நிலையில் நாளை இன்னும் ஒரு 100 ஆண்டுகளுக்குத் தேவைப்படும்போது, ஒரு 80 இலட்சம் ஒரு கோடிகூட ஆகின்ற சூழ்நிலையில், நாம் இருக்கின்ற நீர்நிலைகளைப் பெருக்குவதுதான் சிறந்தது என்கின்ற ஓர் அடிப்படையிலே ஒரு தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கினார்கள்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும், மாண்புமிகு பழனிசாமி அவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்கிறேன். காவிரியிலிருந்து தண்ணீர் வரவில்லை என்றாலும்கூட வடகிழக்குப் பருவ மழை பெய்தாலே போதும், அதிலிருந்தே வீராணத்திலிருந்து தேவையான குடிநீரைச் சென்னைக்குக் கொண்டு வரமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது வீராணத்திலிருந்து நாம் எதிர்பார்க்கிற மாதிரி தண்ணீர் வராது. காரணம், (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்கிறீர்கள், நானும் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு இப்போது நான் சவால் விடுகிறேன். நீங்களும் அங்கேதான் இருக்கப் போகிறீர்கள். நாங்களும் இங்கேதான் இருக்கப் போகிறோம். வீராணம் திட்டம் நிறைவேறும். அதன் மூலமாக சென்னை மாநகருக்குக் குடிநீர் வரும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, இனிமேல் நீங்கள் குடிக்கப் போவது வீராணம் தண்ணீரைத்தான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்தத் தண்ணீர் வராது. அதுதான் உண்மை. (குறுக்கீடுகள்) அதாவது மாரிக் காலத்திலே....

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஆசை (குறுக்கீடு) இல்லை. இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆசை அதுவாக இருந்தால் அது நிச்சயம் நிறைவேறாது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, 12-00 மணிக்காவது துரைமுருகன் பேசட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேசி முடித்துவிடுகிறேன். இவ்வளவு குறுக்கீடுகள் எதற்கு? முதலமைச்சர் பேசினார்கள். நான் தவறாகச் சொல்லவில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதற்காகச் சொல்லவில்லை

**திரு.எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதற்குப் பிறகு அதற்கே திரும்பவும் விளக்கம் வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகள் என்பது எப்போதும் இருக்கும்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் வேகமாகத்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வேகமாகத்தான் பேசுகிறேன். இன்னும் வேண்டுமானால் வேகமாகப் பேசுகிறேன். இதைவிட வேகமாக என்னால் பேச முடியாது. சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

வீராணத்தைப் பொறுத்தவரையிலே யார் தொட்டாலும் அங்கே shock அடிக்கிறது. ஆபத்து வேண்டாம். அதைத் தொடாதீர்கள் என்று நான் சொல்கிறேன். நல்லதற்காகச் சொல்கிறேன். அங்கே இருந்து தண்ணீர் வராது. (குறுக்கீடுகள்) 8 டி.எம்.சி. 9 டி.எம்.சி. அங்கே நிறைவதே கஷ்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அடுத்த கருத்திற்குப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 8 டி.எம்.சி., 9 டி.எம்.சி. அங்கே நிறைவதே கஷ்டம். இரண்டு, மூன்று முறைகள் மாரிக் காலத்திலே இந்த மழைக் காலத்திலே அங்கே மழைத் தண்ணீர் நிறைவது உண்மை. அதையும் சேர்த்துத்தான் அந்தத் தண்ணீர். ஒருபோகம் தான் எடுக்கிறார்கள். நீங்கள் நினைக்கிற மாதிரி இன்னும் தண்ணீர் வந்தால் இரண்டு போகம் எடுப்பார்கள். ஒருவேளை தப்பித் தவறி தண்ணீர் வந்தது என்றால் மூன்று போகம் எடுப்பார்கள். அவர்களுடைய பாசன உரிமைகளுக்கு நாம் குறுக்கே நிற்க முடியாது. அதனால் இது வேண்டாம். நாம் நினைக்கிறோம், ஏப்ரல், மே மாதங்களிலே அங்கே தண்ணீர் வரும் என்று எதிர்பார்த்தோம். வராது என்கிறார்கள். ஏப்ரல், மே மாதங்களிலே வழக்கமாக அங்கே கிட்டிப்புள்ளி விளையாடுவார்களாம். கில்லி தாண்டு விளையாடுவார்களாம். இப்போது கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். தண்ணீர் வராது. வேண்டாம். 720 கோடி ரூபாய் என்பது மக்களுடைய வரிப் பணம். அதை வீணாக்காதீர்கள் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல. புதிய வீராணம் திட்டம் நிறைவேற்ற கான்டிராக்ட் விட்டதிலே துறை நிர்ணயித்த தொகையைவிட 55.97 கோடி ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு விடப்பட்டிருக்கிறது கான்டிராக்ட். இது ஜூலை 27ஆம் தேதியே பேக்கேஜ் 1,2,4 Metro Water Board ஒப்பந்தப் புள்ளிகள் குறைந்த டெண்டர் கேட்டவர்களுக்கு கான்டிராக்ட் கொடுப்பதாக முடிவெடுக்கப்பட்டது. பேக்கேஜ் 3-ஐப்

பொறுத்தவரைக்கும் அங்கு பங்காக் நியாகா ஹோல்டிங்க்ஸ், அவர்கள் துறை நிர்ணயித்த தொகையைவிட, அதாவது 275.5712 கோடியைவிட 6 சதவீதம் அதிகமாகக் கேட்டது. அவர்கள் என்ன சொல்கிறார்கள், பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று சொல்கிறார்கள். வாருங்கள் என்று அழைக்கிறார்கள். எந்தத் தேதியில் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று அழைக்கிறார்களோ அந்தத் தேதியில் அந்த உயர் அதிகாரிகள் எல்லாம் மாற்றப்பட்டு விட்டார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சரும் அதிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார். பிறகு அதே தொகைக்கு, அவர்கள் கேட்ட தொகைக்கு அது நிர்ணயம் ஆகிறது. அது மட்டுமல்ல, பேக்கேஜ்-4......

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசம்பர் 2001-லே வீராணம் திட்டத்திற்கு உண்டான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அன்றையதினம் டிசம்பர் 2002-லே இரும்பு விலை கூடுதலாகிவிடுகிறது. அதையும் கருத்திலே கொண்டு புதிய ஒப்பந்தம் கோரினால் இரும்பு விலை உயர்வு காரணமாகவும், ஒப்பந்த விலைப்புள்ளி அதிகமாகி கூடுதல் செலவாகும் என்றும், திட்டச் செயலாக்கத்தில் காலதாமதம் ஏற்படும் எனவும் கருதி சிப்பம்-4 பணிக்குக் குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி ஏற்புடைய தன்மையுடையதாக ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் வழங்க முடிவெடுத்து சிப்பம்-3 மற்றும் 4-க்கு செப்டம்பர் 2002-லே இரும்பு விலை மதிப்பீடுபடி 632 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஆகும். இதற்கு அரசு மூலமாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த விலை 628 கோடியே 16 இலட்சம் ரூபாய் ஆகும். இது மதிப்பீட்டு விலையைவிட குறைவான விலை மதிப்பீடு தான். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதுபோல அல்ல. இங்கே எந்த அரசுத் துறைச் செயலாளரும் மாற்றப்படவில்லை. முறையான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, முறையான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இரும்பு விலை அதிகமான காரணத்தாலே அந்தத் தொகை அதிகமாகக் கேட்கப்பட்டது என்பது உண்மையானால் Gammon India ரூ.479 கோடி ரூபாய்க்கு கேட்ட அதே திட்டத்தை ரூ.360 கோடிக்கு நிறைவேற்றித் தருகிறேன் என்று எப்படி அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்? ரூ.360.90 கோடிக்கு நிறைவேற்றித் தருகிறேன் என்று ஒப்புக்கொண்டார்களே அது எப்படி? அதனால் அது சரியாக இருக்க முடியாது. நான் தனிப்பட்ட முறையில்



யார்மீதும் குற்றம் சுமத்துகிறேன் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்ற நேரத்திலே அதைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது நான் என்ன சொல்கிறேன் என்றால், இன்னும் இந்த விவரத்திற்குள்ளாகவே நான் செல்லவில்லை. இப்போது பகிரங்கமாக நான் கேட்கிறேன்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Gammon India-க்கு 335 கோடி ரூபாய்க்குத்தான் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Gammon India முதலில் கேட்டது ரூ. 479.99 கோடி. அதற்குப் பிறகு குறைத்துவிட்டார்கள். குறைத்ததற்குப் பிறகு நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? இரண்டு பேர் எப்போது குறைத்திருக்கிறார்களோ, ஒருத்தர் குறைத்து, ஒருத்தர் ஏற்றி, இன்னொருவர் ஏற்றுகிறார்களோ, நீங்கள் என்ன பண்ணியிருக்க வேண்டுமென்று சொன்னால், மறு டெண்டர் கேட்டிருக்க வேண்டும்; re-tender கேட்டிருக்க வேண்டும். ஏன் கேட்கவில்லை? அதைதான் Transparency Act சொல்கிறது. ஏன் கேட்கவில்லை?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** இன்றைய இரும்பு விலை 35 சதவீதம் கூடிவிட்டது. இன்றைய தேன் இரும்பு விலை 35 சதவீதம் கூடிவிட்ட காரணத்தினால் மறுபடியும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் காலம் நீட்டிக்கொண்டே போகும். சென்னை மாநகர் வாழ் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை தலையாய பிரச்சினை.

தமிழக அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொலைநோக்குப் பார்வையில் கொண்டுவரப்பட்ட திட்டம், இந்த வீராணம் திட்டம். இந்த வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில் அது வெற்றி பெறுகிற திட்டம்தான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். என்ன என்று கேட்டால் ஒரு காலத்தில் வடலூர் இராமலிங்க அடிகள் சுவாமி அவர்கள் வடலூரும் ஒரு நாள் கடலூர் போல் மாறும் என்று ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலே வடலூரில் மிகப் பெரிய சுத்திகரிப்பு நிலையம் வீராணம் திட்டம் மூலம் அமல்படுத்தப்பட உள்ளது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய

[திரு. எம்.சி. சம்பத்] [2003 ஏப்ரல் 1

தமிழக அரசு கொண்டு வந்தத் திட்டம் வெற்றி பெறுகின்ற திட்டம் என்பதை நான் குறிப்பிட்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். நான் மீண்டும் அதில் போக விரும்பவில்லை. ஆனால், ஒன்றை மட்டும் கேட்கிறேன்: Tender ஆவணங்களையும், Board Meeting நடவடிக்கைகள்—Minutes—முழுவதையும் வெளியிட வேண்டும். இந்த அவையிலே வைக்க வேண்டும். வெளியிடுங்கள், வெளியிடவில்லையென்றால் இந்த அவையிலாவது வையுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பவானி ஆற்றிலே முக்காலியிலே கேரளா தடுப்பணை கட்டுவது தொடர்பாக எங்கள் பகுதியில் ஒருவிதமான அச்ச உணர்வு அங்கேயிருக்கிறது. போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு கேரளா சென்று அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது. பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பின்னாலே, நம்முடைய அம்மையார் அரசின் சார்பிலே எந்தவிதமான அறிவிப்பும் வெளிவரவில்லை. ஆனால், கேரள அரசாங்கம், கேரள அமைச்சர் என்ன சொல்கிறார்கள் என்றால், நாங்கள் கொடுத்த விளக்கம் அவர்களுக்கு திருப்தி அளித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, அது ஏன்...

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மன்றத்திலே நான் முக்காலி அணையைப் பற்றி விளக்கம் கூறியிருக்கின்றேன். அது காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்காக, இறுதித் தீர்ப்புக்காக காத்திருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாதிரியான உறுதிமொழி எதையும் கேரள அரசுக்கு நாம் தரவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால், அவர்கள் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள். அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஒன்று, இரண்டு..... (குறுக்கீடுகள்) சரி, right.

காவிரியிலே இந்த ஆண்டு தண்ணீர் வரவில்லை. காவிரி பொய்த்துப் போய்விட்டது என்றாலும் பம்ப்செட் வைத்து அங்கே இறைத்து ஓரளவுக்கு நெல் உற்பத்தியாகியிருக்கிறது. உற்பத்தியான நெல்லைக்



2003 ஏப்ரல் 1] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

கொள்முதல் செய்வதற்குப் போதுமான Direct Purchase Centres-DPCs, கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லையென்று புகார் சொல்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும் புகார் சொல்கிறார்கள். போதிய கொள்முதல் நிலையங்கள் இல்லை.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி அல்ல. அங்கே கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதிலே நேற்றையதினம் வரை 16,425 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எனக்குக் கிடைத்த தகவலை நான் சொல்கின்றேன். திறக்கப்பட்ட கொள்முதல் நிலையங்களில் வெறும் 150 முதல் 200 மூட்டைகள் மட்டுமே வாங்கப்படுகின்றன. மே 30 ஆம் தேதி வரை விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், 1 1/2 மாதம் யாரும் நெல் கொண்டு வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அதே மாதிரி FCI Norms-க்குட்பட்டு தரம் இருக்க வேண்டுமென்று சொல்லி, மூன்று முறை மெஷினில் தூற்றிக் கொடுத்ததற்குப் பிறகும்கூட நெல் சரியில்லையென்று திருப்பி அனுப்பப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூற்றித் தரப்பட வேண்டுமென்று சொல்வது உண்மை என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். தரம் குறைந்த நெல்லை வாங்க இயலாது. இப்போது அந்த அளவுக்கு அங்கே தரம் உள்ள நெல்லாக வாங்குவதனாலேதான் நமக்குத் தரமான அரிசியைத் தர இயலுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அந்த அளவுக்கு அவர்களுக்கெல்லாம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டு, இன்றையதினம் அவர்கள் முறையாக வந்து இந்த நெல்லைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலே மாற்றுக் கருத்தில்லை. ஆனால், இந்த ஆண்டு வறட்சி நிலையின் காரணத்தால் உற்பத்தியிலே அப்படி பாதிப்பு இருக்கிறது. ஆகவே, விதிமுறைகள் தளர்த்தப்படவில்லையென்று சொன்னால் ஓரளவாவது உற்பத்திச்

செய்யப்பட்ட நெல் விற்பனை செய்வதிலே வாய்ப்பே இல்லாமல் போய் விடும் என்பதுதான் எங்களுடைய பணிவான கோரிக்கை. ஆகவே, இந்த ஆண்டு அந்த விதிமுறைகளைத் தளர்த்தி விவசாயிகளிடத்திலே கொள்முதல் செய்தால்தான் விவசாயிகள் பிழைப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, ஏறத்தாழ ஒரு மணி நேரமாகிவிட்டது. கொஞ்சம் சீக்கிரம் பேச்சை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) ஐந்து மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குறுக்கீடு இல்லாமல் இருந்தால் 4, 5 நிமிடங்கள் ஆகாது. அதனால் கொண்டு வருகிற நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதுமாதிரி சிவகங்கை மாவட்டம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வழக்கமாக விளையாது. இந்த வருடம் அவர்களுக்குக் கொஞ்சம் மழை பெய்து நெல் விளைந்திருக்கிறது. அங்கே கொள்முதல் நிலையமே திறக்கப்படவில்லை என்று உறுப்பினர் சொல்கிறார். அங்கேயும் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் நிலையங்கள் தேவையென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அவர்கள் கோரிக்கைகளை வைப்பார்களேயானால், எங்கெங்கு தேவையோ அவற்றைத் திறப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால், திறக்கப்பட்டிருக்கிறது, கொள்முதல் செய்யப்படவில்லை என்று நண்பர் பழனிசாமி சொல்கிறார். திறக்கப்படவில்லையென்று நண்பர்கள் சொல்கிறார்கள். எதுவாக இருந்தாலும், அமைச்சர் அவர்களிடத்திலே அன்போடு கேட்டுக்கொள்வது, அவையிலே நேரடியாக பிரதிநிதிகள் சொல்கிற இடத்திலே நீங்கள் அருள்கூர்ந்து விசாரித்துத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பைப் பொறுத்தவரையில் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பீர்கள் என்று சொன்னீர்கள். 2000-2001 ஆம் ஆண்டில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது.



சென்ற ஆண்டு—இதுவரைக்கும் விலை நிர்ணயமே செய்யவில்லை. அந்த ரூ.680-ஐ மத்திய சர்க்கார் நிர்ணயம் பண்ணியதைத்தான் கொடுத்திருக்கிறீர்கள். இன்று வரைக்கும் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. 10.7 சதவீதம் அமராவதிக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில்—சென்ற ஆண்டு 10.83 சதவீதம் என நினைக்கிறேன். அவர்களுக்குக்கூட—இதுவரைக்கும் அந்தத் தொகை கொடுக்கப்படவில்லை என்பதை அன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேங்காய் எண்ணெயின் விலை ஏறி இருக்கிறது. அதிகமாக ஆகியிருக்கிறது. ஆனால், கொப்பரை விலை குறைந்து கொண்டே இருக்கிறது. ஏனென்று தெரியவில்லை. ஏனென்று கேட்டால், அங்கே கலப்படம், தேங்காய் எண்ணெயிலே பெருமளவு கலப்படம் செய்யப்படுகிறது. Palm Kernel என்று சொல்லி அதை வைத்து முதலில் எடுத்தார்கள். பாமாயில் விலை ஏறி விட்டது. அதனால் என்ன பண்ணுகிறார்கள் என்றால் Liquid Paraffin-ஐ கலக்கிறார்கள். அதைவிடக் கொடுமை எதுவும் கிடையாது. தேங்காய் எண்ணெய் என்பது Edible Oil, உட்கொள்கிற எண்ணெய். அதிலே போய் Liquid Paraffin சேர்ப்பது போலக் கொடுமை ஒன்றுமே இருக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால் கொடுமையான ஒன்றை ஒருவர் சொன்னார். Petroleum products சிலவற்றை அதில் சேர்க்கிறார்கள். கழிவை அதில் சேர்க்கிறார்கள். அருள்கூர்ந்து நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து அதை நிறுத்த வேண்டும்.

சென்ற மாதம் தேங்காய் விலை கொஞ்சம் உயர்ந்தது. இந்த மாதம் குறைந்திருக்கிறது. குறைந்திருப்பதற்கு எந்தவிதமான நியாயமும் கிடையாது. இப்போதே குறைந்து விட்டது என்று சொன்னால், அடுத்த மாதம் கொஞ்சம் வரவு வரும். இன்னும் குறையும். அதனால், தேங்காய் விலை குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

ஆலைகள் மூடப்பட்டதால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். கோவை மாவட்டத்திலே மட்டுமல்ல, ஈரோடு மாவட்டத்திலே மட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய பல பகுதிகளிலே ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆலைகளைத் திறப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். இதுவரைக்கும் ஏதாவது ஆலைகள்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 ஏப்ரல் 1

திறக்கப்பட்டிருக்கிறதா என்றால் ஒன்றுமே திறக்கப்படவில்லை. அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் விமோசனமே கிடையாது. அவர்கள் எல்லாம் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலைகளைத் திறப்பதற்கு மட்டுமல்லாமல், புதிய ஆலைகளைத் திறப்பதற்கும், தொழில் துறையில் ஏற்றம் பெறுவதற்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்பதைத் தெளிவாக இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். முடிந்தால் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், ஒரு வெள்ளை அறிக்கையை அளிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் South India Viscos மூடப்பட்டிருக்கிறது. அங்கே அந்த சொத்துக்களை விற்க வேண்டுமென்று அரசின் சார்பிலே மனு ஒன்று B.I.F.R.-ல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது, B.I.F.R அதை ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம் Rehabilitation Plan இருக்கிறதென்று Board சொல்லியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், நீங்கள் ஒரு மாத காலத்திற்குள் யார் நடத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதைக் கண்டறிந்து மீண்டும் B.I.F.R.-க்குத் தகவல் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குக் கடந்த 8 மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை. எனவே, அரசு அதில் அக்கறை செலுத்தி, தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும், அந்த விஸ்கோஸ் ஆலையை மீண்டும் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டித் தேயிலைப் பற்றி பலமுறை நான் பேசியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, South India Viscos Industries-ஐப் பொறுத்தவரை அரசு, நிருவாகத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி நடந்த 2002 ஆம் ஆண்டு வரை தொழிலாளர்களுக்கு வேண்டிய சம்பளங்களைப் பெற்றுத் தந்திருக்கிறது. இப்போது பிரச்சினை B.I.F.R.-லே இருக்கிறது. எனவே, அது முடிவுக்கு வந்ததற்குப் பிறகு அதைத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, கொஞ்சம் பேச்சை விரைவுபடுத்தி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஊட்டித் தேயிலையைப் பொறுத்தவரைக்கும் விலை குறைந்தது குறைந்ததுதான். நான்கு ஆண்டு காலமாக அங்கே விலை இல்லை. 3½ வருடம், 4 வருடங்களாக விலை இல்லை. ரொம்பவும் சிரமத்தில் இருக்கிறார்கள். நான்கு ரூபாய்தான், நான்கரை ரூபாய்தான் விலை கிடைக்கிறது. அரசாங்கம் பச்சைத் தேயிலையை விலைக்கு வாங்கினார்கள், இல்லை என்று சொல்லவில்லை. நான் சொல்வது, குறைந்தபட்சம் 15 ரூபாய்க்கு நீங்கள் வாங்கினீர்கள் என்று சொன்னால், விலை ஏறும். சில நாட்களுக்கு வாங்குங்கள்; சில காலத்திற்கு வாங்குங்கள். மற்றவர்களும் அதை வாங்கியே ஆகவேண்டிய நிலை வரும். நீங்கள் அங்கே இலாப நோக்கத்தோடு மட்டும் ஊட்டித் தேயிலையை வாங்குகிறீர்கள். இலாப நோக்கம் இல்லாமல், விவசாயிகளுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கிலே நீங்கள் வாங்குவீர்களேயானால், நிச்சயமாகப் பயன்படும். அதனாலே நீங்கள் அதைச் செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அதேபோல் சில்வர் ஓக் மரங்கள். அவை நிழல் தரும் மரங்கள். அந்த மரங்கள் இல்லாமல் தேயிலை அங்கு வளராது. கண்டிப்பாக, அங்கே வெயில் அடித்தது என்றால், அந்த நிழல் தரும் மரங்கள் வேண்டும். 10 வருடங்கள், 15 வருடங்கள் ஆகிவிட்டது என்றால், அதனுடைய வேர் ஊடுருவிவிடும். அதனாலே அந்தத் தேயிலைச் செடிகள் வளராது. அதற்காக என்ன செய்வார்கள் என்றால், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் ஆகிவிட்டது என்றால் வெட்டிவிடுவார்கள். அதனை வெட்டிவிட்டால் அங்கே வேறு மரம் வராது என்று நினைக்காதீர்கள்; உடனே வேறு நிழல் தரும் மரத்தை, அங்கே மீண்டும் சில்வர் ஓக் மரத்தை நட்டுவிடுவார்கள். அதனாலே அங்கே மரம் இல்லாமல் போய்விடாது. அதை வெட்டுவதற்கு முதலில் இடைஞ்சல் இருக்கும். தமிழக அரசு ஒத்துக்கொண்டால்கூட மீண்டும் இப்போது மத்திய அரசு குறுக்கே நிற்கிறது. நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, அது நிழல் தரும் மரம்தான், இது காட்டிலேயிருந்து வெட்டப்படுகிற மரம் அல்ல என்று தெளிவுபடுத்தி, இந்த சில்வர் ஓக் மரங்களை வெட்டுவதற்கு நீங்கள் வழி செய்ய வேண்டும்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 ஏப்ரல் 1

அதேபோல, Building rules. இது Master Plan என்கிற பெயரிலே building rules-லே இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், Agricultural Engineering-லேயிருந்து இப்படி எல்லோரிடமும் போய்விட்டு வரவேண்டும் என்று சொல்கிறார்கள். அது முடியவே முடியாது. கிராமங்களிலே இருப்பவர்களால் அது முடியவே முடியாது; சாத்தியமே இல்லை. அதுமட்டுமல்லாமல் 7 மீட்டருக்கு மேல் கட்டடம் உயரம் இருக்கக்கூடாது என்று சொல்கிறீர்கள். அங்கே ஒரு Factory என்று சொன்னால் 7 மீட்டருக்கு மேலேதான் சிம்னியே வைப்பார்கள். அது இந்தச் சட்டத்தின்படி குற்றம் ஆகிறது. எனவே அந்த Building rules கொஞ்சம் தளர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய H.P.F.—Hindustan Photo Films தத்தளித்துக் கொண்டிருக்கிறது. பல ஆண்டுகாலமாக தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அந்த H.P.F.—Hindustan Photo Films மூடுகின்ற நிலையிலே இருக்கிறது. அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கூடலூர் பகுதியைப் பொறுத்தவரையிலே, Section 17 நீலாம்பூர் ஜமீனுக்குச் சொந்தமான பூமிகள்; அந்தக் காலத்திலே அதை அரசு ஏற்றுக்கொண்டது. ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே இன்றைக்கு அதை தேசியமயமாக்கிவிட்டார்கள். நாட்டுடைமையாக்கி விட்டார்கள். இன்று அதிலே பலரும் விவசாயம் செய்பவர்கள் இருக்கிறார்கள். தொழில் செய்பவர்கள் இருக்கிறார்கள். சிறிய, சிறிய வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே கொடுமையான இடம் கூடலூர்தான். அந்த Section 17-லே வருகிற அந்தக் கொடுமைகளுக்கு முடிவுகட்டி, எல்லோருக்கும் பட்டா வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அதுபற்றி உங்களில் பலருக்கும் தெரிந்திருக்கும். நானே ஒரு முறை சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தேன். அதனாலே எனக்கு ஒரு emotional attachment உண்டு. அருள்கூர்ந்து அதைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் P.A.P. பாசனத் திட்டத்திலே, நான்காவது மண்டலத்திற்குப் பாசனத்திற்குத் தண்ணீர் விடுவதிலே, நான்கு மண்டலங்கள் என்று பிரிப்பதற்கு முன்பே, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது நிச்சயமாக வரும் என்று சொன்னார்கள். மூன்றாவது



2003 ஏப்ரல் 1] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

மண்டலத்திற்கு, இரண்டு தண்ணீரோ, மூன்று தண்ணீரோதான் விட்டார்கள். அதுவும் காலம் தாழ்த்தி, தாழ்த்தி விட்டார்கள். நான்காவது மண்டலத்திற்கு ஜனவரியிலே தண்ணீர் விடுகிறோம் என்று சொன்னார்கள். மூன்றேகால் டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. ஜனவரியில் விடுகிறோம், மூன்று தண்ணீர் விடுகிறோம் என்று சொன்னார்கள். பிறகு, பிப்ரவரியிலே விடுகிறோம் என்று சொன்னார்கள். பிறகு, மார்ச்சிலே விடுகிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்குத்தான் விடப்போவதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஏப்ரல் 1 ஆம் தேதியில்தான் விடப்போவதாகத் தகவல் எனக்கு வந்திருக்கிறது; அதுவும் அந்த மூன்றேகால் டி.எம்.சி. தண்ணீரிலிருந்து, இப்போது அவ்வளவு தண்ணீர் இல்லை. இரண்டு தண்ணீர்தான் விடுவோம் என்று சொல்கிறார்கள். எங்கே போனது அந்தத் தண்ணீர்? அருள்கூர்ந்து அதைக் கண்காணிக்க வேண்டும். நாம் கேரளாவிற்குக் கொடுக்க வேண்டிய தண்ணீரைக் கொடுக்கிறோம். ஆழியாற்றிலே மணக்கடவு வழியாக அந்தத் தண்ணீர் போகிறது. அப்படிப் போகிறபோது, நாம் விடுகிற தண்ணீர் எல்லாம் அங்கே போகாத காரணத்தினாலே, 450 கியூசெக்ஸ்தான் விடவேண்டும் என்று சொன்னால், 650 கியூசெக்ஸ் விடவேண்டியிருக்கிறது. ஏனென்றால், தண்ணீரை எல்லாம் உறிஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். மோட்டார் வைத்து, பம்பு செட்டு வைத்து, இன்ஜின் வைத்து, ஆயில் இன்ஜின்களை வைத்து உறிஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். தெரியாமல் நடக்கிறதா என்றால், இல்லை. தெரிந்துதான் நடக்கிறது. கீழே இருக்கிற அந்த அலுவலர்கள், அவர்களுக்குத் தெரிந்துதான் அது நடக்கிறது. இதற்கு நீங்கள் நிச்சயமாக தடை போட வேண்டும். இதையெல்லாம் உடனடியாக விசாரித்து, எல்லோருக்கும் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த மண்டலத்தைப் பொறுத்தவரையில், அனைவருக்கும் போதிய அளவு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொண்டாமுத்தூர் தொகுதியிலே, வளர்ந்துவிட்ட கிராமங்கள், மக்கள் தொகை அதிகமான கிராமங்கள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக வடவள்ளி-கவுண்டம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி சென்ற ஆண்டே நான் சொன்னேன். அதற்கு முந்தைய வருடமும் நான் பேசியிருக்கிறேன். அன்றையதினம் அமைச்சர் அவர்கள் உறுதியிட்டுச் சொன்னார்கள். இந்த ஆண்டு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னார்கள். இதுவரை பணி

இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. அதனாலே வடவள்ளி—கவுண்டம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டம், பவானி திட்டம் என்ற பெயரிலே இந்தத் திட்டம் இருக்கிறது. அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பவர் லூமிற்கு 10 சதவீதம் கலால் வரி போட்டிருக்கிறார்கள். நேற்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கலால் வரி நின்றால் ஒழிய, அவர்களாலே தொழிலை நடத்தவே முடியாது. இந்தியாவில் 25 சதவீதம் தறிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்று கணக்குச் சொன்னார்கள். அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஏனென்றால் அது சிறிய தொழில். அதனாலே அரை H.P. மோட்டார், இரண்டு H.P. மோட்டார் வைத்துதான் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை என்று சொன்னால், அந்தத் தொழிலையே செய்ய முடியாது. இந்தியாவிலேயே 25 சதவீதம் என்பது சரியா என்பது எனக்குத் தெரியவில்லை; இந்தியாவிலேயே மிக அதிகமான விசைத் தறிகள் உள்ள மாநிலம் தமிழ்நாடுதான் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். அதனாலே நீங்கள் இதற்குப் பாதுகாப்பு கொடுக்க முன்வர வேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி விசைப் படகு மீனவர்கள் 6 மாதங்களாக மீன் பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை. இதற்கு அதிகாரிகளின் போக்குதான் காரணம். இதை நிச்சயமாக உடனடியாக அரசாங்கம் கவனித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்....

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை விரிவாகச் சொல்லவேண்டுமென்றால் கடந்த காலத்திலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே 1983 ஆம் வருடம் Mechanised Boat மீனவர்களுக்கு என்று ஒரு நேரம் ஒதுக்கி இருக்கின்றார்கள். காலையிலே 5 மணிக்குப் புறப்பட்டு 9 மணிக்கு வந்து சேர வேண்டும். இடைப்பட்ட காலத்திலே ஒரு ஐந்து, ஆறு வருடத்திற்கு முன்பாக நாட்டுப் படகு மீனவர்களும், விசைப் படகு மீனவர்களும் அவர்களுக்கு என்று தனியாக ஒரு ஒப்பந்தம், local adjustment, ஒப்பந்தம் போட்டு இருக்கின்றார்கள். அதிலே, ஐந்து மணியிலேயிருந்து பதினொரு மணிக்குள்ளேயே வந்து சேர வேண்டும் என்று கடந்த ஒன்பதாம் மாதத்திலே இவர்களுக்குள்ளேயே ஒரு



பிரச்சினை ஏற்பட்டு, ஒருவரை அடித்துக் கொன்று விட்டார்கள். அந்த Boat -லே வரும்போது இடித்து கடலுக்குள்ளே விழுந்து இறந்து விட்டார். அதனால் அவர்களுக்குள்ளே ஒரு பிளவு ஏற்பட்டு, அந்த நேரத்தை மீண்டும் ஐந்து மணியிலிருந்து ஒன்பது மணிக்குள்தான் போக வேண்டும் என்று அந்த நாட்டுப் படகு மீனவர்கள் கூறிவிட்டார்கள். அந்த அடிப்படையிலே பிரச்சினையாக இருக்கிறது. அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரும் அதைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உடனடியாக அவர்கள் கடலுக்குள் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மீன் பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதனால் மீனவர்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. பலபேர் ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிடுகிறேன். சில நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

அதேபோல், விவசாயிகள் கடன் தள்ளுபடி பற்றி நேற்றையதினம் அறிவிப்பு வெளியிட்டார்கள். முழுமையாக இந்த வறட்சியான ஆண்டில் அவர்களுடைய கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொரு விஷயம், பயங்கரவாதத்திற்கு எதிராகவும், தீவிரவாதத்திற்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் நிச்சயமாக குறுக்கே நிற்க மாட்டேன். கண்டிப்பாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க வேண்டும். சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டும். நான் குறுக்கே நிற்க மாட்டேன். ஆனால், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே நடைபெற்ற ஒரு செய்தி, ஒருசில சந்தேகங்களை உண்டாக்கி இருக்கிறது. குறிப்பாக இந்த ராஜாராமன் என்கின்ற தீவிரவாதி, அவரோடு சேர்ந்து சரவணன் என்கிற தீவிரவாதி, இரண்டுபேரும் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை அழைத்து வந்ததாகச் சொல்லப்படுகிற விதம், அங்கே நடந்ததாகச் சொல்லப்படுகிற சண்டை, அவர்கள் எப்படி செத்தார்கள் என்று சொல்கிற விதங்களில் எல்லாம் ஒரு scenario மாதிரியாக இருக்கிறதே தவிர நம்பக்கூடியதாக இல்லை. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, கவன ஈர்ப்பாக வரும்போது முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, சரி. அதை விட்டு விடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு எழக்கூடிய அனைத்து சந்தேகங்களுக்கும் விடை அளிக்க வேண்டியது இந்த அரசின் கடமை என்ற கருதுகிறோம். ஆகவே, கடந்த 28 ஆம் தேதியன்று மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் இங்கே இரண்டு கேள்விகளைக் கேட்டார்கள். ஒன்று, தமிழகத்தில் எத்தனை ரேஷன் கார்டுகள் இருக்கின்றன; பொது விநியோகத் துறையின்கீழ் இந்த ரேஷன் கார்டுகளுக்கு வழங்கப்படுகின்ற அரிசியின் அளவு என்ன என்று கேட்டார்கள். ஒட்டுமொத்தமான கார்டுகளின் எண்ணிக்கை ஒரு கோடியே அறுபது இலட்சத்து எண்பத்து இரண்டாயிரம். இவற்றில் ஒரு கோடியே, பதிமூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரம் கார்டுகள் அரிசி வழங்கப்படுகின்ற கார்டுகள். இன்னும் 6.21 இலட்சம் கார்டுகள் அந்தியோதயா, அன்னயோஜனா திட்டத்தின்கீழ் வருகின்றன. ஆகவே, அரிசி பெறுகின்ற மொத்த கார்டுகளின் எண்ணிக்கை ஒரு கோடியே இருபது இலட்சம் ஆகும். ஒட்டுமொத்தமாக வழங்கப்படுகின்ற அரிசியின் அளவு 1.76 இலட்சம் டன் ஆகும் பொது விநியோகத் துறையின்கீழ்.

அடுத்து திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். நீங்கள் இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவசமாக ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ அரிசி என்று கொடுத்து வருகிறீர்கள். ஒட்டுமொத்தமாக 14 இலட்சம் பேர்களுக்கு வழங்குவதாகக் குறிப்பிடுகிறீர்கள். அப்படியானால் ஒரு மாதத்திற்கு 4.2 கோடி டன் ஆகுமே இதை எப்படி நீங்கள் வழங்குகிறீர்கள் என்று கேட்டார். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள், கொஞ்சம் கணக்கில் weak என்று கருதுகிறேன். இந்த இலவசஅரிசித் திட்டத்தின்கீழ் 14.03 இலட்சம் பேருக்கு இலவசமாக அரிசி வழங்கப்படுகிறது. மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 9.77 இலட்சம் ஆகும். ஆகவே, 9.77 இலட்சம் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ வீதம் ஒரு மாதத்திற்கு இருபத்தொன்பதாயிரத்து முன்னூற்று பதினாறு மெட்ரிக் டன் அரிசி வழங்கப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் கோடி என்று சொல்லவில்லை. இலட்சம் என்றுதான் சொன்னேன். ஒருவேளை வாயிலே தவறாக வந்தால்கூட, பத்திரிகைகளில் எல்லாம் சரியாக வந்திருக்கிறது. நான்கு இலட்சத்து இருபதாயிரம் டன்தானா என்று கேட்டேன். அதற்கு பதில் சொல்லிவிட்டார். ரொம்பவும் நன்றி. அதைப்பற்றி நான் ஒன்றும் தவறு சொல்லவில்லை.

கேபிள் டி.வி. வரி அது உள்ளாட்சிகளுக்குச் சேர வேண்டிய வரி, உள்ளாட்சிக்கு ஏற்கெனவே நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. இந்த கேபிள் டி.வி.யிலே போய் நாம் தலையிட வேண்டாம். குறிப்பாக சென்னை மாநகரத்திலே மட்டும் நாங்கள் எதிர்பார்க்கின்ற 30 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொல்கிறார்கள். அருள்கூர்ந்து அதை அவர்களுக்கே விட்டுவிடுங்கள். கொஞ்சம் தேவை-வேண்டுமென்றால் நாம் சரி செய்துகொள்ளலாம்...

*பிற்பகல் 12-15*

அதேபோல மணல் கொள்ளை. பல இடங்களில் மணல் கொள்ளை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேலூர் மாவட்டம், அரக்கோணம் தாலுகா, பாலாற்றில் வேகாமங்கலம் மாமண்டூர் பகுதியில் 23 அடி ஆழத்திற்குப் பள்ளம் தோண்டி மணல் கடத்தப்படுகிறது. அவர்கள் அங்கே எடுப்பதற்கு லைசென்ஸ் கிடையாது. அவர்கள் எடுக்க வேண்டிய இடம் வேறு. அவர்கள் ரொம்ப தூரம் வந்து மணல் எடுக்கிறார்கள். 23 அடிக்கு பள்ளம் தோண்டியிருக்கிறார்கள். 100 கோடி ரூபாய் மதிப்புள்ள மணல் கடத்தப்பட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். *(மணியடிக்கப்பெற்றது)* வேறு விஷயத்திற்குப் போகவில்லை. வேண்டாம். அதையெல்லாம் விட்டுவிடலாம்.

பட்ஜெட்டுக்கு ஒரு சிறப்பு அம்சம் இருக்கிறது. தமிழ்நாட்டில் இனிமேல் வரியே விதிக்க முடியாத அளவுக்குத் தொட்டுவிட்ட பட்ஜெட்தான் இந்த பட்ஜெட். ஆண்டியிலிருந்து அரசன் வரை அனைவரையும் வரி விதிப்புக்கு உள்ளாக்கி எல்லா தரப்பினரும் தூங்கக்கூட முடியாத அளவுக்குச் செய்துவிட்டிருக்கிறீர்கள். உதாரணமாக, ஒரு மத்திய தர குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு எவ்வளவு அதிகமாக இந்த பட்ஜெட்டால் செலவு ஆகும் என்று கணக்குக் கேட்டேன். இரண்டு, மூன்று பேரை, அலுவலகத்திற்குச் செல்கின்ற மத்திய தர குடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் கேட்டேன்.

குறைவாக எவ்வளவு வரும் என்று கேட்டேன். அவர்கள் சொல்லுகிறார்கள், மாதம் ஒன்றுக்கு மின்சாரத்திற்கு மட்டும் 120 ரூபாய் அதிகமாகும். School Bus நீங்கள் ஒரு இருக்கைக்கு 150 ரூபாய் போட்டிருக்கிறீர்கள். ஒரு இருக்கைக்கு 150 ரூபாய் என்று சொன்னால் மாதம் 50 ரூபாய்—மாதம் 50 ரூபாயில் அவர்கள் நிறுத்தமாட்டார்கள். என்ன காரணம் என்று கேட்டால் 3 மாதங்களுக்கு மாணவர்கள் வரமாட்டார்கள். ஆகவே 3 மாதம் சேர்த்து வசூல் செய்வார்கள். அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும், அதேபோல கேபிள் டி.வி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற Convent, College, எதுவாக இருந்தாலும் மாணவர்களிடமிருந்து அவர்கள் கட்டணத்திற்காக வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதிகப்படியான பணத்தை அவர்கள் ஏற்கெனவே வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசுக்கு அவர்கள் தருவதில்லை. அந்தப் பணம் அரசுக்கு வருவதற்கு இப்போது வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. இன்னும் அதிகமாக வசூல் செய்வார்கள். அதுதான் சொல்லுகிறேன். இன்னும் அதிகமாக வசூல் செய்வார்கள். அந்தச் சுமை மாணவர்கள் தலையில் ஏறப்போகிறது.

கேபிள் டி.வி. முதலில் 20 ரூபாயாக இருக்கும். பிறகு 50 ரூபாய்க்குப் போய்விடும். Petrol-Two wheeler வைத்திருந்தால்கூட மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் அதிகமாக செலவாகும் என்று சொல்லுகிறார்கள். இப்போது வாகன வரி புதிதாகப் போட்டிருக்கிறீர்கள். Life Tax-க்கு மாறி இப்போது 7 வருடங்களுக்கு அதிகமான வாகனங்களுக்கு வரி கட்டவேண்டும் Two-wheeler-க்குக் கட்டவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது ஒரு 35 ரூபாய். Telephone-க்கு 35 ரூபாய் அதிகமாகும். Mobile-க்கு 50 ரூபாய் அதிகமாகும். அரிசி, 4 ரூபாயிலிருந்து 5 ரூபாய் ஒரு கிலோவிற்கு அதிகமாகி இருக்கிறது. அது ஒரு 150 ரூபாய் மாதத்திற்கு ஆகும். அதேபோல Kerosene அதற்கு ஒரு 100 ரூபாய் அதிகமாகும். குறைந்தபட்சம் குடும்பம் ஒன்றுக்கு 550 ரூபாய் அதிகமாகச் செலவாகும் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். நான் முடித்துவிடுகிறேன்.

இப்போது உலக ரீதியிலே senior citizen என்று சொன்னால் ஒரு சலுகை உண்டு. ஆனால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டில், நிதிநிலை அறிக்கையில் மூத்த



குடிமகனுக்கு 60 வயது, 65 வயது ஆனவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இந்த பட்ஜெட்டில் சொல்லப்படவில்லை. (குறுக்கீடு) Old Age Pension வேறு Senior Citizen வேறு.

தமிழக அரசு மிகவும் மோசமான நிதிநிலையில் இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் வருவாயைப் பெருக்குவதற்கு எந்தவிதமானத் திட்டமும் இல்லாமல் வரிச் சுமையினாலேயே இருக்கும் பள்ளத்தை மூட நினைப்பது ஒரு திறமையான செயல் என்று யாராலும் கூற முடியாது. பட்ஜெட் வருவதற்கு முன்னாலேயே மின் கட்டணம் அதிகரிப்பு மற்றும் குடிநீருக்கு எல்லாம் வரி போட்டிருக்கிறீர்கள். மிக அதிகமாக வரிச் சுமையை ஏற்றிவிட்டு, உபயோகிப்பாளர்களின் முதுகெலும்பையே உடைத்துவிட்டீர்கள். ஆகையினால் இந்த பட்ஜெட்டில் தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகள் செயல்படுத்தப்படுவதாகக் கூறினாலும், இனிமேல் எந்தத் தொழில் புதிதாகத் தொடங்கினாலும் அது உற்பத்தியைத் தொடங்குவதற்கு 5 வருடங்கள் ஆகும். அதனால் அது பகல் வேளையில் காணும் கனவு போல்தான் இருக்கும்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ்நாட்டில், விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள், சிறு தொழிலில் ஈடுபட்டிருப்போர் ஆகியோர் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகியிருக்கும் சூழ்நிலை இருக்கும்போது புதிய வரிச் சுமைகள் சவப்பெட்டியில் அடிக்கப்படும் கடைசி ஆணிக்கு ஒப்பாகும் என்று நான் கருதுகிறேன். இதில் பெருமைப்பட ஒன்றும் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

மொத்தத்தில் மத்திய அரசின் பரிந்துரையுடன், உலக வங்கியிடம் எதிர்பார்க்கும், ஏறத்தாழ 11,000 கோடி ரூபாய் நிதியுதவியுடன், நபார்ட் வங்கியிடமிருந்து பெறப்படும் ரூபாய் 400 கோடி மற்றும் டேனிடா திட்டத்தின் மூலம் பெறும் நிதியுதவி, ஆசிய வளர்ச்சி வங்கி, A.D.B. போன்ற வெளிநாட்டு முகவர் அமைப்புகள் மூலம் பெறப்படும் நிதியுதவி ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்ற இந்த அரசு உறுதிபூண்டுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரத்தை விலைக்கு வாங்கி, அரசு, பயனீட்டாளர்களுக்கு வழங்கும்போது கொள்முதல் செலவைவிட குறைத்துக் கொடுக்கக் கூடாது என்று உலக வங்கி நிபந்தனை விதித்துள்ளதைப்போல

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 ஏப்ரல் 1

குடிதண்ணீர் விநியோகம் செய்யும்போதும் அதேமாதிரி சொல்லமாட்டார்கள் என்று சொல்வதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது.

திட்டங்கள் பார்ப்பதற்கு பளபளப்பாக காட்சியளித்தாலும் அவற்றில் பொதிந்து கிடக்கும் உண்மைகள் வெளிப்படும்போது கசப்பாகத்தான் இருக்கும். ஒரு குடும்பப் பெண் பூ முடிப்பதும், பொட்டு வைப்பதும் யாருக்காக என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் 'ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம், அதனுள்ளே இருப்பதோ ஈரும் பேனாம்' என்ற ஒரு நிலைதான் ஏற்படும்.

நமது நிதிநிலை அறிக்கையை முடிவு செய்யும் பொறுப்பை மக்களிடமிருந்து எடுத்து உலக வங்கியிடமும் மற்ற நிதியுதவி நிறுவனங்களிடமும் ஒப்படைத்துவிடுவதும், அதற்கு மத்திய அரசின் உதவியை நாடுவதும் நமது சுதந்திரத்தையே இழக்கச் செய்துவிடும்.

*பிற்பகல் 12-20*

மாநில அரசுக்கு உயர் நீதிமன்றம் கடுமையான கண்டனம் தெரிவித்திருக்கிறது. தேர்தல் ஆணையம் கடுமையான கண்டனம் தெரிவித்திருக்கிறது. உச்ச நீதிமன்றம், மாநில அரசு காவிரி பிரச்சினையில் நடந்துகொண்ட முறைக்கு கடுமையான கண்டனம் தெரிவித்திருக்கிறது. இது அரசுக்கு ஒரு தலைகுனிவு என்றே நான் கருதுகின்றேன். அரசுக்கு மட்டுமல்ல, தமிழக மக்களுக்கும் தலைக்குனிவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உயர் நீதிமன்றம் நேற்றும்கூட கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி நிதி நெருக்கடி அறிவிக்க பரிந்துரை செய்ய நேரிடும் என்று மாநில அரசையே எச்சரிக்கை செய்ய நேரிட்டது. அதன் பிறகும் நிலைமை திருந்தவில்லை. இவ்வாறு எல்லாத் தரப்பினரையும் அதிருப்தியில் வைத்துவிட்டு, யாரைத் திருப்திபடுத்துவதற்கு இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அரசு இந்த அவைக்கு விளக்க வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.



2003 ஏப்ரல் 1]

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை இந்த அவையிலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கை என்பது ஒரு மாநிலத்தினுடைய வரவு-செலவுகளை, வரவு இவ்வளவு, செலவு இவ்வளவு என்று கணக்குப் பார்த்துத் தெரிவிக்கின்ற ஒரு வட்டிக்கடைப் புத்தகம் அல்ல. நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு வளமான திட்டங்களைத் தீட்டி, சரியான நிதியை ஒதுக்கி, முறையாகத் துவக்கி, அந்தத் திட்டங்களை முழுமையாக முடித்து, எல்லாவகையிலும் அதனுடைய பயன் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்த்து, நடவடிக்கை எடுக்கவேண்டிய எல்லா அம்சங்களும் இந்த நிதிநிலை அறிக்கையிலே பிரதிபலிக்க வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை, சடங்குபோல நிதிநிலை அறிக்கையைப் படிப்பதும், திட்டங்களை அறிவிப்பதும், அறிவிக்கப்பட்ட திட்டங்கள் என்ன ஆயிற்று என்று அடுத்துவருகிற ஆண்டிலே தலையைப் பிய்த்துக்கொள்வதும் வாடிக்கையாகப் போய்விட்டது.

சென்ற ஆண்டு, பல்வேறு திட்டங்களை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவருடைய அறிக்கையிலே தெரிவித்தார்கள். அந்தத் திட்டங்கள் எல்லாம் என்ன ஆயிற்று என்று கேட்டால், உறுப்பினராக இருக்கின்ற எங்களுக்கே பலது தெரியவில்லை. ஏதாவது, ஒன்று, இரண்டு என்ன ஆயிற்று என்று கேட்டால், இப்பொழுதுதான் நாங்கள் பணம் ஒதுக்கியிருக்கிறோம். இப்பொழுதுதான் ஆபீஸ் வைத்திருக்கிறோம். இப்பொழுதுதான் File move ஆகிக்கொண்டிருக்கிறது என்கிறார்கள். அந்த விவரங்களையெல்லாம் முதலிலே உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நேற்றைக்கு நான் ஊருக்குப் போயிருந்தேன். வேலூரிலேயிருந்து வெளிவருகிற தினமலர் பத்திரிகை போன பட்ஜெட்டிலே என்னென்ன அறிவிப்பு நடந்தது. அதெல்லாம் எப்படி கிடப்பிலே போடப்பட்டு கிடக்கிறது என்பதைப் புள்ளிவிவரங்களோடு எழுதி, கோரிக்கை, அதை அடுத்து அதன் நிலைமை, இவற்றை எடுத்து ஒரு பக்கத்துக்கு வெளியிட்டிருந்தார்கள். நான் அவற்றை இங்கே எடுத்துப் படித்து பார்த்தீர்களா பத்திரிகையிலே இப்படிச் சொல்லியிருக்கிறது; இந்தத் திட்டம் என்ன ஆயிற்று, என்ன ஆயிற்று என்று நான் கேட்கவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர்

அவர்களிடத்திலே நான் இதைத் தருகிறேன், முடியுமானால் அவருடைய பதிலுரையிலே பதில் அளிக்கட்டும். அதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கட்டும். ஆனால், இந்தத் திட்டங்களிலே-- இப்பொழுது இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையிலாவது திட்டங்கள் உண்டா என்று கேட்டால், உற்பத்தியைப் பெருக்க, தொழில் துறையை செழிக்க வைக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, வறுமையை ஒழிக்க, வளமான திட்டங்கள் இதிலே ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், அப்படி எந்தத் திட்டமும் இல்லை. திட்டம் இல்லாததற்கு என்ன காரணம் என்று கேட்டால், அவர்கள் சொல்வது எல்லாம், இந்தத் திட்டத்தை நாங்கள் போடலாம் என்று பார்க்கிறோம்; இத்தனைத் தொழிற்சாலைகளைக் கட்டலாம் என்று நினைத்தோம்; இத்தனை அணைக்கட்டுகளைக் கட்டலாம் என்று நினைத்தோம்; ஆனால், நிதி ஆதாரம் சரியில்லை. என்றைக்கு நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்களோ, அன்றையிலிருந்து, அது கவர்னர் உரையானாலும், நிதிநிலை அறிக்கையானாலும், மானியக் கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதமானாலும், அரசு விழாவானாலும், பொதுக்கூட்டமானாலும், அங்கிங்கெனாதபடி எங்கும் அமைச்சர்கள் முதற்கொண்டு, அந்தக் கட்சியிலே இருக்கிற தொண்டர்கள் வரையில் ஒரே பாட்டு நிதிநிலை சரியில்லை, நிதிநிலை சரியில்லை என்று. இரண்டு ஆண்டுகள் பாடியாகிவிட்டது. இன்னும் கொஞ்சம் நாளைக்குப் பாடலாம். அதுவும் நீங்கள் விடுவதாகத் தெரியவில்லை.

*பிற்பகல் 12-25*

கடைசியிலே இப்போதுகூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள், சென்ற முறை முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள் நிதிநிலைகளை எல்லாம் சீரழித்துவிட்டார்கள்; நிதி ஆதாரத்தைச் சீரழித்துவிட்டார்கள் என்று. நாங்கள் அவற்றையெல்லாம் சரி செய்துகொண்டு இப்போதிருக்கிற திட்டத்தையும் கொண்டுவந்து நிறுத்தி, என்று, 'வானத்தை வில்லாக வளைப்பது போல' நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்கூட அவர்களுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு கணக்கை உங்களிடத்திலே காட்டுகிறேன். நிதி ஆதாரங்கள், financial resources அரசாங்கத்திற்கு வருவாய் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே குறைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். குறைந்திருந்தால், அந்த ஆட்சி நிதி ஆதாரத்தைப் பெருக்கவில்லை என்று பொருள். வாங்க வேண்டிய இடத்திலே மத்திய அரசிலேயிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய



மானியங்கள், ஷேர்கள் இவற்றை திராவிட முன்னேற்றக் கழகம் குறைத்து வாங்கியிருக்கிறதா என்று பார்த்தால், குறைத்து வாங்கியிருந்தால் நாங்கள் சரியாகப் பணியாற்றவில்லை என்று பொருள்.

1994-95-ல் உங்கள் ஆட்சி நடைபெற்றபொழுது மொத்த வருவாய் - revenue receipts ரூபாய் 9 ஆயிரத்து 219 கோடி. 1995-96-ல் மொத்த வருவாய் ரூ.10,599 கோடி. 1996-97-ல் நாங்கள் ஆட்சிக்கு வந்தபொழுது ரூ.11,967 கோடி. 10,000 கோடி 11 ஆயிரம் கோடிக்கு ஏறியிருக்கிறது. 1988-89-ல் ரூ13,587 கோடி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, 1988-ஆ?

**திரு. துரைமுருகன்:** இல்லை, 1998-99-ல். 1998-99-ல் ரூ.13,587 கோடி. 1999-2000-த்தில் ரூ.14,261 கோடி. 2000-2001-ல் ரூ.18,317 கோடி. நீங்கள் ஆட்சிக்கு வந்து 2001-2002-ல் எவ்வளவு மொத்த வருவாயை ஈட்டியிருக்கிறீர்கள் என்று கேட்டால் ரூ.18,818 கோடி. நாங்கள் விட்டுப் போகிறபொழுது மொத்த வருவாய் ரூ.18,317 கோடி. உங்களுடைய ஆட்சியில் ரூ.18,818 கோடி. கொஞ்சம்தான், ஆயிரக்கணக்கிலே ஏறியிருக்கிறது.

இதேபோன்றுதான், உங்களுடைய ஆட்சியில் 1995-96-ல் மத்திய அரசிடம் மானியமாகப் பெற்றது ரூ.784 கோடி. Share ஆகப் பெற்றது ரூ.1,806 கோடி. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1996-97-ல் மத்திய அரசிடமிருந்து மானியமாகப் பெற்றது ரூ.9,027 கோடி. Share ஆகப் பெற்றது ரூ.2,166 கோடி. 1997-98-ல் மானியமாகப் பெற்றது ரூ.1,051 கோடி. Share ஆகப்பெற்றது ரூ.2,728 கோடி. 1998-99-ல் மத்திய அரசிலேயிருந்து மானியமாகப் பெற்றது ரூ.1,070 கோடி. Share ஆகப் பெற்றது ரூ.2,409 கோடி. 1999-2000-த்தில்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரேயொரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் புள்ளி விவரத்தை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள்? அது தெளிவாக இருக்கிறது, வெள்ளை அறிக்கையிலேயே தெளிவாக இருக்கிறது. வெள்ளை அறிக்கையிலே 15-வது பக்கத்திலே பார்க்க வேண்டும். 1992-93-லே 12 சதவீதமாக இருந்தது மத்திய அரசு உதவி மானியங்கள். 1993-94-லே 12 சதவீதம், 1994-95-லே 10 சதவீதம், 1995-96-லே 7 சதவீதம். ஆனால், 1996-97-லே 8 சதவீதம், 1997-98-லே 8 சதவீதம், 1998-99-லே 8 சதவீதம், 1999-2000-த்திலே 8 சதவீதம். ஆனால்,

புரட்சித் தலைவி அவர்கள் ஆண்ட 1992-லிருந்து 1996-வரை 12 சதவீதம் என்று இருந்தது. ஏன் நீங்கள் மாற்றிப் படிக்கிறீர்கள்? தவறாகப் படிக்கிறீர்கள் என்று புரியவில்லை.

அடுத்து, மத்திய வரிகளினுடைய பங்கு நீங்கள் கூறிய கணக்கு தவறு. 1992-93-லே 20 சதவீதமாக இருந்தது. 1993-94-லே 19 சதவீதம். 1994-95-லும் 19 சதவீதம், 1995-97-லே 17 சதவீதம் என்று இருந்தது. எனவே, 20 சதவீதம் 1992-96-ல் இருந்தது. 1999-2000-த்தில் 16 சதவீதம் தான் இருந்தது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவருக்குத் தந்திருக்கிற கணக்கை அவர் சொல்கிறார். நான் என் கணக்கைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதுதான் உண்மை என்று நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஏனென்றால் ஒவ்வொன்றிலும் ஒரு சதவீதம் சொல்கிறீர்கள். அரசாங்க ஊழியர்களுக்கு மொத்த வருவாயில் 96 சதவீதம் என்று சொல்கிறீர்கள், அடுத்த நாளிலே எழுந்து 94 சதவீதம் என்று சொன்னார்கள். இல்லை S.O.T.R-லேதான் 96 என்று சொல்கிறீர்கள். வெள்ளை அறிக்கையிலே 54 என்று சொல்கிறீர்கள். உங்களை எந்தவிதத்திலேயிருந்துமே கண்டுபிடிக்க முடியாது. நான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். வேண்டுமென்றால் நீங்கள் அடுத்தவர்களுக்குச் சொல்லிவிட்டுப் போகலாம்.

பிற்பகல் 12-30

1999-2000-த்தில் மத்திய அரசின் மானியமாக வந்தது ரூ.1,385 கோடி. Share-ஆகவந்தது ரூ.2,667 கோடி. 2000-2001-ல் மத்திய அரசின் மானியமாக வந்தது ரூ.1,540 கோடி. Share-ஆக வந்தது ரூ.2,784 கோடி. 2001-2002-ல் மானியமாக வந்தது ரூ.1,382 கோடி. Share-ஆகவந்தது ரூ.2,885 கோடி. ஆக, இப்படிப் பார்க்கிறபோது, நிதி வருவாய் ஆதாரங்கள் உயர்ந்திருக்கிறதே தவிர, குறைந்து போகவில்லை. ஆக, மத்திய அரசிடமிருந்து வாங்க வேண்டியதையும் நாம் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், அமைச்சர்களும், மற்றவர்களும் ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிதி ஆதாரத்தைக் கெடுத்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு என்ன காரணம்? நம்முடைய நிதி அமைச்சர் என்ன சொல்லி இருக்கிறார்கள் அவருடைய பட்ஜெட்டில்? நிதி ஆதாரத்திற்குச் சொல்கிறபோதெல்லாம் நிதி



ஆதாரம் 11-வது நிதி ஆணையத்தின்—எந்த ஆட்சிக்கும் ஒரு நிதி நெருக்கடி வரலாம். அப்படியே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வந்திருக்கலாம். உங்களுடைய ஆட்சிக்கு வந்ததை நீங்கள் சொல்கிறீர்கள். 11-வது நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்மானத் தீர்வுகளின் குறைபாடுகளால்தான் பெரும்பாலான மாநிலங்கள் கடுமையான நிதிநிலையை எதிர்கொண்டன. சரி. அதற்கு என்ன செய்யவேண்டும் என்கிறார்கள்? கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட பல நிதி ஆணையங்கள் நன்கு செயல்படும் மாநிலங்களின் பங்கை எடுத்து பின்தங்கிய மாநிலங்களுக்கு அப்பங்கை அளிக்க வகை செய்திருக்கின்றன. இதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நிதியமைச்சரும் சொல்கிறார்கள். அதையேதான் உங்களுடைய ஆட்சியில் மட்டுமல்ல. இதை ஆரம்பித்ததே எங்களுடைய ஆட்சியில், நாங்கள் ஆட்சியில் இருந்தபோதுதான். அப்போதே சொன்னார், கலைஞர் அவர்கள் இங்கே படித்த, 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே படித்தார். "11-வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் தமிழகத்திற்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் மொத்த வரி வசூலில் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய பங்கை 40 சதவிகிதமாக நிர்ணயிக்கும்படி தமிழக அரசு கோரியது. இதற்கு மாறாக 11-வது நிதி ஆணையம் நிகர வரி வசூலில் 29.5 சதவிகிதம் மட்டுமே பகிர்ந்தளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் அந்த நிதியும் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு 11-வது நிதி ஆணையம் நிர்ணயித்த வழிமுறைகளில், பின்தங்கிவிட்ட மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால், தமிழகத்தைப் போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன" என்று அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் 3-வது நிலையில் இருக்கிற தமிழகத்திற்கு இப்படிப்பட்ட பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திக் கொடுத்த பிறகு அந்த 11-வது நிதி ஆணையத்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்கிறேன். இந்த மாநிலங்களின் வருமான வரியைக் கொண்டு தனிநபர் வருமானத்திலேகூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உயர்த்திக் காட்டியிருக்கிறது. 1995-96-ல் தனி நபர் வருமானம் ரூ.11,894/- ஆக

இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் 1999-2000-த்தில் ரூ.18,786 ஆக உயர்ந்திருக்கிறது. எனவே, நிதி ஆதாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம். ஆனால், இந்தக் காரணம்—அவர்கள் என்ன சொல்கிறார்கள், நம்முடைய நிதியமைச்சரும், நம்முடைய முதலமைச்சரும், மற்றவர்களும் என்ன நினைக்கிறார்கள், நிதி இருந்தது, ஆனால், அந்த நிதியை அவர்கள் பாழடித்துவிட்டார்கள். எப்படி? மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகராக சம்பளத்தையும், அலவன்சையும் கொடுத்த காரணத்தால் பெரும் நஷ்டத்திற்கு ஆளாக்கிப் போய்விட்டார்கள். ஆகையால், 2 சதவீதம்தான் உள்ள அரசு ஊழியர்களுக்கு இவ்வளவு மொத்த வருவாயில் 94 சதவீதம் அல்லது 96 சதவீதம்—அதில் ஒரு பெரிய டிபேட், நடந்து கொண்டிருக்கிறது—வாரிக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். நான் ஒன்று கேட்கிறேன். அரசு ஊழியர்கள் 2 பர்சென்ட் என்கிறீர்கள். ஆனால், தஞ்சாவூரிலே இப்போது அரிசி கொடுக்கிறபோது, இவ்வளவு குடும்பங்கள் பின்னால் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். 2 பர்சென்டா அல்லது 1 பர்சென்டா என்பது அல்ல பிரச்சினை. அரசு ஊழியர்கள்தான் இந்த அரசாங்கத்தினுடைய தேரை இழுத்துச் செல்கின்ற புரவிகள். இங்கே உட்கார்ந்து நீங்கள் சொல்கிற இந்தப் புள்ளிவிவரத்தை பாவம் வயிற்றெரிச்சலோடு அங்கேயிருந்து செய்து கொடுத்துக் கொண்டிருக்கக்கூடியவர்கள். இன்றைக்குக்கூட சென்ட்ரல் கவர்ன்மென்டிலே D.A. ஏற்றிவிட்டார்களே, இன்னும் நமக்கு வரவில்லையே என்று அங்கலாய்த்துக் கொண்டு, வயிறு எரிய எரிய இவர்கள் பேச மாட்டார்களா, இவர்களால் நமக்கு ஒரு வழிவகை வராதா என்று உள்ளூர வயிற்றெரிச்சலோடு, 'அதிகாரத்திற்குப் பயந்து ஐயாவிற்கு சலாம் போடுவது' என்பார்களே அப்படி நடந்துகொண்டு இருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இந்த மாநிலத்தினுடைய வெள்ளை அறிக்கை—ஒவ்வொன்றும் ஒரு தெளிவான உண்மையாகட்டும் இன்றைக்கு. 2001-2002 ஆம் ஆண்டு, நம்முடைய மொத்த வருவாய் ரூ.18,818 கோடி. இந்த ஆண்டு, 2001-2002-ல் அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்டது ரூ.11,035 கோடி ரூபாய். ரூ.18,818 கோடியில் ரூ.11,035 கோடி என்பது 58.64 சதவீதம். இது ஒன்று.



பிற்பகல் 12-35

இதிலே எனக்கு ஒரு சந்தேகம். இன்றைக்கு நீங்கள் சரியாகச் சொல்லியாக வேண்டும். மொத்த வருவாயிலா அல்லது S.O.T.R. இலா? State's Own Tax Revenue வருகிறதே, அதுவா? இரண்டையும் சொல்லி, முரணாகச் சொன்னார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அப்போது மொத்த வருவாய் என்றார்கள். அதற்குப் பிறகு நீங்கள் S.O.T.R. என்று சொன்னீர்கள். ஆகையினால் நான் என்ன சொல்கிறேன் என்றால், S.O.T.R.-ஐயே வைத்துப் பார்த்துக்கொள்வோம்.

2001-2002-ல் S.O.T.R. மூலம் இந்த மாநிலத்திற்கு வருவாய் ரூபாய் 13 ஆயிரம் கோடியே 24 இலட்சம். இதில் அரசு ஊழியர்களுக்குத் தருவது ரூ.11,035 கோடி. அப்படிப் பார்த்தால் அது 84.81 சதவீதம். ஆக, அதுவும் நீங்கள் சொன்ன கணக்குகளுக்குள் வரவில்லை. ஆனால் இவ்வளவும் அரசு ஊழியர்களுக்கே போகிறதா என்றால், இல்லை. இங்கே உட்கார்ந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர்கள், நீங்கள் வாங்குகிற சம்பளம், அதுவும் இதில்தான் வருகிறது. இதோ உட்கார்ந்திருக்கிறார்களே, I.A.S., அதிகாரிகள், அவர்கள் வாங்குகிற சம்பளமும் இந்தத் தொகையில்தான் வருகிறது. போலீஸ், டாக்டர்கள், நீதிபதிகள், ஆசிரியர்கள்—இதிலே போலீஸ், டாக்டர்கள் எல்லாம் Essential Service; இருந்தே ஆக வேண்டும். அதையும் இதிலே சேர்த்துவிடுகிறீர்கள். இவ்வளவும் போதாது என்று Aided Schools-களுக்கு தரப்படுகின்ற நிதி, பல்கலைக்கழகங்களுக்குத் தரப்படுகின்ற மானியம் ரூ.971 கோடி, ஆக எல்லாவற்றையும் சேர்த்து இந்த ரூ.11,035 கோடியிலே அடக்கிவிட்டு, நீங்கள் 80 சதவீதம், 70 சதவீதம் என்று ஏற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இங்கேயிருக்கிற Essential Service-க்கு தரப்படுகின்ற சம்பளம் — நாம் பணம் கொடுக்கிறோமா, மத்திய அரசுக்கு இணையாகக் கொடுக்கிறோமா, இல்லையா என்பதல்ல—Essential Service, Police—Essential Service-தான். Doctors—Essential Service, Ministers must be there. அவர்களுக்கெல்லாம் கொடுக்கிற சம்பளத்தினை இதிலே சேர்க்கக் கூடாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சில ஆண்டுகளைக் குறிப்பிட்டு, தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, ஒவ்வோர் ஆண்டும் அரசு பெற்ற வருவாய் என்ன? எவ்வளவு நிதி கிடைத்தது, நிதியாதாரம் கிடைத்தது என்பதைக் குறிப்பிட்டார்கள்.

வரவை மட்டும் சொல்லியிருக்கிறாரே தவிர செலவைச் சொல்லவில்லை. கடன் பாக்கிகளைச் சொல்லவில்லை. இந்த நிதியெல்லாம் எப்படிச் செலவாயிற்று என்பதையும் சொல்லவில்லை.

1999-2000 ஆம் ஆண்டில் அதிகமாக வருவாய் கிடைத்ததாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறிப்பிட்டார். ஆனால், அந்த 1999-2000 ஆம் ஆண்டில், அரசு ஊழியர்களின் ஊதியங்களுக்கும், ஓய்வூதியங்களுக்கும் மொத்த வருவாயில் 102.85 சதவீதம் செலவிட்டிருக்கிறீர்கள். இதுதான் திறமையான நிதி நிருவாகமா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** இப்போது நீங்கள் மொத்த வருமானத்தைச் சொல்கிறீர்களா? S.O.T.R. பற்றிச் சொல்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) I will give clarification therefor. 2000-2001 ஆம் ஆண்டுக் கணக்கைச் சொல்கிறேன். அதிலே 94 சதவீதம் மாநில அரசினுடைய வருவாயிலிருந்து அரசு ஊழியர்களுக்காகத் தரப்பட்டது. அதுதான் ஒரு நிலையில் 102 சதவீதத்தை எட்டியது. மைய அரசிலிருந்து அரசாங்கம் பெறுகிற Development activities, Plan expenditure-க்காக, மைய அரசு ஒதுக்குகின்ற அந்தப் பணம் எல்லாம் சேர்ந்தால்தான் மொத்த வருமானம். மொத்த வருமானத்தில்—நாம் வங்கிகளில் கடன் வாங்குகிறோம். உலக வங்கியில் இருந்து கடன் வாங்குகிறோம். Institutional Finance மூலமாகக் கடன் வாங்குகிறோம். மைய அரசு நிதியைத் தருகிறது. மைய அரசு கடனைத் தருகிறது; Grant-ஆகவும் தருகிறது. அதையெல்லாம் சம்பளத்திற்குத் தருவதற்கு அவர்கள் ஒத்துக்கொள்வது இல்லை. மாநில அரசினுடைய மொத்த வருவாயிலிருந்துதான் சம்பள ஊதியத்தைத் தர வேண்டும். அப்படித் தருகின்றபோது, சராசரியாக 94 சதவீதம் என்பதனைச் சொன்னோம். சில காலக்கட்டங்களில் 102 சதவீதம் நீங்கள் அதனைத் தந்திருக்கின்றீர்கள், அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள்.



பிற்பகல் 12-40

**திரு. துரைமுருகன்:** நான் சொன்ன ஆண்டு வேறு; முதலமைச்சர் சொன்ன ஆண்டு வேறு. ஆனால், நான் சொல்லியிருப்பதெல்லாம் இவர்களையெல்லாம் கழித்துவிட்டுப் பார்த்தால் ஒரு 30 சதவீதம்கூட தேறாது என்பதுதான் என்னுடைய கருத்து.

இரண்டாவது சொல்லலாம். நான் ஒன்றைக் கேட்கிறேன். அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான சம்பளம், அகவிலைப்படி கொடுத்தது குற்றம் என்று சொன்னால், அகவிலைப்படியிலே 30 சதவீதம் H.R.A.—House Rent Allowance—கொடுத்தார்கள் அவர்கள். ஆனால், அப்பொழுது நாங்கள் கொடுக்க முடியவில்லை. நாங்கள் பிறகு தருகிறோம் என்று சொன்னோம். அப்பொழுது நாங்கள் ஆட்சியில் இருந்தோம். நீங்கள் எதிர்க்கட்சியில் இருந்தீர்கள். நீங்கள் பார்த்தீர்கள் - அரசாங்க ஊழியர்களுக்கு கருணாநிதி அடிப்படைச் சம்பளம் கொடுத்துவிட்டார். அகவிலைப் படி கொடுத்து விட்டார். வேறு ஏதாவது பாக்கி இருக்கிறதா என்று பார்த்தவுடன், H.R.A. பாக்கி இருக்கிறது, 30 சதவீதம் கொடுத்திருக்கிறார்கள் மத்திய அரசு. நாமும் தருவோம் என்று உங்கள் தேர்தல் அறிக்கையிலே நீங்கள் சொன்னீர்கள். அரசு ஊழியர்களே, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்த 30 சதவீதம் H.R.A.-வை நாங்கள் தருவோம் என்று நீங்கள் அன்றைக்கு பிரகடனப்படுத்தினீர்களே, நான் கேட்கிறேன், அதையாவது இன்றைக்குக் கொடுத்திருக்கிறீர்களா? கொடுக்காதது மட்டுமல்ல, குதிரை கீழே தள்ளி குழியையும் பறித்தது போல என்ன ஆயிற்று இன்றைக்கு நிலைமை?

6-வது ஊதியக் குழுவிலே வந்த நிலுவை 40 சதவீதத்தை நாங்கள் கொடுத்துவிட்டோம். மிச்சம் 60 சதவீதத்தை 2003-ல் தருகிறோம் என்று அன்றைக்கு கலைஞர் சொன்னார். ஆனால், இப்பொழுதும் சொல்கிறேன், நாங்கள் ஆட்சியில் இருந்திருந்தால் நிச்சயமாக இந்த 2003-லே அந்த 60 சதவீதத்தை இப்பொழுது 1-4-லே தந்திருப்போம். (குறுக்கீடு) அது வேறு. ஆட்சிக்கு வருகிறோமா இல்லையா என்று சவாலுக்கு நான் போகவில்லை. ஜனநாயகத்தில் Any Tom, Dick and Harry can become Prime Minister, if mandate is there. மக்கள் ஓட்டுப் போட்டால் யார் வேண்டுமானாலும் வரலாம். நாங்களும் வரலாம், நீங்களும் வரலாம். அதிலே போய் நான் சண்டை போடத் தயாராக இல்லை. (குறுக்கீடு) ஆனால், ஒன்றை நான் தெரிவிக்கிறேன். அந்த

60 சதவீதத்தை நாங்கள் கொடுத்திருப்போம். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை இங்கே? அப்போது சொல்லியிருக்கிறார் ஒரு வரி நம்முடைய நிதி அமைச்சர். வளமான வாக்குறுதியைத் தந்து விட்டு, ஆனால் 60 சதவீதத்தைப் பின்னாலே தர பாக்கி வைத்துவிட்டு போய்விட்டார். சாயந்திரம் - மக்கள் வரிப் பணத்தைத் தூக்கி அரசாங்க அதிகாரிகளுக்குக் கொடுத்துவிட்டார் என்று சொல்வார்.

நான் ஒன்றைக் கேட்கிறேன். எங்கள் தலையில் போட்டுவிட்டார். அப்பொழுதே தந்திருக்க வேண்டிய 60 சதவீதத்தை இப்பொழுது எங்கள் தலையில் போட்டார்கள் என்றார். இவர் ரொம்ப கெட்டிக்காரர், அதைவிட, இவர் என்ன பண்ணினார்? மெள்ள 1-4-லே கொடுக்க வேண்டும் பாருங்கள். இப்பொழுது சொன்னார். இன்னும் அதை 3 வருடம் கழித்து அப்புறம் வாங்கிக் கொள்ளுங்கள் வட்டி இல்லாமல் என்று சொன்னார். இப்பொழுது அடுத்து எங்கள் தலையில் போட்டுவிட்டுப் போய்விட்டீர்கள். (சிரிப்பு). இன்னொன்று (குறுக்கீடுகள்) என்னுடைய ஆசை; நாங்கள்தான் வரப்போகிறோம் என்று சொன்னால் என்ன தப்பாகப் போய்விடப்போகிறது? ஒன்றும் இல்லை. இல்லை, நீங்களே வருவீர்கள், யாராவது ஒருத்தர் இருப்போம். நாம் இரண்டு பேர்தான் இருப்போம் மாறி, மாறி. (சிரிப்பு)

அரசு ஊழியர்களை, 'குதிரை கீழே தள்ளியது மட்டுமில்லாமல் குழியும் பறித்தது' என்று சொல்வார்களே, அப்படி, கழக ஆட்சியில் ஓர் அரசு ஊழியர் 30 ஆண்டுகள் பணியாற்றினாலே போதும், முழு பென்ஷன் உண்டு. இப்பொழுது 33 ஆண்டுகள்.

கழக ஆட்சியில் ஓய்வு பெறும் ஒருவர் கடைசி மாதம் பெறும் சம்பளத்தில் 50 சதவீதம் ஓய்வூதியமாக இதுவரையில் வழங்கப்பட்டது. இனி அதை கடைசி 10 மாதத்தை எடுத்து சராசரி போட்டு வழங்கப்படும் என்று சொல்லிவிட்டார்கள்.

ஓய்வு பெறும்போது 11 மாத விடுப்பை surrender செய்யலாம். ஆனால், இப்பொழுது 10 மாத விடுப்பைத்தான் surrender செய்ய முடியும். Surrender விடுப்புக்கு கழக ஆட்சியில் அடிப்படைச் சம்பளத்துடன், அகவிலைப்படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி ஆகியவை சேர்க்கப்பட்டிருந்தது. இனி, இந்த ஆட்சியில் அகவிலைப்படி மட்டுமே சேர்க்கப்படுமாம்.

6-வது ஊதிய விகித மாற்றத்தின்போது வருங்கால நிதியில் சேர்க்கப்பட்ட 60 சதவீத நிலுவைத் தொகை 1-4-2003-க்குப் பிறகு



வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதுவும் இப்பொழுது 3 ஆண்டில் 3 தவணையாக வட்டி இல்லாமல் தரப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

நான் நிதி அமைச்சருக்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். பாசுவினுடைய Constitution-லே நேற்றைக்கு நான் பார்த்தேன். Pension மற்றவற்றைப்பற்றி இருக்கிறது. "Demolishing the Pre-Constitution theory, that pension is a matter of bounty of the Government, the Supreme Court has held that the pension can be claimed as of right by the retired Government servant in consideration of his past service, so that subject to the rate being determined according to the relevant rules *mandamus* would issue against the Government to pay the proper pension to retired Government servant. It should also be issued to direct the Government to pay him a cash equivalent of the leave due to him on the date of retirement" என்று NAKARA Vs. Union of India என்ற வழக்கிலே திரு. பாசு அவர்கள் எடுத்து எழுதியிருக்கிறார்கள். எனவே, அதற்காக நான் சொல்கிறேன். இந்த அரசு ஊழியர்களுக்குப் பணம் கொடுத்த காரணத்தாலே எல்லாம் போய்விட்டது என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும் என்பதற்காகத்தான் நான் அவற்றை எடுத்துச்சொன்னேன். சரி, இதுதான், இப்படிப்பட்ட நிலைமை.

*பிற்பகல் 12-45*

ஒரு மாநிலத்தில் தொழில் இருக்கவேண்டும். தொழில் இருந்தால்தான் பொருளாதார வளர்ச்சி வரும்; வேலை 10 பேருக்குக் கிடைக்கும். ஆனால், நாம் என்ன செய்கிறோம். முதலிலே கணக்கெடுத்து, அரசாங்கம், தனியார் கூட்டுறவில் இருக்கிறதா; Share-ஐ withdraw பண்ணுகிறோம். அரசாங்க Public Sector-ஆ, எல்லோருக்கும் சொல்கிறோம். வெளியிலே போவதற்கு, வெளியிலே போங்கள் என்று. அரசாங்க ஊழியர்களா; நீங்கள் வெளியிலே போங்கள். நான் கேட்கிறேன், எல்லோரையும் அரசு, factory-ஐ விட்டு வெளியிலே போய்விடு; Voluntary Retirement எடுத்துக் கொள்ளுங்கள்; Government Servant-ஆ, வெளியிலே போய்விடு என்றால், அவன் எங்கே போவான்? அங்கேயும் போகமுடியாது; இங்கேயும் போகமுடியாது. அப்படியானால் மக்களுக்கு யார் guarantee? Government. நாம்தானே சோறு போடவேண்டும். நாம்தானே வேலை கொடுக்கவேண்டும். நாம்தானே படிக்க வைக்கிறோம். அவனை வீட்டிற்குப் போடா, வீட்டிற்குப் போடா, வீட்டிற்குப் போடா என்றால், வீட்டிலே என்ன factory-யா வைத்திருக்கிறான்?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆட்சிகள் செய்த தவறினால், இந்தியாவிலேயே அதிகமான ஊழியர்களைக் கொண்டிருக்கிற மாநில அரசு தமிழ்நாடு அரசு. இந்தியாவிலேயே Pension-க்காக மிக அதிகமான தொகையைச் செலவிட வேண்டிய அரசு தமிழ்நாடு அரசு. உலக அளவில் இருக்கின்ற பொருளாதார நிபுணர்கள், தமிழ்நாடு அரசுக்கு இருக்கின்ற இந்த pension liabilities-ஐ ஆய்வு செய்து, this is unsustainable; இதைத் தொடர்ந்து செயல்படுத்த முடியாது; மாநில அரசு திவாலாகி விடும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** Committee போட்டால் போதும்; இதுமாதிரி சொல்வதற்கென்றே ரொம்பப் பேர் இருக்கிறார்கள். (சிரிப்பு) எல்லாவற்றுக்கும் கொடுக்கிறார்கள், எப்படி? நாம் என்ன order கொடுக்கிறோமோ அப்படி. மசாலா தோசை, ரவா தோசை, ரவா இட்லி, ஆனியன் ஊத்தப்பம் என்று சொல்வதுமாதிரி. இப்படி எழுத வேண்டுமென்றால் எழுதுகிறான். அதுமாதிரி உண்டு. அதை முதலமைச்சர் சொன்னதற்காக நான் சொல்லவில்லை. பொதுவாக நான் சொல்கிறேன்.

இப்போது என்ன சொல்லியிருக்கிறீர்கள் நீங்கள். உற்பத்தித் துறையில் உள்ள, பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் அனைத்திலும் உள்ள தனது பங்குகளை அரசு விலக்கிக்கொள்ளும்; ஏன்? (குறுக்கீடு) நஷ்டத்திலே இயங்குகிறது என்றால், நாம் விலகிக் கொண்டால் மட்டும் அது இலாபத்தில் போய்விடுமா? அப்படியானால், அதிலே நாம்தான் over burden-ஆ? நாம் விலகிக்கொள்கிறோம். Take for example, காட்பாடி TEL கம்பெனியைப் பற்றி பேசினார்; இலாபத்திலே இருக்கிறது. ஆனால், அதற்கும் இன்றைக்கு ஆலோசகர் போட்டிருக்கிறார்கள். அதை எப்படி கொடுப்பது என்பதற்காக ஆலோசகர் போட்டிருக்கிறார்கள். மேடம் சொன்னார்கள்; இல்லை என்று சொன்னார்கள். அதுபோல இல்லையென்றால், I am the most happiest person. உங்களுக்கு தனி Thanks—சொல்கிறேன்; என் தொகுதியிலே factory-ஐ விற்கவில்லை என்றால்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசின் கடமை; ஒரு ஜனநாயக நாட்டில் தனியார் துறை ஈடுபடாத துறைகளில் ஈடுபட்டு, மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதுதான் ஓர் அரசின் கடமையாகும். Manufacturing



Sector-ல், தனியார் துறையோடு போட்டி போடுவது, வர்த்தக ரீதியாகப் போட்டி போடுவது, வியாபாரரீதியாகப் போட்டி போடுவது என்பது ஓர் அரசின் கடமையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** எவ்வளவுதான் கல்வியை தனியார் கல்லூரிகள், தனியார்கள் நன்றாகக் கொடுத்தாலும், அந்த நாட்டு மக்களுக்காக நாம் கல்வியைக் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் Government, school நடத்துகிறது. அதுமாதிரி எவனும் இல்லை என்றாலும், Government factory-ல் நாம் போய்ச் சேரவேண்டும். முதலிலே, இதிலே இலாப நோக்கம் பார்க்கக்கூடாது. தொழிலாளிகளுக்கு service mentality வேண்டும். மக்களுக்கு வேலை கிடைக்கவேண்டும். அதுதான் main. சரி, இந்தத் துறையிலேயிருந்து எடுத்துக் கொண்டீர்கள்; ஆனால், நான் ஒன்று கேட்கிறேன்; இருக்கிற துறையிலேயிருந்து விலகிக் கொள்கிறீர்கள். நல்ல எஞ்சியுள்ள, இலாபமான தொழில்களிலேயிருந்து—என்ன சொல்கிறார்கள்? ஓய்வு பெறும் திட்டம் ஒன்றை அறிவிக்கிறோம்; Labourers எல்லாம் போகலாம் என்று சொல்லி விட்டீர்கள் நான்கு பேருக்குள்ளேயே. இருக்கிற துறையையும் விடுகிறீர்களா? எவனாவது கொண்டுவந்து இங்கே factory போடுகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அதையும் விடமாட்டேன் என்று சொல்கிறீர்கள்.

பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி, 'The Hindu'-ல் ஒரு article. 'Need for transparent environment norms' என்று Opinion பகுதியில், Belliappa என்பவர் எழுதியிருக்கிறார். அவர் என்ன எழுதுகிறார் என்று சொன்னால், 'Reports in media indicate that Rs.500 crores Poly Vinyl Chloride Project sponsored by one of the Tamil Nadu's respected Industrial houses is being shifted to Andhra Pradesh.'

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தத் திட்டத்தைக் குறிப்பிடுகிறார் என்பது பற்றி எனக்குத் தெரியும். இதைப்பற்றி ஏற்கெனவே, வேண்டுமென்றே ஓர் ஆங்கில நாளேட்டில் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற திட்டத்தால் நிலத்தடி நீர் மாசுபடும். அந்தப் பகுதியில் உள்ள பல கிராமங்களுக்கு வழங்கப்படுகின்ற குடிநீர் பாதிக்கப்படும் என்பதால்தான், தமிழக அரசு இதற்கு அனுமதி வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த Poly Vinyl Chloride Factory-யைப் பொறுத்தவரைக்கும், ground water-ஐ pollute பண்ணி, விவசாயத்தையே பாதித்துவிடும் என்கிற காரணத்தால், எந்தப் பகுதியிலே கொண்டுவர இருந்தார்களோ அந்தப் பகுதிகளைச் சேர்ந்த உழவர்களே போராட்டத்தில் ஈடுபட்டு அதைத் தடுத்தார்கள். அதன் காரணமாகத்தான் அவர்கள் பிற மாநிலத்திற்குச் செல்ல வேண்டுமென்று முயற்சியில் ஈடுபட்டார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** ஆந்திராவில் நிலத்தடி நீர் மாசுபடாதா?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அவர்களுடைய விளக்கத்தைச் சொல்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. நான் கேட்டதற்கு விளக்கம் சொன்னார்கள். அதில் ஒன்றும் குறையில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் ஆந்திராவில் நிலத்தடி நீர் மாசுபடாதா என்று கேட்கிறார். அதைப்பற்றி ஆந்திர அரசு கவலைப்படவேண்டும்.

**திரு. துரைமுருகன்:** அதிலே அடுத்து சொல்கிறார்கள். Official sources in State Government has reported in the Press "Economic Daily" January 9th "the project did not take off mainly due to delay in giving a 'No Objection Certificate' from Tamil Nadu Pollution Control Board" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Pollution Control Board—தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்—இத்தகைய Project Reports-ஐ ஆய்வு செய்கிறது; இத்தகைய proposals-ஐ ஆய்வு செய்கிறது. மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆய்வு செய்து இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் அந்தப் பகுதியிலுள்ள நிலத்தடி நீர் பாதிக்கப்படும். பல கிராமங்கள் பாதிக்கப்படும் என்று கண்டதனால்தான், அவர்கள் 'No Objection Certificate' கொடுக்கவில்லை.



**திரு. துரைமுருகன்:** அடுத்து, கட்டுரையில் மேலும் சொல்லுகிறார்கள்;

'The State Boards could adopt more stringent ones, if necessary, but their dilution is not permitted. In respect of the case under discussion, the public have a right to know why the TNPCB has not given the NOC despite conducting a public hearing in June 2002 and what environment issues agitated the Board' என்று கேட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Public Enquiry நடத்தப்பட்டது. அந்தப் பகுதியில் உள்ள கிராமத்து மக்கள் எல்லாம் இந்தத் திட்டம் வருவதை எதிர்த்தார்கள், எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதனால்தான் 'No Objection Certificate' வழங்கப்படவில்லை.

**திரு. துரைமுருகன்:** ஆனால் ஆந்திராவிற்குப் போய்விட்டார்கள். வேறு இடத்தைக் காட்டியிருக்கலாம். இந்த இடத்திலே உங்களுக்குப் பிடிக்கவில்லை. இந்த இடத்திலே போடப்போகிறேன் என்கிறார்கள். pollution வருகிறது, வாங்க, இன்னொரு இடத்திற்கு என்று சொல்லியிருக்கலாம். ஆனால், பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையை ஆந்திராவில் இருக்கிற Secretaries அதிகாரிகள் வந்து இங்கே பார்த்து, நீங்கள் தமிழ்நாட்டில் ஏன் NOC-க்கு இப்படி கஷ்டப்படுகிறீர்கள், வாருங்கள் என்று அவர்களை இருகரம் பிடித்து அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள், நமக்கும் போய்விட்டது 500 கோடி ரூபாய்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 கோடி ரூபாய்தான் பெரிது என்று இந்த அரசு கருதவில்லை. தமிழக மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதுதான் இந்த அரசின் தலையாய கடமை என்று நாங்கள் கருதுகிறோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இதனால் நிலத்தடி நீர் முழுவதுமாகப் பாதிக்கப்படும், குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் என்பதால்தான் நாங்கள் தெரிந்தே இதற்கு அனுமதி வழங்கவில்லை. இந்தத் திட்டம் ஆந்திராவிற்குச் சென்றால், அதைப்பற்றி எங்களுக்குக் கவலையே இல்லை.

**திரு. துரைமுருகன்:** நான் அதில் மாறுபடவில்லை. ஒரு factory-யைக் கொண்டு வந்து, pollution வந்து, குடிநீரைக் கெடுத்து, ஊரைக் கெடுத்து, பயிரைக் கெடுத்து நாசம் ஆக்குவதை நான் விரும்பவில்லை.

ஏனென்றால், எங்கள் மாவட்டம் தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. நான் அதைச் சொல்லவில்லை. நீங்கள் வேறு ஒரு இடம் காண்பித்து இருக்கலாம் அவர்களுக்கு!

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை எங்கே அமல்படுத்தினாலும், அங்கே நிலத்தடி நீர் கெடும். அங்கே குடிநீர் பாதிக்கப்படும், விவசாயம் பாதிக்கப்படும். இந்தத் திட்டமே ஏற்புடைய திட்டமல்ல.

**திரு. துரைமுருகன்:** அடுத்து இன்னொன்று, இந்தியன் எக்ஸ்பிரசில் வந்தது. As a first step inspired by the success of its opinion in India, the world renowned Citizen Watch of Japan plant... அவர்கள் என்ன பண்ணிவிட்டார்கள். இங்கேதான் Headquarters- வைத்திருந்தார்கள். அவர்கள் இப்போது பெங்களூருக்கு மாற்றிக்கொண்டு போய்விட்டார்கள். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒவ்வொன்றும் நம் ஊருக்குப் வருவது, இங்கிருந்து இல்லாமல், இன்னொரு ஊருக்குப் போய்க்கொண்டிருக்கும்போது, இன்னொரு *10* பேருக்கு வேலை கிடைப்பதுகூட நின்று போகிற ஒரு சூழ்நிலை உருவாகிப் போகிறது. ஆகையினால், தொழில் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

*பிற்பகல் 12-55*

அடுத்து, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கடனைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கடனை வாங்குவதைப்பற்றி ஒரு கதை சொல்லியிருக்கிறார்கள். இப்போதெல்லாம் கதை சொல்கின்ற சீசன். அவர் ஒரு கதை விட்டிருக்கிறார். என்ன கதை என்றால், ஒரு குடும்பத்திலே கடன் வாங்குகிறோம். கொஞ்சம் மீத்து வைக்கிறோம், சைக்கிள் வாங்கப் போகிறோம், மோட்டார் சைக்கிள் வாங்கப்போகிறோம், கொஞ்சம் பணம் போடப்போகிறோம், அதெல்லாம் ரைட். இந்தக் கதையில் என்ன சொல்கிறார் என்று கேட்டீர்களானால், குடும்பத்தில் திருப்பிச் செலுத்தும் திறனைக் கருத்தில் கொண்டு கடனை வாங்க வேண்டும். கடன்கள், ஆதாயம் தரக்கூடிய வகையிலான மூலதனங்களுக்கு மட்டுமே பயன்படவேண்டும். Repaying capacity-யோடு இருக்க வேண்டும் என்று சொல்கிறார். இங்கே நம்முடைய பாலு அவர்கள்கூட படித்தார்கள். சாலைத் திட்டத்திற்கு World Bank- லேயிருந்து இவ்வளவு,



இவ்வளவு கோடி, கிட்டத்தட்ட ஒரு *10* ஆயிரம், *15* ஆயிரம் கோடிக்கு வாங்குகிறார்கள் என்று. நான் அதையெல்லாம் படிக்க விரும்பவில்லை. அதுமட்டுமல்லாமல், A.D.B.-யிலே வாங்குகிறோம்; ஜப்பானிலே வாங்குகிறோம்; நபார்டிலே வாங்குகிறோம். இதையெல்லாம் சேர்த்தால், ஒரு *20* ஆயிரம் கோடி ரூபாய் வரும். World Bank-லே பணம் வாங்குவது தப்பில்லை. ஆனால், World Bank சொல்வதையெல்லாம் செய்வது இருக்கிறதே, அது தப்பு. அவர்கள் போடுகிற Conditions தான்—எனக்குத் தெரியும். இவ்வளவு பேர், மின்சாரத்திற்கு கேட்கிறார்களே, எனக்குத் தெரியும். முதலமைச்சர் துணிச்சலாக இருந்து; நீடிக்கும்; இந்த மின்சாரம் இலவசமாக; அத்தனை பேருக்கும், அப்படியென்று சொல்வார்கள். ஆனால், சொல்ல முடியாது. ஏனென்று கேட்டால், அவன் மேலே உட்கார்ந்து கொண்டிருக்கிறான். நீங்கள் மின்சாரத்திற்கு வரி போடவில்லையென்றால், காசு கொடுக்கமாட்டேன்; Bus charge ஏற்றவில்லையென்றால், காசு கொடுக்கமாட்டேன் (குறுக்கீடு) கடன் கொடுக்கமாட்டேன்; கடன் கொடுக்கமாட்டேன்; கடன் கொடுக்கமாட்டேன். நாங்கள் அப்போது திருப்பிக் கேட்டோம், யோவ், நீ பணம் கொடுக்கிறாய்; வட்டியோடு திருப்பி வாங்கப் போகிறாய்; உன்னிடம் நான் எதற்காக வாங்குகிறேன்?ஒரு சேட்டுகிட்ட பணம் வாங்குகிறோம்; ஒரு பத்தாயிரம் ரூபாய் கொடு, பெண்ணின் கல்யாணத்திற்கு என்று. அதே பணத்தைக் கொடுத்துவிட்டு, கல்யாணத்திற்கு வந்தால், வாழ்த்திவிட்டுப் போக வேண்டுமே தவிர, பெண்ணின் கழுத்தில் நீ தாலி கட்டக்கூடாது; உன் கழுத்திலேதான் பெண் தாலி கட்டவேண்டுமென்றால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துரைமுருகன் சொல்கிற கதை. *(சிரிப்பு)*

**திரு. துரைமுருகன்:** உங்களுக்கு அங்கே உட்கார்ந்துகொண்டு கதை சொல்ல முடியவில்லை. இல்லையென்றால், ரொம்ப கதை விடுவீர்கள். *(சிரிப்பு)* என்ன என்றால், சேட் சொன்னால், நாம் என்ன சொல்வோம்; யோவ், பணம் கொடுத்தால், வாங்கிக் கொண்டு போய்யா, பெண் கழுத்தில் நான்தான் தாலி கட்டுவேன். அவள் என் கழுத்தில் கட்டவேண்டுமென்றால், நீ யார் ஐயா அதைக் கேட்பதற்கு என்று கேட்போமா, இல்லையா? சாப்பாடு போடும்போது, இலையிலே போடக்கூடாது, தட்டிலே போடவேண்டும், அப்படிச் சொன்னால்,

வட்டியோடு வாங்கிக்கொண்டு வெளியே போடா என்போம். ஆனால், அவனைச் சொல்ல முடியவில்லை. ஏன்? உலக வங்கி அப்படித்தான் சொல்கிறான். இவ்வளவு பேர் வேலை செய்யக்கூடாது; நபார்டிலே வைக்கக்கூடாது; இப்படியெல்லோரும் போட்டு வாங்குகிறான். அவன் condition-ஐ நாம் ஒத்துக்கொள்ளக் கூடாது. ஆனால், யார் மேலே condition போடுகிறான் தெரியுமா? நான் நிதியமைச்சருடைய கஷ்டத்தை உணருகிறேன். எப்படி அவர்கள் பேசுவார்கள் என்று தெரியும். நான் ஐந்து வருடம் அவர்களோடு மாரடித்திருக்கிறேன். ஆனால், துருக்கியிலே பணம் கொடுக்கிறார்கள், World Bank அங்கு இப்படியெல்லாம் பேசுவது கிடையாது. மெக்சிகோவிலே பணம் கொடுத்திருக்கிறார்கள். அந்த மெக்சிகோவிலே இந்தமாதிரி திட்டங்களெல்லாம் கிடையாது. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று நம்மை மட்டும் condition, condition, condition என்று போட்டுக் கொண்டிருந்தால், அதற்காக நாம் யார்மேலே வண்டி ஏற்றுகிறோம்?...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு நேரடியாக உலக வங்கியோடு தொடர்பு கொண்டு கடனை வாங்க முடியாது. ஐந்தாண்டு காலம் அவர்களுடன் போராடிய உங்களுக்கு அது புரியாத ஒன்று அல்ல. ஆனால், உலக வங்கியோடு பேசுவது, உலக வங்கியோடு ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவது, அவர்களுடைய conditions ஏற்புடையதா, இல்லையா என்று முடிவு செய்வதெல்லாம் மத்திய அரசாங்கம். இவ்வளவு காலம் எப்படியிருந்தாலும், இப்பொழுது டெல்லியிலே உங்களுடைய கூட்டாட்சிதானே இருக்கிறது. உலக வங்கியினுடைய சரத்துக்களையெல்லாம் மாற்றி, அந்த conditions-ஐ எல்லாம் நீக்கி, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் conditions இல்லாத, உலக வங்கியின் கடனைப் பெற்றுத்தர, டெல்லியிலே மக்களின் வாக்குகளைப் பெற்று, எம்.பி.க்களாகி, மந்திரிகளாக இருக்கிற உங்கள் மந்திரிகள் மூலமாக, அதை நீங்கள் செய்து கொடுப்பதற்கு முயற்சி செய்வீர்களா?

**திரு. துரைமுருகன்:** இதிலே கட்சி வித்தியாசம் கிடையாது. ஒன்று வைத்துக் கொள்ளுங்கள். Economic Affairs Minister-க்கு நான் அப்பொழுது Letter எழுதி இருக்கிறேன். நான் போய்ச் சொல்லிவிட்டு வந்தேன். இந்த மாதிரி வெத்து conditions-ஐ எல்லாம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது இவர்களுக்குத் தேவையில்லை.



நீங்கள் Central Government-தான் இவர்களுக்கு instructions கொடுக்க வேண்டும். ஏனென்றால், உங்களை நம்பித்தான் அவர்கள் கடன் கொடுக்கிறார்கள். ஜாமீன் நீங்கள்தான் போடுகிறீர்கள். அதனால், நீங்கள் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டு, அன்றைக்கு Finance Minister-ஐப் பார்த்து நான் சொன்னேன்; Economic Affairs Minister-ஐப் பார்த்துச் சொன்னேன்; Secretary வரைக்கும் போய்ப் பேசிவிட்டு வந்திருக்கிறேன். ஆகையினாலே, இதில் நீங்கள் ஒன்றும் பண்ணமுடியாது. ஒரு fight கொடுக்கலாம். கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை எடுத்துச்சொல்கிறேன். மூன்றாவதாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முக்கால் மணி நேரம் ஆகிறது. இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

**திரு. துரைமுருகன்:** நீங்கள் இப்பொழுது சொன்னாலும்கூட, நான் உட்கார்ந்து விடுகிறேன், சார். நான் most obedient student. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள். எவ்வளவு நேரம் ஆகும் என்றுதான் கேட்டேன்.

**திரு. துரைமுருகன்:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு நேரம் ஆகும் என்று கேட்டால், அதற்கு ஏன் உணர்ச்சிவசப்படுகிறீர்கள்? (குறுக்கீடு) எவ்வளவு நேரம் வேண்டும்?

**திரு. துரைமுருகன்:** முடித்து விடுகிறேன்.

தி.மு.க. ஆட்சியில், உணவு மானியத்திற்காக, ரூ.1,540 கோடி ஒதுக்கப்பட்டது. கடந்த வருடம் நீங்களும் ரூ.1,240 கோடி ஒதுக்கியிருந்தீர்கள். இப்பொழுது எல்லாம் குறைத்து விட்டு, 600 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அப்படியானால் என்ன செய்யப் போகிறீர்கள்? எப்படியென்றால் Finance Minister என்ன சொல்வார் என்றால், எங்களுக்கு மத்திய சர்க்கார் கொடுக்கிற அரிசி விலை குறைந்து போய்விட்டது; ஆகையினாலே, நாங்கள் இது போதும் என்று சொல்கிறோம்; well and good. அப்படியானால், மத்திய அரசாங்கம் கொடுக்கிற அரிசி விலை குறைந்துபோன காரணத்தால், இந்த 3.50 ரூபாய்க்கு கொடுத்த அரிசியை 6 ரூபாய்க்கு ஆக்கினீர்களல்லவா? அதை 3.50 ரூபாயாக ஆக்கிவிடுங்கள். அதுதானே மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும். விடமாட்டார் Finance Secretary உங்களை. ஏனென்றால் எங்களுக்கும் தெரியும்.

பிற்பகல் 1-00

அடுத்து, இன்னொன்றை சொல்லி விடுகிறேன். இந்த இடத்திலே எல்லோரும் மின்சாரத்தைப் பற்றிப் பேசினார்கள். நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆனால், திருப்பி, திருப்பி, விடிய விடியப் பேசினாலும் அதுதான் result அதிலேயிருந்து நான் மாறுபடவில்லை. ஆனால், நான் ஒன்று கேட்கிறேன். உங்களுக்குத் தெரியும், அண்ணா ஒரு முறை பேசினார். இந்தி, இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக வேண்டுமென்று பேசியவர்கள் எத்தனையோ சட்ட நுணுக்கங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இவ்வளவு population இந்தச் சட்டம் அதைச் சொல்கிறது, constitution சொல்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். சொன்னவர் யசோதரா ரெட்டி என்பவர்; ஆந்திர மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பாராளுமன்றத்திலே இருந்தவர்; அவர்கள் அப்படிச் சொன்னார்கள். நான் மேலே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன். பேசி இருக்கிறார்; யசோதரா ரெட்டி, காங்கிரசைச் சேர்ந்தவர். அவர் சொன்னார்; அந்த யசோதரா ரெட்டி எழுந்து நின்று அப்படிச் சொன்னபோது, "கனம், சபாநாயகர் அவர்களே, எத்தனையோ சட்டங்களையெல்லாம் காட்டுகிறார்கள்; சட்ட நுணுக்கங்களையும் சொல்கிறார்கள்; ஜனத்தொகையைச் சொல்கிறார்கள்; உலக நாடுகளையெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், நான் அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. அதற்கு மேலே இருக்கிற உணர்வின் அடிப்படையிலே பேசுகிறேன்" என்று சொல்லிவிட்டு, சுற்றி இருக்கிற அந்த மண்டபத்திலே, இரு கையையும் கூப்பி, மேலே தூக்கிக்கொண்டு அண்ணா சொன்னார்; தலைக்கு மேலே தூக்கிக்கொண்டு கையெடுத்து கும்பிட்டுக் கும்பிட்டுக் கேட்டாராம். 'இந்தியாவைக் காப்பாற்றுங்கள்; இந்தியாவைக் காப்பாற்றுங்கள்' என்று.

நான் இப்போது கேட்கிறேன். நீங்கள் சொன்ன திட்டங்கள் எல்லாம் இருக்கட்டும்-அத்தனை விவசாயிகளுக்கும்—காரணம், நான் விவசாயியின் மகனாக இருந்தவன். இந்த இலவச மின்சாரம் தொடுக்கிறபொழுது, இந்தத் துறையை நான் கையிலே வைத்திருந்தவன். நான் சாதாரண கிராமத்துப் பையன்; ஏர் ஓட்டியவன்; மிகுந்த கஷ்டம். current bill கட்டுவது எவ்வளவு கஷ்டம் என்பது தெரியும். அதனால்தான் நான் வெளிப்படையாக அந்த உணர்வோடு சொல்கிறேன். இந்த பில்லிலே கையெழுத்துப் போடுகிறபோது, முருகராஜ் அப்போது Secretary இருந்தார். அவர் அந்தக் கோப்பினைக் கொண்டு வந்து வைத்து, இதிலே கையெழுத்துப் போடுங்கள், இலவச மின்சாரக் கோப்பு என்றார். அப்போது நான் அழுதேன். ஏன் சார் அழுகிறீர்கள் என்று கேட்டார். ஒரு விவசாயி மகன் எங்கள் வீட்டில் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்று தெரியும். (குறுக்கீடுகள்) நான் கேலிக்குச் சொல்லவில்லை. நீங்களும் விவசாயிகள்தான். ஐயா, என்னுடைய sentiment-ஐப் புரிந்துகொள்ளவில்லையென்றால் அது வேறு. ஆனால், அந்த விவசாயினுடைய மகனாகப் பிறந்த நான், இனிமேல் எந்த விவசாயியும் current bill கட்ட, தேவையில்லை என்று கையெழுத்துப் போடுகின்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறதே இதுபோதும் என்று சொன்னேன். அந்த உணர்வோடுதான் நான் தெரிவித்துக்கொள்கிறேன், இன்றைக்கு அத்தனை விவசாயிகளுக்கும், இலவச மின்சாரத்தைக் கொடுத்தவர் கலைஞர். வருங்காலத்திலே, நான் முதலமைச்சரைக் கேட்கிறேன்....



**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அத்தனை விவசாயிகளுக்கும், இலவச மின்சாரத்தைக் கொடுத்தவர் கலைஞர். ஆனால் அதை எடுத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா என்ற பெயர் வரலாற்றிலே வந்துவிடுமே என்ற காரணத்தினாலே குறிப்பிடுகிறேன், அத்தனை விவசாயிகளின் சார்பாகக் கேட்கிறேன், கோடானுகோடி விவசாயிகள் சார்பாகக் கேட்கிறேன். (உறுப்பினர் இரு கரங்களையும் கூப்பி, தலைக்கு மேல் உயர்த்தியவாறு நான்கு பக்கமும் திரும்பி வணங்கினார்) அத்தனை விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத்தைக் கொடுங்கள், கொடுங்கள், கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இன்னொன்றையும் சொல்கிறேன். முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். கற்பனையைப் பற்றிப் பேசாதீர்கள் என்று. தலைமைச் செயலகத்தை, லேடி வெலிங்டன், குயின் மேரிஸ் கல்லூரிக்கு மாற்றுவது பற்றி. நேற்றைக்கு நம்முடைய நிதியமைச்சர் இந்தக் கட்டடம் இடிந்து விழுகிறது என்றார். நான் கேட்கிறேன், இது தருமமல்ல. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்கு ஒப்பாகும். சொன்னான், வள்ளுவன். சொல்லி விட்டேன் உங்களுக்கு ஏற்பதும், ஏற்காததும் உங்கள் விருப்பம் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையை பிற்பகலிலே வைத்துக்கொள்ளலாம் என வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *4-00 மணிக்கா அல்லது 4½ மணிக்கா?*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *4-00 மணிக்கு.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும். நன்றி, வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4-00 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில், பேரவை மீண்டும் கூடியது.*

## 2. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம் நிறைவுற்றது. பதிலுரை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதியை நிலைநிறுத்தி, தமிழக மக்களினுடைய இதயங்களைக் கவர்ந்து, மீண்டும் முதலமைச்சர் பொறுப்பினையேற்று, ஐந்து இடைத் தேர்தல்களிலும் அமோக வெற்றியினைப் பெற்று, தமிழ்நாட்டு மக்களினுடைய ஒட்டுமொத்த நலனுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, இரவு பகல் என்று பாராமல் தொண்டாற்றி வருகிறார்கள் தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். இதை நாடு அறியும். அனைத்துத் துறைகளையும் சீர்தூக்கி, தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படும் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக, வகுத்திட்ட உன்னதத் திட்டங்களின் காரணமாக, அவற்றின் பிரதிபலிப்பாக அமைந்த



2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை இம்மாமன்றத்தில் அளிக்கவும், அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டு, அதற்குப் பதிலுரை அளிக்கவும் வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியினை முதற்கண் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரைக்கும், நலிவுற்றிருக்கின்ற பொருளாதாரம், செம்மையடைய வேண்டும், ஏழையெளிய உய்வினையடைய வேண்டும் என்பதற்காக, மக்களினுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்காக, தொலைநோக்குச் சிந்தனையோடு சீரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதை நாடு அறியும். அந்தத் தகுதியும், திறனும் நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களிடம் உண்டு.

'உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால், உங்களால் ஆகாதது ஒன்றுமே இல்லை' என்று விவேகானந்தர் சொன்னார். 'நீங்கள் தன்னலத்தைத் துறந்தவரா? அப்படியானால், உங்களை எதிர்க்கின்ற சக்தி, உலகில் எதுவுமே இல்லை.' இதுவும் விவேகானந்தரே சொன்னது. மாண்புமிகு அம்மா அவர்களிடம் அன்பு இருக்கிறது. அதனால், அவரால் ஆகாதது ஒன்றுமே இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னலம் இல்லாதவர். தன்னைத் தமிழ்நாட்டு மக்களினுடைய நலனுக்காக அர்ப்பணித்துக் கொண்டு, இந்த நாட்டுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைக்கின்ற உன்னதத் தலைவி. எனவே, அவரை எதிர்க்கும் சக்தி, இங்கு எதுவுமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், தமிழகத்தினுடைய நிதிநிலை இருக்கின்ற அந்த ஒரு சூழ்நிலையைப் பார்த்து மனம் கலங்கினார்கள். கண் துஞ்சாமல், பசி நோக்காது, மெய்வருத்தம் பாராது, எப்படியும் தமிழகத்தைப் பொருளாதார ரீதியாக தலைநிமிரச் செய்ய வேண்டும் என்று, ஒரு நாளைக்கு 18 மணி நேரத்திற்கு மேலாக உழைத்து வருகிறார்கள். எந்தத் துறையாக இருந்தாலும், அவர்கள் பொறுப்பேற்றிருக்கின்ற துறையாக இருந்தாலும் சரி, நிதித் துறையாக இருந்தாலும் சரி, Planning and Development-ஆக இருந்தாலும் சரி, அனைத்துத் துறைகளையும், அந்தத் துறைகளிலே இத்தனை ஆண்டுக்காலமாக நடைமுறையில் இருந்து வருகின்ற செயல்பாடுகள்

என்ன; அவற்றில் கண்ணுற்ற குறைபாடுகள் என்ன; எப்படி அவற்றைக் களைவது; தீட்டுகின்ற திட்டங்கள் எல்லாம் மக்களைச் சென்று அடைகின்றனவா; அடித்தளத்து மக்களுக்கு அந்தத் திட்டங்களின் பலன் சென்று சேர்கின்றனவா; இல்லையென்றால் எப்படி அதை மாற்றியமைப்பது; இதுபோன்ற சிந்தனையில் ஒவ்வொரு துறையினுடைய தலைவர்களையும், அதனுடைய செயலாளர்களையும், துறை தொடர்பு அமைச்சர்களையும் அன்றாடம் அழைத்து, கேள்வி மேல் கேள்வி கேட்டு, வினாவைக் கண்டறிந்து, குறைகளைக் களைந்து நாட்டிலே ஒரு புதிய மறுமலர்ச்சியை செயல் வடிவில் கொண்டுவர வேண்டுமென்ற துடிப்போடு மாண்புமிகு அம்மா அவர்கள் உழைத்து வருகின்ற பாங்கை நாங்கள் கண்ணாரக் கண்டு, நெஞ்சாரப் பாராட்டி மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 1-05*

இந்த நிலையில்தான் இந்த நிதிநிலை அறிக்கை—இது மூன்றாவது முறையாக நாங்கள் தாக்கல் செய்கின்ற நிதிநிலை அறிக்கை. பல்வேறு இன்னல்களுக்கும் இடர்பாடுகளுக்கும் இடையே குறைகளைக் களைந்து எந்த அளவுக்கு மக்களுக்கு ஆக்கத்தைத் தர முடியும் என்ற நோக்கோடு உருவாக்கப்பட்டு இருக்கிறது. நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

"அவனுக்கென்ன தூங்கிவிட்டான்;
அகப்பட்டவன் நானல்லவா."

என்ற அந்தப் பாடல் உங்கள் அனைவருக்கும் தெரியும். நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால்—நான் கடந்த கால நிதி நிர்வாகத்தை குறை சொல்கிறேனே அடிக்கடி என்று அவை உறுப்பினர்கள் வருத்தப்படக்கூடாது—நிதி நிர்வாகத்தில் அக்கறை போதிய அளவு செலுத்தப்படாத காரணத்தால் தமிழகத்தினுடைய வளர்ச்சித் திட்டங்கள் தூங்கின; ஏழை மக்களினுடைய வாழ்வில் இருள் சூழ்ந்த ஒருநிலை உருவாக்கப்பட்டது. இவற்றை மாற்றி அமைக்க வேண்டும், மக்களுக்கு ஒரு நல்ல மலர்ச்சியினை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்ட நடவடிக்கைகளை தானே அக்கறையோடு முன்நின்று வடித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோதுகூட சொன்னார்; முதலமைச்சரினுடைய பங்கை இந்த



நிதிநிலை அறிக்கையை உருவாக்குவதில் குறிப்பிடப்பட்டுள்ளதை அவர் சுட்டிக் காட்டினார். அது யதார்த்தமான உண்மை.

சில மாநிலங்களில் சில முதலமைச்சர்களுக்கு அனைத்துத் துறை ஞானமும் இல்லாமல் இருக்கலாம்; நிதித் துறை ஞானம் என்ன என்பது அவர்களுக்கு கேள்விக்குறியாக இருக்கலாம். ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் அதற்கெல்லாம் விதிவிலக்கு. நான் காலையிலேயே சொன்னதைப் போல, எந்த ஒரு சப்ஜெக்ட்டை எடுத்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் she gets fully involved in such subject—நீங்கள் ஆச்சரியப்பட வேண்டும்; The remembrance faculty of our Hon. Chief Minister is something superb and praiseworthy. Photographic memory என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதுபோல, எதையும் ஒருமுறை செவிமடுத்தால், ஒருமுறை படித்துவிட்டால், அது எத்துணை சிரமமான சப்ஜெக்ட்டாக இருந்தாலும் அதை நினைவில் வைத்து, எவ்வளவு காலம் கழித்துக் கேட்டாலும் அதை நினைவுகூர்ந்து சொல்லக்கூடிய அளப்பரிய ஆற்றலை இறைவன் அம்மா அவர்களுக்குத் தந்திருக்கிறான். (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை பெரியார் அவர்களுடனும், பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்களுடனும், புரட்சித் தலைவர் அவர்களுடனும். அம்மா அவர்களுடனும் பழகுகிற வாய்ப்பைப் பெற்றவன் நான். உண்மையிலேயே அரசியல் உணர்வுகளுக்கு அப்பால் நின்று, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அளப்பரிய திறனை, யாராக இருந்தாலும் பாராட்ட வேண்டும். அது இறைவனுக்கு நாம் செலுத்துகிற உண்மையான மரியாதை என்றுகூட எண்ணக்கூடிய அளவிற்கு அத்துணை சிறப்புத் தகுதிகளை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். எனவேதான், நான் காலையிலேயே சொன்னேன்; இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்குவதற்கு அம்மாவினுடைய பங்கு, அளப்பரிய பங்கு.

*பிற்பகல் 1-10*

சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகளாக நடைமுறையில் சமைக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் ஏழை எளிய மக்களினுடைய நலனைப் பேணிக் காக்கின்றனவா, இல்லையா என்பதனை அறிந்தாக வேண்டும். இந்த அணுகுமுறையை மாண்புமிகு அம்மா அவர்கள்

மேற்கொண்டிருக்கிறார்கள். மக்கள்தொகை அதிகமாக இருக்கிற இந்தியத் துணைக் கண்டத்தில், வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே வாழ்கிற மக்கள் அதிகமாக இருக்கின்ற இந்தியத் துணைக் கண்டத்தில், கிராமப்புற பொருளாதாரத்தில், ஒட்டுமொத்த பொருளாதாரத்தில், கிட்டத்தட்ட சராசரி 65-லிருந்து 70 சதவீதமாகக் கொண்டு இயங்குகிற நமது நாட்டினுடைய பொருளாதாரத்தில், இதுகாறும் நடைமுறைபடுத்தப்பட்ட திட்டங்கள் எல்லாம், அந்தப் பயனாளிகளுக்கு, கிராமப்புற மக்களுக்குச் சென்று சேர்ந்தனவா என்பதை, அந்தத் திட்டங்கள், திட்டங்களினுடைய குறைபாடுகள், மக்களுடைய வாழ்க்கை நிலை இன்று என்ன என்பதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து, அப்படி இல்லையே, இந்த வேதனை நிலையைக் களைய வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டுமென சிந்தித்து, பலருடனும் கலந்து ஆய்வு நடாத்தி, அதற்கேற்ற முறையில்தான் இந்த நிதிநிலை அறிக்கையை ஒரு Growth-oriented budget-ஆக உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்து, அதற்காக பல நாட்கள் சிந்தித்து, விவாதித்து உருவாக்கிய நிதிநிலை அறிக்கைதான் இந்த நிதிநிலை அறிக்கை.

ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாம் 2001 ஆம் ஆண்டு மே மாதம் பதவி ஏற்றபோது, தாங்க முடியாத அளவுக்கு வருவாய்ப் பற்றாக்குறையும், நிதிப் பற்றாக்குறையும் இருந்து வந்தது. இது எல்லோரும் அறிந்த ஒன்று. இது வளர்ச்சித் திட்டங்களை, வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய, வறுமை என்ற நிலையை மாற்றக்கூடிய 21 சதவீதத்திற்கு மேல் இருக்கின்ற B.P.L. நிலையை மாற்றக்கூடிய திட்டங்களை எல்லாம் சீர்குலைக்கக்கூடிய ஓர் அபாய கட்டத்தில் அமைந்திருந்தது. இந்த நிலையில் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த நிலையை மாற்றி, ஓர் ஆரோக்கிய நிலையை உருவாக்குவதற்காக சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு, நடைமுறையில் உள்ள பிரச்சினைகள், பிரச்சினைகளின் ஆழம் இவற்றை ஆய்ந்து, அதற்கேற்ப இந்த முடிவுக்கு வந்தார்கள்.

இதன்காரணமாகத்தான் 2003-2004 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை தமிழகத்தின் பொருளாதார மற்றும் நிதிநிலையில் ஒரு திருப்புமுனையாக அமையும் நோக்கோடு உருவாக்கப்பட்டு இருக்கிறது. 1996—2001 ஆம் ஆண்டில் இருந்து வந்த வளர்ச்சியற்ற நிதி நெருக்கடி, அப்படி அந்த நிலையை மாற்றி வளர்ச்சிக்கு வித்திடும் நிதிநிலை



அறிக்கையை, தமிழகத்தை இந்தியாவினுடைய ஒரு முதல் மாநிலமாக உருவாக்கக்கூடிய அளவுக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் அமைய வேண்டுமென்று எண்ணினார்கள். அப்படி உருவாக்கப்பட்ட இந்தத் திட்டங்கள், இதை வெளிப்படுத்திய நிதிநிலை அறிக்கையை பொது மக்களும் மற்றும் பலரும் பாராட்டி இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

The Economic Times, dated, 22-3-2003 and 23-3-2003 இந்த வரவு-செலவுத் திட்டத்தை, அடுத்த தலைமுறையினருக்கும் ஏற்ற வகையில் உள்ளது எனப் பாராட்டி உள்ளது. Tamil Nadu-development on a mission mode என்று அதை வர்ணித்திருக்கிறது. Tamil Nadu Budget for 2003-2004 shows the spotlight on Chennai, the darling city for global out-sourcing என பாராட்டி இருக்கிறது. Reforming Tamil Nadu attracts the World Bank என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறது. There is a positive reaction for the budget of Tamil Nadu என்றும் கூறி இருக்கிறது.

பிற்பகல் 4-15

அதுமட்டுமல்ல, ஒரு நிதிநிலை அறிக்கை, வளர்ச்சித் திட்டத்திற்கு உறுதுணையாக இருக்கிறதா என்பதுதான் முக்கியமான பிரச்சினை. ஒரு நாட்டினுடைய வளர்ச்சி, முதலீட்டை பொறுத்து அமைகிறது. முதலீடு, அரசு மூலமான முதலீடு, தனியார் துறை மூலமான முதலீடு, இப்படி இருவித முதலீட்டில் அரசினுடைய பங்கு என்ன என்பது ஒன்று. அரசே எல்லா முதலீடுகளையும் நடைமுறையில் கொண்டு வந்து வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க முடியுமா என்றால், மக்கள்தொகை மிக்க இருக்கிற எந்தவொரு நாட்டிலும், G.D.P. என்று சொல்லக்கூடிய அந்தப் பொருளாதார வளர்ச்சி தொய்வு நிலையில் இருக்கிற எந்தவொரு நாட்டிலும், Technical, தொழில்நுட்பம் வாய்ந்த அணுகுமுறைகளை மேற்கொள்ளாத முதன்மைத் துறையான primary sector என்று சொல்லக்கூடிய உழவுத் துறை இருக்கிற எந்த நாட்டிலும் அரசுத் துறை மூலம் மட்டுமே நாம் ஓர் உயர்வினை உருவாக்க முடியாது. காரணம், primary sector நல்லமுறையில் இருந்தால்தான் there would be adequate consumption in a society. அப்படி primary sector நல்லமுறையில் இருந்தால்தான், secondary sector என்று சொல்லக்கூடிய தொழில் துறையிலும், வளர்ச்சி மிக்க இருக்கும். ஆனால், சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தீட்டப்பட்ட திட்டங்கள் எல்லாம், secondary sector-க்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டு, அந்த secondary sector

என்று சொல்லக்கூடிய தொழில் துறையிலும்கூட, கோடிக்கணக்கான ரூபாயை போட்டு செய்யக்கூடிய பெரும் தொழிலுக்கு முக்கியத்துவம் தந்து, மேல்நாடுகளைப் போன்ற பொருளாதாரக் கொள்கையை நாம் கடைபிடித்த காரணத்தால் இந்தியப் பொருளாதாரம், 55 ஆண்டு கால சுதந்திர இந்தியாவில் சீரழிவுக்குத் தள்ளப்பட்டுவிட்டது என்று Mckenzie & Company சொல்கிறது. அதைப்போல Arthur & Anderson என்ற உலக அமைப்பு சொல்கிறது. ஆய்வினை நடத்தி அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

சீன நாட்டைப் பொறுத்தவரைக்கும் மக்கள்தொகை மிக்க இருக்கிற காரணத்தால், விவசாயம் பிரதானமாக இருக்கிற காரணத்தால், மக்களுக்கு ஏற்ற, ஏழை மக்களுக்கு ஏற்ற அந்த விவசாயத்திற்கும், சிறு தொழிலுக்கும், குறுந்தொழிலுக்கும், குடிசைத் தொழிலுக்கும் முக்கியத்துவம் தந்த பொருளாதாரத்தை அவர்கள் நடைமுறையில் கடைபிடித்த காரணத்தால், அங்கு, தனிநபர் வருமானம் அதிகமானது. ஒவ்வொரு குடும்பத்தினுடைய வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது என்ற நிலையை கடந்த 15, 20 ஆண்டுகளில் அவர்கள் மாற்றிக் காட்டியிருக்கிறார்கள்.

அதைப்போன்றே, மக்கள்தொகை அதிகமாக இருக்கிற நமது நாட்டிலே நாம் கிராமப்புறப் பொருளாதாரத்தைப் புறக்கணித்து விட்டோம். கிராமப்புறப் பொருளாதாரம் புறக்கணிக்கப்பட்டுவிட்ட காரணத்தால்தான், நகர்ப்புறத்திற்கும், கிராமத்திற்கும் இடையே இருக்கின்ற—the difference between urban and rural economy is very much என்ற முறையிலே, இந்திய பொருளாதாரம் சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. அதனை மாற்றி அமைக்கவேண்டுமென்ற நோக்கோடுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் கிராமப்புறத்தில் உள்ள 22.5 சதவீத மக்கள், வேலை செய்யக்கூடிய உடல் உரம் இருந்தும்கூட, வேலை கிடைக்காத நிலையில் இருக்கிறார்கள். வேலைவாய்ப்பு பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படி வேலைவாய்ப்பை அந்த மக்களுக்கு உருவாக்கித் தருகிறபோதுதான் வறுமை நீங்கக்கூடிய ஒரு நிலை உருவாகும், ஒட்டுமொத்த பொருளாதாரம் வளரும். ஒட்டுமொத்த பொருளாதாரம் வளர்ந்தால்தான் வாங்கும் சக்தி அதிகமாகும். வாங்கும் சக்தி அதிகமானால்தான் அரசுக்கு வருவாய் வரும். அரசுக்கு அதிக வருவாய் வந்தால்தான் வளர்ச்சித் திட்டங்களை நாம் நடைமுறையில் கொண்டு வர முடியும். இப்படி சுற்றிச் சுற்றி வருகின்ற இந்தப் பொருளாதாரச் சூழலைச் செம்மைப்படுத்துவதற்கு கிராமப்புற



பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்ற நோக்கோடுதான், மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தத் திட்டத்திலே விவசாயப் பொருளாதாரத்திற்கு அதிக முக்கியத்துவத்தைத் தரவேண்டும் என்று முடிவுக்கு வந்து அதற்கான அணுகுமுறைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். இதை எந்த அளவுக்கு எதிர்க் கட்சிகள் அல்லது அரசியலைச் சார்ந்தவர்கள், சுயநல ஆதாய உணர்வுகளோடு, அந்த அந்த இயக்கங்களை வளர்க்க வேண்டுமென்ற உணர்வோடு, அவரவர்களது கொள்கைகளை வெளியிடுவது என்பது ஒன்று. ஆனால் அரசியலுக்கு அப்பாற்பட்டு, நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கின்ற அமைப்புகள் பாராட்டுகிறபோது நடுநிலை உணர்வோடு அதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். FICCI-Federation of Indian Chamber of Commerce and Industry என்ற ஒரு அமைப்பு எந்த அளவிற்கு இந்த பட்ஜெட் ஒரு சிறந்த பட்ஜெட் என்று சொல்லி இருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

'Welcoming the budget the Southern Region Chairman of the Federation of Indian Chamber of Commerce and Industry says the Government has clearly displayed the intent to seriously manage the fiscal deficit. Similarly the transition to VAT is welcome' என்று கூறி இருக்கிறது.

அதைப்போலவே Confederation of Indian Chamber of Commerce and Industry termed the budget as development - oriented and welcomed the special thrust to the manufacturing sector. உற்பத்தித் துறைக்கு முக்கியத்துவத்தைத் தருகின்றபோதுதான் வேலைவாய்ப்பு அதிகமாகும், வருமானம் பெருகும் என்ற முறையிலே கடந்த பல ஆண்டுகளாக விடப்பட்டுவிட்ட, புறக்கணிக்கப்பட்டுவிட்ட அந்த அணுகுமுறையை மாற்றி constructive approach என்று சொல்லக்கூடிய ஆக்கபூர்வமான அணுகுமுறையை, பொருளாதாரப் பாதையை அமைக்கவேண்டும் என்ற முதல்வர் அவர்களுடைய திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கிற stress and thrust for manufacturing sector என்பதனை Confederation of Indian Industry பாராட்டி இருக்கிறது.

பிற்பகல் 4-20

Similarly, "the allocation of Rs. 250 crores to be utilised by the small scale industries for obtaining I.S.O. certification and setting up of research facilities are welcome" என்று கூறியிருக்கிறது.

அதைப்போலவே, Madras Chamber of Commerce and Industry termed the State Budget as pragmatic.

"Appreciating the fiscal deficit being reduced to around Rs. 250 crores and the turn around claimed by the Government in fiscal management and sourcing of funds from the World Bank, the Chamber has said, emphasis on road connectivity and infrastructure is also welcome." என்று சொல்லியிருக்கிறது.

காரணம்—Manufacturing Sector—அது விவசாயத் துறை—Primary Sector—விவசாயமாக இருந்தாலும் சரி அல்லது Manufacturing Sector-ஆக இருந்தாலும் சரி அல்லது I.T.—போன்ற Service Sector-ஆக இருந்தாலும் சரி, அதனுடைய வளர்ச்சிக்கு அடிப்படை வசதிகளினுடைய தரம் மிக முக்கியமான ஒன்று. அந்த அடிப்படையில்தான் Road Sector-க்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டுமென்று அதிகப்படியான நிதியினை, முக்கியத்துவத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் நாம் தந்திருக்கிறோம். இதை அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

அதைப்போலவே, terming the allocation of funds for technology upgradation of small scale industry is being welcomed by the Secretary, Small Industries and Business Entrepreneurs Association. சிறு தொழில்களுக்கு நாம் கொடுத்திருக்கின்ற அந்த ஊக்குவிப்பிற்கு அவர்கள் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அதைப்போன்று, கோவையிலே இருக்கின்ற அறிவுமிக்க, தொழில்நுட்பமிக்க அமைப்பான 'கொடிஷியா' என்ற அமைப்பு தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையை மிக வெகுவாகப் பாராட்டியிருக்கிறது. சிறு தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் தந்திருக்கிற பட்ஜெட், இந்த பட்ஜெட் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



அதைப்போலவே, 'Financial Express' என்ற ஏடு Tamil Nadu Budget proposals are pragmatic என்று சொல்லியிருக்கிறது. அதிலே குறிப்பாக, the South India Chamber of Commerce and Industry கூறுகிறபோது அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "The Budget aims not only at fiscal consolidation, but also to accelerate economic growth through an innovative multi-pronged approach. The increased allocation of funds to promote the primary sector, agriculture, infrastructure, tourism, etc. will further promote economic development in the State". என்று சொல்லிப் பாராட்டியிருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு துறையும், இந்த அமைப்புகள் எல்லாம்-Madras Chamber of Commerce and Industry இப்படியே பாராட்டியிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், அமைப்புகள், தொழில் துறையிலே இருக்கின்ற சிறு தொழில், குறுந்தொழில், Tiny Industries, Chamber of Commerce போன்ற அமைப்புகள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கை ஒரு growth-oriented-வளர்ச்சித் திட்டத்திற்கு வழிவகுக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை—எனப் பாராட்டி இருப்பதிலிருந்து, தொலைநோக்குச் சிந்தனையோடு அமைந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை மக்களுக்குப் பலவித ஆக்கப் பணிகளைச் செய்யக்கூடிய அளவுக்கு உறுதுணையாக நிற்கும் என்பதற்காக இதை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பொன்முடி அவர்கள் சிலவற்றைக் கூறினார். அவருடைய வாதம் அடிப்படை ஆதாரம் இல்லாத வாதமாக இருந்தது. அவருடைய வாதமானது, 2001-02 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறை 57.80 சதவீதமாகக் குறைக்கப்பட்டது; ஆனால் மறுபடியும் எங்கள் ஆட்சியில் 73 சதவீதம் உயர்ந்துள்ளது. இது அறிவார்ந்த செயலாகுமா என்ற வினாவை எழுப்பினார். அதற்கு நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மிகத் தெளிவாக பக்கம் 89-ல், கீழே உள்ள குறிப்பீடுகளை எடுத்துக்காட்டி விளக்கம் தந்தார்கள். 2000-01 மற்றும் 2001-02 ஆம் ஆண்டுகளில் மாநில அரசால் பல பட்டியல்களுக்கு நிதிப் பட்டுவாடா செய்ய இயலவில்லை என்றும், அத்தகைய நிலுவைத் தொகைகளை இந்த அரசு பெருவாரியாக அளித்துள்ளது என்றும், 2002-03 ஆம் ஆண்டில், 1962 கோடி ரூபாய் நீங்கலாக கணக்கைப் பார்த்தால் வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு

56.64 சதவீதத்திலிருந்து 19.12 சதவீதமாகக் குறைகின்றது என்றும் மிகத் தெளிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். ஆனால் இதனை டாக்டர் பொன்முடியார் என்ன காரணமோ தெரியவில்லை, புரியாமல் இருந்துவிட்டார்.

பிற்பகல் 4-25

1995-96-ல் அதாவது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியின்போது நிதிப் பற்றாக்குறையில், வருவாய்ப் பற்றாக்குறை..... (குறுக்கீடு) அப்புறம் Please. நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறை வெறும் 24.78 சதவீதம். (குறுக்கீடு) I am giving you important points for your attention.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியின்போது நிதிப் பற்றாக்குறையில் வருவாய்ப் பற்றாக்குறை 24.78 சதவீதமாக இருந்தது. இது நம்முடைய அதிகபட்ச அளவான 35 சதவீதத்தைவிட குறைவாகத்தான் இருந்தது. ஆனால், அதற்குப் பிறகு வந்த தி.மு.க. ஆட்சியில், இது கிடுகிடுவென 1996-97-ல் 45.15 சதவீதமாகவும், 1997-98-ல் 64.28 சதவீதமாகவும், 1998-99-ல் 71.93 சதவீதமாகவும் உயர்ந்தது. 1999-2000 ஆம் ஆண்டில் உச்சகட்டமாக இது 81.75 சதவீதமாக உயர்ந்தது. அதற்குப் பிறகுதான், 2000-2001 ஆம் ஆண்டில், மாபெரும் தொய்வு ஏற்பட்டு, நிதிநிலை சீர்கேடான நிலைக்குச் சென்றுவிட்டது. இது பொருளாதாரம் புரிந்த உங்கள் அனைவருக்கும் புரியும் என்று நான் நம்புகிறேன்.

அட்டவணையில் சுட்டிக்காட்டியுள்ளபடி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பொன்முடி அவர்கள், உண்மை புள்ளிவிவரங்களை மறைத்து விட்டு, 1997-98 வரைக்கும் உள்ள புள்ளிவிவரங்களை மட்டும் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அவர் தப்பிக்கும் முறையிலே பதிலைச் சொன்னார். தி.மு.க. ஆட்சி நடந்தபோது, நிதிநிலையில் மாபெரும் தொய்வு ஏற்பட்டு, மிகவும் சீர்கேடான பாதையில் எவ்வாறு சென்றது என்பதை 89-ஆம் பக்கத்திலே உள்ள அட்டவணை விவரமாக எடுத்துக்கூறியிருக்கிறது. அதிலும் குறிப்பாக, 57.80 சதவீதம் 2001-2002லே இருந்தது. 57.80 சதவீதத்துடன் மின்சார வாரியக் கடனாக கட்டாமல் விட்டுவிட்ட ரூ.1962 கோடியையும், அதாவது 19.12 சதவீதத்தையும், கணக்கில் எடுத்தால், 57.80 சதவீதத்தோடு 19.12 சதவீதத்தைச் சேர்த்தால், அப்பொழுது 76.92 சதவீதம் என்ற நிலை



இருக்கும் என்பதையும் கணக்கில் எடுத்துப்பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் Additional Resource Mobilisation என்ற தலைப்பில் விளக்கமாக ஓர் உரையினை ஆற்றினார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய விவாத்தின்போது ஒன்றை தெளிவாகச் சுட்டிக் காட்டினேன். நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 90-வது பக்கத்தில், வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு, நிதிப் பற்றாக்குறையில் 35 சதவீதம் என்ற அளவிற்கு படிப்படியாகக் குறைக்கப்படும், என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. நான் அன்றே சொன்னேன், தெளிவாகக் குறிப்பிலேகூட இருக்கிறது. Valued Judgement-நீங்கள் அதிலே சொல்லியிருப்பது, அறிவார்ந்த செயலாக இருக்காது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு பையன் 35 மார்க் வாங்கினால் பாஸ் என்றால், அவன் ஏண்டா, 35 மார்க் வாங்கவில்லையென்றால், அதற்கு 1008 காரணங்களைச் சொல்லலாம். 35 வாங்கினால்தான் பாஸ்-நீங்கள் சொல்லிவிட்டீர்கள். 35-க்குக் கொண்டு வந்தால்தான் அறிவாளி என்று சொல்லி இருக்கிறீர்கள். 35-க்கு நீங்களும் போகவில்லையே. அதனால் அந்த இலக்கணம் சொல்லியிருக்கிறீர்களே, பொருந்துமா என்பதுதான் நான் கேட்ட கேள்வி. அதோடு இன்னும் ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு விளக்கம் சொல்லுங்கள், அத்துடன் முடியுங்கள். சொற்பொழிவு ஆற்றாதீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். அதாவது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. மின்சார வாரியத்திற்கு 1962 கோடி ரூபாயை, நீங்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமல் சென்றுவிட்டீர்கள். கடனாக வைத்துவிட்டீர்கள். நிலக்கரிக்குப் பணம், மைய அரசினுடைய அமைப்புகளிடமிருந்து வாங்கிய மின்சாரம் ஆகியவற்றுக்குத் தரவேண்டிய பணத்தை நீங்கள் தராமல் சென்றுவிட்டீர்கள். அதைக் கணக்கில் எடுத்திருந்தால் அதனுடைய அளவு எந்தளவுக்குப் போயிருக்கும் என்பது, 76.92 சதவீதம் என்ற அளவுக்குப் போய் இருக்கும். அதை கணக்கில் எடுத்தாகவேண்டும். அதற்குத்தான் 19.12 சதவீத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் அது எந்தளவுக்கு என்பதனை நான் சொன்னேன். உண்மையிலேயே

19.1 சதவீதமாக அது படிப்படியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அது எங்களது அறிவார்ந்த நிதி நிருவாக அணுகுமுறை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-30

இந்த 35 சதவீதம் என்பது, எந்த அளவிற்கு வரவேண்டும் என்பது that is the object, that is the aim. அந்த aim, அந்த குறிக்கோளை நோக்கி நீங்கள் அணுகியபோதுதான் 19.12 சதவீதமாக நீங்கள் கணக்கிலே கொண்டுவராமல், கட்டவேண்டிய பணத்தைக் கட்டாமல் விட்டுச் சென்றுவிட்டீர்கள்.

அதைப்போலவேதான் bills. ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை எல்லாம் கொடுக்காமல், அதைக் கணக்கிலும் கொண்டுவராமல் அப்படியே வைத்துவிட்டுச் சென்றுவிட்டீர்கள். இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் இன்னும் அதிக நேரமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Additional Resources Mobilisation-ஐப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேற்று மிகத் தெளிவாக அதற்கு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில், பல்வேறு நிதி நிர்வாகக் குறைபாடுகள் இருந்ததை நீங்கள் மறந்துவிட்டு, உங்களுடைய நிதி நிர்வாகத்தோடு ஒப்பிட்டு, எங்களுடைய நிதி நிர்வாகத்தின்மீது பல குறைகளைப் பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்கள், பொன்முடி போன்றவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னீர்கள். இதிலே extracts from C.A.G.'s Report கூறுகிறது. 31-3-1997 Funds Utilisation—Substantial surrenders of more than 50% of the provisions were noticed in respect of 141 schemes either on account of non-implementation or slow implementation of Schemes என்று குறைபாட்டைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. இப்படி நிதி நிர்வாகத்திலே ஒரு நல்ல கண்காணிப்பு இல்லாத நிலையை மேற்கொண்ட காரணத்தால், மக்களுக்கு அந்தப் பணம் சென்று சேராத ஒரு நிலை உங்கள் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இதை மாற்றியமைக்கின்ற முயற்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Zero budgeting என்ற அணுகுமுறையை மேற்கொண்டு, எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அது மக்களுக்குப் பலனளிக்கக்கூடிய



திட்டமாக இருக்க வேண்டும். தேவையான அளவிற்கு அதற்கு நிதி தரவேண்டும் என்ற அணுகுமுறையை மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

அதைப்போலவே 31 மார்ச் 1998 அன்று, சென்ற ஆட்சியின்மீது, C.A.G. கொடுத்திருக்கின்ற இன்னும் ஒரு குற்றச்சாட்டு, 'Analysis of the financial data for the Government of Tamil Nadu showed that it had little or nothing from its own resources for financing its plan expenditure necessitating borrowings.' வளர்ச்சித் திட்டங்களுக்கு சொந்த நிதி என்பது கொஞ்சம்கூட இல்லாத அளவிற்கு ஒரு தவறான பொருளாதார அணுகுமுறையை சென்ற ஆட்சி மேற்கொண்டது என்பதையும் C.A.G. சுட்டிக்காட்டியிருக்கிறது.

'However as an increasingly larger share of borrowings was being applied for meeting revenue expenditure and interest payments, very little was being left for investment.' இது மிக பயங்கரமான ஒரு குற்றச்சாட்டு. வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணத்தை ஒதுக்குவதற்கு, அதற்குப் பதிலாக கடன் வாங்கி, அந்தக் கடனை revenue expenditure-க்கு சம்பளம் போன்ற ஊதியங்களுக்கு எல்லாம்கூட கொடுப்பதற்குக்கூட, கடன் வாங்கக்கூடிய அளவிற்கு, வட்டியைக் கட்டுவதற்கும் கடன் வாங்கி வட்டியைக் கட்டக்கூடிய அளவிற்கு, அப்படிப்பட்ட ஒரு தவறான பொருளாதார முறையைச் சென்ற ஆட்சி கடைபிடித்தது தவறான ஒன்று என்று C.A.G. சுட்டிக்காட்டியிருக்கிறது.

'The State Government was doing very little for the substainability of its operations. It also showed no flexibility in raising its tax revenues.' ஒருபுறம் கடனை வாங்கி, வாங்கி ஊதியம் தருவது போன்ற செலவுக்கு செலவு செய்கிறது; மறுபுறம் வளர்ச்சித் திட்டங்களுக்கு வரியையும் போட மாட்டோம் என்றும் இருக்கிறது. இதில் இன்னும் அடுத்து நான் வருகிறேன். வரி போடாமல் மட்டும் இல்லை. வரிச் சலுகை வியாபாரிகளுக்கும், தொழில் அதிபர்களுக்கும் தருவதில் சென்ற ஆட்சி கவனமாக இருந்துவிட்டது.

அவர்கள் சொல்கிறார்கள். 'All these had led to increased vulnerability of the State's finances to sources of funding outside its control.' என்று நாங்கள் ஏதோ உங்களுடைய நிதி நிர்வாகத்தைக் குறை சொல்கிறோம் என்று எண்ணுகிறீர்கள். உங்கள் நிர்வாகம் எப்படி சீர்கெட்டிருந்தது

என்பதற்கு C.A.G.-Comptroller and Auditor General அவர்கள் கூறுகிற அந்தக் கூற்றிலிருந்தே எந்த அளவிற்கு மைய அரசே, அவர்கள், ஒரு மைய அரசினுடைய அமைப்பே- it is an independant organisation which goes into profound auditing, அவர்களே உங்களுக்குக் கொடுத்திருக்கின்ற, உங்களுடைய நிருவாகத்தைப் பற்றிக் கூறியிருக்கிற கூற்று என்பதனை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பிற்பகல் 4-35

இன்னும் அதேபோல 2001 மார்ச் 31 C.A.G. Report-லே சொல்லி இருக்கிறார்கள்.

'Heavy borrowings resorted to by the State Government of Tamil Nadu resulted in substantial increase in interest payment. The sustainability negative balance from current revenues has added to the worsened financial position of the State aggravating the difference between assets and liabilites.' என்று கடுமையாக உங்களுடைய நிதிநிலைச் சீர்கேட்டை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அதைப்போலவே மார்ச் 31 ஆம் தேதி உங்களுடைய Public Distribution System-பற்றிச் சொல்லுகிறபோது, "Under PDS there were systemic and operational deficiencies. The system failed to reach out to the entire target group and there was widespread misuse through bogus cards.'

இதை நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் சொல்கிறபோது அரசியலுக்காகச் சொல்கிறோம் என்று சொன்னீர்கள். ஆனால் C.A.G. என்ற அந்த அமைப்பு, Audit அமைப்பு சொல்கிறது. மைய அரசுக்குச் சொந்தமான பொதுவான Audit அமைப்பு சொல்கிறது. 1999 ஆம் ஆண்டிலே சொல்கிறது. மைய ஆட்சியிலே நீங்களும் இருக்கிற காலத்திலேயே சொல்கிறது. 'Under PDS-Public Distribution System there were systemic and Operational deficiencies. The system failed to reach out to the entire target group.' யாருக்குப் பொது விநியோக முறையில் பலன் சென்றடைய வேண்டுமோ அவர்களுக்கு அந்தப் பலன் சென்று சேரவில்லை. மாறாக there was widespread misuse through bogus cards. போலி ரேஷன் அட்டைகளை வைத்து, மிகத் தவறான, அதிகப்படியான பரவலான தவறான உபயோகம் இதிலே கையாளப்பட்டிருக்கிறது என்ற ஒரு கடுமையான குற்றச்சாட்டை



உங்கள் மீது C.A.G. சொல்லி இருக்கிறது. எதனால் P.D.S. மூலமாக அரசுக்கு இழப்பு? ஏன் இவ்வளவு கடன் சுமை அரசுக்கு வந்தது? 16 இலட்சம் பேர்—'There were 16 lakh bogus cards in circulation as of May 1999 indicating a continued liability which is an avoidable subsidy.' என்று சொல்லியிருக்கிறது. இப்படி மக்களுடைய வரிப் பணத்தை பாழாக்குவதில் நீங்கள் கடைபிடித்த இந்தச் சீர்கேட்டினை C.A.G. சுட்டிக்காட்டி இருக்கிறது.

அதைப் போலவே இன்னும் ஓர் இடத்திலே சொல்கிறார்கள். Utilisation of Funds and Project Planning Execution-என்ற தலைப்பிலே Construction of Nanganchiar Reservoir Project remains incomplete even after incurring an expenditure of Rs.25.22 crores due to faulty design, inadequate provision of funds and expenditure of unapproved works.' இவ்வளவு பெரிய திட்டத்திற்கு 25.22 கோடி ரூபாய் இழப்பு ஏற்படக்கூடிய அளவிற்கு, தவறான அணுகுமுறைகளை மேற்கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டி இருக்கிறது. இதுபோன்ற குறைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்ற முறையில்தான் அந்த Zero Budgeting என்று நான் சொன்னேனே அதைப்போல ஒவ்வொரு துறைத் தலைவர்களையும் அழைத்து, ஒரு துறையிலே மேற்கொண்டிருக்கிற திட்டங்கள் காலத்தே மேற்கொள்ளப்பட்டனவா, காலதாமதத்திற்குக் காரணம் என்ன? Cost escalation என்றால் அதற்குக் காரணம் என்ன? அதை எப்படிக் களையலாம் என்ற அணுகுமுறையைத் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதைப்போலவே உங்களுடைய திட்டம். 'நமக்கு நாமே திட்டம்'. "Review of three State Plan Schemes-Anna Marumalarchi Thittam, Namakku Naame Thittam and M.L.A. CDS Funds revealed that Rs.54.25 lakhs were diverted to meeting other expenditure." அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம்—அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நாங்கள் கைவிட்டோம், கைவிட்டோம், என்று சொல்கிறீர்களே. நாங்கள் கைவிடவில்லை. அதை மேம்படுத்தியிருக்கிறோம். ஆனால் அண்ணாவின் பெயரிலே ஒரு திட்டத்தை வைத்து, அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தைக்கூட மற்ற செலவுக்கு ஒதுக்கிவிட்டீர்கள் என்று அதே C.A.G. சுட்டிக்காட்டக்கூடிய அளவிற்கு, அண்ணாவின் பெயரிலே போட்ட திட்டத்திலேகூட முறைகேடுகள் மைய அரசினுடைய அமைப்புச் சுட்டிக்காட்டியதைப்போல அது உங்களது ஆட்சியிலே. இது போன்ற குறைகளைக் களைகிற

அணுகுமுறையைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிர்வாகத்திலே தற்போது கொண்டு வந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 4-40*

அதைப்போலவே, "Rural Employment Generation works were implemented in the State with the aim of alleviating rural poverty. The employment generated under the Jawahar Rozgar Yojana averaged between 5 and 16 days only. Funds provided under Employment Assurance Scheme were not properly attended to. Contractors were engaged for executing works, contrary to guidelines and programme funds were diverted to other works." என்று சொல்லியிருக்கிறது.

ஒப்பந்தக்காரர்கள் முறை தவறி, விதிகளுக்கு மாறாக, இதிலே பணியமர்த்தப்பட்டார்கள் என்றும், பணம் மற்ற செலவுக்கு ஒதுக்கப்பட்டது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி நான் இதைச் சொன்னாலே இதற்கு இன்னும் அரை மணி நேரத்திற்கு மேலாகும். பக்கம் பக்கமாக சொல்ல வேண்டிய அளவிற்கு இன்னும் பல குறைபாடுகள் இருக்கின்றன. ஒன்றை மட்டும் நான் சொல்லிக்காட்ட விரும்புகிறேன்.

Report of the Comptroller and Auditor General of India. "Loss of revenue due to the operation of mini bus scheme by the private bus operators." நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளையெல்லாம், தனியாருக்குக் கொடுக்கிறோம் என்று ஒரு தவறான தகவலை நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். எந்தப் போக்குவரத்துக் கழகத்தையும் கலைக்கின்ற திட்டம் இந்த அரசிடம் இல்லை. ஆனால் நீங்கள் Mini Bus என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். முழுக்க முழுக்கத் தனியாருக்குத் தரப்பட்ட அந்தத் திட்டம், அதுவும் உங்களுக்கு வேண்டியவர்களுக்கே தந்துவிட்டீர்கள் என்ற குற்றச்சாட்டுகூட நாட்டிலே எழுந்தது, இருக்கிறது. அதைக்கூட நீங்கள் மறுக்க முடியாது. அது பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

"The Government of Tamil Nadu introduced Mini Bus Scheme in the year 1997 for the benefit of the rural public living in remote villages. According to the Scheme, private operators are permitted to operate mini bus with the approved route length of 16 k.m., subsequently, increased from 16 k.m. to 20



k.m in rural area of the State which included a route length in the already served area of the State Transport Undertakings. இதுதான் மிக முக்கியமானது.

அந்த நீட்டிப்பை நீங்கள் தந்தபோது that included route length of 4 k.m. in the already served area of the State Transport Undertakings என்று நீங்கள் தந்தீர்கள். An analysis of the operation of the scheme by audit revealed that a loss of revenue of Rs.11.03 crores due to the operation of mini buses in the area already served by the State Transport Undertakings. அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 11 கோடி ரூபாய் இழப்பை உருவாக்கி, தனியாருக்கு Mini bus-ஐத் தந்ததன் மர்மம் என்ன என்று மக்கள் கேட்டார்கள். C.A.G.-யே அதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. இதை அவை உணர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அதைப்போலவே பேருந்துகளைப் பொறுத்தவரைக்கும், போக்குவரத்துக் கழகங்களை நல்ல முறையிலே பராமரிக்காத காரணத்தினால் கிட்டத்தட்ட 101 கோடி ரூபாய் அதிகமான செலவு ஏற்பட்டது. The age of the fleet has a direct impact on the cost of spares and repairs. The following table indicates the age profiles of buses as per the norms laid by the State Government in respect of 16 State Transport Undertakings' test checked in audit. Increase in expenditure on spares and repairs by Rs.101.52 crores due to aged vehicles.

காலத்தே அந்தப் பேருந்துகளை உங்களால் மாற்ற முடியவில்லை. வாங்கிய டீசலுக்குக்கூட பணத்தைத் தர முடியாத அளவிற்கு போக்குவரத்துக் கழகங்கள் இழப்புக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக கூடுதல் இழப்பாக 101 கோடி ரூபாய் இழப்பை உருவாக்கிய பெருமை உங்களுடைய நிர்வாகச் சீர்கேட்டுக்குச் சொந்தம் என்று C.A.G. சொல்கிறது.

அதைப்போலவே, இன்னொரு முக்கியமான ஒன்று. Clandestine operation. The unauthorised operation of Maxicabs and Truckers as Stage Carriages was noticed in some parts of the State. "Revenue loss on account of it was Rs.43.34 crores due to clandestine operation of Maxicabs' என்று கூறியிருக்கிறார்கள். Maxicab-க்கு தற்போது நாங்கள் வரியைப் போடுகிறபோது Maxicab-க்கு வரியைப் போடலாமா, அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதா என்று மாண்புமிகு உறுப்பினர் [illegible] என்று கருதுகிறேன், பேசுகிறபோது சொன்னார். ஆனால் உங்கள் ஆட்சியிலே

184537
சென்னை-600 008

காலத்தில், Maxicab-க்கு அதன்மீது நீங்கள் தக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் ரூ.43.34 கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டது என்றும் Comptroller and Auditor General of India உங்களுடைய அந்தக் குறைபாட்டைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-45

அதைப்போலவே டயர். போக்குவரத்துக் கழகங்களுக்கு மாண்புமிகு பொன்முடி அவர்களுடைய கவனத்திற்கு—போக்குவரத்துக் கழகங்களுக்கு டயர் வாங்குவதிலே ஒரு முறைகேடா அல்லது கவனக்குறைவா? உங்களுக்குத்தான் தெரியும்; அல்லது தெரியாமலே நடந்ததா? தெரிந்தே நடந்ததா? அது வேறு. ஆனால் "based on the budgeted norms, a quantity of 1,78,376 tyres were to be used against which the actual consumption was 2,07,219 Tyres involving excess consumption of 28,843 tyres worth Rs.19.62 crores during the period ending March 1999" என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

எதற்காக? ஒட்டுமொத்தமாக 2,07,219 டயர்களை நீங்கள் வாங்கியிருக்கிறீர்கள். ஆனால், டயர்களின் தேவையோ, 1,78,376 தான் தேவை. அதிகமாக நீங்கள் வாங்கியது 28,843 டயர்கள். 19 கோடியே 62 இலட்சத்திற்கு அந்த டயர்கள் வாங்கப்பட்டு இருக்கின்றன. மக்களது பணம். மக்களது வரிப்பணம். தேவையோ 1,78,376 தான். நீங்கள் வாங்கியதோ 2,07,219. 28,843 டயர்களை அதிகமாக வாங்கி 19 கோடியே 62 இலட்சம் ரூபாய் இழப்பை உருவாக்கினீர்கள். அதனால் போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் இப்படி நஷ்டத்திற்கு சென்றன. போக்குவரத்துக் கழகங்களுக்கு, தொழிலாளிகளுக்குக்கூட போனஸ் கொடுக்க முடியாத நிலையை உருவாக்கியது நாங்கள் அல்ல. இதுபோன்று கோடிக்கணக்கான இழப்பை, முறைகேடு நடப்பதற்கு, உங்கள் தலைமையிலே இருந்த அரசு காரணமாக அமைந்த காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துக் கழகங்கள் நலிவுற்றுவிட்டன என்பதனைச் சுட்டிக்காட்டுவதற்காக இந்த ஆதாரத்தை உங்களுக்குச் சொல்வது கடமையென நான் கருதுகிறேன். (குறுக்கீடு) It is not possible now. I am not yielding. CAG report-தானே கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இருக்கிறது தானே? C.A.G. Report-ஐத்தானே கொடுக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போலவேதான் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தைப் பொறுத்தவரைக்கும் (குறுக்கீடு) C.A.G Report (குறுக்கீடு)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. இல்லை நான் சொல்வது C.A.G Report (குறுக்கீடு) I am not telling anything on my own record. I am not telling anything. I am just reading out the contents available in the C.A.G. report. C.A.G.. Report was placed in the Assembly. This is part and parcel of the Assembly.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.A.G Report என்பது அவைக்குத் தரப்பட்டிருக்கின்ற ஒரு தஸ்தாவேஜ். (குறுக்கீடு) இல்லை. இல்லை. மாண்புமிகு பொன்முடி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இது குற்றச்சாட்டு. மன்னிக்கவும் C.A.G. Report is a Report submitted to the House and is available in the House. This is forming part of the House. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நிதியமைச்சர் அவர்கள் பேச்சை முடித்தவுடனே உங்களை அழைக்கிறேன். நிதியமைச்சர் பேச்சை முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பேச்சை முடித்தவுடன் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding at all, because what all I have been now revealing is from the C.A.G Report which is already placed before this House. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் முடித்துவிடட்டும். துரைமுருகன், நிதியமைச்சர் பேச்சை முடித்தவுடனே இந்தக் குறிப்பிட்ட விவரம் குறித்து, கேள்வி கேட்பதற்கு, விளக்கம் அளிப்பதற்கு பொன்முடிக்கு வாய்ப்புத் தருகிறேன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.A.G. Report-ஐப் பற்றி அவர் படிக்கிறார். அதில் ஒன்றும் தப்பில்லை. ஏனென்றால், ஒவ்வோர் ஆட்சியைப் பற்றியும் C.A.G., Report கொடுத்திருக்கிறது. உங்கள் ஆட்சியைப் பற்றியும் கொடுக்கலாம். அதை நான் குறை சொல்லவில்லை. ஆனால், பொன்முடி அவர்களைப் பற்றிச் சொல்கிறபோது, அவர் விளக்கம் சொல்வதற்காக அவர் டைம் கேட்கிறார். நீங்கள் சொல்கிற மாதிரி இந்தப் பாயிண்டை இப்போது முடிந்தவுடனே அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பேசி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது பொன்முடி அவர்கள் போக்குவரத்துத் துறையினுடைய அமைச்சராக இருந்தார் என்பதற்காக அவருடைய பெயரைச் சொன்னேன். எனவே, சரி, நான் பொன்முடி என்ற வார்த்தைக்குப் பதிலாக, கடந்த தி.மு.க. ஆட்சியிலே என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மாற்றிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) அதுதானே உண்மை. (குறுக்கீடுகள்) அதுதானே உண்மை...

*பிற்பகல் 4-50*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் ,தலைவர்:** இல்லை, துரைமுருகன், (குறுக்கீடு) இல்லை. அந்த டயர் வாங்கியது தொடர்பாக விளக்கம் அளிப்பதற்கு பொன்முடிக்கு சகல உரிமையும் உண்டு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேச்சை முடித்தவுடனே, அந்த டயர் வாங்கியதற்கு தொடர்பான விளக்கத்தை பொன்முடி அவர்கள் சொல்வதற்கு நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்தவுடனே, (குறுக்கீடுகள்) பேச்சை முடித்தவுடனே அனுமதிக்கிறேன் பேச்சை முடித்துவிடட்டும்.



**திரு. துரைமுருகன்:** எவ்வளவு பேர் அமைச்சர்கள் நாங்கள் பேசும்போது குறுக்கிடுகிறார்கள். நாங்கள் உட்கார்ந்து விடுகிறோம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கிடுவது என்பது இல்லை. உங்களுடைய கேள்விக்கு விளக்கம்தான் சொல்கிறார்கள் அமைச்சர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவுபடுத்திவிட்டேன். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி என்று நான் கூறியதை அவைக்குறிப்பிலிருந்து எடுத்து விடலாம். அதற்குப் பதிலாக 1999 ஆம் ஆண்டு ஆட்சியிலே இருந்த தி.மு.க. என்று அவைக்குறிப்பிலே ஏற்றிவிடலாம். (குறுக்கீடுகள்) என்ன, 1999-லே நீங்கள் ஆட்சியிலே இல்லையா? வேறு யார் இருந்தார்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இம்மாமன்றத்தில் விவாதம் நடைபெற்றபோது.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்கள் பேச்சை முடித்தவுடனே விளக்கம் அளிப்பதற்கு நான் வாய்ப்பைத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** உலக வங்கியிடமிருந்து கடன் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும்..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்தவுடனே கேட்பதற்கு நான் வாய்ப்பு அளிக்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சரி. பொன்முடி அவர்கள் கேட்கின்ற கேள்வியைக் கேட்கட்டும்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Audit Report என்பது எல்லா ஆட்சியிலேயும் கொடுக்கிறார்கள். அதேபோல், 1995-96-லே நாங்கள் வருகிறபோது போக்குவரத்துக் கழகங்கள் பற்றிக் கொடுக்கப்பட்ட Audit Report-லே, அப்போதிருந்த....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அவர் டயர் வாங்கியது தொடர்பாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். அதற்கு விளக்கம் சொல்லுங்கள். நீங்கள் முன்னுரை, பாயிரம் எல்லாம் பாடக்கூடாது. அவர் கேட்பதற்கு விளக்கம் சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** விளக்கம்தான் சொல்கிறேன்; அப்போதும்கூட average age of buses,—ஏன் என்றால், பஸ்கள் எல்லாம் ரொம்பப் பழையதாக இருந்தன என்று சொன்னார். அப்போதுகூட, average age of the buses 6 வருடங்கள், 7 வருடங்கள் என்று இருந்தவையெல்லாம் உண்டு. இது எல்லா ஆட்சியிலேயும் நடப்பதுதான். அதனாலே எந்த வருடத்திலேயும் age-ஐ correct-ஆகப் போட்டதே கிடையாது. எத்தனை சாட்சிகள் வேண்டுமானாலும், சான்றுகள் வேண்டுமானாலும், Audit Report-லேயிருந்து கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். அதுமட்டுமல்ல இந்த டயர்களைப் பொறுத்தவரையிலே, Central Purchase Committee என்று ஒரு Committee போட்டு, அவர்கள்தான் purchase பண்ணியிருந்தார்கள். எந்தப் போக்குவரத்துக் கழகத்திலேயாவது அதிகமாக வாங்கியிருந்தால், இன்றைக்குக்கூட, நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு போக்குவரத்துத் துறைக்கோ, நிதியமைச்சருக்கோ முழுமையான அதிகாரம் இருக்கிறது. யார் அதிகமாக வாங்கியிருந்தாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம். அதிலே எந்தவிதமான தவறும் கிடையாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இம்மாமன்றத்தில் விவாதம் நடைபெற்றபோது, உலக வங்கியிடமிருந்து கடன் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அதனால் மாநில அரசின் நிலை பாதிக்கப்படுமா என்றும் ஒரு வினா திரு. ஹேமச்சந்திரன், திரு. பழனிசாமி ஆகியோரால் எழுப்பப்பட்டது. சில நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் அடிப்படையில் உலக வங்கி ஒரு மாநில அரசுக்கு உதவி அளிக்கிறது. ஒரு மாநில அரசு தன்னுடைய நிதிநிலையைச் சரியாக வைத்துக் கொள்ளவில்லை என்றால், உலக வங்கி அந்த மாநிலத்திற்கு நிதியுதவி வழங்க முன்வருவது இல்லை. (குறுக்கீடு) இதையெல்லாம் பேசி முடித்துவிடுகிறேன். அதனால்தான் 1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு, உலக வங்கி புதிய திட்டங்கள் எதற்கும் அனுமதி வழங்க முன்வரவில்லை. இதை மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் கவனமாகக் கவனிக்க வேண்டும். சில நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் அடிப்படையில் உலக வங்கி ஒரு



மாநில அரசுக்கு உதவி அளிக்கிறது. ஒரு மாநில அரசு தன்னுடைய நிதிநிலையைச் சரியாக வைத்துக்கொள்ளவில்லை என்றால் உலக வ்ங்கி அந்த மாநிலத்திற்கு நிதியுதவி வழங்க முன்வருவதே இல்லை. அதனால்தான் 1996-97 ஆம் ஆண்டிற்குப் பிறகு, உலக வங்கி புதிய திட்டங்கள் எதற்கும் அனுமதி வழங்க முன்வரவில்லை. உலக வங்கி நிதியுதவி இல்லாமல் வளர்ச்சித் திட்டங்களை முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்கள் செயல்படுத்தினார்களா என்றால், இல்லை. தமிழ்நாட்டின் ஆண்டுத் திட்டத்தில் மிகப் பெரிய அளவில் குறைவு ஏற்பட்டு, திட்டப் பணிகளில் வளர்ச்சியே இல்லை.

அருகில் உள்ள ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களில் அவர்களுடைய ஆண்டுத் திட்டம் கணிசமான அளவிற்கு உயர்ந்தது. இது நடைமுறை உண்மை. உலக வங்கி வழங்கக்கூடிய உதவி மத்திய அரசின் வாயிலாகத்தான் மாநில அரசுகளுக்கு வழங்கப்படுகிறது. இதில் 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது. மானியம் போக, இந்தக் கடனை மாநில அரசு மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்துகிறது. பின், இந்தக் கடனை மத்திய அரசுதான் உலக வங்கிக்குச் செலுத்துகிறது. இதனை மாண்புமிகு பழனிசாமி அவர்கள் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 4-55

ஏதோ உலக வங்கியிடம் கடன் வாங்கவேண்டும் என்று மாநில அரசு—நாங்களே சென்று புதிதாக இந்த முயற்சியில் ஈடுபடுவதாக எண்ணிவிடக்கூடாது. எந்த ஒரு வளர்ச்சித் திட்டத்திற்குப் பணம் வேண்டுமென்றாலும் நாம் மைய அரசைக் கேட்கிறோம். மைய அரசு எங்கெங்கேயிருந்து உலக நாடுகளில் பணம் வாங்குகிறது என்பதை அவர்கள் நடைமுறையில் கடைப்பிடித்து வருகிறார்கள். பன்னெடு ஆண்டுகளாக அந்த அடிப்படையில் உலக வங்கியிடமிருந்து வாங்குகிற கடனுக்குத்தான் வட்டி சற்று குறைவாக இருக்கிறது. அதற்கப்பால் தனியார் துறைகளிடமிருந்து, வெளிநாடுகளிலிருந்து பணம் கிடைக்கிறது. But the interest rate is little higher for this. எனவேதான், மைய அரசுகூட, எங்கு உலக நாடுகளில் குறைந்த வட்டி கிடைக்கிறதோ அந்தக் குறைந்த வட்டியை அவர்கள் நாடுகிறார்கள். அதற்கு உலக வங்கி சொல்வது, நாங்கள் கடனைக் கொடுக்கின்றபோது, கடனைத் திருப்பித்தர வேண்டும். திருப்பித் தரக்கூடிய திட்டத்தில் நீங்கள் போட வேண்டும். அந்தத் திட்டம—The project should be bankable and viable. அந்தத் திட்டத்திலிருந்து வரும் வருவாயைக் கொண்டே

அதைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அந்தத் திட்டங்கள் இருக்க வேண்டும் என்றெல்லாம் பல நிபந்தனைகளை அவர்கள் போடுகிறார்கள். அப்படிப் போடுகிறபோது, அதற்கு உட்பட்டு மைய அரசு அந்தப் பணத்தை வாங்குகிறார்கள். அந்தப் பணமும் நமக்கு வாவில்லையென்றால்—சாலை வேண்டும் என்று கேட்கிறீர்கள். உங்கள் பகுதியில் ஏரி, குளங்களை ஆழப்படுத்தவேண்டும் என்று கேட்கிறீர்கள். பணத்திற்கு எங்கே செல்வது? ஒன்று வரி மூலமாக நாம் பணத்தைத் தேட வேண்டும். வரி போட்டால், வரி போடுகிறீர்களே, வரி போடுகிறீர்களே என்ற ஒரு வேதனையைச் சொல்லுகிறீர்கள். வரி போடாவிட்டால் கஜானாவுக்கு எப்படிப் பணம் வரும்? மைய அரசிடமிருந்து பணம் வேண்டும். மைய அரசைப் பொறுத்தவரைக்கும், நான் ஏற்கெனவே பல முறை இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். நாம் நூறு ரூபாய் மைய அரசுக்குக் கொடுத்தால், அதிலிருந்து 1.53 சதவீதம்தான் நமக்கு வருகிறது. அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 29.534 சதவீதம்தான் அவர்கள் பிரித்துக் கொடுக்கிறார்கள். மீதத்தை அவர்களே வைத்திருக்கிறார்கள். நாம் கொடுக்கின்றதில் 18, 20 சதவீதம் மடங்கு பணத்தை அவர்கள் வைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் பணத்தைத் தருவதில்லை. இப்படிப்பட்ட நிலை இருக்கின்றபோது ஒன்று வரி போடவேண்டும். அல்லது கடன் வாங்க வேண்டும். கடன் வேறு எங்கு வாங்குவது என்று நீங்கள் ஆலோசனை சொல்ல வேண்டும்.

Asian Development Bank மூலமாக வாங்கலாம். ஜப்பான் நாட்டு ஓர் அமைப்பு தருகிறது. உலக வங்கி தருகிறது. இவர்கள் எல்லாம் தருகின்றபோது நிபந்தனைகளைப் போடுகிறார்கள். அந்தப் பணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் எந்தவொரு திட்டத்தையுமே நாம் மேற்கொள்ள முடியாது. வரியைத்தான் போட வேண்டும். அப்பொழுது உலக வங்கிகளில் இருந்து பணம் வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், திரு. பழனிசாமி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் போன்றவர்களும் கூறுவதைக் கேட்டு, பணமே வேண்டாம் என்று சொல்லி விடுவோம். எவ்வளவு வரி எந்தெந்தத் துறைக்குப் போடலாம் என்ற proposal-ஐ நீங்களே சொல்லுங்கள். மக்களுக்குத் தெரிவியுங்கள். அப்படித்தான் நாம் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதுதான் இருக்கின்ற நடைமுறை.

உலக வங்கியின் வற்புறுத்தலின்பேரில்தான் மாநில அரசு நிதிச் சீர்திருத்தங்களைச் செய்கிறது என்ற வாதம் சரியல்ல. உலக வங்கியை



அணுகாமல் இருந்தால்கூட, இந்த நிதிச் சீர்திருத்தங்களை தவிர்க்க முடியாது. நிதிச் சீர்திருத்தங்களை உலக வங்கி மட்டும் சொல்லவில்லை. மைய அரசிடமிருந்து நாம் கடன் வாங்கவேண்டு மென்றாலும்கூட, they also impose the same conditions, structural and fiscal reforms செய்யவேண்டும் என்ற கட்டாயமான நிபந்தனைகளை அவர்கள் விதிக்கிறார்கள். ஆகவே, இந்த மாமன்றத்தில் எப்படிப்பட்ட நிதிச் சீர்திருத்தங்களைக் கொண்டுவர இருக்கிறோம் என்பதை மிகத் தெளிவாக நிதிநிலை அறிக்கையில் ஓர் இணைப்பாக வழங்கியுள்ளோம்.

இம்மாமன்ற உறுப்பினர்கள் அதில் கவனம் செலுத்தி, நாம் எவ்வாறு இவற்றை மேற்கொண்டு, தமிழ்நாட்டை முற்போக்கான பாதையில் நடத்திச் செல்ல இருக்கின்றோம் என்ற அடிப்படையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

நிதிநிலை அறிக்கை பத்தி 10-ல் உலக வங்கியிடமிருந்து நாம் பெற விழைகிற உதவிகளை எடுத்துக் கூறியிருக்கிறோம். அதில் பல்வேறு திட்டங்களைப் பற்றிக் கூறியிருக்கிறோம். அந்தத் திட்டங்களின் மதிப்பீடுகள் 10 ஆயிரம் கோடி அளவிற்கு உள்ளது என்றும், ஏற்கெனவே ஏற்பட்டுள்ள வட்டியைச் செலுத்த இயலாத நிலையில், மேலும் இந்தச் சுமையை எப்படி ஏற்றுக்கொள்வீர்கள் என்ற வினாவை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எழுப்பியிருக்கிறீர்கள். வளர்ச்சித் திட்டங்களுக்காகத்தான் உலக வங்கியிடமிருந்து நாம் கடனைப் பெறுகிறோம். இந்த மொத்தத் தொகையான பத்தாயிரம் கோடியை படிப்படியாக ஐந்து ஆண்டுகளில் பெறக்கூடிய திட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம். ஒரே ஆண்டில் பத்தாயிரம் கோடியை கடனாகப் பெறப் போகிறோம் என்று கருதுவது சரியல்ல.

அதைப்போலவே, மேற்கு வங்கத்தின் தலைநகரான கொல்கத்தாவில் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். நான் அதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். மேற்கு வங்காளத்தின் தலைநகரான கொல்கத்தாவில் தனியார் பேருந்துகளைப் பார்க்கலாம். தனியார் மின் பகிர்மான நிறுவனத்தையும் பார்க்கலாம். நிலைமை இவ்வாறு இருக்கின்றபோது, தமிழ்நாட்டில்தான் ஏதோ முதன்முதலாகப் பொதுத் துறைகளையெல்லாம் நாம் நாட்டுடைமையாக்க முயற்சிக்கின்றோம் என்று கூறுவது உகந்ததல்ல.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொண்டாலும்கூட, கிட்டத்தட்ட 900 கோடி ரூபாய் இந்த ஆண்டு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அந்த 900 கோடி ரூபாய் இழப்பை எப்படி நாம் ஈடுகட்டுவது? சர்க்கரை ஆலைகள் இயங்குகின்றன. அங்கு பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாத நிலைகூட இருக்கிறது. கரும்பு விவசாயிகளுக்குப் போதிய பணத்தைத் தர வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். 900 கோடி ரூபாய் நஷ்டம் என்ற நிலையிலே இருக்கிறபோது எப்படி அவர்களுக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பது? பணம் வந்தால் கொடுத்துவிடலாம். எங்கிருந்து பணத்தைப் பெறுவது? மக்கள்மீது வரியைப் போட்டு, அந்த வரிப் பணத்தை எடுத்து, கூட்டுறவுத் துறையிலே நடக்கின்ற சர்க்கரை ஆலைகளுக்கும், நூற்பாலைகளுக்கும், ஊழியர்களுக்குப் பணத்தைத் தரலாம் என்று சொல்லுகிறீர்களா, சொல்லுங்கள். ஏழை மக்கள்மீது வரியைப் போட்டு, அந்த வரிப் பணத்தை எடுத்து, கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகிற பணியாளர்களுக்குச் சம்பளத்தைத் தரலாம் என்று சொல்லுங்கள். எப்படி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

*பிற்பகல் 5-00*

எப்போதும் ஒரு மாநிலத்தின் நிதிநிலையின் அடிப்படையில் நீண்டகாலக் கடன் பெறுவது அவ்வளவு எளிதல்ல. வெளிச்சந்தையில் கடன் பெறவேண்டும் என்றால் அதிகபட்சமாக 10 ஆண்டுகளுக்குள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். ஆனால், உலக வங்கி போன்ற நிறுவனங்கள் மட்டும்தான் நீண்டகாலக் கடனை வழங்குகின்றன. We can repay the entire loan within a period of 20 years or 25 years or 30 year. என்ற முறையில் உலக வங்கி மட்டும்தான் தருகிறது. வேறு அமைப்புகள் எங்கேனும் உலகத்திலே கட்டுப்பாடுகள் இல்லாமல் பணத்தைத் தருவதாக மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள். நாம் மத்திய அரசிடம் சொல்லுவோம், வாதிடுவோம், பெறுவோம். கட்டுப்பாடுகளுடன் கடனை வாங்க வேண்டும் என்பது எண்ணம் அல்ல. அவர்கள் சொல்லுகிற கட்டுப்பாடுகள் எல்லாம் வாங்குகிற கடனை நல்லமுறையில் செயல்படுத்துங்கள்; பயனுள்ள திட்டத்தில் அந்தப் பணத்தைப் போடுங்கள்; கடனை வட்டிக்கு வாங்கி ஊழியர்களுக்குச் சம்பளம் தருவது போன்றவற்றுக்கு divert செய்துவிடாதீர்கள். செலவு செய்துவிடாதீர்கள். இவற்றையெல்லாம் அவர்கள் நிபந்தனைகளாகப் போடுகிறார்கள். எனவே, எந்தெந்த முறைக்கு, எந்தெந்த வளர்ச்சித்



திட்டத்திற்குத் தேவையோ, அந்த வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படையில்தான் கடன் வாங்கப்படுகிறது என்பதை நான் அவைக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடமிருந்து வாங்குகிற கடனைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை திட்டத்திற்கு மட்டும் 2,118 கோடி ரூபாய். இந்தத் திட்டம் 1995 ஆம் ஆண்டு இவ்வரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அம்மா அவர்களால் தீட்டப்பட்ட திட்டம். இத்திட்டம் தற்போது உலக வங்கியிடம் பரிசீலனை செய்யப்பட்டு, ஜூன் 2003-ல் கையொப்பமிடப்படலாம் என்ற நிலையில் இருக்கிறது.

அடுத்து, நீர்வள ஆதார மேம்பாட்டுத் திட்டம், 31-3-2004 ஆம் ஆண்டு வரை நீட்டிப்பு செய்ய உலக வங்கி ஒப்புக் கொண்டிருக்கிறது. அடுத்து, நீர்வள ஆதார மேம்பாட்டுத் திட்டம்-2, 2,900 கோடி ரூபாயில் அணைக்கட்டுகள், குளங்கள், ஏரிகள் மற்றும் நீர் பகிர்ந்தளிக்கும் திட்டங்களுக்கு—மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள்—நமக்கு நிரந்தர வற்றாத நதி நீர் காவிரி. கர்நாடகம் காவிரி நீரை வஞ்சித்து விட்ட நிலையில் ஏரி, குளங்களை ஆழப்படுத்த வேண்டாமா, நிலத்தடி நீரைப் பெருக்க வேண்டாமா என்று சொன்னார்கள். அந்த நோக்கோடுதான் தொலைநோக்கு சிந்தனையோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் rain water harvesting for rural areas வேண்டுமென்ற அடிப்படையில், இந்தத் திட்டத்தின் மூலமாக, 2,900 கோடி ரூபாய் திட்டத்தின் மூலமாக, குளங்கள், ஏரிகள் போன்றவற்றை எல்லாம் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, தண்ணீர் வரத்துக் கால்வாய்களை எல்லாம் சரி செய்து, கிராமப்புறத்து வளர்ச்சியை உய்விக்க, குடிநீர் வசதி, விவசாயத்திற்குத் தண்ணீர், இவை எல்லாம் ஏரி, குளங்கள், மழை நீரைப் பெறுகின்றபோது when the water gets recharged adequately down into the earth—எல்லா விவசாயமும் செழிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இதற்கு மும்முரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

அடுத்து, தமிழ்நாடு மருத்துவ அடிப்படை வசதித் திட்டத்திற்கு 650 கோடி ரூபாயில் அரசு மருத்துவமனைகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஆரம்ப சுகாதார வசதிகளை

ஏற்படுத்தித் தரவும், இந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது. It is an inevitable one, necessity. காரணம், நம்முடைய மக்களில், ஏற்கெனவே சொன்னதுபோல, வறுமைக் கோட்டு எல்லைக்குக் கீழாக வாழ்கிற மக்கள், வேலை இல்லாமல் இருக்கிற மக்கள், ஏழ்மை நிலையிலே இருக்கிற மக்கள், எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிற தமிழகத்தில் அவர்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகளை செய்து தரவேண்டும் என்பது அம்மா அவர்களுடைய எண்ணம். Primary Health Centres-லிருந்து எல்லா மருத்துவமனைகளுக்கும் தரமான மருந்து வேண்டும், அடிப்படை வசதிகள் வேண்டும். தனியார் மருத்துவமனையில் பெறுகின்ற வசதிகளை அரசு மருத்துவமனைகளில் மக்கள் பெறவேண்டும்; குறைந்த செலவிலே அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்கவேண்டும் என்ற முறையில்தான் இந்த 650 கோடி ரூபாய் செலவு செய்து, பட்டிதொட்டிகளில் இருக்கிற சாதாரண மருத்துவமனைகளையும் நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கோடு, அம்மா இந்தத் திட்டத்தை உலக வங்கியினுடைய கடனுதவியோடு செய்ய இருக்கிறார்கள்.

சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகள் ஆனபோதிலும், மருத்துவமனைகளில்—குறிப்பாக வட்ட அளவில்கூட எந்த அளவுக்கு இருக்கிறது என்பது நாம் அறிந்த ஒன்று. இதை ஒரு கால அடிப்படையில் நாம் சரி செய்ய வேண்டும் என்ற நோக்கோடுதான் இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 5-05

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்-3 ரூ.750 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சியில் வேகமாக முன்னேறி வருகிறது. நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் நகர்ப்புறங்களில் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும். மற்ற திட்டங்கள் சென்னை மாநகரப் போக்குவரத்துத் திட்டம், தமிழ்நாடு முதல் நிலை தொழில்களுக்கான முன்னேற்றத் திட்டம் போன்றவை உலக வங்கியின் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன. நாங்கள் மேலும் பல திட்டங்களை ஜப்பான் நாட்டின் Japan Bank of International Co-operation மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் உதவியோடு மேற்கொள்ள



இருக்கிறோம் என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னும் குறிப்பாக, முன்னால் இருந்த அரசு எந்தவிதமான நிதி ஆதார நடவடிக்கையும் எடுக்காத நிலையில், பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகம் போன்றவை இத்தகைய சீர்திருத்தங்களை மேற்கொண்ட காரணத்தால், நம்மைவிட வெளிநாட்டுப் பணத்தைப் பெறுவதில் முன்னிலைக்குச் சென்றுவிட்டன. 1991-லிருந்து 1996 வரை Foreign Direct Investment போன்றவை பெறுவதில் முன்னிலையில் இருந்த தமிழகம், பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இந்த நிலை இறுதியிலே வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக, தடைக்கல்லாக ஆகிவிட்டது என்பதனை நாம் உணரவேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

ஆந்திராவைப் பொறுத்தவரைக்கும் வெளிநாட்டு உதவிகள், மாநிலத்தின் ஆண்டுத் திட்ட மதிப்பீட்டில் 1995-96-ல் இருந்த 720 கோடியிலிருந்து, 3,996 கோடி ரூபாய் என சீர்திருத்தங்களை மேற்கொண்ட காரணத்தினால் அவர்கள் அதைப் பெற்றிருக்கிறார்கள். கர்நாடகத்தைப் பொறுத்தவரைக்கும், இத்தகைய சீர்திருத்தம் மேற்கொண்ட காரணத்தால், 1995-96-லே ரூ. 146 கோடி மட்டுமே பெற முடியும் என்ற நிலையிலிருந்து, தற்போது, 2,063 கோடி ரூபாயைப் பெற்று அவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். 1995-ல், மாண்புமிகு அம்மா ஆட்சிக்காலத்தில், ரூ.904 கோடியாக இருந்த நிலை மாறி, வெறுமனே ரூ.560 கோடியாக தமிழகத்திற்கு வெளிநாட்டு உதவி குறைந்துவிட்டதற்குக் காரணம், நாம் பிற மாநிலங்களைப்போல மைய அரசு விதிக்கின்ற, உலக வங்கிகள் போன்ற அமைப்புகள் விதிக்கின்ற, அந்த நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறிய காரணத்தினால், நிதி நிர்வாகத்தில் செம்மையான நடைமுறைகளைக் கடைபிடிக்கத் தவறிய காரணத்தால் ஏற்பட்ட விளைவுகள் என நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர் பேசி முடித்து விடட்டும். பேசி முடித்த பிறகு பேசுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உலக வங்கியிடமிருந்து பெறுகிற நிதியின் அளவைப்பற்றிச் சொன்னார்கள். சந்தேகம் என்ன வருகிறது என்றால், நாம் பெறுவது உதவியா?

கடனா? உதவியைப் பெற்று வளர்ச்சித் திட்டங்கள் செய்வது என்றால் ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. கே.சி. கருணாகரன்:** அதாவது, இந்த வளர்ச்சித் திட்டங்களுக்காகக் கடன் பெறுகிறோம். அது சரி, இதைத் திருப்பிக் கட்டுவதற்கான முறையில், கடனைக் கட்டுவதற்கான முறையில் என்ன திட்டம்? அதற்கு வட்டி எவ்வளவு கட்டப்போகிறோம்? எதன் மூலமாக இந்த நிதியை எதிர்காலத்திலே, கடனைக் கட்டுவதற்கு எங்கிருந்து உருவாக்கப்போகிறோம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படிப் பணத்தை வாங்குகிறோம். சாலை போடுவதற்குப் பணத்தை வாங்குகிறோம். சாலையில்லையென்றால், பேருந்துகளுக்குச் சாலையில்லையே, எங்கள் ஊருக்குச் சாலையில்லையே என்று சொல்லுகிறீர்கள். சாலை போடுவதற்குப் பணத்தை உலக வங்கியிடம் வாங்குகிறபோது, அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்ட, நட்டத்தில் ஓடுகிற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளையெல்லாம், நட்டம் இல்லாமல் இருப்பதற்கு தொள்ளாயிரம் கோடி நட்டமா, விட்டுவிடுங்களேன் அதை என்று நீங்கள் சொல்ல முன் வரவேண்டும். அந்த அளவிற்கு நீங்கள் நடவடிக்கைகளை எடுக்க உற்சாகமாக வரவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டங்கள் வேண்டும் என்று சொல்கிறீர்கள். உலக வங்கியிடம் வாங்கினால் எப்படித் திருப்பிக் கட்டுவோம் என்று சொல்கிறீர்கள். ரூ. 5,000 கோடி Elelctricity Board-க்கு, கிட்டத்தட்ட ரூ. 100 கோடிக்கு மேல் போக்குவரத்துக் கழகங்களிலே இழப்பு. ரூபாய் தொள்ளாயிரம் கோடி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே இழப்பு. ரூ.600 கோடிக்கு மேல் கூட்டுறவு நூற்பாலைகளிலே இழப்பு. இப்படிப்பட்ட இழப்பு ஏன் எதற்கு? வெறுமனே ஓர் ஆயிரம். இரண்டு ஆயிரம் அல்லது 5,000 பணியாளர்களுக்காக, ஆண்டுக்கு ஆயிரம் கோடி. 2 ஆயிரம் கோடி நட்டம் என்ற நிலையில் நிர்வாகத்தைச் செய்யலாமா? இது வேண்டாம் அல்லவா? வெஸ்ட் பெங்காலே இந்த முறையை மாற்றி, தற்போது ஆக்கப்பூர்வமான தொழில்களை மட்டும் அரசு வைத்துக்கொள்ள வேண்டும். நட்டத்தில் இயங்குகிற தொழில்களைத் தனியாருக்கு விற்றுவிடலாம் என்ற சீர்த்திருத்தத்திற்கு அவர்கள் வந்துவிட்ட நிலையில், தமிழகமும் அந்த முறைக்கு வர வேண்டும்



என்று சொல்லுங்கள். இல்லையென்றால் மாற்று வழியைச் சொல்லுங்கள் (குறுக்கீடு) அதைத்தான் சொல்லுகிறேன். இல்லையென்றால் மாற்று வழியைச் சொல்லுங்கள். கடனும் வாங்கக்கூடாது. வாங்கின கடனை கட்ட வேண்டும். அரசு இரண்டு சதவிகித Organised Sector என்று சொல்லக்கூடிய அமைப்புகளிலே இருக்கின்ற பணியாளர்கள் பாதுக்காக்கப்பட வேண்டும். ஆயிரக்கணக்கான கோடி நட்டம் என்ற நிலையிலே தொழிற்சாலைகள் ஓடிக்கொண்டு இருந்தாலும் கூட நட்டத்திலேயே அவற்றை ஓட்ட வேண்டும் என்ற நிலை வேண்டாம். மீதியிருக்கின்ற அந்த 98 சதவீத மக்கள், ஏழை மக்கள், சாதாரண மக்கள் இருக்கிறார்களே, 21.5 சதவீத மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் பட்டினியோடு இருக்கிறார்களே அந்த மக்களுக்கு உங்கள் திட்டம் என்ன? இதுபோன்ற நட்டங்களைக்கூட நாம் தவிர்க்க வேண்டாமா? அந்த நட்ட பணத்தை நாம் மிச்சப்படுத்தி எல்லோருக்குமே நாம் உதவ வேண்டாமா?

பிற்பகல் 5-10

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உலக வங்கியிலேயிருந்து பணத்தை வாங்கி சாலைகளுக்கும், போக்குவரத்துக்கும், பள்ளிகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்கிறபோது அதற்கான வட்டியையும் பணத்தையும், செலவுதான் செய்கிறோம். ஆகையால் எந்தவொரு திட்டச் செலவைச் செய்வதைப் பற்றியெல்லாம் ஒன்றும் இல்லை. ஏதோ தனியார் கம்பெனிகளைப் போல அரசாங்கமே தன்னுடைய சுய விளம்பரத்தைத் தேடிக் கொள்வதற்காகப் பல்வேறு திட்டங்களை நாமே அறிவிக்கிறோம். தேர்தல் காலத்திலே அறிவிக்கிறோம்; பட்ஜெட் காலத்திலே அறிவிக்கிறோம். சில இலவசமான திட்டங்களை நாமே உருவாக்கித் தந்துவிடுகிறோம். அதிலே பலவற்றையும் நாம் செலவு செய்துவிடுகிறோம். அது ஏன் என்று கேட்டீர்கள் என்றால் ஆட்சி நல்ல ஆட்சியாக இருக்க வேண்டும். மக்கள் நம்மை நம்ப வேண்டும்.

என்பதற்காக சில கவர்ச்சிகரமான திட்டங்களை, தனியார் கம்பெனிகளைப்போல அறிவித்துவிட்டு, அதிலே செலவு செய்துவிடுகிறோம். ஆகையால், அதற்காக வேண்டி ஒரு கடனை மக்கள் மீது திரும்பவும் சுமத்தி, அந்த உலக வங்கி சொல்கிற கட்டுப்பாடுகளுக்கு வருகிறபோதுதான் பிரச்சினைகள் உருவாகின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளாக இருக்கலாம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசைப் பொறுத்தவரைக்கும், அப்படிப்பட்ட எந்தத் விளம்பரத் திட்டங்களையும் அறிவிக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) பொதுவாகச் சொல்கிறீர்கள், சரி, பரவாயில்லை. ஆனால், எங்கள் ஆட்சியைப் பொறுத்தவரைக்கும், இதுபோன்ற அணுகுமுறையை நாங்கள் மேற்கொள்ளவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அடுத்து, விவசாயிகளுக்கு மின்சாரம்....

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன் வைத்திருக்கிற விவரம் உண்மையிலேயே நாடு எப்படி சிக்கலான நிலையில் இருக்கிறது என்பதை அந்த இடத்திலே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். அதாவது, இதைத் தவிர வழியில்லை, வேறு வழியிருந்தால் சொல்லுங்கள் என்கிறார்கள். நாம் முன் வைத்திருப்பது நிதிநிலை அறிக்கை. அதிலே ஓர் எதிர்க்கட்சி என்கிற முறையிலே பல கருத்துகளைத் தருகின்றோம். நம்முடைய எதிர்கால தமிழகம் எந்தத் திசையில் போக வேண்டுமென்பதற்கு, இது ஒன்றை மட்டுமே வைத்து விவாதிக்க சட்டமன்றத்தை விசேஷமாகக் கூட்டலாம். இன்னும்கூட ஆக்கப்பூர்வமான ஒரு கொள்கையை ஒவ்வொரு கட்சியும் வைக்கலாம். அல்லது நாடு தழுவிய பொது விவாதத்திற்கு ஏற்பாடு செய்யலாம். அதன்மூலமாக தமிழகத்தில் ஒரு வழி காண்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறியதெல்லாம் நீங்கள் ரோடு வேண்டுமென்று கேட்கிறீர்கள். extra பேருந்து உங்கள் பகுதிக்கு வேண்டுமென்று கேட்கிறீர்கள்; குடிநீர் வேண்டுமென்று கேட்கிறீர்கள்; பள்ளிக்கூடம் வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதற்குப் பணம் வேண்டும். நான்



ஏற்கெனவே சொன்னதைப் பொறுத்தவரைக்கும் இதற்கான நிதி ஆதாரத்தைப் பெருக்க ஒன்று வரி போட வேண்டும்; அல்லது மைய அரசு நமக்கு உதவ வேண்டும்; அல்லது வெளியிலே கடனை வாங்க வேண்டும். எங்கே செல்வது பணத்திற்கு? வரி போட்டால் வரி போடுகிறீர்களே, வரி போடுகிறீர்களே என்று சொல்கிறீர்கள். நாங்கள் ஏழைகளைப் பாதிக்காத வண்ணம், பணக்காரர்கள் மீது மட்டும் சில வரிகளைப் போட்டால், பணக்காரர்களுக்குக்கூட ஏன் வரி போடுகிறீர்கள் என்று கேட்கின்ற நிலையை உருவாக்குகிறீர்கள், அரசியல் காரணங்களுக்காக. எப்படி ஒரு ஆட்சியை நடத்துவது, மக்களுக்குத் திட்டங்களை மேற்கொள்வது என்று ஆலோசனை கூற வேண்டுமென்றுதான் நான் சொன்னேன்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைப் பற்றி மிகத் தெளிவாக ஒரு bureaucrat-ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிகூட அந்த அளவிற்கு விளக்கிக் கூற முடியாது; அந்த அளவிற்கு விளக்கி, அவைக்கும், நாட்டுக்கும், விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம் தந்திருப்பதைப் பற்றி, மாண்புமிகு அம்மா அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

1-9-1975, நாடு நன்கு அறிந்த நாள். விவசாயிகளுக்கு ஒரு கறுப்பு நாள் என்று கருதப்பட்ட நாள். அப்போது யூனிட்டுக்கு 0-12 காசாக இருந்த மின்சாரத்தை 0-16 காசாக உயர்த்திய அன்றைய தி.மு.க. அரசு, பல உழவர்கள் சுட்டுக்கொல்லப்படுவதற்கும் காரணமாக இருந்தது. எத்தகைய சூழ்நிலை தமிழ்நாட்டில் உழவர்களுக்கு எதிராக உருவாக்கப்பட்டது என்பதனை அவை மறந்திருக்காது; நினைவுகூற வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) பல நேரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அவையில் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் தற்போது விதிக்கப்பட்டிருக்கின்ற, தற்போது மேற்கொள்ளப்பட்டு இருக்கின்ற, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்பது பற்றி மிக மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதாவது, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஏற்படுத்தப்பட்டது தி.மு.க. ஆட்சியில்தான். 17-3-1999 அன்று மத்திய அரசு வகுத்துள்ள 1998 ஆம் ஆண்டைய ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தை ஏற்படுத்தியது தி.மு.க. அரசுதான். இப்போது அந்தச் சட்டம் என்னவானது? அந்தச் சட்டத்தில் என்ன சொல்லப்படுகிறது என்றால், மின்சார உற்பத்திச்

[திரு. சி. பொன்னையன்] [2003 ஏப்ரல் 1

செலவைக் கணக்கிட்டு அனைவருக்கும் கட்டணம் நிர்ணயிப்பது என்பது அந்தச் சட்டத்தினுடைய ஷரத்து. 1998 ஆம் ஆண்டு மத்திய அரசு வகுத்த ஒழுங்குமுறை ஆணைய சட்டத்தை ஒத்துக்கொண்டது உங்களுடைய அரசு. அதை ஒத்துக்கொண்டு, அந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு ஒழுங்குமுறை ஆணையத்தை அமைத்ததும் உங்களுடைய அரசு.

*பிற்பகல் 5-15*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். புகழேந்தி, அமைச்சர் பேசி முடிக்கட்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Mr. புகழேந்தி, நிறையப் பேசியாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** I am telling only the facts. 17-3-1999 அன்று மத்திய அரசு வகுத்த 1998 ஆம் ஆண்டு ஒழுங்கு முறை ஆணையச் சட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஏற்படுத்தப்பட்டது, உங்கள் ஆட்சியில். (குறுக்கீடு) நான் அதைத்தான் சொல்லிக்கொண்டு வருகிறேன். You allow me to continue. அந்தச் சட்ட்த்தினுடைய ஷரத்து என்ன என்பதை சொல்ல விரும்புகிறேன். 1998 ஆம் ஆண்டு ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தினுடைய நோக்கம் என்ன? சட்டத்திலே உள்ள ஷரத்து என்ன? அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியது யார்? அந்தச் சட்டத்தை ஒட்டி ஆணையத்தை அமைத்தது யார்? நீங்கள். The parent Act contains a provision-என்ன என்று அதிலே இருக்கிறது. மின்சார உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு, அனைவருக்கும் கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று அந்தச் சட்டத்திலே இருக்கிறது. அந்தச் சட்டத்தை ஒத்துக்கொண்டது நீங்கள். அந்தச் சட்டத்தை ஒத்துக்கொண்டு அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஓர் ஆணையத்தை அமர்த்தியதும் நீங்கள். இதைத்தான் நான் சொல்கிறேன். நடைமுறை உண்மையைச் சொல்கிறேன். அந்த ஒழுங்குமுறை ஆணையத்தினுடைய பணி என்ன? (குறுக்கீடு) இதனை ஏற்றுக்கொண்டது தி.மு.க. அரசு. (குறுக்கீடு)



2003 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்தச் சட்டத்தின் அடிப்படையில்...

**திரு. இ. புகழேந்தி:** அவர் தவறாகச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை, நான் தவறாகச் சொல்கிறேனா? Go through the contents of the Act, the provisions of the Act. என்ன இருக்கிறது? அதன் பிரகாரம், அந்தச் சட்டத்தின் பிரகாரம், மின்சார உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு, அந்தச் செலவினை அனைவருக்கும் கட்டணம் என்ற அடிப்படையில் கட்டணம் நிர்ணயிப்பது என்பதுதான் சட்டத்தினுடைய நோக்கம். No free electricity to any user, that is what was contemplated under the provisions of the Act.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மின்சார உற்பத்திச் செலவை அடிப்படையாக வைத்து, எல்லோருக்கும் கட்டணம் தீர்மானிக்க வேண்டும் என்று சொல்லப்பட்ட அந்த விதியை எடுத்துக்காட்டினார். அது எல்லோரும் ஒத்துக்கொண்டு இருக்கிற அடிப்படைதான். அது ஒன்றும் புதியது அல்ல. எல்லோருக்கும் என்பதற்கு உள்ள பொருள், பயன்படுத்துபவர் வணிகத் துறைக்குப் பயன்படுத்தலாம், வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தலாம், தொழில் துறைக்குப் பயன்படுத்தலாம். அப்படி பயன்படுத்துகிற வகைக்கு ஏற்ப எப்படி அந்தக் கட்டணத்தை அமைப்பது என்பதைத் தீர்மானிப்பதாகும். ஏன் என்றால் மொத்த உற்பத்தியில் ஒரு யூனிட்டுக்குச் செலவு என்பது ஒரே அளவு கணக்குதான். ஆனால், அதில் பயன்பாட்டில் பலவகை variety இருக்கிற காரணத்தினால்தான், அதுபற்றித் தீர்மானிப்பதற்கு அந்தக் குழுவிற்கு ஓர் அதிகாரம் இருப்பதாகச் சட்டம் கூறுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியினுடைய தலைவர், மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு நான் இதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அந்தச் சட்டத்தில் இருக்கின்ற கட்டாயம், உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு,

[திரு. சி. பொன்னையன்] [2003 ஏப்ரல் 1

the user should mandatorily pay; user-யாராக இருந்தாலும், எந்த அளவு கொடுக்கிறார் என்பது வேறு; பயனாளிகள் பயன்படுத்துகிற மின்சாரத்திற்குக் கட்டாயம் அவர்கள் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்பது சட்டத்தினுடைய ஷரத்து.

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டம் 1998-லே கொண்டு வருகிறபோதுகூட, யார் யாருக்கு அந்த மின் கட்டணத்தை விதிப்பது? எப்படி விதிப்பது என்ற அதிகாரத்தை மைய அரசு மாநில அரசுகள்மீது திணிக்கக் கூடாது--எங்களுக்கு, மாநிலங்களுக்கு அந்த அதிகாரத்தை விட்டுவிட வேண்டும். தமிழகத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இங்கு அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று எங்களுக்கு விட்டுவிட வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள், முதலமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள், அன்று மைய அரசை வற்புறுத்திக் கேட்டிருந்தார்கள். ஆனால், மைய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில், யாருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்க இயலாது. இதுதான் உண்மை. இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிற அந்தச் சட்டத்தின் அடிப்படையில், யாருக்கும் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் இலவசமாக மின்சாரம் வழங்க முடியாது. ஒருசில நுகர்வோர் பிரிவினருக்கு ஓரளவிற்குக் குறைந்த கட்டணம் வசூலிக்கலாம் என கூறப்பட்டிருக்கிறது. There cannot be free tariff. There should be atleast a minimum tariff for any type of consumer என்பதுதான் அந்தச் சட்டத்தினுடைய ஷரத்து. இதை தி.மு.க. அரசு அன்று ஒத்துக்கொண்டது. (குறுக்கீடு) சட்டத்தினை ஒத்துக்கொள்ளவில்லை என்று நீங்கள் அதை எதிர்க்கவும் இல்லை, எதிர்த்ததாகத் தெரியவும் இல்லை. பிற மாநிலங்கள் எல்லாம் ஒத்துக்கொண்டதைப்போல நீங்களும் அதற்கு ஒத்துக்கொண்டு இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 5-20*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir,...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Please, please.



2003 ஏப்ரல் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நிதியமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) முடித்தவுடன் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். நிதியமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) பேசி முடித்தவுடன் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Please, please. நான் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள்.

இந்தச் சட்டத்தை, இந்த ஒப்பந்தத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய தலைவர் (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புகழேந்தி அவர்களே, பிரேரணைகளை ஒழுங்குமுறை ஆணையத்திடம், இந்த ஒப்பந்தத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மார்ச் *2001*-இல் ஏற்றுக்கொண்டு, மத்திய அரசுக்கு ஒப்புதல் அளித்தார். அவர்கள் கூறியது தமிழக அரசைப் பொறுத்தவரையில் தேர்தலுக்குப் பிறகு ஒப்பந்தம் கையெழுத்து ஆகும் என்பதுதான். நேற்று பேசுகிறபோது மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள், அதை இல்லை என்று மறுத்தார். இதன் அடிப்படையில் அரசு ஆணையும் வெளியிட்டது. அந்த ஆணை என்ன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று படித்துக் காண்பித்தார். அது என்னவென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக இது பற்றி நேற்று எடுத்துக் கூறினார்.

*27-3-2001* அன்று அரசுத் துறைச் செயலாளர் எழுதியிருக்கிறார். மிகத் தெளிவாக. "I am to invite your kind attention..."- நேற்று படித்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் படித்ததை நான் மீண்டும் படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். மிகத் தெளிவாக முதல்வர் அவர்கள் நேற்று படித்துக் காண்பித்தார். அன்று தமிழகத்தினுடைய மின் துறைச் செயலாளராக இருந்தவர், மைய அரசுக்கு, ஒப்புதல் தெரிவித்து கடிதம் ஒன்றை எழுதினார். அந்தக்

கடிதத்தினுடைய அடிப்படையில், அந்தக் கடிதத்தில் அவர் எழுதி இருப்பது "Dear Thiru Ajay Shankar-D.O.Letter No.2779/Secretary-2001 Dated 28-3-2001" என்று.

" I am to invite your kind attention to the above D.O. Letter and I am to state that since it will take considerable time for the State Government to enter into MoU with the Government of India, I am directed to request that the funds under A.P.D.P. Scheme may be released to the Tamil Nadu Electricity Board as requested in the above letter." எனப் போட்டு, அந்த முன் லெட்டரிலே MoU பற்றியும் சொல்லி எழுதியிருக்கிறார்கள். Secretary தன்னிச்சையாக அந்த லெட்டரை அனுப்பி விடவில்லை. Secretary அந்த லெட்டரை அனுப்புவதற்கு முன்னால் a file was circulated to the Hon'ble then Minister for Electricity. அப்போது ஆற்காடு வீராசாமி அவர்கள் அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அதிலே அவர் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். கையெழுத்திட்டு ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

"In the circumstances, it is for orders whether the request of Accounts Member, T.N.E.B. may be accepted and the Finance Department may be requested to release the amount of Rs.65.54 crores to the T.N.E.B." (Interruption) One minute. "The Tamil Nadu Electricity Board requires the funds made available by the Ministry of Power under A.P.D.P. Scheme. It is for orders whether the letter as appended below, may be faxed to the Joint Secretary, Government of India" என்று கேட்டு அதற்கு ஏற்பளித்து மாண்புமிகு அன்றைய அமைச்சர், மின் துறை அமைச்சர், திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் ஒப்புதல் அளித்த பிறகு, அன்றைய மின் துறைச் செயலாளர் டெல்லிக்கு அனுப்பியிருக்கிறார். அதையொட்டி இவர்களுக்குக் கிடைத்த பணம் 65.54 கோடி ரூபாய். அதை மைய அரசிடமிருந்து வாங்கிக் கொண்டு, அனைத்து மின் பயனாளிகளுக்கும் மீட்டரைப் பொருத்துவோம் என்ற ஒப்பந்தத்தினை ஒத்துக்கொண்டு, 65.54 கோடி ரூபாயை வாங்கியது அன்றைய தி.மு.க. அரசு. அதற்கு ஒப்புதல் தந்தது அன்றைய மின் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். அவருடைய ஒப்புதலை ஏற்று, டெல்லிக்கு அந்த ஒப்புதலைத் தெரிவித்தது, அன்றைய மின் துறைச் செயலாளர்.



பிற்பகல் 5-25

இது நடைமுறை உண்மையாக இருக்கிறபோது, இப்படி விவசாயிகளுக்கெல்லாம், அவர்கள் பயன்படுத்துகிற மின் கட்டணத்திற்கு மீட்டர் பொருத்தலாம் என்று அந்த ஒப்பந்தத்தை ஏற்று, 65.54 கோடி ரூபாய் மைய அரசிடமிருந்து, அந்த கன்டிஷனுக்கு உட்பட்டு, பணத்தையும் முன்பே பெற்றுவிட்டு, புரட்சித் தலைவர் கொண்டுவந்த இலவச மின்சாரத் திட்டத்தைப் படுகுழியில் போட்டது, புதைகுழியில் போட்டது தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை மாற்றி (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். I will conclude. I will yield. One minute. அதை மாற்றி, அப்படி விவசாயிகளுக்கு நேரடியாக தான் போடக்கூடாது என்று, மைய அரசு மூலமாக போட வேண்டும் என்று அன்றைய தி.மு.க.வினுடைய தலைவர் திரு. கருணாநிதி எண்ணினாரோ என்னவோ, ஆனால், உழவர்கள் வயிற்றிலே அடிக்கக்கூடிய அளவிற்கு—உழவர்களுக்கு இலவச மின்சாரம் தர வேண்டும் என்ற திட்டத்தை தமிழ் மண்ணில் முதன்முதல் கொண்டுவந்ததே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்தான். அவர்கள் கொண்டுவந்த அந்தத் திட்டத்திற்கு முழுவதும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, காலையிலே பேசுகிறபோது, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னார். சாதாரணமாகச் சொல்லவில்லை. ஒரு நடிப்பிசைப் புலவரைப் போல் சொன்னார். புரட்சித் தலைவரிடம் பாடம் படித்த அவர் புரட்சித் தலைவரை விட்டு ஏனோ பிரிந்துவிட்டார். ஆனால், ஒருவேளை நடிப்புத் துறையிலே சென்று, அவர் நடிகராக வந்திருந்தால், செவாலியர் என்ற பட்டம் சிவாஜிக்கு கிடைத்திருக்காது; இவருக்குத்தான் கிடைத்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு அபாரமாக...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒரு விவரம் தெரியாது என்று கருதுகிறேன். அவர் நடிப்புத் துறைக்குத்தான் போக விரும்பினார். புரட்சித் தலைவர்தான் வற்புறுத்தி அவரை அரசியலுக்கு அனுப்பிவைத்தார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** எனவே, அந்த அளவிற்கு அவர் ஒரு நடிப்பையே நடித்துக் காட்டினார். ஏதோ இந்த இலவச மின்சாரத் திட்டத்தைத் தமிழகத்தில் கொண்டுவந்ததே தி.மு.க.வின்

தலைவர்தான் என்ற ஒரு தவறான தகவலை அவைக்குத் தந்தார். இலவச மின்சாரத் திட்டத்தை தமிழகத்திற்கு கொண்டுவந்தது புரட்சித் தலைவர். சிறு விவசாயிகளுக்கு, குறுநில விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம் என்பதனைக் கொண்டுவந்தது மாண்புமிகு அன்றைய முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஆனால், அதற்குப் பிறகு, பணக்கார விவசாயிகளுக்காகப் பரிந்துரை செய்து, அவர்களுக்காக ஓர் ஆணையை இட்டது உங்களது ஆட்சி. புரட்சித் தலைவர் ஆணையிட்டது ஏழை எளிய விவசாயிகளுக்கு, சிறு விவசாயிகளுக்கு, குறுநில விவசாயிகளுக்கு. நீங்கள் பணக்கார விவசாயிகளுடைய பிரதிநிதிகள் என்ற காரணத்தினால் உங்களுடைய தலைவர், பணக்கார விவசாயிகளுக்கு அந்தச் சலுகையைக் கொண்டுவந்தார். ஆனால், அதையும்கூட 1999 ஆம் ஆண்டு டெல்லிக்கு உங்களது தலைவர், அவருடைய உறுதுணை நண்பரான திரு. ஆற்காடு வீராசாமி-அன்றைய மின் துறை அமைச்சர் மூலமாக ஒரு கோப்பிலே கையெழுத்திட வைத்து, டெல்லிக்கு தெரிவித்து, நாங்கள் சீர்திருத்தத்தைக் கொண்டுவருகிறோம் மின் வாரியத்திலே; நட்டத்திலே இயங்கி வரும் மின் வாரியத்தை சீர்தூக்கி விடுகின்றோம். அனைத்து மக்களுக்கும், விவசாயிகள் உள்ளிட்ட அனைவருக்கும் மீட்டர் பொருத்தி, மின் கட்டணத்தை வசூலிப்போம் என்ற ஷரத்துடைய அந்த ஒப்பந்தத்திற்கு சம்மதம் செய்து, அந்த condition அடிப்படையிலே தருகிற அந்தப் பணம் ரூ.65.54 கோடியை வாங்கி விவசாயிகளுக்கு தீங்கிழைத்தது நீங்கள். ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைத் தந்து விவசாயிகள் வயிற்றிலே பாலை வார்த்தது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதனை அவைக்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1999 ஆம் ஆண்டில் தேர்தல் அறிக்கையிலே-அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே-தொடர்ந்து இலவச மின்சாரம் தொடரும் என்று உறுதியளித்து இருக்கிறீர்கள். 2001 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மீட்டர் பொருத்துவோம், கட்டணம் வசூலிப்போம் என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி ஒப்புக்கொண்டுவிட்டு, 65.54 கோடி ரூபாயை அவர்கள் மத்திய அரசிடமிருந்து உதவியும் பெற்றதற்குப் பின்னர், இலவச மின்சாரம்



தொடர முடியாது என்று சொன்னால், எப்படி 2002 ஆம் ஆண்டு நீங்கள் அதே உறுதிமொழியைக் கொடுத்தீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் இன்னும் முடிக்கவில்லை. ஆண்டிப்பட்டி தேர்தலின்போது, அந்த உறுதிமொழியைக் கொடுத்திருக்கிறீர்கள். இந்த அவையில் 2002 ஆம் ஆண்டு ஏபரல் மாதம் 2 ஆம் தேதி, இலவச மின்சாரம் தொடருமா என்ற சந்தேகம் தேவையில்லை. மீட்டர் பொருத்துவது, எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக மட்டுமேதவிர, நிச்சயமாக இலவச மின்சாரம் இரத்து ஆவதற்காக அல்ல என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆக, அதிலே ஏழை விவசாயி, பணக்கார விவசாயி என்கின்ற வேறுபாடு கிடையாது. எல்லோருக்கும்தான் இலவச மின்சாரம் என்று உறுதியளித்தீர்கள். ஏன் இப்போது அதிலேயிருந்து பிறண்டு போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

பிறபகல் 5-30

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் இதில் ஒரு சிறிதும் பிறண்டு போகவில்லை. சிறு விவசாயிகளுக்கு, குறுநில விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்பது புரட்சித் தலைவரின் கொள்கை. புரட்சித் தலைவரின் வழியிலே உழவர்களைக் காக்கின்ற புரட்சித் தலைவியினுடைய கொள்கையும் அதுதான். அதன் காரணமாகத்தான், உழவர்களுக்குத் தீங்கிழைத்த தி.மு.க., ஆட்சி தீங்கை இழைத்து, அந்த அமைச்சர் கையெழுத்திட்டு, மைய அரசுக்குத் தெரிவித்து, மீட்டர் பொருத்த ஒப்புக்கொண்டபோதிலும்கூட, இலவச மின்சாரத்தை-because one of the conditions contemplated, stipulated under the Act is that there cannot be free electricity to anybody, to any user. அப்படியிருக்கின்ற காரணத்தால், இலவச மின்சாரம் யாருக்குமே மின்சார வாரியம் தரமுடியாது என்றிருக்கிற காரணத்தால்-மின்சார வாரியத்திற்கு இருக்கின்ற காரணத்தால், உழவர்கள் மின்சார வாரியத்திற்குப் பணத்தைத் தந்து விடுகிறார்கள். அந்த உழவர்களுக்கு புரட்சித் தலைவி அவர்கள் மின்சாரத்தைத் தருகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் மானியமாக வழங்க முடியாது என்பது உண்மை. ஆனால், அரசாங்கம் இப்போது கொடுப்பதைப் போலவே,

அந்தப் பணத்தை, அந்தக் கட்டணங்களை மின்சார வாரியத்திற்குச் செலுத்துவதற்கு நிச்சயமாக அந்த ஆணையம் குறுக்கே நிற்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்குதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் தவறாக அந்தச் சட்டத்தின் விதிகளை interpret செய்கிறார். மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் கவனிக்க வேண்டுமாய் கேட்கிறேன். You are wrongly interpreting the provisions of the Central Act.

அந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும், the users should pay the electricity charge; Government is not the user; farmers are the users. Farmers have to pay the electricity charge to the producer என்பதுதான் சட்டத்தின் நிலை. அந்த அடிப்படையில் விவசாயிகள் கட்டுகிறார்கள். விவசாயிகளுக்கு அரசு அதைத் தருகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, In that case how are you in a position to pay the farmers now. More than...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-ல் இந்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மத்திய அரசில் அங்கம் வகித்தது. அப்போது ஆரம்பத்தில் அவர்கள் கொண்டுவர நினைத்த வரைவுச் சட்டத்தை என்னிடம் காண்பித்தார்கள். அதில் ஒரேயடியாக யாருக்கும் இலவச மின்சாரம் வழங்க முடியாது என்றிருந்தது. அதை நான் மாற்ற வைத்தேன். அந்தச் சட்டத்தில், The State Commission while determining the tariff under this Act, shall not show undue preference to any consumer of electricity, but may differentiate according to the consumer's load factor, power factor, total consumption of energy during any specified period or the time at which the supply is required or the geographical position of any area, the nature of supply and the purpose for which the supply is required என்றிருக்கிறது. Shall not show undue preference to any consumer of electricity என்று இந்தச் சட்டத்தில் வருகின்றபோதே, யாருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்க முடியாது என்பது இந்தச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், உட்பிரிவு 5 என்பதை நான் சேர்க்க வைத்தேன் இந்தச் சட்டத்தில். அதிலே என்ன வருகிறது என்றால்



'If the State Government requires the grant of any subsidy to any consumer or class of consumers in the tariff determined by the State Commission under this Section, the State Government shall pay the amount to compensate the person affected by the grant of subsidy in the manner the State Commission may direct' என்று தெளிவாக இருக்கிறது. '..... in the manner the State Commission may direct as a condition for the license or any other person concerned to implement the subsidy provided for by the State Government'. —அதாவது, இந்த ஆணையத்தைக் கொண்டுவந்த பிறகு, யாருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்க முடியாது. ஆனால், மாநில அரசு விரும்பினால், எந்த ஒரு பிரிவினருக்கும் ஆகின்ற கட்டணத்தை, மாநில அரசே செலுத்தலாம் என்று இந்தச் சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கிறது. அந்த ஷரத்தை நான் சேர்க்க வைத்தேன் 1998-ல். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படிதான்—இப்போது தி.மு.க. அரசு ஒப்புக்கொண்டதால்—தி.மு.க. அரசு இந்த ஆணையத்தை ஏற்படுத்திவிட்டது. State Electricity Regulatory Commission என்ற ஆணையத்தை தி.மு.க. அரசு ஏற்படுத்திவிட்டது. அதன்பிறகு மீட்டர்களைப் பொருத்துகிறோம் என்று தி.மு.க. அரசு ஒப்புக் கொண்டுவிட்டது. Accelerated Power Development Programme-ன்கீழ், முன்பணத்தை வாங்கிக்கொண்ட தி.மு.க. அரசு ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுகிறோம் என்று ஒப்புக்கொண்டு, முன்பணத்தை வாங்கிவிட்டது. இதையெல்லாம் நானும் தெளிவுபடுத்தினேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இப்போது தெளிவுபடுத்தினார்கள்.

*பிற்பகல் 5-35*

அதன் பின்னர், நாங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டோம். வந்தபிறகு ஏற்கெனவே தி.மு.க. அரசு ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடவேண்டிய நிர்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது. அதேசமயத்தில் சிறு குறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது; அவர்களுக்கு வழங்கப்படுகிற இலவச மின்சாரம் தொடர்ந்து அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் இப்போது என்ன செய்திருக்கிறோம்? அந்த ஆணையம் ஒரு கட்டணத்தை விதித்திருக்கிறது. அந்தக் கட்டணத்தை விவசாயிகள் மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். ஆனால், இந்தச் சட்டத்தில் இருக்கின்ற ஷரத்துப்படி, இதில் இருக்கின்ற provisionபடி, மாநில

அரசே அந்தக் கட்டணத்தை விவசாயிகளுக்குக் கொடுக்கிறது. அப்போது இலவச மின்சாரம் தொடர்கிறது என்றுதானே அர்த்தம்?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார், காலையிலே. யார் கொண்டு வந்தார்கள் இலவச மின்சாரம்; இலவச மின்சாரம் யார் கொடுத்தார்கள் என்பது பெரிதல்ல. அனைத்து விவசாயிகளுக்கும் கொடுங்கள் என்றுதான் கேட்டேன்; அவர் தன்னுடைய வாதத்திற்கு ஏற்றபடி துரைமுருகன் இப்படிச் சொன்னார் என்றார். அது ஒன்று. இரண்டாவது, மீட்டர் பொருத்தி அங்கே நிதி வாங்கினார்கள் என்று சொன்னார். அதில் எல்லாம் கையெழுத்துப் போட்டிருக்கலாம். எங்கேயாவது திராவிட முன்னேற்றக் கழகம் அந்த ஒப்பந்தத்திலே 'நாங்கள் இலவச மின்சாரத்தை இரத்து செய்கிறோம்' என்று எழுதி அதன்கீழ் கையெழுத்துப் போட்டதாக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதைச் செய்திருக்கிறது என்பதை நிரூபிக்க முடியுமா? மூன்றாவதாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமே அப்படித்தான் இருக்கிறது. 1998 ஆம் ஆண்டு சட்டத்தின்கீழ் State Electricity Regulatory Commission என்ற ஆணையத்தை அமைத்துவிட்டாலே யாருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்க முடியாது என்று அந்தச் சட்டத்திலே இருக்கிறது.

***திரு. துரைமுருகன்:** நாளைக்கு வேண்டுமானால், அந்தப் புரவிஷனை எங்களுக்குக் கொடுங்கள், பார்க்கிறோம். பொதுவாகவே State Electricity Board Regulatory Commission வந்திருக்கிறது; உலக வங்கி ஒன்று இருக்கிறது; தி.மு.க. ஆட்சியில் ஒப்பந்தம் போட்டார்கள் என்றெல்லாம் சொல்லி, அதனால்தான் மின்சாரத்தை இப்படி விநியோகம் செய்ய வேண்டியிருக்கிறது. இருந்தாலும், நாங்கள் பணம் கொடுக்கிறோம். பொதுவாக ஒன்றைச் சொல்கிறேன். இதுவெல்லாம் இப்போது வந்தது. ஆனால் 1991-லே நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே இலவச மின்சாரத்தை இரத்து செய்தீர்கள். இந்தமாதிரி கண்டிஷன் எல்லாம் இருந்தது இல்லை. என்னவோ உங்களுக்கு இலவச மின்சாரத்தின்மேல் ஒரு aversion. அதனால்தான் அன்றைக்கே செய்தீர்கள்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் மீது என்றுமே வெறுப்பைக் காட்டுகிற உங்கள் தலைவருக்கு வேண்டுமானால் இலவச மின்சாரத்தின்மீது aversion இருக்கலாம். எனவேதான் மாண்புமிகு திரு. வீராசாமி மூலம் இப்படி எழுதச் சொல்லிவிட்டார். இலவச மின்சாரத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்ததே புரட்சித் தலைவர்தானே? எனவே, இலவச மின்சாரத்தின்மீது aversion என்பது புரட்சித் தலைவர் ஒரு காலத்தில் கொண்டு வந்த திட்டம் என்பதால், ஏதேனும் ஒருநாள் அதற்குக் குழி தோண்டி புதைக்க வேண்டுமென்பது உங்கள் தலைவருடைய எண்ணமேயொழிய அது எங்களுடைய எண்ணம் அல்ல. உழவர்களுக்குப் பாதுகாப்பை அன்று தந்தார் தலைவர்; இன்று தந்தார்; தருகிறார் எங்கள் தலைவி; இதுதான் உண்மை; நிலைமை என்பதனை நான் கூற விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே தெளிவாகக் குறிப்பிட்டுவிட்டார்கள். அரசு விரும்பினால் அந்தத் தொகையைச் செலுத்த முடியும். அதனால்தான் நாங்கள் செலுத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறது; நான்தான் அதற்குக் காரணம்; சேர்த்ததற்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அதையேதான் நான் சொல்கிறேன். 100 கோடி ரூபாய் தருகிறீர்கள். இன்னும் ஒரு 100 கோடி ரூபாய் தாருங்கள் என்று நான் சொல்கிறேன். அதைத்தர முடியாவிட்டால், விவசாயிகளுக்கு உதவுவதற்கு உங்களுக்கு மனம் இல்லை. நாங்கள் எவ்வளவோ வாதாடியும், எவ்வளவோ எடுத்துரைத்தும், இலவச மின்சாரம் தொடர்வதற்கு நீங்கள் இடமளிக்காத காரணத்தால், ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், இந்த அரசாங்கத்தினுடைய இந்தப் போக்கைக் கண்டித்து, நாங்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணக்கார விவசாயிகளுக்காக வாதிட்டு, காங்கிரஸ் தலைவர், காங்கிரஸ் கட்சி, பணக்காரர்களுடைய கட்சி என்பதனை நிரூபிக்கின்ற வகையில் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தவறான செய்தியைத் தந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது வீண்பழி சுமத்தி, நீங்கள் செய்த தவறுகளை மறைக்கின்ற காரணத்தால் நாங்களும் அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் என்பது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லோருக்கும் மிக முக்கியமான கோரிக்கை. அதிலும் குறிப்பாக உலக வங்கியைக்கூட காரணம் காட்டுகிறீர்கள். நலிந்துபோன விவசாயத்தை—69 சதவீதத்திலிருந்து விவசாயிகள் மிகக் குறைந்து, 50 சதவீத உற்பத்தியிலிருந்தும் குறைந்து இன்று 17 சதவீத உற்பத்திக்கு வந்திருக்கிறார்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்னொரு உரையாற்றுவதற்கு வாய்ப்புக் கொடுக்க முடியாது. உங்களுடைய நிலைப்பாடு என்ன, என்று சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்கு நீங்கள் அக்கறை செலுத்த வேண்டுமென்று உங்களிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறோம். இன்னும் மேற்கொண்டு ஆகவேண்டிய செலவு 81 கோடி ரூபாய். இந்த 81 கோடி ரூபாயை வழங்கி, இலவச மின்சாரம் தொடருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்ற பணிவன்பான கோரிக்கையை, உங்களை வணங்கி, நான் மீண்டும் வைக்கிறேன். அப்படி அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால், ஒட்டுமொத்தத் தமிழக விவசாயிகளின் நலன் கருதி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இதைக் கண்டித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*பிற்பகல் 5-40*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், ஏன் இன்னும் சொல்லப்போனால், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், இரண்டு நாட்களாக விவாதம் செய்தபோது,



அவர்கள் வைத்த வாதம், ஏதோ தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், சிறு குறு, இன்னும் பெரு விவசாயிகள் அத்தனை பேருக்கும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டதைப் போலவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வந்து, அதை எடுத்துவிட்டது போலவும் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

நான் இங்கே ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு seniority அடிப்படையிலே கொடுக்கப்பட்டு வந்தது. 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன், அவர்கள் போட்ட உத்தரவு, அந்த முன்னுரிமை அடிப்படையை மாற்றி, எந்த விவசாயி 25,000 ரூபாய் பணம் கட்டுகிறாரோ அவருக்கு முன்னுரிமை அடிப்படையிலே மின் இணைப்பு கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும், அப்படி மின் இணைப்பு பெற்ற அனைத்து விவசாயிகளும், ஒரு H.P.-க்கு 250 ரூபாய், ஆண்டுக்குக் கட்டிக் கொண்டுதான் இருந்தார்கள். இன்னும் கட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒன்றும் அவர்கள் இலவசமாக எந்த விவசாயிக்கும் தரவில்லை இப்படி அந்தப் பெரு விவசாயிகள்—இப்போது எஸ்.ஆர்.பி. சொல்கிறாரே--துரைமுருகன் கையை மேல் தூக்கிக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்து சொன்னாரே--பெரு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று; அவருடைய ஆட்சியிலே இப்படி மின் இணைப்பு பெற்ற விவசாயிகள், அது சிறு குறு, பெரு விவசாயிகள் என்று வித்தியாசம் இல்லாமல். 25,000 ரூபாய் பணம் கட்டி, மின் இணைப்பு பெற்ற அத்தனை விவசாயிகளும் H.P. ஒன்றுக்கு 250 ரூபாய் ஆண்டிற்கு கட்டிக் கொண்டுதான் வந்தார்கள். இன்னும் கட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய ஆட்சியில் இலவச மின்சாரம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது என்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. எனவே, மக்களை ஏமாற்றுவதற்காக, திசை திருப்புவதற்காக, ஏதோ அவர்கள் ஆட்சியில் மின்சாரம் இலவசமாகக் கொடுக்கப்பட்டதைப் போலவும், எங்களுடைய ஆட்சி வந்தவுடன் அதை எடுத்துவிட்டது போலவும் பேசுகிறார்கள். அது உண்மை அல்ல. எனவே ஏற்கெனவே இருந்த முறையிலே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, சிறு குறு விவசாயிகள் எந்தவகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, அவர்கள் கட்ட வேண்டிய அந்த மின் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை நிலை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) என்ன, நீங்களும் அந்தப் பணக்கார விவசாயிகள் பக்கம் பேசுகிறீர்களா?

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் விவாதிப்பதற்காக அல்ல. பல தடவை இந்த அவையிலே விவாதிக்கப்பட்டு சொல்வதனால் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விவசாயிகளுக்கு விரோதமாக ஓர் ஆணையத்தை அமைப்பதற்கு agreement-லே கையெழுத்துப் போட்டார்கள் என்று சொல்வது உண்மை. அவர்கள் செய்த தவறையே நம் அரசும் செய்ய வேண்டுமா? அதைவிட இந்த விவசாயிகளுக்கு நன்மை செய்கின்றவகையிலே, நீங்கள் அந்த ஆணையத்தை இரத்து செய்வதற்கு, ஏன் ஒத்துழைக்கக் கூடாது? (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் கேட்கிறேன். இன்னொன்று என்னவென்றால், பெரிய விவசாயிகள் ஏற்கெனவே கட்டணம் கட்டிக் கொண்டு இருக்கிறபோது, சிறு, குறு விவசாயிகளுக்கு இப்போது நாம் மானியம், பணமாகக் கொடுக்கிறபோது, ஏன் இந்தக் கட்டண உயர்வு என்பதைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கட்டண உயர்வே இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் தொடர்கிறது. சிறு விவசாயிகளுக்கும், குறு விவசாயிகளுக்கும் தொடர்கிறது. தொடரும். தி.மு.க.-வினர் கூறுவது உண்மைக்கு மாறானது. மின்சாரத்திற்கு மீட்டர் பொருத்த வேண்டுமென்று மைய சட்டத்திற்கு ஒப்புதல் கொடுத்து, அவர்கள் அதற்கு letter எழுதிவிட்டார்கள். அதுதான் உண்மை. அம்மா அவர்களைப் பொறுத்தவரைக்கும். இலவச மின்சாரம் சிறு, குறு நில உழவர்களுக்குத் தொடரும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து வருகிறது. இதுதான் உண்மை நிலை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இந்த அரசும் ஈடுபடுகிறது என்பதுதான் அதிலே இருக்கிற உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பழனிசாமி, ** என்ற சொல் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஒப்பந்தம் போட்டு, 65 கோடியே 54 இலட்சம் ரூபாய் பணம் வாங்கியது, எல்லோருக்கும் மீட்டர் போடுகிறோம் என்று சொல்லி வாங்கிவிட்டார்கள். நாங்கள் அதை மீறி இலவச மின்சாரத்தை எல்லோருக்கும் தந்து கொண்டிருக்கிறோம்; தர ஆணையிட்டிருக்கிறோம். இதுதான் உண்மை. சிறு உழவர்களுக்கும், குறு நில உழவர்களுக்கும் இலவச மின்சாரத்தை அரசே தருகிறது. அவர்கள் போட்ட ஆணைப்படி, அப்படியே அவர்கள் ஒப்புக்கொண்ட ஒப்பந்தப்படி தொடர்ந்து இருக்குமேயானால், எல்லோருக்கும் மீட்டர் போட வேண்டிய நிலை வந்திருக்கும். அதைத் தடுத்தது மாண்புமிகு அம்மா அவர்கள்.

பிற்பகல் 5-45

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு கணக்கையும் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 20 ஆயிரம் விவசாயிகளுக்கு மட்டும்தான் இலவச இணைப்புகள் கொடுக்கப்பட்டன. ஆனால், அவர்கள் காலத்திலே 1,80,000 பம்பு செட்டுகளுக்கு, விவசாயிகள், நான் சொன்னதைப்போல ஒரு H.P.-க்கு ரூ.250 வீதம் பணம் கட்டிக்கொண்டுதான் இருந்தார்கள். அவர்கள் கொடுத்தது 20 ஆயிரம் விவசாயிகளுக்குத்தான் இலவச மின்சாரம்; 1,80,000 பேர் அந்தக் காலத்திலும், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், மின் இணைப்புக்கு, மின் கட்டணம் கட்டிக்கொண்டுதான் இருந்தார்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் சம்பந்தமான பிரச்சினை மட்டுமல்ல; கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றைத் தனியாருக்குக் கொடுக்கும் முயற்சியைக் கண்டித்தும், புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் 430 கோடி ரூபாய் வரி விதிப்பைக் கண்டித்தும் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. ஜி. பழனிசாமி:** இப்போதும் நான் என்ன சொல்கிறேன் என்றால், வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்கிற அந்தக் காரணத்திற்காக அல்ல; பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகம், சிறு குறு விவசாயிகளுக்கும், பெரு விவசாயிகளுக்கும் ஒரு பெரிய பாதகத்தை விளைவித்துவிட்டது என்று சொல்கிறது நம்முடைய அரசு. ஏன், அதே பணியிலே நாமும் ஈடுபட வேண்டுமா என்பதுதான் இன்றைக்கு இருக்கிற கேள்வி. ஆகையினால் இதைக் கண்டித்து நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் படைத்த, பெரு விவசாயிகளுக்குப் பாடுபடுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கம்யூனிஸ்ட் இயக்கங்களும் சேர்ந்து கொண்டது என்பது உண்மையிலே வேதனைக்குரிய ஒன்று. தலைவர்கள் உங்களது இந்தச் செயலை, உங்கள் தொண்டர்கள் மன்னிக்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேதான், இந்தியத் துணைக் கண்டத்திலேயே, வீட்டு உபயோகத்திற்கு மிகக் குறைந்த அளவு மின் கட்டணம் விதிக்கப்படுகிறது. கர்நாடகத்திலே ஒரு யூனிட்டுக்கு ரூ.1.85-லிருந்து ரூ.4.60 வரை இருக்கிறது. ஆந்திர மாநிலத்திலே ரூ.1.45-லிருந்து ரூ.5.80 என்று இருக்கிறது. குஜராத்திலே ரூ.2.70-லிருந்து ரூ.4.70 வரையும் இருக்கிறது. கேரளாவிலே ரூ.1.10-லிருந்து ரூ.5.45 என்ற அளவிலே இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலேதான், இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகக் குறைந்த அளவு, விவசாயத்திற்கும் மின் கட்டணம்--250 ரூபாய் per horse power என்பது இந்தியாவிலேயே மிகக் குறைந்த விவசாய மின்கட்டணம்; பெரு விவசாயிகளுக்குக்கூட, இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் குறைவு. சிறு விவசாயிகளுக்கும், குறுநில விவசாயிகளுக்கும் மின் கட்டணம் என்பது, தமிழகத்தில் இல்லையென்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசுகின்றபோது, பொது விநியோகப் பொருட்களுக்கான--Public Distribution System பொறுத்தவரைக்கும் அரிசி விலையை 6 ரூபாயாக உயர்த்திவிட்டது பற்றிக் கூறினார்கள்.



ஆனால், தமிழகத்திலேதான், அதிலும்கூட, இந்தியாவிலேயே மிக குறைந்த அளவிற்கு, ரூ.3.50 ஒரு கிலோவிற்கு என்று 10 கிலோ தருகின்ற மாநிலம், இந்தியாவிலேயே தமிழகம் மட்டும்தான். பிற அனைத்து மாநிலங்களிலும் உணவு தானியங்களுடைய Publi Distribution System rate அதிகமாக இருக்கிறது. ஆந்திராவிலே B.P.L.-க்கு ரூ.5.25; அருணாசலப் பிரதேசத்தில் ரூ.6.15; அசாமிலே ரூ.6.27; பீகாரிலே ரூ.8.85; ஜார்கண்டிலே ரூ.6.22; அதைப்போலவே இமாச்சலப் பிரதேசத்திலே 7.00 ரூபாய்; ஜம்மு-காஷ்மீரிலே ரூ.6.25; கர்நாடகத்திலே ரூ.6.15; கேரளாவிலே ரூ.6.20; மத்தியப் பிரதேசத்திலே ரூ.6.50; சட்டீஸ்கரிலே ரூ.6.15; மகாராஷ்டிராவிலே ரூ.6.00; மணிப்பூரிலே ரூ.6.21; மிசோராம் ரூ.6.15; மேகாலயா ரூ.5.38; நாகாலாந்து ரூ.6.15; ஒரிசாவிலே ரூ.6.30; பஞ்சாப்பிலே ரூ.5.77; இராஜஸ்தானிலே ரூ.6.15; திரிபுராவிலே ரூ.6.15; உத்தரப்பிரதேசத்திலே ரூ.6.15; உத்தராஞ்சல் ரூ.6.15; வெஸ்ட் பெங்கால் ரூ.6.15; சண்டிகர் ரூ.6.02; இதுபோன்று டெல்லியிலே ரூ.6.15 என்று இந்தியாவிலேயே எல்லா மாநிலங்களிலும், இப்படி அதிகமான அளவிற்குப் பொது விநியோகத்திலே அரிசி, உணவு தானியங்கள் தருகின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் பொது விநியோகத்திலே 10 கிலோ அரிசி கிலோ ஒன்று ரூ.3.50 மட்டுமே என்ற நிலையில் இங்கே தரப்படுகிறது.

*பிற்பகல் 5-50*

அரசு ஊழியர்கள் பற்றி, இதற்கு முன்னால் அவையிலே பேசிய பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரம், ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகையில் 60 சதவீதத்தை வழங்காமல் ஒத்திவைத்ததன் கடுமையை, இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் அறிந்தது. இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட தொகை 1,800 கோடி ரூபாய் அளவுக்குத் தற்போது உயர்ந்துவிட்டது. எந்தவொரு மாநில அரசும், கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ள நிலையில், இந்த நிலுவையை வழங்க இயலாத சூழல் உருவாகிவிட்டிருக்கிறது. முந்தைய அரசு, அரசு ஊழியர்களுக்கு அதிக அளவிலான சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை உயர்த்திவிட்டு, ஆனால் அதை அவர்களுக்கு வழங்கும் சுமையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசின்மீது சுமத்திவிட்டது. எனவே, முந்தைய அரசுபோல பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல், அரசு ஊழியர்களுக்கு அத்தொகை உறுதியாகக்

கிடைக்கும்வகையில், நடவடிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எடுத்துவருகிறது. அரசின் நிதியாதாரம் மற்றும் செலவினத் தன்மையைக் கணக்கில் கொள்ளாது வளர்ச்சியைப் பாதிக்கும் இந்தச் சம்பளம் மற்றும் ஓய்வூதியப் பலன்களை முந்தைய அரசு எப்படி அறிவித்தது என்பதை முந்தைய முதலமைச்சர், மக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் விளக்கியாக வேண்டும்.

மத்திய தலைமைக் கணக்காயர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இந்த அரசின் கடுமையான பொருளாதார நெருக்கடி சம்பந்தப்பட்ட குறிப்புகளை, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் ஏற்கெனவே பேசுகிறபோது கூறியிருக்கிறேன். எனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட தவறான நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இந்த நிலை உருவானது. அரசின் இதர செலவினங்கள், குறிப்பாக மானியங்கள், உணவு மானியங்கள் உட்பட வட்டி மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான உதவிகள் போன்றவை அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இவை அனைத்தும் நிதிநிலையைச் சீர்படுத்துவதற்கான முயற்சிகளாகும். அரசு அலுவலர்களுக்கான ஊதியங்கள், படிகள்கூட சற்று நிலுவையில் வைக்கக்கூடிய கட்டாயம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியங்களைப் பொறுத்தவரைக்கும், இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் ஓய்வூதியத் தொகையைக் கட்டுப்படுத்த முடியாமல் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. குறிப்பாக, நடப்பாண்டில், நிதிநிலை அறிக்கையில், இதற்காக *3,175.54* கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது, திருத்திய மதிப்பீட்டில், *3,488.20* கோடி ரூபாய் என்ற அளவுக்குப் போகக்கூடும். *2003-2004* ஆம் ஆண்டிற்கு இது *4,211.59* கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. *2003-2004* ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில், இது மேலும் உயரும். இதனை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதே ஒரு சவாலாக தற்போது இருந்து வருகிறது. குறிப்பாகச் சொல்லப் போனால், *33* ஆண்டுகளுக்குப் பிறகுதான், இந்த நிலை தொடர்ந்தால், முழு ஓய்வூதியம் பெறமுடியும். இதைத்தான் அனைத்து மாநிலங்களும் பின்பற்றி வருகின்றன. மத்திய அரசும் இதைத்தான் பின்பற்றி வருகிறது. தமிழ்நாட்டில்மட்டும் ஓய்வூதியப் பணிக் காலத்தைக் குறைத்துக்கொண்டு, எல்லோருக்கும் அதிக அளவில் ஓய்வூதியப் பணப் பயன் கிடைப்பது என்பது எவ்விதத்தில் பொருத்தமாக இருக்கும்?



திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், இங்கே பேசுகிறபோது, அவருடைய ஆளுங்கட்சி, மேற்கு வங்கத்தில், அரசு ஊழியர்களுக்கு *33* ஆண்டுக் காலம் பணி முடித்தால்தான் முழு ஓய்வூதியம் அளிக்கிறார்கள் என்பதனை மறந்துவிட்டு அவர் பேசினார்.

அதைப்போல, கடைசி *10* மாதங்களில் பெறப்படும் சராசரி அடிப்படை ஊதியத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் ஓய்வூதியத் தொகையை எல்லா மாநில அரசுகளும், தங்களுடைய ஊழியர்களுக்கு வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில்தான் நாங்களும் நமது அரசு ஊழியர்களுக்கு இந்த மாற்றத்தை எடுத்து வந்துள்ளோம். மத்திய அரசும், இந்த விதிப்படிதான் தன்னுடைய ஊழியர்களுக்கு வழங்கி வருகிறது. இதனைத் தமிழ்நாட்டிலுள்ள ஊழியர்களுக்குமட்டும் உயர்த்தி, அதாவது கடைசி மாதத்தில் ஓய்வு பெறும்போது கிடைக்கின்ற அடிப்படை ஊதியத்தைக் கொடுக்க வேண்டும் என்பது, நியாயமான அணுகுமுறை இல்லை. காரணம், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஓய்வுபெறும் கட்டத்தில், விடுப்பு ஒப்பளித்துப் பணமாக்கும் முறையிலும், மத்திய அரசும் மற்ற இதர மாநில அரசுகளும் அதிகபட்சமாக எவ்வாறு பணமாக்கலாம் என்ற விதி உள்ள நிலையில், நமது மாநிலத்தில்மட்டும் இதனை *330* நாட்களாக உயர்த்தி வழங்குவது முறையாகுமா என எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும், இதைப் பணமாக வழங்குகிறபோது இதரப் படிகளைச் சேர்ப்பதும், இந்த நிதிப் பளுவை மாநில அரசு ஏற்கக்கூடிய சூழ்நிலையிலும், வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட முறையைப் பின்பற்றாத நிலையில், இதனைச் சீர்செய்யும் முயற்சியாக சில மாற்றங்களைச் செய்தோம்.

மேலும், commutation முறையில் சில வழிமுறைகள் இருக்கின்றன. இதன்படி, ஓய்வூதியத்தின் ஒரு பங்கை மொத்தமாக வழங்கி வருகிறோம். இந்த அளவுக்கே நிதிநிலை கடுமையாக இருக்கும்போதும்கூட, இவற்றை முழுமையாக கைவிடலாமா என்ற ஆலோசனை வழங்கப்பட்டபோதிலும்கூட, அப்படிச் செய்யாமல் அரசு ஊழியர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் எண்ணிய காரணத்தால், *40* சதவீதம் என்பதற்குப் பதிலாக $33^1/_3$ சதவீதம் என்ற விகிதாசாரத்தில் அவர்களுக்கு இதை வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்தார்கள். பெரும்பாலான மாநிலங்கள் இந்த $33^1/_3$ சதவீதத்தைத்தான் வழங்கி வருகின்றன. எனவே, அரசு ஊழியர்கள்

சலுகைகள் பறிக்கப்பட்டன என்பது உண்மைக்கு மாறான ஒன்று. அகில இந்திய அளவிலே பிற மாநிலங்களில் இருக்கின்ற நிலையைத்தான் தமிழகமும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

*பிற்பகல் 5-55*

ஓய்வூதியத்தில் ஒரு பகுதி மொத்தமாகக் கணக்கிடப்பட்டு, ஒரு அட்டவணை 4 சதவீத வட்டி வீதத்தில் தயாரிக்கப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளது. இந்த 4 சதவீத வட்டி தற்போதுள்ள சந்தை நிலவரத்தைக் கருதி, 8 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. மத்தியப் பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்களும், இதே நிலையைத்தான் தற்போது கடைப்பிடித்து வருகின்றன.

Gratuity வழங்கும் முறையில் எந்தவித மாற்றத்தையும் நாம் செய்யவில்லை. இந்தத் தொகையை ரொக்கமாக வழங்குவதில் சிறிது சங்கடங்கள் இருக்கின்றன. இதனைத் தவிர்க்கத்தான் பாதித் தொகையைப் பணமாகவும், மீதி பாதித் தொகையைச் சிறுசேமிப்புப் பத்திரமாகவும் வழங்குவதற்கு அரசு ஆணையிட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் முக்கியமான ஒன்று; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது வரியைப் பொறுத்தவரைக்கும், வரிவிதிப்பிலே எத்தகைய அணுகுமுறைகளை அவர்கள் கையாண்டார்கள் என்பதனை நான் அவைக்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தி.மு.க. ஆட்சியிலே ஒருபுறம் எங்கு பார்த்தாலும் கடனை வாங்கி, வாங்கிய கடன்மூலம் வருவாய் செலவுகளுக்கு முக்கியத்துவம் தந்து, வளர்ச்சித் திட்டங்களை மறந்த நிலையிலே அவர்கள் செயல்பட்டார்கள். இன்னொருபுறம், அவர்கள் வரிவிதிப்பிலே வணிகர்களுக்கும் தொழில் துறையைச் சார்ந்தவர்களுக்கும் சலுகைகளைச் செய்தார்கள். குறிப்பாக அப்போது தி.மு.க. ஆட்சியிலே வணிக வரித் துறை அமைச்சராக இருந்தவர் அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி ஆவார். அவர் அந்தப் பொறுப்பிலே இருந்துகொண்டு Commissioner for Commercial Taxes என்ற நிலையில் ஒரு அதிகாரியை நியமித்து, அந்த அதிகாரி மூலமாக, கிட்டத்தட்ட 145.66 கோடி ரூபாய் வரிச் சலுகைகளை அதிகார வரம்பிற்கு மீறி வணிகர்களுக்கும், தொழில் அமைப்புகளுக்கும் வழங்குகிற ஆணையை இட்டார். அப்படி அவர் ஆணையிட்டபோது,—



தி.மு.க.-காரர்கள், அவர்கள் அறையிலே இருந்தால், அவர்கள் மீண்டும் அவைக்கு வரவேண்டும்; உங்கள் தலைவர் உங்களுக்குக்கூடத் தெரியாமல், எப்படிப்பட்ட தவறுகளை எல்லாம் செய்து, தமிழக கஜானாவை ஒருபுறம் காலியாக்கினார்; மற்றபடி அவர் தமிழகத்துக்கு எத்தகைய துரோகங்களைச் செய்தார் என்பதற்கெல்லாம் சில ஆதாரங்களைக் காட்டுவதாக இருக்கிறேன்; அதை வந்து நீங்கள் கேட்க வேண்டும்; அல்லது அங்கிருந்தே நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள்—உதாரணமாக அவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அந்த Commissioner for Commercial Taxes—He was not vested with any power to give deferral or effect reduction in Commercial Taxes. இருந்தபோதிலும்கூட, அவர் அன்றைய முதலமைச்சருக்கு, ஒருவேளை செல்லப்பிள்ளையாக இருந்தாரோ, என்னவோ? (குறுக்கீடு) அவருக்கு அதிகாரம் இல்லாத நிலையிலும்கூட அதிகாரத்தைக் கையிலே எடுத்து, நமக்கு வேண்டியவர்தானே முதலமைச்சர் என்ற உரிமையோடு அல்லது முதலமைச்சரினுடைய மறைமுக ஆணையின் அடிப்படையிலேயோ என்னவோ, பல்வேறு சலுகைகளை பல அமைப்புகளுக்குத் தந்தார். அந்த அடிப்படையிலே விப்ரோ லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ.62.60 இலட்சத்தை அவர் அன்று அந்தக் காலநீட்டிப்பு, deferral போன்ற சலுகைகளைத் தந்தார். அதைப்போலவே, எஸ்.ஜெ.பி. இம்பெக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு ரூ.29.9 இலட்சத்திற்கு சலுகையைத் தந்தார். அதைப்போலவே எம்.எஸ்.டி.சி. லிமிடெட் என்ற ஒரு நிறுவனத்திற்கு ரூ.1,144.6 இலட்சம்; That means Rs.154 crores—154 கோடி ரூபாய் அளவிற்கு அந்தச் சலுகை திரு. கருணாநிதி அவர்கள் வணிகவரித் துறை அமைச்சராக இருந்தபோது காட்டப்பட்டது.

*பிற்பகல் 6-00*

அதைப்போலவே, Tata Engineering and Locomotive Company Limited-க்கு 8 கோடியே 38 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் சலுகையாகக் காட்டப்பட்டது. Craft Engineering and Projects Limited என்ற நிறுவனத்திற்கு, ரூ.34.44 இலட்சம். Craft Engineering and Projects Limited—அதே நிறுவனத்திற்கு இன்னும் ஒரு 30 இலட்சத்து 19 ஆயிரம். ஓமேகா கேபிள்ஸ் லிமிடெட்டுக்கு 30 இலட்சத்து 17 ஆயிரம். அதே ஓமேகா கேபிள்ஸ் லிமிடெட்டுக்கு இன்னும் ஒரு 29 இலட்சத்து 99 ஆயிரம். விஜயலஷ்மி மில்ஸ் என்ற அமைப்புக்கு 76 இலட்சத்து 28 ஆயிரம். Classic Threads Mills Limited என்ற அமைப்பிற்கு ரூ.28.02

இலட்சம். அதைப்போலவே வெங்கடேஸ்வரா ஏஜென்சீஸ் என்ற அமைப்பிற்கு ரூ.115.4 இலட்சம். K.S.P. Feeds என்ற அமைப்பிற்கு ரூ.16.75 இலட்சம். Cauvery Feeds என்ற அமைப்பிற்கு ரூ.381.90 இலட்சம். பொன்னி எண்டர்பிரைசஸ் என்ற அமைப்பிற்கு ரூ.180.34 இலட்சம். Annam Feeds Private Limited-க்கு ரூ.104.34 இலட்சம். தேவி டிரேடர்ஸ் என்ற அமைப்பிற்கு ரூ.156.03 இலட்சம். Vijay Foods and Feeds என்ற அமைப்பிற்கு ரூ.135.31 இலட்சம். அதைப்போலவே பரணி டிரேடிங் கம்பெனி என்ற அமைப்பிற்கு ரூ.859.59 இலட்சம். Annam Feeds என்ற அமைப்பிற்கு ரூ.178.10 இலட்சம். T.P. Feeds என்ற அமைப்பிற்கு ரூ.118.73 இலட்சம். Vangil Feeds என்ற அமைப்பிற்கு ரூபாய் 7 கோடியே 57 இலட்சத்து 19 ஆயிரம். There are plenty. இப்படி பல்வேறு அமைப்புகளுக்கு இலட்சங்கள், இலட்சங்கள் என்று—அதைப்போலவே EMPEE Distillery என்ற ஓர் அமைப்பு உங்களுக்குத் தெரியும் அந்த EMPEE Distillery என்ற அமைப்பிற்கு மட்டும், ரூ.1,244 இலட்சம், that means 12.44 கோடி ரூபாய் என்ற அளவிற்கு சலுகை. இப்படி பல்வேறு நிறுவனங்களுக்கு, ஒட்டுமொத்தமாக 145.66 கோடி ரூபாய்—அவருக்கு அதிகாரமே இல்லை அந்த அதிகாரிக்கு. ஆனால் அரசுக்கு ஒருபுறம் பணம் இல்லை. Revenue deficit ஏராளம். எங்கு பார்த்தாலும் கடன் வாங்கக்கூடிய ஒரு நிலை. இந்த நிலையிலும்கூட, அவர்கள் ஆட்சியிலே அவர்கள் மேற்கொண்ட அணுகுமுறை, வியாபாரிகளுக்கும், தொழில் அதிபர்களுக்கும் வரிச் சலுகை தந்து, நாங்கள் வரி போடவில்லை, வரி போடவில்லை என்று அவர் சொன்னது எல்லாம், வரி போடவில்லை என்பது அல்ல, வரிச் சலுகையை நிறுவனங்களுக்குத் தந்தார்கள். வணிகர்களுக்குச் சலுகையைத் தந்தார்கள். தமிழகத்தினுடைய கஜானாவை காலியாக்கிச் சென்றார்கள் என்பதற்காக இதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே, இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஒட்டுமொத்த கிராமப்புற வளர்ச்சியில் மிக அக்கறையாக செயல்பட்டு வருகிறது என்பதற்குப் பல்வேறு நிகழ்வுகளை நான் எடுத்துக்காட்ட முடியும். உதாரணமாக, தமிழகத்திலே இருக்கிற தொழில் வளத்தை அதிகப்படுத்துவதற்காக, இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதையொட்டி, தமிழகத்திலே இருக்கிற சிறு தொழில், குடிசைத் தொழில்களை



எல்லாம் ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும், நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கோடு, பல்வேறு ஆக்கப் பணிகளை அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

இன்று, குறிப்பாக, கிராமப்புறப் பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற ஒரு திட்டத்தைப் பற்றி பலர் பேசுகிறபோது குறை சொன்னார்கள். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற திட்டத்தைப் பற்றி. பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது கூட, அந்தத் திட்டத்தின் மூலமாக அதிக நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றி அவைக்கு விளக்கத்தைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். அது ஒரு உன்னதமான திட்டம். கிராமத்திலே இருக்கிற விவசாயப் விளைபொருட்களை value added என்ற முறையிலே, அதற்கு மதிப்புக் கூட்டுதலை உருவாக்கி, அதற்கான சிறு தொழிற்சாலைகள் எல்லாம் ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும் வரவேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணம். அதன்மூலமாக வேலைவாய்ப்பு பெருகுகிறது. விவசாய விளைபொருட்களுக்கு value addition கிடைக்கிறது. விவசாய விளைபொருள்களுக்கு, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்ற நோக்கோடு அந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 6-05

அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்தமாக, இதுவரைக்கும் 363 திட்டங்கள், அரசால் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. 363 திட்டங்களுக்கும் ஒட்டுமொத்தமாக 297.64 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே—இந்த 363 தொழில்கள் வரக்கூடிய தொழில்கள் என்று they are all projects already cleared by the Committee. அதுபோலவே, வங்கிகள் 52 தொழில்களுக்கு ஏற்கெனவே நிதி உதவியைத் தந்து விட்டன. 12 தொழில்கள் உற்பத்தியைத் துவக்கி விட்டன. மீதம் இருக்கின்ற தொழில்கள்—363 தொழில்களில் மீதம் இருக்கின்ற தொழில்கள் எல்லாம் விரைவிலே இன்னும் சில மாதங்களிலே அவர்கள் தொழிலைத் தொடங்க இருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது Agro-oriented Industry-யா என்றுகூட பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது

கேட்டார். இந்த 363 தொழில்களுமே, விவசாயத்தை ஒட்டிய, விவசாய விளைபொருளை ஒட்டிய தொழில்களைத்தான் அந்த Technical Committee clear செய்து இருக்கிறது. 33 தொழில்கள்தான் முதல் கட்டமாக clear செய்யப்பட்டது. பிறகு அது தற்போது 52 தொழில்கள் என்று, நேற்று நடந்த கூட்டத்தில்கூட, பல தொழில்களுக்கு அந்தத் துறை clearance கொடுத்து இருக்கிறது. ஒட்டுமொத்தமாக 363 தொழில்கள். தாமான தொழில்கள், இலாபகரமாக ஓடக்கூடிய, விவசாயத்தை ஒட்டிய தொழில்கள் என்ற முறையிலே அதற்கு ஏற்பு தாப்பட்டிருக்கிறது.

அந்தத் தொழில்களைப் பொறுத்தவரைக்கும், மாநில அரசு 15 சதவீதம் subsidy தருகிறது. State subsidy Plant and Machinery-க்கு 15 இலட்சம் அல்லது 15 சதவீதம் என்ற முறையிலே subsidy அதற்குத் தரப்படுகிறது. அது பெண்களே முதலீடு செய்கிற தொழிலாக இருந்தால் Total investment-க்கு 50 சதவீதம் subsidy-யாகத் தரப்படுகிறது. 5 சதவீதம் அதற்கு extra subsidy தரப்படுகிறது. 5 இலட்சம் அதிகமாகத் தரப்படுகிறது. அதைப்போலவே ஜெனரேட்டருக்கு 15 சதவீதம் subsidy தாப்படுகிறது. இந்த அடிப்படையில், மாநில அரசினுடைய subsidy-ம் இருக்கிறது. மைய அரசினுடைய subsidy இதற்கு, 50 சதவீத subsidy இருக்கிறது. கிராமப்புறத் தொழில்களுக்காக மைய அரசு தருகிற subsidy 50 சதவீத subsidy-ம் இருக்கிறது. இதையும் பயன்படுத்தி, பல பகுதிகளிலும் சட்டப் பேரவை உறுப்பினர்கள், அந்தப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்த முன்வரவேண்டும்.

குறிப்பாக Mango pulp ஒரு Unit என்றால், அதிலே Horticulture Board subsidy என்று கிடைக்கிறது. அதற்கு உச்சகட்டமாக 25 இலட்சம் ரூபாய் வரைக்கும் அவர்கள் subsidy தருகிறார்கள். அதைப்போலவே மைய அரசினுடைய Food Department-ஐப் பொறுத்தவரைக்கும் Food Processing Industry—அவர்களும் அதற்கு ஒரு subsidy தருகிறார்கள். அவர்கள் 50 இலட்சம் ரூபாய் வரைக்கும் subsidy தருகிறார்கள். மாநில அரசினுடைய subsidy 15 சதவீதம் இருக்கிறது. மிகக் குறைந்த முதலீட்டிலேயே பல பொருள்களை, விவசாயத்தை ஒட்டிய பொருள்களை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும், தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்தந்தப் பகுதிகளிலே அதிகப்படியாக ஒன்றுதான்



இருக்கவேண்டும் என்று இல்லை. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு more than one unit also can be started என்ற முறையிலே எல்லோரும் இதிலே ஈடுபடவேண்டும் என்று மாண்புமிகு அவை உறுப்பினர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடக மாநிலத்திற்கு புதிய விமான நிலையம், ஆந்திர மாநிலத்திற்கு புதிய விமான நிலையம், கேரளாவிற்கும், பம்பாய்க்கும் தனி நவீன துறைமுகங்கள், டெல்லிக்கும், பம்பாய்க்கும் தனியார் பங்கேற்புடன் புதிய விமான நிலையங்கள் என்ற முடிவை மைய அரசு எடுத்து இருக்கிறது.. மைய அரசு எடுத்த அந்த முடிவுக்கு டெல்லியில் இருக்கிற அந்தந்த மாநிலங்களினுடைய பிரதிநிதிகளின் முயற்சி பெரும் பங்காக இருக்கிறது. அமைச்சரவையில் இடம் பெற்று இருக்கிறவர்கள், தி.மு.க. காரர்கள் இங்கே இல்லை. தி.மு.க. காரர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு தொல்லை தருவதற்கு மட்டுமே, டெல்லியில் இருக்கிறவர்கள் பதவியைப் பயன்படுத்துகிறார்களேயொழிய, அவர்கள் வாக்களித்த மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு, வாக்களித்த மக்களுக்கு நன்மை செய்யத் தவறிவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) பதவி சுகத்தை மட்டும் டெல்லியில் அனுபவித்துக்கொண்டு, தங்களுக்கு வாக்களித்த தமிழகத்திற்கு இதுபோன்ற திட்டங்களைக் கொண்டு வரும் கடப்பாட்டில் இருந்து தவறுகிறார்கள். அந்த நிலை மாறவேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன், மாறவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-10

அதைப்போலவே இன்னுமொரு முக்கியமான திட்டம். ஸ்வஜல்தாரா—Swajaldhara—திட்டம். கிராமப்புறக் குடிநீர்ப் பெருங்குத் திட்டம். சட்டப் பேரவை உறுப்பினர்களும், உள்ளாட்சி அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இந்தத் திட்டத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டும். மைய அரசே முழுக்க முழுக்க இந்தத் திட்டத்திற்கு நிதியைத் தருகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியிலே, அந்த மக்கள் 5 சதவீத நிதியைத் தரவேண்டும், பணத்தைக் கட்ட வேண்டும். மற்ற பகுதியிலே 10 சதவீத பணத்தைக் கட்ட வேண்டும். அப்படி பொதுமக்கள் சார்பிலே இந்தப் பணம் கட்டப்பட வேண்டுமென்பது மைய அரசினுடைய ஆணை. அப்படி இருந்தால், மீதமுள்ள 90, 95 சதவீதத்தை மைய அரசு தருகிறது. நிறைய பணத்தைத் தருகிறார்கள். பிற மாநிலங்கள் இதைப் பயன்படுத்திக்கொள்கின்றன. தமிழகத்திற்குத் தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிற காரணத்தால், பெய்கின்ற

மழை நீரைச் சேகரித்து, நிலத்தடி நீரை அதிகப்படுத்தி, அதன் மூலமாக விவசாயத்தைச் செழிக்க வைக்க வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை.

Rain water harvesting in rural areas for drinking purposes as well as for agricultural operation என்ற முறையிலே இந்தத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய கிராமப்புறப் பொருளாதாரத் திட்டத்தினுடைய ஒரு முக்கிய அணுகுமுறை. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் கிராமக் குளங்கள், குட்டைகள் இருக்கின்றன. 86 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குளங்கள், குட்டைகள் கிராமங்களில் இருக்கின்றன. எல்லாம் தூர் வார வேண்டிய நிலையிலே இருக்கின்றன. They have to be desilted. அந்த desilting work ஆக இருந்தாலும் சரி, ஆழப்படுத்துகிற work ஆக இருந்தாலும் சரி, அதற்கு இந்தத் திட்டத்தின் மூலமாக பணத்தை மைய அரசிலிருந்து பெறுகிற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், குடிநீருக்கு என்ற முறையிலே பணத்தைப் பெற்று நிலத்தடி நீரை அதிகப்படுத்துகிறபோது, கிராமப்புற விவசாயம் செழிக்கும் என்ற காரணத்தால், இதற்கு ஒரு விழிப்புணர்வை அந்தந்தப் பகுதியிலே உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் உருவாக்க வேண்டும் என்று நான் பணிவாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தற்போது கொண்டு வந்திருக்கிறார்கள். உதாரணமாக floriculture -க்கு ஓசூரிலே ஏற்கெனவே ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. தற்போது நீலகிரியிலே ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். APEDA என்ற மைய அரசினுடைய அமைப்போடு ஓர் ஒப்பந்தம் மேற்கொண்டு அதேபோல, தேனி மாவட்டப் பகுதியிலே, பழ வகைகளைப் பதப்படுத்துவதற்கு, ஏற்றுமதி செய்வதற்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கான விழிப்புணர்வையும் உழவர்கள் மத்தியிலே நாம் உருவாக்க வேண்டும். Alphonsa mango என்றால் ஏக்கருக்கு சராசரியாக 60 ஆயிரத்திலிருந்து 80 ஆயிரம் வரைக்கும் கிடைக்கக்கூடிய அளவுக்கு தமிழகத்திலேயே பல உழவர்கள், நவீனமுறையிலே விவசாயத்தை மேற்கொள்கின்ற உழவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதையெல்லாம் Agriculture University, நமது விவசாயத் துறையினர் சிறப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கேற்ப நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இது குறித்தும் விழிப்புணர்வை



உழவர்கள் மத்தியிலே உருவாக்க வேண்டும். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற படித்த, விவரம் புரிந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்களை எல்லாம் Agriculture University-க்கு என்னென்ன உன்னதமான கண்டுபிடிப்புகளை அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதனைக் கண்டறிய நீங்கள் செல்ல வைக்கவேண்டும். குறிப்பாக தென்மாவட்டப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கிற பின்னடைவுக்கு அறியாமைதான் காரணம். அங்கேயிருக்கின்ற படித்தவர்கள், கோவையிலே இருக்கின்ற Agriculture University-க்கு செல்ல வேண்டும்; பக்கத்திலே, பெங்களூரிலே இருக்கிற Centre for Horticultural and Agricultural Research என்று சொல்லக்கூடிய அமைப்பு இதுபோன்ற உன்னதமானவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 6-15

C.F.T.R.I. என்று மைசூரில் இருக்கிற அமைப்பு விவசாயப் பொருள்களிலிருந்து எப்படி சிறு சிறு தொழிற்சாலைகளை அமைப்பது என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதையொட்டி தற்போது நடைமுறைக்கு நாம் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே கொண்டு வருகிற 360-க்கும் மேற்பட்ட அந்தத் தொழில்களில், கிட்டத்தட்ட 100-க்கு மேற்பட்ட தொழில்களில், அந்த C.F.T.R.I.-னுடைய technology-யை தற்போது கொண்டு வந்திருக்கிறார்கள். இதை சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு எடுத்துச்சொன்னால், அம்மா அவர்கள் எண்ணுகிற எண்ணமான கிராமப்புறத்திலே ஒரு பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்குகின்ற திட்டத்தை விரைவிலே கொண்டுவருவதற்கு வழிவகை ஏற்படும்.

அதைப்போலவே, நமக்கு மழை இல்லை. மழை இருந்தாலும் ஓரளவுக்குத்தான் மழை இருக்கிறது. குறைந்த அளவு தண்ணீரை வைத்துக்கொண்டு நாம் நல்ல முறையில் விவசாயத்தை மேற்கொண்டு இலாபத்தைச் சம்பாதிக்கக்கூடிய, பயிர் வகைகளைக் கண்டறிய வேண்டும் என்று டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் மூலமாகவும், நமது விவசாயப் பல்கலைக்கழகம் மூலமாகவும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இதற்கும் மக்களிடையே விழிப்புணர்வு வேண்டும்.

ஜெட்ரோபா-Jat-ropha-என்பது, பலமுறை நாங்கள் அவையிலே சொல்லியிருக்கிறோம். ஆளுநர் உரையிலே அது இடம் பெற்றிருக்கிறது. அந்த ஜெட்ரோபாவைப் பொறுத்தவரைக்கும் சாதாரணமாக நீங்கள் எண்ண வேண்டாம். காட்டாமணக்கு அதுவும் African variety. அது 12 மாதங்களும் காய்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒன்று. இப்போது மைய அரசு, Petroleum Ministry அதை ஏற்று, ஒரு இரயிலையே டெல்லியிலிருந்து தற்போது ஓட்டிக்கொண்டு இருக்கிறது. அதில் இருக்கிற கிளிசராலைப் பிரித்தெடுத்தால், சோப்பு செய்யலாம். கிளிசராலைப் பிரித்தெடுக்கக்கூடிய technology இல்லாத காரணத்தால் ஈராண்டு காலம் தாமதம் ஏற்பட்டது. அந்தப் பெருமையும் நமது விவசாயப் பல்கலைக்கழகமே செய்துவிட்டது. Agricultural University-லே the Head of the Department for Medicinal and Aromatic Plant-ல் டாக்டர் வடிவேல் என்ற ஒருவர் இருக்கிறார். மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் முழு ஈடுபாட்டோடு அதைக் கவனித்து வருகிறார். இந்தியாவிலேயே முதன்முறையாக Jat-ropha எண்ணெயிலிருந்து, காட்டாமணக்கு எண்ணெயிலிருந்து என்ஜினை, பிஸ்டனை rings-ஐ, கெடுக்கக்கூடிய அந்த கிளிசராலைப் பிரித்தெடுத்து, எந்தவித பாதிப்பும் இல்லாமல் bio-diesel-ஐக் கண்டுபிடிக்கிற விஞ்ஞானத்தை வெற்றிகாமாக நமது பல்கலைக்கழகம் கண்டுபிடித்துவிட்டது. மைய அரசு அதைப் பாராட்டியிருக்கிறது.

இனிமேல் எவ்வளவு Jat-ropha நாம் உற்பத்தி செய்தாலும், ஏக்கருக்கு ஒரு 15 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் உழவர்களுக்குக் கிடைக்கும். பத்தாவது மாதத்திலேயே அது காய் காய்த்துவிடும். மழை நீரே போதும், அதற்கு வேறு தண்ணீர் தேவையில்லை. மழையில்லாத காலத்தில், ஒரு மரத்திற்கு ஒரு பக்கெட் தண்ணீர் மாதத்திற்கு விட்டால் போதும் என்று பல்கலைக்கழகம் சொல்கிறது. இதிலும் ஒரு விழிப்புணர்வு பெற நீங்கள் அவர்களையெல்லாம் விவசாயப் பல்கலைகழகத்திற்கு அனுப்ப வேண்டும். பயிற்சிப் பண்ணையை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சருடைய தொகுதியிலே, முத்தனூரிலே போட்டிருக்கிறார்கள். அங்கு போய் அதைப் பார்க்கலாம். டீசல் வாகனங்கள்—லாரி ஓடுகிறது. டிராக்டர் ஓடுகிறது, மோட்டார் பைக் ஓடுகிறது. விவசாயிகளையும் அதில் ஈடுபடுத்த முன்வரவேண்டும். மராட்டிய மாநிலம்—தற்போது இங்கே வந்து நமது பல்கலைக்கழகத்தில் பார்த்த, மராட்டிய மாநில உழவர்கள் தற்போது அங்கு பயிர் செய்ய முன்வந்திருக்கிறார்கள். நான் தனிப்பட்ட முறையில் எல்லோரையும் விரும்பிக் கேட்டுக்கொள்வது,



கிராமப்புறத்திலே ஒவ்வொரு குடியானவனுக்கும் வருமானம் வர வேண்டுமென்றால், ஜெட்ரோபாவை—அதைப் போலவே இந்த புங்கை மரம்; இந்த இரண்டையுமே இதில் பயன்படுத்துகிறார்கள். விவசாயிகளுக்குத் தண்ணீர் குறைவு—இதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்கின்றேன். அப்போதுதான் கிராமத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் போகும். வருமானம் வரும். ஓர் அமைதியான சூழ்நிலை கிராமத்திலே வரவேண்டுமென்றால், இதை நடைமுறைக்குக் கொண்டு வருவது மிக அவசியம் என்று நான் பணிவோடு அனைவரையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழ்மை ஒழிய வேண்டும், வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற பொருளாதார நிலையில், நம்முடைய ஆற்றல் எல்லாம், ஆர்வம் முழுவதும், ஒரு போர்க் கால அடிப்படையில் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டுமென்பது நமது மாண்புமிகு முதலமைச்சர், அம்மா அவர்களுடைய ஆழ்ந்த செயல்முறை, அதற்குரிய தகுதியும், திறமையும் மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவி அவர்களிடத்தில்தான் உண்டு. பாரதப் பிரதமர் தலைமையிலே டெல்லியிலே நடக்கின்ற முதலமைச்சர்களின் கூட்டங்களில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரை, எடுத்துரைத்த கருத்துகள் பொதுவாக அனைவரையும் பெரிதும ஈர்த்தன. அக்கருத்துரைகளெல்லாம், தொலைநோக்குச் சிந்தனையும், மாநிலங்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு உறுதுணைபுரியக்கூடிய உன்னத கருத்துகளாகவும் இருந்தன. அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துரைத்த விதம், எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றது. குறிப்பாக, மைய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதி நிலைமை, நிதியாதாரம் மற்றும் நிதிப் பகிர்வு போன்ற பிரச்சினைகளில் கருத்து கூறுவதில், பிற மாநிலங்களும் ஏற்கும்வண்ணம் உன்னத கருத்துகளை தெள்ளத் தெளிவாக, ஆணித் தரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துரைத்தார்கள். அதை கேட்டு வியந்த மேற்கு வங்க மாநில நிதியமைச்சர் மாண்புமிகு திரு. தாஸ் குப்தா அவர்களும், ஆந்திர மாநில நிதியமைச்சர் மாண்புமிகு திரு. ராமகிருஷ்ணுடு அவர்களும், காங்கிரஸ் ஆளும் மாநிலங்களான மத்தியப் பிரதேசம், கேரளா மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் நிதியமைச்சர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனைத் தெளிவினைக் கண்டு, மாண்புமிகு அம்மா

அவர்களை நேரில் சந்தித்து, நெஞ்சாரப் பாராட்டி மகிழ்ந்தார்கள். இப்படி பாரதமே பாராட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் வியத்தகு உன்னதத் திட்டங்களை வரவேற்பதில் அரசியலுக்கு அப்பாற்பட்ட, பரந்த மனப்பான்மை வளர்வதுதான் தமிழகத்தின் துரித வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதாக அமையும்.

பல ஆண்டுகளாக இந்தியாவிலேயே அதிகமான வரி வசூலிக்கும் மாநிலம் தமிழகம்தான் என்ற நிலை உள்ளது. அந்த நடைமுறையை மாற்றியமைத்து, வரிச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து தொழில்களையும், வணிகத்தையும் ஊக்குவிக்கச் செய்து, குறைந்த விலையில் அனைத்து மக்களுக்கும் பொருட்கள் கிடைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொருளாதாரக் கொள்கை. நமது மாநிலத்தில் ஒட்டுமொத்த உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. 1 இலட்சத்து 20 ஆயிரம்தான் என்று இருக்கிறது. ஆனால் இதில் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது என்ற நிலையில் வரி செலுத்தாமல் நாட்டினுடைய நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரம் உயர, தங்கள் பங்கினை நலிந்த பிரிவினர் துயரத்தில் பங்கேற்காமல் வரியை திட்டமிட்டே ஏமாற்ற வேண்டுமென்ற மனப்பாங்கு உள்ளவர்கள் மனம் மாற வேண்டும். ஏழைகளின் துயர் துடைக்க உதவும் நோக்கோடு, வரியை அரசுக்குச் செலுத்த அவர்கள் முன்வரவேண்டும். இதுகாறும் வரி செலுத்தும் அளவில் விற்பனைக் குறியீடு இருந்தபோதிலும், வரி செலுத்தாமல் இருப்பவர்கள், ஏமாற்றுபவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள். தக்க நடவடிக்கை இதில் எடுக்கப்படும். இதற்கு வரி செலுத்தும் வணிகர்களும் பொதுமக்களும் உறுதுணை புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, வரி செலுத்தும் வணிகர்களும், உற்பத்தியாளர்களும், பிற பொதுமக்களும் அரசுக்கு ஆலோசனை வழங்கி உறுதுணை புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-20*

நகர்ப்புறத்திலும் கிராமப்புறத்திலும் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம், சில நாட்கள் மட்டுமே வேலை என்ற நிலை, குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமானதாக இல்லாத ஊதியம், குழந்தைகளின் உடல் நலத்தைக் காப்பாற்றப் போதுமான ஊட்டச்சத்து தரமுடியாத நிலை என்ற பொருளாதார நிலையில் நலிவுற்றுள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு தரமான வாழ்க்கை



உத்தரவாதத்தைத் தரவேண்டும் என்பதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொருளாதார அணுகுமுறை. இந்த இலக்கை எய்துவதற்கான தொலைநோக்குச் சிந்தனைகள் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் உண்டு. தேனீயைப் போன்ற சுறுசுறுப்புமிக்க செயல்வேகம் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் நிரம்ப உண்டு.

Our Honourable Chief Minister is a practical economist. Our Honourable Amma is very much concerned with the problems of the poor. Amma is highly intelligent. We are all astounded to see that our Honourable hardworking Amma has been working for more than 18 hours a day for uplifting the standard of living of the common man of the State.

சுயநல ஆதாயங்களுக்காக உண்மைக்கு மாறானவற்றைச் சொல்லி, மக்களைத் திசை திருப்புகின்றவர்கள் மனம் மாறவேண்டும். நாட்டின் வளர்ச்சியில் தமிழகத்தின் ஆறு கோடி மக்களும் தன் வயிற்றுப் பிள்ளைகள் என எண்ணி, அவர்களின் மேம்பாட்டுக்காகப் பாடுபடும் மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) வளர்ச்சி மற்றும் சமுதாயத் திட்டங்களுக்கு ஆக்கபூர்வமான ஆதரவைத் தருகின்ற பரந்த உள்ளம் வளர வேண்டும். அம்மா அவர்களின் இந்த உன்னதப் பொருளாதாரத் திட்டம், வேலைவாய்ப்பினைப் பெருக்கி, வருமான வளர்ச்சியை அதிகப்படுத்தும் இந்த நிதிநிலை அறிக்கையை நாட்டுமக்கள் மற்றும் நடுநிலையாளர்கள் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள். தெளிந்த அறிவும், தேனீயைப் போன்ற செயல் வேகமும், சிங்கத்தின் துணிவுமிக்க மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குச் சிந்தனையில் உருவான இந்தச் சீர்மிகு நிதிநிலை அறிக்கைக்கு மாண்பமைந்த இந்தப் பேரவை ஏற்பளிப்புத் தரவேண்டுமென்று வேண்டி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் வியாழக்கிழமை *(3-4-2003)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *6-22* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

64. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

65. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
184537
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
*Chennai-600 002*